017

gistered No M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 10—No. 1.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் க0 | தாது ஆண்டு தைத் திங்கள்<br>1937ஹூ ஜனவரிமீ | இதழ் க |
|---|---|---|

உள்ளுறை — பக்கம்

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| தலைமைப் பேருரை ... | ... | க |
| தலைவர் உருவப் படம் ... | ... | கக |
| 31-வது ஆண்டு அறிக்கை ... | ... | உ0 |
| சைவச் செல்வர்கள் ... | ... | உக |
| வரவேற்புரை ... | ... | ரு0 |
| இளைஞர் தலைமையுரை ... | ... | ருக |
| சமாஜ உத்தியோகஸ்தர்கள் ... | ... | ருச |
| சமாஜம் நிறைவேற்றிய தீர்மானங்கள் | ... | ருரு |
| வரவேற்புக் கவிகள் ... | ... | ருஎ |
| சமாஜ ஆண்டு விழா ... | ... | ருஅ |
| தூத்துக்குடியில் ஆண்டு விழா ... | ... | சுரு |

பத்திராசிரியர் : அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.
உதவிப் பத்திராசிரியர் : மா. துரைசாமி முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம், பசூர், சென்னை.
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெ
தனிப் பிரதி அணா 4.
ஆண்டுச் சந்தா ரூபா 2.

Reg. M. 2330.

21 FEB 1937

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோ னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.



| | | |
|---|---|---|
| மலர் ௧௦ | தாது ஆண்டு தைத் திங்கள்<br>1937ஆம் ஜனவரிமீ | இதழ் ௧ |



## தலைமைப் பேருரை

[உயர்திரு - ந. சிவகுருநாத பிள்ளை]

“ பரந்தவன்காண் பல்லுயிர்க ளாகி யெங்கும்
பணிந்தெழுவார் பாவமும் வினையும் போகத்
துரந்தவன்காண் தூமலரங் கண்ணி யான்காண்
தோற்ற நிலையி றுதிப் பொருளாய் வந்த
மருந்தவன்காண் வையங்கள் பொறைதீர்ப் பான்காண்
மலர்தூவி நினைந்தெழுவா ருள்ள நீங்கா
திருந்தவன்கா ணெழிலாரும் பொழிலார் கச்சி
யேகம்பன் காணவனென் னெண்ணத் தானே ”

—அப்பர்

“ வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம் ”

—சேக்கிழார்

162353
JL
P573—211 (12)
136.10.1



சித்தாந்த சைவச் செந்நெறிப் பெரியீர் !

**நீ**ங்கள் பொன்னார் திருவடிகட்குப் பன்முறை வணக்கம். சரியைத் தொண்டரும், கிரியைப் பத்தரும், யோகச் சித்தரும், ஞானச்செல்வரும், உலகியற்றுறையிற் றலைசிறந்தோரும் குழுமியுள்ள இப்பேரவைக்குச் செம்மைநலமறியாத சிறியேனைத் தலைமை வகிக்குமாறு சமாஜத்தார் ஆணை தந்தருளினார்கள். என் மாட்டுக் காணும் புன்மையைச் சமாஜத்தார் நன்கறிந்திருந்தும் இவ்வாறு கட்டளையிடுவதற்கு யாது காரணம் என ஊன்றி யாராய்ந்தேன். அடியேன் சுமார் ஐம்பதாண்டுகளாகத் தூத்துக்குடி சைவசித்தாந்த சபையில் இயன்ற தொண்டாற்றிக்கொண்டிருத்தலேதான் இதற்குக் காரணம் என ஒருவாறு தெளிந்தேன். ஆதலின் பெரியோர்களே! சமாஜத்தார் அடியேனுக்குத் தலைமைப் பதவி யளித்தமை அவர்கட்குச் சிவத்தொண்டின்பாலுள்ள பேரன்பைக் காட்டுகின்றதேயன்றி அடியேனது கல்வி, அறிவு, ஆற்றல் நலம்பற்றி யன்றென்பதை முதற்கண் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இனிச் சமாஜவிழாப் பேரவையின் உயர்வென்னை? எமது இழிவென்னை? சமாஜத்தார் ஆணை இறைவன் ஆணைக்கு ஒப்பாயிற்றே ; அதனை எவ்வாறு மறுப்பது? என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி வாடியிருக்கும் போழ்து,

> “ இழுக்க லுடையுழி யூற்றுக் கோலற்றே
> ஒழுக்க முடையார் வாய்ச்சொல் ”

என்றபடி ஒரு திருவாக்கு எனதுள்ளத்தில் உதயமாயிற்று. அத்திருவாக்கு, நமது சந்தான முதற்குரவராகிய ஸ்ரீ மெய்கண்ட தேவர் தாம் அருளிச் செய்த சிவஞானபோத நூலின் அவையடக்கத்திலுள்ள

> “ தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
> எம்மை யுடைமை எமையிகழார் ”

என்பது. இதன் பொருள் உடைமைப் பொருளாகிய தம்மி



யல்பினை உணர்ந்து, தம்மை யுடையானாகிய தலைவனை உணரும் சித்தாந்த சைவர் தமக்கு உடைப்பொருளாகிய எம்மை உடையராகலின், எம்மைக் குற்றங்கணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவதன்றி இகழ்தல் செய்யார் என்பது.

இதனையே யானும் அவையடக்கமாகக் கூறித் தலைமையை உங்கள் திருமுன் பணிவுடன் ஏற்றுக் கொள்ளுகின்றேன். கம்பமேவிய உம்பர்நாயகன் எனக்குத் தோன்றாத் துணைவனாயிருந்து அருள் செய்வானாக ; நீங்கள் தோன்றுந் துணைவராயிருந்து அருள்புரிவீர்களாக.

ஒரு பேரவையின் தலைமை வகிப்போர் முதற்கண் தலைமையுரை என ஒன்று நிகழ்த்துவது மரபு. அதனை மேற்கொண்டு யானும் என் சிற்றறிவுக் கெட்டிய ஒரு சில பொருள்கள்பற்றி ஈண்டுக் கூறப்போகின்றேன். குற்றமுளதேல் மன்னித்தருளுக.

காஞ்சிபுரமாகிய இத்திருத்தலம் மிகப் பழைமை யுடையது; அயோத்தி, மாயா, மதுரா, காசி, காஞ்சி, துவாரகை, அவந்திகை என்னும் ஏழு திருத்தலங்களுள் ஒன்றாகத் திகழ்வது; உமாதேவியார் “ கரந்தரும் பயனிதுவென வுணர்ந்து கம்ப மேவிய உம்பர் நாயகனைப்” பூசிக்கப் பெற்றது; அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய திருக்குறிப்புத்தொண்ட நாயனார் திருத்தொண்டு செய்து வீடு பெற்றது; பாங்கினொடு பலதளிகளும் விளங்கப் பெறுவது; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய சமய குரவர் நால்வர்களாலும் போற்றப்பெற்றது; முடியுடைத் தமிழ்வேந்தர் தலைநகராகக் கொண்டு அரசு செலுத்தியது; ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியாரால் குமரகோட்டத்து முருகப்பெருமான் திருவருள் பெற்று ஸ்ரீ கந்தபுராணம் பாடப்பெற்றது. ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் இத்திருத்தலத்திலிருந்தே சிவஞானமாபாடியம் இயற்றியருளியதாகச் சொல்லப்பெறுகின்றது. இன்னும் அளப்பிலாப் பெருமை வாய்ந்த இத்திருத்தலத்தின்கண் சைவசித்தாந்த மகா சமாஜம் தனது முப்பத்தோராம் ஆண்டு நிறைவு விழாவை நிகழ்த்தப் பெறுதல் கழிபேருவகை பயப்பதாகும்.

## ௧. சைவசமயத்தின் பெயர்கட்குரிய காரணம்.

நமது சமயம் சைவம், வைதிக சைவம், சித்தாந்தம் என்னும் பெயர்களால் வழங்கப்பெறுகின்றது. "சைவம்" என்னும் சொல் சிவத்தொடு சம்பந்தமுடைமையானும், "வைதிக சைவம்" என்னும் சொல் வேதம் ஆகமம் என்னும் இரு முதனூல்களையும் பிரமாணமாகக் கொண்டொழுகுதலானும், "சித்தாந்தம்" என்னும் சொல் முடிந்த முடிபாகிய உண்மைகளை விளக்குதலானும் போந்த காரணப்பெயர்களாகும்.

## ௨. சைவசமயத்தின் பழைமை

சைவசமயம் இன்ன காலத்துத் தோன்றியது என்று அறிய வாராத பழைமையுடையது. பழந் தமிழ் நூல்களாகிய சங்க இலக்கியங்களில் சைவக் கொள்கைகளும், சிவபிரானது உயர்வும் ஆண்டாண்டுக் காணப்பெறுகின்றன. மணிமேகலையில் சமயக்கணக்கர் தந்திறங் கேட்ட காதையில்,

"இருசுட ரோடிய மானனைம் பூதமென்
றெட்டு வகையு முயிருமாக் கையுமாய்க்
கட்டிநிற் போனுங் கலையுருவி னோனும்
படைத்து விளையாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறுதா னொன்றி லோனும்
அன்னோ னிறைவ னாகுமென் றுரைத்தனன்"

எனச் சைவக் கடவுள் இயல்பு விளக்கப்பெற்றிருத்தல் காண்க. இன்னோரன்ன பல சைவ உண்மைகளைச் சங்க இலக்கியங்களிற் பரக்கக் காணலாம்.

இனிச் சைவ சித்தாந்தத்திற் கொள்ளப்படும் தத்துவ உண்மைகளிற் பலவற்றைத் தமிழ் மொழி எழுத்துக்களின் அமைப்பிலும் இனிது காணலாம். அகரமாகிய தனி உயிர் கடவுளாகவும், ஏனைய கடவுள் அடி சார்ந்த எனெறி மூவகை உயிர்களாகவும், மெய் அறிவில் பொருளாகவும், சார்புயிர் இரண்டும் நல்லார் பொல்லார் என்னும் இருவகை உயிர்களாகவும், ஆய்தம் மெய்யின் நுட்பமாகிய நுண்ணுட



லாகவும் கொள்வது பொருத்தமுடையதாகின்றது. ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய நூன்மரபு "ஔகார விறுவாய்ப் பன்னீரெழுத்தும் உயிரென மொழிப" என்னும் சூத்திரவுரையுள் "அகர உயிரைப்பற்றிக் கூறுங்கால், மெய்பதினெட்டினையும் இயக்கித் தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று. இவை மெய்க்கு உயிராய் நின்று மெய்களை இயக்குமேல் உயிரென வேறோர் எழுத்தின்றாம் பிறவெனின், மெய்யினிற்கும் உயிரும் தனியே நிற்கும் உயிரும் வேறென உணர்க" என்பன முதலாகச் சைவசித்தாந்தத்திற் கூறப்படும் உயிர், மெய் (உடம்பு) என்பன வாதிய பொருள்களில் வைத்து உரைத்தல் காண்க. இதனால் அநாதி இயற்கையாகிய தமிழ் மொழியும் சித்தாந்தமும் ஒன்றோடொன்று தொடர்புற்று விளங்குதலால் தமிழ் முந்தியதோ சித்தாந்தம் முந்தியதோ என்று ஐயுறுதற் கிடனாகின்றது.

## ௩. பொருளாராய்ச்சியும் இலக்கணமும்

சித்தாந்தம் பொருளுண்மைகளை உரைப்பிரமாணம் ஒன்றே கொண்டு நிச்சயிக்கவில்லை. காட்சியோடு கருதல் அளவையுங் கொண்டே நிச்சயித்திருக்கிறது. உலகில் காணப்படும் பொருள்களிற் சில அசைவித்தால் அசையும் சடப்பொருள் (அறிவில் பொருள்)களாகவும், சில அறிவித்தால் அறியும் சித்துப்பொருள் (அறிவுப் பொருள்)களாகவும் இருத்தலானும், இவ்விரு பொருள்களையும் ஒன்றாக இணைத்துக் காரியப்படுத்துவான் ஒருவினைமுதல் பேரறிவும் பேராற்றலு முடையோனாய் இருத்தல் வேண்டுமாதலானும், ஆகவே அறிவுடைப் பொருள் ஒன்று, அறிவித்தால் அறியும் அறிவுடைப் பொருளொன்று, அறிவித்தாலும் அறியமாட்டாத அறிவில்பொருளொன்று ஆக மூன்றுபொருள்களின் உண்மை தெள்ளிதிற் புலனாகின்றது. இவற்றையே பதி பசு பாசம் எனச் சித்தாந்த சாத்திரங்கள் கூறுகின்றன. இன்னும் சடப்பொருள்களை நுணுகி ஆராயும்வழி காணப்படும் உடம்பு, கருவி, உலகம், போகம் எனக் கூறப்படும் தனுகரண புவன போகங்கள் உயிரின் அறிவு விளக்கத்திற்கு ஏதுவாகக்

காணப்படுதலாலும், உயிரின் அறிவோடு ஒற்றித்து நின்று அறியாமையைச் செய்யும் பொருள் தனுகரண போகங்கள் என்று கூறுதல் பொருந்தாமையாலும், அறியாமையை விளக்கும் பொருள் வேறொன்று வேண்டப்படுவதாகின்றது. இனி உயிர் வருக்கங்கள் இன்பம் துன்பம் என்னும் இரண்டனையும் கலந்து அநுபவித்தலால் அவைகட்குக் காரணமும் வேண்டப்படும். தனுகரணபுவனபோகங்கள் காரியமாயிருத்தலின் அவற்றிற்குக் காரணம் மாயை என்று கொள்ளப்படும். தனுகரண புவன போகங்கள் சுத்தமும் அசுத்தமுமாக இருவகைப்படக் காணப்படுதலின் அவற்றிற்குக் காரணமாகிய மாயையும் சுத்த மாயை அசுத்த மாயை என இருவகையாகக் கொள்ளப்படும். இவ்வாராய்ச்சியால் புலனாவது பதி என ஒரு பொருளும், பசுவென ஒரு பொருளும், பாசத்தின் வகையாக ஆணவம், கன்மம், சுத்த மாயை, அசுத்த மாயை என நான்கு பொருள்களும் ஆக மொத்தம் ஆறு பொருள்களேயாம். இதனை "ஏகன் அநேகன் இருள் கருமம் மாயை யிரண்டு - ஆக விவை யாறுதியில்" என்று திருவருட் பயன் என்னும் சித்தாந்த நூல் விளக்குகின்றது. ஏகன் என்னும் பதிப்பொருள் ஒன்றே. அநேகன் என்னும் பசுக்கள் எண்ணிறந்தன. இங்ஙனம் ஆராய்ச்சி முறையில் பொருள் உண்மைகளைச் சித்தாந்தம் உணர்த்தும் முறைமையினை ஒருதாரணத்தால் கண்டுகொள்ளலாம். சிவஞானசித்தியார், உயிரையும், உடல் முதலியவற்றையும் கூட்டுவிக்கும் பொருள் அவை இரண்டற்கும் வேறாக வேண்டப்படும் என்பதனை,

"புத்திமற் காரி யத்தால் பூதாதி புருடன் றானும்
அத்தனு கரணம் பெற்றால் அறிதலால் அவற்றை மாயை
உய்த்திடு மதனால் மாயைக் குணர்வொன்று மில்லை யென்றே
வைத்திடு மதனை யெல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்"
—சித்தியார்.

என்று பாரிசேட அளவைகொண்டு எவ்வளவு அழகாகக் கூறியிருக்கின்ற தென்பதை நோக்குங்கள்.



இனிச் சித்தாந்தம் இங்ஙனம் பொருளுண்மைகளை ஆராய்ச்சி செய்த பின்னர், பொருள்களின் இலக்கணங்களையும் தெள்ளிதின் உணர்த்தும். இறைவன் தன்னுண்மையில்,

"சிவனரு வுருவு மல்லன் சித்தினோ டசித்து மல்லன்
பவமுதற் றொழில்க ளொன்றும் பண்ணிடு வானு மல்லன்
தவமுத லியோக போகந் தரிப்பவ னல்லன் றானே
இவைபெற வியைந்து மொன்று மியைந்திடா வியல்பி னானே"
—சித்தியார்.

என்று சொல்லப்படினும், ஆன்மாக்களை உய்வித்தற் பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் அவன் செய்து போதருகின்றான். ஆகவே, இறைவனுச்கு யாதொரு தொழிலும் செய்யாது அறிவே சொரூபமாயிருக்கும் நிலை சொரூப இலக்கணமும், ஆன்மாக்கள் பொருட்டு ஐந்தொழில் செய்யும் நிலை தடத்த இலக்கணமும் ஆகின்றன. இங்ஙனம் பசு, பாசங்களுக்கும் இலக்கணம் வரையறை செய்யப்பெற்றிருக்கிறது. இவ்விருவகை இலக்கண முணராக்கால் "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமான னாயெறியுங் காற்று மாகி" என ஓரிடத்திலும் "விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத விதியல்லர் விண்ணு நிலனுந் திரிதரு வாயுவல்லர் செறிதீயுமல்லர் நிகழ்நீரு மல்லர் தெளியின்" என மற்றோரிடத்திலும் ஒன்றுக்கொன்று மாறுதலான வாக்கியங்கள் காணப்பட்டபொழுது ஒன்றனைக்கொண்டு மற்றொன்றனை இகழ வேண்டிவரும். இவ்வித இலக்கண ஆராய்ச்சி மற்றெச் சமயத்திலும் காணப்படவில்லை. சில சமயங்கள் விவகாரத்திற்காகச் சில இலக்கணங்களைக் கூறிப் பின்னர் பாரமாத்திகத்தில் அவைகள் இல்லையென்று கூறு நிற்கும்.

### ச. சித்தாந்த நூல்களும் பாடியமும்

சித்தாந்த உண்மைகளை விளக்கும் நூல் வடமொழியில் சிவாகமங்களும், தென்றமிழ் மொழியில்,

"உந்தி களிறு உயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மைப் பிரகாசம்—வந்தவருட்

பண்புவினை போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று "

என்றபடி திருவுந்தியார் முதலிய பதினான்கு நூல்களாகும். இவற்றுள் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் என்னும் இருநூல்களும் தலைசிறந்தவையாகும். இவற்றின் சார்பாகப் பிற்காலத்து ஆன்றோர்களாற் பல நூல்கள் இயற்றப் பெற்றிருக்கின்றன. வடமொழியில் வியாசரால் இயற்றப் பெற்ற வேதாந்த சூத்திரத்திற்கு ஏகான்மவாதபரமாக ஸ்ரீ சங்கராசாரியாராலும், விசிட்டாத்வைதபரமாக ஸ்ரீ இராமாநுஜாசாரியாராலும், சிவாத்வைதபரமாக ஸ்ரீநீலகண்ட சிவாசாரியாராலும் பாடியங்கள் இயற்றப் பெற்றிருப்பது போல வடமொழிச் சிவஞான போதத்திற்கு ஸ்ரீ சிவாக்கிர யோகிகளாலும், தென்மொழிச் சிவஞானபோதத்திற்கு ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகளாலும் பாடியங்கள் இயற்றப் பெற்றிருக்கின்றன. வடமொழியில் இயற்றப்பெற்றுள்ள பாடியங்கள் வடமொழிப் பிரமாணங்களையே பிரமாணமாகக் கொண்டியற்றப் பெற்றுள்ளன. ஸ்ரீமாதவ சிவஞான யோகிகளால் இயற்றப்பெற்ற திராவிடமாபாடிய மொன்றே வடமொழிவேதாகம உபநிடதங்களையும் தென்றமிழ் மொழியிலுள்ள பன்னிருதிருமுறைகள், திருக்குறள் முதலிய நூல்களையும் தழுவித் திட்பமும் நுட்பமும் செறிய இயற்றப் பெற்றிருக்கிறது. திராவிடமாபாடியத்தால் விளக்கப்படாத பொருள் யாதுமில்லை. தேவார முதலிய பன்னிரு திருமுறைகளும் சைவசமயத்திற் பிரமாணமாகக் கொள்ளப் படுவன.

### ௫. சைவத் தனிப்பெருங் கடவுள்

சைவத்திற் கொள்ளப்படுங் கடவுள் சிவபெருமானே. சிவம் என்னும்சொல், வடமொழியில் மங்களம், ஒளி, எல்லாவற்றிலும் இருத்தல் என்பனவாதிய பொருளையும், தமிழ் மொழியில் செம்மை, சிவப்பு என்னும் பொருளையுந்தரும். சிவபெருமான் தீயும் சூடும்போலச் சிவமும் சத்தியுமாக விளங்குவர். சிவபெருமானுடைய சத்தி இச்சா சத்தி



கிரியா சத்தி ஞானசத்தியென மூவிதமாய்த் திகழும். சிவபெருமான் தனது சத்தியைக் கொண்டே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழிலையும் செய்தருளுவர். சிவபெருமானே பரமபதி என்பது வேதம் உபநிடதம் புராணம் இதிகாச முதலிய எல்லாக்கலைகளாலும் உணர்த்தப் பெறுகின்றது. இவ்வுண்மையைச் சதுர் வேத தாற்பரிய சங்கிரகம் இராமாயண தாற்பரிய சங்கிரகம், பாரத தாற்பரியசங்கிரகம் என்னும் நூல்களால் அறியலாம். சிவபிரானைப் பிரமன், விண்டு, உருத்திரன் என்னும் மூவருள் ஒருவரான உருத்திரனென்று சிலர் மயங்குவர். "மூவரு முப்பத்து மூவருமற்றொழிந்த தேவருங் காணாச் சிவபெருமான்", "மூவரு மறிகிலர் யாவர்மற்றறிவார்" என்பன முதலாகக் கூறப்படும் பிரமாண வாக்கியங்கள் அம் மயக்கத்தைத் தீர்க்கும் மருந்தாகும். அப்பையதீக்ஷிதர் அருளிச் செய்த சிவதத்துவவிவேகம் என்னும் நூலில் சிவபெருமானது பரத்துவநிலை வேதோபநிடத முதலிய பிரமாணங்கள் கொண்டு நன்கு விளக்கப்பெற்றிருக்கின்றது. சிவபெருமான் உலகிற்கு அதீதனாகவும், காரணனாகவும், உயிராகவும், உலகமாகவும் நிற்கும் இயல்பினை,

"உலகினை யிறந்து நின்ற தாணுரு வென்ப தோரார்
உலகவ னுருவிற் றோன்றி யொடுங்கிடு மென்று மோரார்
உலகினுக் குயிரு மாகி உலகமாய் நின்ற தோரார்
உலகினு னொருவ னென்ப உருவினை யுணரா ரெல்லாம் "

எனச் சிவஞான சித்தியார் எவ்வளவு அழகாக எடுத்துரைக்கின்றது பாருங்கள். சிவபெருமான் பெருமை அளவிடற்கரியது.

"கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறோர்
இற்புறத் தவரை நாடார் யாங்களு மின்ப வாழ்வும்
தற்பொறி யாக நல்குந் தலைவனின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய் பூரணா னந்த வாழ்வே "

எனத் தாயுமான சுவாமிகள் கூறியருளிய திருவாக்கைச் சைவமக்கள் கடைப்பிடித்தொழுக வேண்டியது இன்றியமையாததாகும்.

## ௬. சைவ அடையாளங்களும் மந்திரமும்

சைவ சமயிகள் அணிய வேண்டிய அடையாளங்களிற் சிறந்தவை இரண்டு. அவை திருநீறும், உருத்திராக்கமுமாம். இவ்வடையாளங்கள் உயரிய தத்துவ உண்மைகளை விளக்குவன. திருநீறு சிவபெருமான் சங்கார காரணனாய் விளங்கும் உண்மையினையும், உருத்திராக்கம் அவனது பேரருளையும் விளக்குவனவாகும். இன்னும் பலவுள. சைவத்தில் உயர்ந்ததாகக் கூறப்படும் மந்திரம் பஞ்சாக்ஷரம் அல்லது திருவைந்தெழுத்தென்று சொல்லப்படும். திருவைந்தெழுத்து முறையே சிவம், சத்தி, ஆன்மா, திரோதம், மலம் என்னும் ஐவகைப்பொருளைக் குறிப்பதாகும். இதன் பெருமையைத் தேவாரமுதலிய திருமுறைகளிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் பரக்கக் காணலாம்.

## ௭. சிவதீக்கை

தீக்ஷை என்னும் வடசொல் மலத்தைக்கெடுத்து, சிவத்துவத்தை விளக்குதல் என்னும் பொருளைத்தரும். சைவத்திற் கூறப்பட்ட தீக்கைமுறை, வேறு எச்சமயத்தினும் கூறப்படவில்லை. கிரியா சத்தியால் ஞானத்தை உதிக்கச் செய்வதற்குத் தக்க உபாயங்கள் தீக்கையில் விதிக்கப்பெற்றிருக்கின்றன. தீக்கை சமயம், விசேடம், நிருவாணம் என மூவகைப்படும். சைவசமயிகள் அனைவரும் சமய தீக்கையையாவது பெற்றுக் கொள்ள வேண்டும். பாலர்களும் விருத்தரும், பிணியாளரும், மாதரும், பல போகத்தவரும் பெற்றுக் கொள்ளுதற்குரிய எளிய தீக்கை முறைகளும் சைவ சமயத்தில் விதிக்கப் பெற்றிருக்கின்றன. ஏனைச்சமயிகள் எல்லாம் தத்தம் சமயத்தில் விதிக்கப் பெற்றுள்ள சமயப் பிரவேசக் கிரியைகளைக் கைக்கொண்டுவரவும், நமது சமயிகள்மட்டும் வேறு எச்சமயத்திலும் காணப் பெறாத அருமையுடைய தீக்கையைக் கைக்கொள்ளாதிருப்பது வருந்தத்தக்கதாகும்.



## ௮. சித்தாந்த முத்தி

சித்தாந்தத்திற் கொள்ளப்படும் முத்தி இருவகைப்படும். அவை பத முத்தி பர முத்தி யென்பனவாம். தாதமார்க்கமாகிய சரியையினை அநுட்டிப்போர் சிவசாலோகத்தையும், சற்புத்திரமார்க்கமாகிய கிரியையினை அநுட்டிப்போர் சிவசாமீபத்தினையும், சகமார்க்கமாகிய யோகத்தை அநுட்டிப்போர் சிவசாரூபத்தையும் அடைவர். இம்மூன்றும் பதமுத்தியென்று சொல்லப்படும். இனிச்சிவஞானத்தை அநுட்டிப்போர் இறைவனுடைய எண் குணங்களும் தம் மாட்டுப் பதியப் பெற்றுச் சிவசொரூபமாய் விளங்கும் சிவசாயுச்சியப் பேற்றையடைவர். இந்திர லோகம், பிரமலோகம், விண்டுலகம் என்று சொல்லப்படும் உலகங்களை யடைதல் முத்தியில்லையென்று சொல்லத்தக்கதன்று; அவை சொர்க்கங்கள் என்று சொல்லப்படும். "தொண்டலா னடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே" என்னும் தேவாரத் திருவாக்கும், "மாலயன் பெறு பதத்தையும் பொருளென மதியேன்" என்னும் கந்தபுராணத் திருவாக்கும் ஈண்டு சிந்திக்கத்தக்கன.

## ௯. வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்

திருமூல நாயனார் திருமந்திரத்தில்,

"வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்பு மென்றுள்ளன
நாத னுரையிவை நாடி லிரண் டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே"

எனக் கூறியுள்ளார். இவ்வுண்மை கடைப்பிடிக்காத வைதிக சமயத்தார்கள் வேதத்தைமட்டும் கைக்கொண்டு சிவாகமங்களைக் கைக்கொள்ளாத காரணத்தால் வேதோபநிடதங்களிற் கூறப்படும் உண்மைகளைத் தெள்ளிதின் உணர்ந்துகொள்ளக் கூடாதவர்களா யிருக்கின்றார்கள். அவர்களா லறியப்படாத உண்மைகள் சித்தாந்தத்தில் விளங்க உரைக்கப்பெற்றிருக்கின்றன. "ஏகம் பிரமம்" என்னும் ஒரு வாக்கியம் உபநிடதத்திற் காணப்பெறுகின்றது. இவ்வாக்கியத்

திற்கு வைதிகர்கள் "பிரமப் பொருள் ஒன்றைத் தவிர வேறு பொருள்கள் கிடையா" வென்று ஏகான்மவாதஞ் சாதிப்பாராயினர். ஏகம்பிரமம் என்னும் வாக்கியத்தின் பொருள் அஃதன்று என்பதை நமது மெய்கண்டசிவம் சிவஞானபோதத்தில் "ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றே பதி" அதாவது பிரமங்கள் பல இல்லை, பிரமம் ஒன்றேயுள்ளது என விளக்கியருளினார். இனி "ஏகமேவாத்விதீயம் பிரமம்" "சிவமத்வைதம் சாந்தம்" என்பனவாதிய வாக்கியங்களிலுள்ள அத்வைதம் என்னும் சொல்லிலுள்ள அகரத்திற்கு இன்மைப் பொருள்கொண்டு ஏகம் பிரமம் என்ற பொருளிலேயே இதனையும் வழங்குவாராயினர். சிவஞானபோதத்தில்,

> "பண்ணையு மோசையும் போலப் பழமதுவும்
> எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம்—அண்ணல்தாள்
> அத்துவித மாதல் அருமறைக ளொன்றென்னாது
> அத்துவித மென்றறையு மாங்கு"

என, அதாவது பண்ணும் அதன் ஓசையும், பழமும் அதன் சுவையும் எங்ஙனம் பிரிக்கப்படாத குணகுணிப் பொருள்களாயிருக்கின்றனவோ அவற்றைப்போல இறைவன் உலகுயிர்களை இயக்குதற் பொருட்டு அவற்றொடு பிரிக்கப்படாத நிலையிற் கலந்து நிற்றலே அத்வைத சம்பந்தமென்று விளக்கி யிருக்கும் வாய்மை பாராட்டற்குரிய தன்றோ? இது பற்றியே தாயுமான சுவாமிகள் "பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித - மெய்கண்ட நாதனருள் மேவுநாளெந்நாளோ" என மெய்கண்டசிவத்தைப் போற்றுவாராயினர். மாதவச் சிவஞானயோகிகள் சிவஞானபோதச் சிற்றுரையிலும், சிவஞானமாபாடியத்திலும் அத்துவித உண்மை பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்து உண்மைப் பொருளை வெளியிட்டிருக்கின்றார்கள். அவற்றைச் சைவ மக்களுணர்ந்து இன்புறுவாராக. இனிப் "பிரமாகமம்" "சிவோகம்" எனச் சீவர்கள் தம்மைப் பிரமமாகச், சிவமாகப் பாவிக்க உபநிடதங்களில் விதிக்கப்பெற்றிருக்கின்றது. வைதிகர்கள் சீவர்களெல்லாம் பிரமசொரூபமேயாதலின்



தான் பிரமம் என்பதை உணர்ந்து கொள்ளுவதற்காகவே இங்ஙனம் பாவிக்கும்படி விதிக்கப்பெற்றிருக்கின்றதென்று கூறுகின்றார்கள். பிரமம் தன்னையே தான் என்று பாவிப்பதனால் வரும் பயன் யாதுமில்லை. அல்லதூஉம் பாவனையென்னுஞ் சொற்குப் பொருளாமாறுமில்லை. இனி இப்பாவனையின் விசேடத்தை,

> "கண்டவிவை யல்லேனா னென்றகன்று காணாக்
> கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
> தொண்டினொடு முளத்தவன்றா னின்றகலப் பாலே
> சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
> விண்டகலு மலங்களெல்லாங் கருடதியா னத்தால்
> விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
> பண்டைமறை களுமதுநா னானே னென்று
> பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே"

எனச் சிவஞானசித்தியார் திருவிருத்தம் சிவோகம் பாவனையி னுண்மையையும், பயனையும் எவ்வளவு தெளிவாக விளக்கியிருக்கின்றது காண்மின் அன்பர்களே.

## ௪௦. சைவ சமயாசாரியர்கள்

அருமையும் பெருமையும் வாய்ந்த நமது சைவ சமயத்தை வளர்த்தருளிய ஆசாரியர்கள் இருவகையினராவர். அவர் சமயாசாரியர், சந்தானாசாரியர் என்பவராவர். சமயாசாரியர் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வராவர். இந்நால்வரும் இறைவன் திருவருள் நேரே கை கூடப்பெற்றவர். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமிழ்நாடு முற்றிலும் பரவியிருந்த புறச் சமய இருளைக் களைந்து சைவ சமயத்தை நிறுவியருளினார். திருநாவுக்கரசு சுவாமிகள் மாற்றார்கள் தமக்குச் செய்த கொடுமைகளை யெல்லாம் வென்று சைவ சமயத்தை நிலைநாட்டி யருளினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சைவ சமயத்தை நன்கு பாதுகாத்து

அறுபான்மும்மை நாயன்மார் வரலாறுகளைத் திருத்தொண்டத்தொகையால் விளக்கி யருளினர். மாணிக்கவாசக சுவாமிகள் புத்தரை வாதில் வென்று சைவ சமயத்தை நிலைநிறுத்தி யருளினர். அன்றியும் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் முதலிய மூவரும் தமிழ் நாடெங்குஞ் சென்று திருத்தலங்களை வழிபட்டு வேதாகம உண்மைகளைத் தேவாரத் திருமுறைகளால் வெளியிட் டருளினர்கள். மாணிக்கவாசக சுவாமிகள் பத்திச்சுவை ததும்பும் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் பாடி யருளினர்கள். சைவசித்தாந்த உண்மைகள் திருவாசகத்தில் பொன்னே போல் மிளிர்ந்துகொண்டிருக்கின்றன. இனிச் சந்தானாசாரியர்கள் மெய்கண்ட சிவாசாரியார், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியார் என்னும் நால்வராவர். கல்லாலின்புடையமர்ந்த தென்முகக் கடவுள் திருநந்திதேவருக் கருளிச் செய்த ஞான உபதேசத்தைத் திருநந்திதேவர் சனற்குமார முனிவருக்கும், அவர் சத்தியஞான தரிசினியாருக்கும், அவர் பரஞ்சோதி முனிவருக்கும், உபதேசித்தருளினர். பரஞ்சோதி முனிவர் அவ்வுபதேசத்தைத் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருந்த மெய்கண்டதேவருக்கருள, அவர் அருணந்திசிவாசாரியருக்கும் அவர் மறைஞானசம்பந்தருக்கும், அவர் உமாபதிசிவாசாரியாருக்கும் உபதேசித்தருளினர். இங்ஙனம் ஒருவருக்குப் பின் ஒருவர் குருவும் மாணவருமாக வந்த முறைமையால் சந்தானாசாரியர் என்று சொல்லப்படுவர். மெய்கண்டதேவர் சிவஞானபோதம் என்னும் ஒப்புயர்வற்ற நூலையும், அருணந்திசிவாசாரியார் சிவாகமங்களுக்கெல்லாம் உரையாணியாகத் திகழும் சிவஞானசித்தியார் இருபாவிருபஃது என்னும் இருநூல்களையும், உமாபதி சிவாசாரியார் சிவப்பிரகாச முதலிய எட்டு நூல்களையும் செய்தருளினர். இந்நூல்களெல்லாம் சைவசித்தாந்த உண்மைகளைத் தெள்ளிதின் விளக்கும் ஞானநிலையங்களாகவுள்ளன.



## ௧௧. வேண்டுதல்

அன்பர்களே, நமது சைவசமயத்தின் பெருமைகளையும், முறைமைகளையும் ஒருவாறு உங்கள் திருமுன் தெரிவித்தேன். நமது சமயம் குருட்டு நம்பிக்கையுடைய கொள்கைகளையாவது, வெறும் புராணக் கதைகளையாவது போதிப்பது அல்ல. அதன் ஒவ்வொரு கொள்கையும் அளவைப் பிரமாணங்கட்கு ஒத்ததே. மேலைநாட்டாரால் புதிதுபுதிதாக நுணுகி ஆராய்ந்து உரைக்கப்பெறும் தத்துவ உண்மைகளையெல்லாம் சைவசித்தாந்த சாத்திரங்களிற் கண்டறியலாம். சைவ சமயம் விரிந்த கொள்கைகளை யுடையதென்பது, நாத்திக சமயத்தையும் ஒதுக்கித் தள்ளாது அதனையும் தன்னை யடைவதற்குப் முதற்படியாகக் கொள்ளுவதால் நன்கு விளங்கும். விண்ணவர் இந்திரன் பிரமன் முதலிய தேவர்களும், அகத்தியர் முதலிய முனிபுங்கவர்களும், பிற்காலத்துப் பட்டினத்தார் முதலிய ஆன்றோர்களும் சைவ சமயத்தையே கைக்கொண்டொழுகி யுள்ளார்கள். நமது தமிழ் வேந்தர்கள் சைவ சமயத்தை வளர்ப்பதற்குக் கோடி கோடியாகப் பொருட்செலவு செய்து சிவாலயங்களையும், சைவ மடாலயங்களையும் நிறுவி யிருக்கின்றார்கள். சைவ சமயத்தில் சாதி குலம் பிறப்பென்னும் தடஞ்சுழியில்லையென்பது அறுபான் மும்மை நாயன்மார் சரித்திரங்களால் நன்கு விளங்கும்.

நமது சைவ சமயத்தில், ஆண்மக்கட்கு எவ்வளவு உரிமைகளுண்டோ அவ்வளவு உரிமைகளும் பெண்மக்கட்குமுண்டு. நாம் தொழும் தெய்வங்களாக மங்கையர்க்கரசியார் திலகவதியார் காரைக்காலம்மையார் முதலிய பெண்பாலார் நமது சமயத்திற் போற்றப்படுகின்றனரன்றோ? ஆதலின் நமது சைவ மங்கையர்கள் சைவத்தை வளர்ப்பதற்கு வேண்டும் துணைபுரிதல் வேண்டும். இனி இளைஞர்களுக்கும் நமது சமயத்தில் பங்குண்டு. திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திகள், மெய்கண்டதேவர் முதலியோர் இளைஞர்களன்றோ. அவர்கள் நமது சைவ சமயத்திற்குச் செய்த தொண்டுகளைச் சைவ இளைஞர்களே நோக்குங்கள். நீங்கள் தற்காலத்தில்

முனைந்து செய்யும் பல தொண்டுகளுள்ளும் உயிர்க் குருதி பயக்கும் சமயத் தொண்டினைத் தலைமையாகக் கொண்டு உங்கள் சைவ சமயத்தைப் போற்றுங்கள்.

இனி இக்காலத்தில் நமது சமயமக்களின் நிலை மிகப் பரிதபிக்கத் தக்கதாயிருக்கிறது. ஒருவர் நுமது சமயம் யாதென்றால் இந்துசமயம் என்று சொல்வார்களே யல்லாமல் சைவசமயம் என்று சொல்ல அறியார்கள். நமது சமயக்கடவுளர் பெயரோ, ஆசாரியர்கள் பெயரோ, சாத்திரங்களின் பெயரோ சொல்ல அறியார்கள். என்னே பரிதாபம் !

சைவ அன்பர்களே,

உங்கள்பால் அடியேன் சிறு விண்ணப்பம் ஒன்று செய்து கொள்ளுகின்றேன். உங்கட்குப் பிறப்புரிமையுடைய சைவ சமயத்தைப் போற்றுங்கள். உத்தியோகத் துறையினின்றும் திரும்பிய பின் கிளப்புகளிலோ, பந்தடி மேடையிலோ, சினிமாவிலோ கழிக்கும் நேரத்தில் ஒரு சிறு கூறு சைவநூல்களைப் படிப்பதற்கு என்று ஒதுக்கி வைத்துக் கொண்டு இயன்றதொரு நூலைப் படியுங்கள். நமது ஆண்டவனாகிய சிவபெருமானை ஒரு கணமாவது சிந்தியுங்கள். திருநீறு உருத்திராக்க முதலிய சிவசின்னங்களைக் கூசாது அணியுங்கள். அங்ஙனம் அணிவோரையும் சமயாசாரங்களில் ஒழுகுவோரையும் இகழாதீர்கள். உங்கள் சமயத்தைப் பிறர் இகழ்வாராயின் அதனைச் செவியில் கேளாதீர்கள். இயன்றவரை ஒழுங்கான முறையில் அதனைத் தடுக்க முயலுங்கள். எந்தெந்த வழிகளிலெல்லாம் சைவ சமயத்தை வளர்க்க இயலுமோ அவ்வவ் வழிகளிலெல்லாம் வளருங்கள். உங்கள் சமய மக்களைப் பிறசமயிகள் கொள்ளை கொள்வதைத்தடுக்க முந்துங்கள். இங்ஙனமெல்லாம் செய்வீர்களாயின் ஆண்டவன் உங்கட்கு எல்லா நலன்களையும் தந்தருளுவான்.

## கஉ. முடிவுரை

பெரியோர்களே,

உங்கள் திருமுன்பு தலைமைக்குரிய கடப்பாட்டை நிறைவேற்றுவான் என் சிற்றறிவுக்கு எட்டிய அளவில் பதி



னொரு பொருள்களைப் பற்றிப் பேசியிருக்கின்றேன். நான் முன்னரே விண்ணப்பித்துக் கொண்டபடி அவற்றிலுள்ள குற்றங்களை நீக்கிக் குணமுளவேல் அவற்றை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். நமது சமயம் அதன் சிறப்புக்கேற்பச் சமய அரசாய்த் திகழும்படி செய்யவேண்டியது சமாஜத்தையும் உங்களைப்போன்ற மெய்யன்பர்களையும் பொறுத்த கடமையா யிருக்கின்றது. நமது சமய நூல்களும் பெரும்பாலும் தென்றமிழ் மொழியிலேயே அமைந்திருக்கின்றன. வடமொழி நூல்களாகிய சிவாகம முதலியனவைகளும் கிரந்த லிபியில் இருப்பதால் வடநாட்டார் அவற்றின் உண்மைகளைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. நம் தமிழ்நாட்டின் அண்மையிலுள்ள தெலுங்கு, மலையாளம், கன்னட முதலிய நாடுகளிலுள்ளவர்கட்குங்கூட நமது சமய உண்மையோ, சரித்திரங்களோ தெரிவதில்லை. காலஞ்சென்ற பெரியார்களாகிய ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையவர்களும், முதலியார் சபாரத்தினம் அவர்களும் சிவஞான போதம், சித்தியார், திருவருட்பயன் முதலிய நூல்களையும் சித்தாந்த உண்மைகளை விளக்கும் நூல்களையும் முறையே ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார்கள். இப்பொழுது ஆங்கில மொழி உலகமெல்லாம் பரவியிருப்பதால் ஆங்கிலத்தில் நமது சமய உண்மைகளை வெளியிடுவோமானால் உலகமெல்லாம் அது பரவுதற்கு ஏதுவாயிருக்கும். நமது சமாஜம் சைவ சாத்திரங்களையும், திருமுறைகளையும் அச்சிட்டு அடக்க விலைக்குத் தமிழ் நாடெங்கும் பரவச்செய்த நன்றிக்கு சைவ உலகமும் தமிழ் உலகமும் என்றும் மறவா நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றன. இனி வரும் ஆண்டில் ஆங்கிலத்தில் நமது சமய உண்மைகளை வெளியிட வேண்டிய திருத்தொண்டை நமது சமாஜம் கைக்கொள்ள வேண்டுகிறேன்.

சைவசித்தாந்தமும் ஆங்கிலமும் நன்குணர்ந்த திருவாளர்கள் - பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள், ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் போன்ற பெரியார்கள் பலர் சமாஜ முக்கிய உறுப்பினர்களாக விருப்பதால் அவர்களெல்லாரும்

அவ்வேலையை எளிதில் செய்யக் கூடும். எல்லாச் சைவமக்க ளும் சமாஜத்திற்கு வேண்டும் துணைபுரிவார்களாக.

பெரியோர்களே,

இதுகாறும் என் புன்மொழிகளைச் செவிமடுத்த உங்க ளனைவருக்கும், தலைமைப் பதவியை எனக்கு அளித்த சமாஜத்தார்கட்கும் என்முழுநன்றியையும் செலுத்துவது டன், என்னையாட் கொண்ட திருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளையும், எல்லாவற்றிற்கும் நிமித்த காரணமாயிருந்து முடித்துவைக்கும் எல்லாம் வல்ல கச்சியேகம்பப் பெருமான் கழலிணைகளையும் முப்போதும் இறைஞ்சுகின்றேன்.

“ என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம் ”

திருச்சிற்றம்பலம்



ந. சிவகுருநாத பிள்ளை

சிவமயம்

எவ்வுயிரும் நீங்காதுறையும் இறைசிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பாயிரு.

# சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
# 31-வது ஆண்டு அறிக்கை

## சமாஜத்தின் தோற்றம், நோக்கம், தொழில்முறை

இச்சமாஜம் திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் 1905ஆம் ஜூலைமீ 7௳ நிறுவப்பெற்றது. 1860ஆம்த்திய சபைப் பதிவுச் சட்டப்படி S - No. 6 of 1915-16 என்ற எண்ணுள்ள சபையாக 1915ஆம் டிசம்பர்மீ 11௳ அரசாங்கத்தாரால் பதிவு செய்யப்பட்டது. இச்சமாஜத்தின் தலையாய நோக்கமாவது சைவசித்தாந்த சமயத்தையும் அதன் தத்துவ சாத்திர முடிபுகளையும் பரவச்செய்தலேயாம். இக்கருத்து முற்றுப்பெறுமாறு கையாளப்படும் முறைகளுட் சில கீழ்வருவனவாகும் :—(1) ஆண்டுக்கு ஒருமுறை இந்தியாவின் எப்பகுதியிலேனும் இலங்கை, பர்மா, மலேயா முதலிய தமிழ்வழங்கும் வெளிநாடுகளிலேனும் ஒரு மகாநாடு நடத்தல் (2) மேற்கூறிய இடங்களிற் பல கிளைச்சபைகளைத் தாபித்தல் (3) புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் முதலிய வெளியீடுகளை ஆங்கிலத்திலும் சுதேச மொழிகளிலும் இயற்றிச் சைவ சித்தாந்தக் கொள்கைகளையும் அவற்றிற்கு ஆதரவு புரியும் ஏனைய கருத்துக்களையும், பரவச்செய்தல் (4) 'சித்தாந்தம்' என்னும் மாதத் தமிழ்ப்பத்திரிகை நடத்தல் (5) பன்னிருதிருமுறைகள் பதினான்கு சாத்திரங்கள் முதலிய சிறந்த நூல்களைப் பல்லாயிரக்கணக்கில் அச்சிட்டு அடக்கவிலைக்குத் தருதல் (6) எளிய கீழ்வகுப்பினருக்கு அறத்தின்நெறி, சமயத்தின் இயல்பு முதலியவற்றை விளக்குதல் (7) புறச்சமயத்தினின்றும் சைவசமயம் புக விழைவோருக்கு வேண்டுவன செய்தல் (8) கோயில் மடம் முதலிய சமய நிலையங்களைச் சீரிய முறையில் திருத்துதல் (9) கடவுள் உண்டென்ற கொள்கையையும் அருளொழுக்கத்தையும் பரப்புவதில் ஏனைய சமயிகளோடு ஒத்துழைத்தல் (10) இளைஞர்கட்குச் சமய போதனை செய்தல். இம்முறைகளைப் பின்பற்றிச் சமாஜத்தின் பொருள்நிலை, தொண்டர்களின் ஊக்கம், பொதுமக்களின் ஆர்வம் முதலியவைகட்கேற்பத் திருத்தொண்டு நடைபெற்றுவருகிறது.



## சமாஜ நிர்வாகம், கூட்டங்கள்

இச்சமாஜ உறுப்பினர் தொகை இவ்வாண்டின் தொடக்கத்தில் 413 ஆகவும், இறுதியில் 364 ஆகவும் உள்ளது. உறுப்பினர் தொகையைக் குறைபடாது அதிகரிக்கச்செய்வது திருநெறித்தொண்டர் முதற் கடமையாகும். இவ்வாண்டில் சமாஜப் பொதுக்கூட்டங்கள் இருபது நடைபெற்றன. இவற்றுள் சென்னையில் எட்டும், திருவழுந்தூர், வடநாங்கூர், காஞ்சிபுரம், திருவான்மியூர், கூவம், திருப்பாதிரிப்புலியூர், திருக்கழுக்குன்றம், திருவஞ்சைக்களம், திருவள்ளூர், சைதாப்பேட்டை, கோடம்பாக்கம், வாலாஜாபாத் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் நடைபெற்றன. இக்கூட்ட விவரங்கள் அவ்வப்போது 'சித்தாந்தம்' பத்திரிகையில் வெளிவந்துள்ளன. இவற்றுள் பல வெளியூர்களில் மாதக் கூட்டங்களை ஏற்பாடுசெய்து அவைகளிற் றலைமை வகித்துச் சமாஜத்துக்கு ஊக்கமளித்த திருவாளர் - இவான்

**சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முப்பத்தோராவது ஆண்டு (1-12-1935 முதல் 30-11-1936 வரை)**

வரவு செலவு கணக்குத் தொகுப்பேடு

| வரவு | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| சந்தா | 642 | 0 | 0 |
| இணைத்தல் சந்தா | 24 | 0 | 0 |
| வெளியீடுகள் | 1695 | 0 | 0 |
| நன்கொடை | 10 | 0 | 0 |
| தபால் வகை | 39 | 8 | 0 |
| சில்லரை வகை | 0 | 8 | 0 |
| வட்டி | 31 | 6 | 7 |
| இந்தியன் பாங்கி | 325 | 0 | 0 |
| பரீட்சை கட்டணம் | 13 | 0 | 0 |
| மொத்தம் | 2780 | 6 | 7 |
| ஆரம்ப இருப்பு | 9 | 15 | 4 |
| ஆக | 2790 | 5 | 11 |

| செலவு | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| வெளியீடுகள் | 1225 | 12 | 3 |
| சித்தாந்தம் | 378 | 8 | 9 |
| தபால் வகை | 163 | 11 | 9 |
| சில்லரை வகை | 42 | 9 | 6 |
| கூட்டங்கள் | 34 | 0 | 0 |
| நன்கொடை | 247 | 6 | 0 |
| கேடயம் | 7 | 9 | 6 |
| விளுத்தாள் அச்சுக்கூலி | 6 | 8 | 0 |
| இந்தியன் பாங்கி | 677 | 6 | 7 |
| மொத்தம் | 2783 | 8 | 4 |
| முடிவு இருப்பு | 6 | 13 | 7 |
| ஆக | 2790 | 5 | 11 |

**பொருள் வலிவு**

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| இந்தியன் பாங்கி | 1060 | 8 | 9 |
| வே. ஐ. நா. பாங்கி | 0 | 4 | 0 |
| கையிருப்பு | 6 | 13 | 7 |
| ஆக | 1067 | 10 | 4 |

ம. பாலசுப்பிரமணிய முதலியார், காரியதரிசி.
தி. க. சுந்தரம் பிள்ளை, பொருட்காப்பாளர்.
க. இரத்தின முதலியார், மாதக்கணித பரிசோதகர்.
ஈ. ந. தணிகாசல முதலியார்.
ஆண்டுக்கணித பரிசோதகர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 31-வது ஆண்டு
## கணக்குப் பரிசோதனை அறிக்கை

இந்த ஆண்டின் கணக்குகளைப் பரிசோதனை செய்ததில் சென்ற ஆண்டுக்கு இந்த ஆண்டு கையிருப்பு ரூ. 718-5-6 லிருந்து ரூ. 1067-10-4க்கு அதிகரித்திருக்கிறது. இதன்றியும் அருணகிரிநாதர் திருப்புகழ் விலையாகாமல் 630 பிரதிகள் நின்றிருக்கின்றன. இவை இந்த ஆண்டு விலையாய் விடுமென்று நம்புகிறேன். அவ்வாறு விலையாகுமெனில் கையிருப்பு இருமடங்காகலாம். வரவு செலவு கணக்குகளெல்லாம் சமாஜ காரியதரிசி சொந்த லிகிதத்தில் பெரும்பாலும் எழுதப்பட்டன வாகையால், அவை செவ்வனே கவனிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஆண்டின் வரவு செலவு தொகுப்பேடு இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

ஈ. ந. தணிகாசல முதலியார்,
ஆண்டு கணித பரிசோதகர்.

7—12—1936.

உ

சிவமயம்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

# நடத்துகிற சைவத் தேர்வுகள்

1. தேர்வுகளின் பெயர்:—(i) இளஞ் சைவப் புலவர் தேர்வு (ii) சைவப்புலவர் தேர்வு. இவை முறையே முதற்றேர்வு இரண்டாந் தேர்வெனக் கீழே குறிக்கப்படும்.

2. நடக்கக் கூடிய இடங்கள்:—சென்னை, சிதம்பரம், தஞ்சை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், கோயன்புத்தூர், வேறு பிற தகுந்த இடங்கள்.

3. பதிவுத் தொகை. (பிரவேசக் கட்டணம்) முதற்றேர்விற்கு ஒரு ரூபா; இரண்டாந் தேர்விற்கு இரண்டு ரூபா.

4. யாருக்கு:—முதற்றேர்வு முப்பத்தைந்து ஆண்டுக் குட்பட்ட யாவருக்கும்; இரண்டாந் தேர்வு யாவருக்கும் உரித்தானது. முதற்றேர்வுக்குச் செல்லாமலேயும், முப்பத்தைந்து ஆண்டுக் குட்பட்டவரும் இரண்டாந் தேர்வுக்குப் போகலாம். ஆனால் முதற்றேர்வுக்குச் சென்று தேர்ச்சித் தகுதிபெறாதவர்கள் இரண்டாந் தேர்வுக்குச் செல்லுதல் கூடாது. ஆண்டு உறுதிச் சீட்டு (Age certificate) தக்கவரிடம் பெற்று அனுப்ப வேண்டும். சமாஜ அங்கத்தவரும், பள்ளிக்கூடத் தமிழ்ப் பண்டிதரும், கிராம முன்சீபும் ஆண்டு உறுதிச்சீட்டு தருதற்குத் தக்கவராவர்.

5. நடை முறை:—பதிவுத் தொகையுடன் மனுத்தாளனுப்பும் கடைசி தேதி ஆகஸ்டுமீ 20உ. தேர்வு நடக்குந் தேதி: நவம்பர்மீ மூன்றாம் ஞாயிற்றுக்கிழமை. முடிபு வெளியிடல்: டிசம்பர்மீ 10உ. பட்டம் வழங்கல், பரிசளித்தல்: சைவ சித்தாந்த மகாசமாஜ ஆண்டு விழாவில். மேற்கண்ட தேதிகளைப் பலர் சௌகரியத்தை முன்னிட்டுச் சில நாட்கள் முன்பின்னாக மாற்றி அறிவிக்கும் உரிமை சமாஜக் காரியதரிசிக்குண்டு. வேறு ஐயப்பாடுகளைத் தீர்க்கும் உரிமையும் அவருடையதே. இத்தேர்வுகளைப் பற்றிய ஐயப்பாடுகளை ரிப்ளைகார்டு மூலம் காரியதரிசியிடமிருந்து தீர்த்துக் கொள்ளலாம்.

6. தகுதிச் சீட்டும் பட்டமும்:—மேற்படித் தேர்வுகளில் ஒவ்வொரு வினாத் தாளிலும் நூற்றுக்கு 25 வீதமும் மொத்தத்தில் நூற்றுக்கு 35 வீதத்திற்குக் குறையாமலும் வாங்குபவர் மூன்றாம் வகுப்பிலும், நூற்றுக்கு 50 வீதத்திற்குக் குறையாது வாங்குவோர் இரண்டாம் வகுப்பிலும், நூற்றுக்கு 60 வீதத்திற்குக் குறையாது வாங்குவோர் முதல் வகுப்பிலும் தேறினவராகக் கருதப்படுவர். அதற்குத் தகுந்த தகுதிச் சீட்டுக்களும், இளஞ் சைவப் புலவர், சைவப் புலவர் என்ற பட்டங்களும் ஆண்டுவிழாவில் வழங்கப்பெறும்.

7. பரிசுகள்:—முதற் றேர்வில் முதற் பரிசு 25 ரூபா; இரண்டாந் தேர்வில் முதற் பரிசு 50 ரூபா. இத்தொகையைக் கொண்டு தங்கப் பதக்கம், புத்தகம் முதலியன வழங்கப்பெறும். ஒவ்வொரு தேர்விற்கும் இரண்டாம் மூன்றாம் பரிசுகளாகச் சமாஜ வெளியீடு முதலிய புத்தகங்கள் தக்கபடி வழங்கப்படும். ஐவர் தேறினல்லது பரிசுகள் வழங்கப்படா.

8. வினாத் தாள்களின் வகை தொகை:—ஒவ்வொன்றும் இரண்டரை மணிப்பொழுதில் எழுதக்கூடிய இரண்டு வினாத் தாள்கள் முதல் தேர்விற்கு உண்டு. இரண்டாந் தேர்விற்கும் அப்படியே; ஆனால் ஒவ்வொரு வினாத் தாளும் மூன்றுமணிப் பொழுது எழுதக் கூடியதாகும். அவை முறையே I, II என அடியிற் குறிக்கப்பட்டுள்ள பாடங்களைப் பொறுத்ததாகும்.

## 9. பாடங்கள் (1937, 1938, 1939ஆம் தேர்வுகட்கு)

### முதல் தேர்வு

I (அ) அகத்தியர் தேவாரத்திரட்டு — முதற் பன்னிரண்டு பதிகங்கள்—க. சதாசிவ செட்டியார் உரையுடன்.

(ஆ) திருவாசகம்—நீத்தல் விண்ணப்பம் உரையுடன் சமாஜப்பதிப்பு.

(இ) பெரிய புராணம் - செய்யுள். காரைக்காலம்மையார் (பதவுரையுடன்)

(ஈ) பெரியபுராண வசனம் - நாவலர்.

(உ) திருக்குறள்-ஐந்து அதிகாரம் (பரிமேலழகர் உரையுடன்):—கடவுள் வாழ்த்து, அறன் வலியுறுத்தல், அன்புடைமை, அருளுடைமை, வாய்மை.

(ஊ) சைவ சமயநெறி:—மாணுக்க ரிலக்கணம் முழுவதும் ; பொதுவிலக்கணம் 22-ங் குறள் முதல் 75 முடிய ; 131 முதல் 222 முடிய. (இவை மூன்று பகுதிகளும் பொழிப்புரையுடன்)

II (அ) சிவஞான சித்தியார் சுபக்கம் உரையுடன். சமாஜப் பதிப்பு.

(ஆ) சிவஞானபாடியம், க, உ - சூத்திரங்கள். சமாஜப் பதிப்பு.

### இரண்டாந் தேர்வு

I (அ) அகத்தியர் தேவாரத்திரட்டு உரையுடன்.

(ஆ) திருவாசகம் - அகவல் நான்கும் திருச்சதகமும் - உரையுடன் - சமாஜப் பதிப்பு.



(இ) பெரியபுராணம் - அப்பர். (பொழிப்புரையுடன்)

(ஈ) திருக்குறள் - அறத்துப்பால் முழுவதும். (பரிமேலழகர் உரையுடன்)

(ஊ) சைவ சமய நெறி : முழுமையும் (பொழிப்புரையுடன்)

II (அ) சிவஞானபாடியம் முழுமையும்.

(ஆ) அஷ்டப்பிரகரணம் - பக்கம் - 1 - 192 - சிவாகம சங்கப்பதிப்பு.

10. மனுத்தாளில் குறிக்க வேண்டிய விவரங்கள் :— விண்ணப்பம் செய்பவர் முழுப்பெயர், தகப்பனுர் பெயர், சமயம், சாதி, குலம், தொழில், வயது, இருப்பிடம், தபால் விலாசம், மேற்கூறிய ஆண்டு உறுதிச் சீட்டு, விண்ணப்பம் செய்யும் தேதி, விண்ணப்பம் செய்பவர் கையொப்பம் ஆகிய இவ்விவரங்கள் ஒவ்வொரு மனுத்தாளிலும் இருத்தல் வேண்டும். அச்சிட்ட மனுத்தாள் சமாஜத்திற் கிடைக்கும்.

# வரவேற்புரை

[திரு. ம. சாமிநாத முதலியார்]

*மதிவளர் சடைமுடி மன்றுளாரைமுன்*
*துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்*
*பொதிகலன் நகர்தரு புனிதர் பேரவை*
*விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.*

திருவருள் நெறிச் செல்வர்களே!

கலைப்புலமைசான்று, உலகியலும் மெய்ந்நெறியும் ஆய்ந்த வாய்மொழிப் புலவர்களும் அவ்விரண்டையும் அப்புலவர்வாய்க் கேட்டுத் தெளிய விரும்புகின்றவர்களுமாக, இப்பேரவையில் வந்து குழுமியுள்ள உங்களைக் காணும்போது என் உள்ளத்தில் பெருமகிழ்ச்சி எழுகின்றது.

தொன்றுதொட்டுவரும் திருவருள் நெறியாகிய சைவ சித்தாந்தச் செந்நெறியின் வளர்ச்சியைக் கருதிக் கூடியுள்ள இப் பேரவையைக் காணும்போது, இத் திருநெறியைப்பற்றி யான் கேட்டும் ஆராய்ந்தும் அறிந்தவற்றுள் சில என் கருத்தில் எழுகின்றன. சைவ சித்தாந்தத்தின் தனிச் சிறப்பு அது சமயங்கள்மாட்டும், நூல்கள்மாட்டும், அந்நூல்களுள் கூறப்படும் பொருள்கள்மாட்டும் கொண்டுள்ள பொது நிலையில் உள்ளது. எச் சமயத்தவரும் உண்மையையே காணும் கருத்துடையவர். எச்சமய நூலினும் அந்நூலாசிரியன் உண்மையென்று கண்ட பொருள்களே கூறப்பட்டுள்ளன. ஆகவே சமயங்களும், அச்சமய நூல்களும், அந்நூல்களுட் கூறப்படும் பொருள்களும் ஒன்றோடொன்று முரணுவன வல்ல.

ஆனால் உலகில் சமயங்களும், சமய நூல்களும், நூற்பொருள்களும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் பலவாக உள்ளனவேயெனில், அவ்வேற்றுமை யுணர்வு அவற்றை ஒருமைப்படுத்திக் காணமுடியாமையினாலும், அவ்வவற்றின்



தெளிவை எடுத்துக் கொள்ளாமையினாலுமே உண்டாகின்றது.

கடவுள், உயிர், உலகு என்னும் இவற்றின் உண்மையியல்புகள் அளவற்றன. அவ்வுண்மைகளெல்லாம் இறைவன் திருவருள் பெற்ற மெய்யுணர்வுடையார்க்கே முற்ற விளங்கும். அங்ஙனம் முற்ற உணர்ந்த பெரியார்களும் அவற்றை மக்களுக்குப் போதிக்கப் புகும்போது காலத்திற்கும், இடத்திற்கும், மக்களின் உணர்வு நிலைக்கும் ஏற்றபடி போதிக்கின்றனர். இங்ஙனம், பெரியார்கள் உலகத்தார்க்கு வேண்டுவன கூறி அவரோடு கலந்தும், கலவாமலும் நிற்பார்கள் என்பதை,

> "எவரெவர் எத்திறத்தர் அத்திறத்த ராய்நின்று
> அவரவர்க்கு ஆவன கூறி—எவரெவர்க்கும்
> உப்பாலாய் நிற்பமற்று எம்முடையார்"

என ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் விளக்கியருளினமை காண்க.

இனி, அவ்வாசிரியன்மார்களின் அருளுரைகளை விளக்க வரும் உரையாசிரியர், போதகாசிரியர் முதலாயினோரும் தத்தம் உணர்வு நிலைக்கு ஏற்றபடி அவற்றை விளக்கிச் செல்கின்றார்கள். இக்காரணங்களால் உலகில் சமயங்களும், சமயங்களின் உட்பிரிவுகளும் பலவாக மல்கியுள்ளன.

இங்ஙனம், சமயங்கள் பலவாகக் காணப்படினும் அப்பன்மை பற்றி மக்களுக்குள் பகைமையும், பிளவுகளும் விளைய வேண்டுவதில்லை. உண்மையின் தொடர்ச்சியையும், முழு நிலையையும் (the continuance and entirety of knowledge) காண விரும்புவோர் பலசமயங்களினும் விளங்குகின்ற உண்மையின் கூறுகள் (Partitions of knowledge) எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தித் தழுவிக் கொள்ளுதல் வேண்டும்*

---

* All partitions of knowledge should be accepted, rather for lines to mark and distinguish than for sections to divide and separate, so that the continuance and entirety of knowledge be preserved."—Bacon.

இவ்வாறு, பல சமயங்களிலும் கூறப்படுவனவற்றை உண்மையின் கூறுகள் என்றும், அக்கூறுகள் முறையாக இயக்கப்பெற்று ஒருங்கு கூடிய வழியே முழு உண்மை பெறப் படுகின்றது என்றும் கொள்ளுதலே பொது நிலையாகும்.

இப்பொதுநிலையின் இயல்பு 'ஓது சமயங்கள்' எனத் தொடங்கும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தில் தெளிவாக நுவலப்படுதல் காண்க.

சைவசித்தாந்த சாத்திரங்கள் இப்பொது நிலையை அடிப்படையாகக் கொண்டே எழுந்துள்ளன. இச்சமயத்திற்கு வைதிக சைவம் என்னும் பெயரும், வேதாகமங்களை இப் பொதுநிலை பற்றி ஒருமைப்படுத்தி உணர்த்துதலினால் போந்ததே ஆகும். திருவருள் நெறித் தமிழ் மறைகளாகிய சைவத் திருமுறைகளினும் இப்பொதுநிலை மிளிர்தலை ஆங்காங்குக் காணலாம்.

சைவத் திருமுறைகளினுஞ் சாத்திரங்களினுங் இப் பொது நிலை விளங்குதலை மேற்கோள்கள் காட்டி யான் விரிக்க வேண்டுவதில்லை. அது பின் நிகழும் விரிவுரைகளில் விளக்கப்படும். யான் முடிபாகச் சொல்ல விரும்புவது, இப் பொது நிலையே எல்லாச் சமயத்தினரையும் ஒற்றுமைப்படுத்தும் சிறந்த கருவியாகும் என்பதே.

இனி, சைவ சமயத்தினர் பிற சமயத்தினருடன் அன்பு பூண்டு அவர்களை உடன்தழுவி ஒழுகும்படி செய்தற்கு உரிய பல உண்மைகளும் இச் சமயத்தில் உள்ளன; எல்லா உயிர்களுக்கும், அவை எந்நிலையில் நிற்பினும், முதல்வன் திருவருள் உண்டு என்பது இச்சமயத்தில் காணப்படுகின்றது. "ஆருருவம் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்," "எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்—அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான்," என்னுந் திருமொழிகள் இக் கருத்தேபற்றி எழுந்தன. அன்றியும் யார் எக்கோட்பாட்டை யுடையராயிருப்பினும் அவர்க்கு அக்கோட்பாடு



இறைவன் திருவருளாலேயே எய்தியது என்பதும், அக் கோட்பாட்டில் அவர் வழுவாது நிற்பின் முதல்வன் திருவருள் மிகப்பெற்று அதனினும் உயர்ந்த கோட்பாட்டை எய்தப் பெறுவர் என்பதும், மேலும் இவ்வாறே படிமுறையில் உயர்ந்து, முடிவில் மீளா இன்பநிலையைப் (Eternal bliss) பெற்றேவிடுவர் என்பதும் இச்சமயத்தில் காணப்படும் உண்மைகளாகும்.

> "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே
> எரியினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்".

"மல்லை ஞாலத்து வாழும் உயிர்க்கெலாம்—எல்லையான பிரானார்" என்னும் அருளுரைகள் இவ்வுண்மையை விளக்குகின்றன. மீளாத் துன்பநிலை (Eternal damnation) என்பது இச்சமயத்தில் இல்லை.

இச்சமயம் அறவொழுக்கமாகிய அடிப்படையை (Ethical basis) உடையது. முதல்வனை அறவடிவினன் எனத் திருமுறைகள் போற்றுகின்றன.

> "இன்ன உரு இன்ன நிறம் என்றறிவ தேல்அரிது - நீதிபலவும்
> தன்னஉரு வாமென மிகுத்த தவன்"

"நீதியை நிறைவை" "நீதியானை நியமநெறி ஓதியானை" என்பன ஈண்டுக் கருதற்பாலன.

அறத்தில் தலைநின்றார்க்கே சமய ஒழுக்கம் பயன்தரும் என்பதும், அறம் மெய்யுணர்வை எய்துதற்கு இன்றியமையாதது என்பதும் இச்சமயத்தின் கொள்கைகள். அவற்றுடன் அறவொழுக்கம் இறைவன் திருவருளை எய்துதற்கு இன்றியமையாததுஎன்பதும் இச்சமயத்தில் கூறப்படும்தனி உண்மையாகும். இக்கருத்து முதல்வன் ஊரும்விடையை அறவடிவினதாகக் கொள்ளப்படுதலிலிருந்து விளங்கும். பொதுவாகச் சமய நூல்களில் அறத்தைப்பற்றிய ஆராய்ச்சி எடுத்துக் கொள்ளப்படாவிடினும், திருக்குறள் என்னும் ஒப்புயர்வற்ற அறநூலில் அது சிறந்து விளங்குகிறது. திருக்குறளில் குறிப்பாக உள்ள வீட்டியல்பின் விளக்கமே திரு

முறை சாத்திரங்களில் உள்ளது. சைவத்திற்குத் திருக்குறள் பொது நூலும், திருமுறை சாத்திரங்கள் சிறப்பு நூலும் ஆகும். மேலும், எல்லா அறங்களுக்கும் அடிப்படையாகிய அன்பு, அருள் ஒழுக்கம், இச்சமயத்திற்கே சிறந்து நிற்பது யாவரும் அறிந்ததே. இச்சமயத்தில் "அன்பே சிவம்," எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவன் என்று—எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்பன போன்ற அருளுரைகள் சிறந்து காணப்படுகின்றன.

இனி, இதில் கூறப்படும் சாதனங்கள், சரியை கிரியை யோகம் ஞானம் என்பதுபோல, படிமுறையில் வைத்துப் பேசப்படுதலின், இச்சமயம் நடைமுறையிற்கொண்டு ஒழுகுதற்கு ஏற்றபடியும் அமைந்துள்ளது என்பது புலனாகின்றது.

இங்ஙனம் பலவகையிலும் சிறந்து விளங்கும் இத்திருநெறியைப் போற்றி வளர்க்க வேண்டுவது நமது கடமையாகும். இச்சமயம் வடமொழி தென்மொழியென்னும் இருமொழிகளின் பயனாக இருந்தபோதிலும், தமிழ் மக்களுக்கே சிறப்புரிமையாக நிற்பது. இதனை டாக்டர் ஜி. யூ போப் என்னும் கிறித்துவப்பாதிரியார் தமது திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பின் முன்னுரையில் விளக்கியுள்ளார்*. அன்றியும் சைவ சித்தாந்தத்தைத் தெளிய உணர விரும்புவோர் சைவத் திருமுறைகளையும், சாத்திரங்களையும் திருக்குறளையும் நன்கு கற்றுணர்தல் வேண்டும். இந்நூல்கள் சைவசித்தாந்த நெறியை உணர்தற்கு இன்றியமையாதனவாகவும், போதுமானவையாகவும் உள்ளன. வேத, ஆகம புராண, இதிகாசங்களை நன்கு பயின்றாரும் தமக்குத் தோன்றும் ஐயங்களை நீக்கிக்கொண்டு உண்மை முடிபு

*"The Saiva Siddhanta system is the most elaborate, influential, and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South Indian and Tamil religion"

"Saivism is the old prehistoric religion of South India, essentially existing from Pre-Aryan times, and holds sway over the hearts of the Tamil People."



காணுதற்கு இந்நூல்களை இன்றியமையாது கற்றுணர்தல் வேண்டும். அவ்வடமொழி நூல்களைக் கல்லாதவர்களும் இந்நூல்களை ஓதியுணர்வார்களே யானால் சைவ சித்தாந்த நெறியை எளிதில் விளங்க அறிந்துகொள்ளுதல்கூடும்.

ஆதலினால் திருமுறை, சாத்திரங்கள் திருக்குறள் முதலிய செந்தமிழ் நூல்களில் பயிற்சியுடைய சான்றோர்களே இச்சமயத்தை உலகிற்கு விளக்கும் உரிமையையும் கடப்பாட்டையும் உடையராவர்.

சேக்கிழார் பெருமானும், மேலே இவ்வுரையின் தலைப்பில் எடுத்துக்கொண்ட திருப்பாசுரத்தில், திருமுறைகளை ஆராயும் புனிதர் பேரவையை, 'விளங்கி வெல்க' என வாழ்த்தியருளியதும் இக்கருத்துப்பற்றியே போலும்.

இத்தகைய உரிமையும், கடமையும் இயல்பாக வாய்க்கப் பெற்ற தமிழ்ச் சான்றோர்கள் பலரும், திருமுறை சாத்திரங்களில் முப்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட பயிற்சியையுடைய சைவ சித்தாந்த போதகாசிரியராகிய ஒரு பெரியாரின் தலைமையில் ஒன்று கூடியுள்ள இப்பேரவை, யாவருக்கும் பெரு மகிழ்ச்சியை விளைக்கும் என்பதில் யாது ஐயம் உளது? சமய வளர்ச்சி கருதி, உடல்நலம் முதலிய எவற்றையும் பொருட்படுத்தாமல், இவண் போந்துள்ள அன்பர்களையும், இப்பேரவையைத் தலைமை தாங்கிச் செம்மையாக நடத்தித் தர உடன்பட்டு வந்துள்ள தலைவர் அவர்களையும் வரவேற்புக் கழகத்தின் சார்பாக அன்புடன் வரவேற்கின்றேன். இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள இடம், உணவு முதலியவற்றின் ஒழுங்குகளில் குறைகள் இருத்தல் கூடும். அக்குறைகளைப் பொறுத்து மாநாட்டைச் சிறப்பாக நடத்தி வைக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்.

# இளைஞர் தலைமையுரை

[பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் M. A.]

## முன்னுரை

**சுத்தாத்துவித சைவ சித்தாந்தச் சிவநேயச் செல்வர்களே!**

ஏலவார்குழலாளுமைநங்கை என்றும் ஏத்தும் ஏகம்பரின் இன்னருளான் ஈண்டு குழுமியுள்ள எட்டாவது சைவ இளைஞர் மஹாநாட்டிற்குத் தலைமை வகிக்கும்படி என்னைப் பணித்த சைவசித்தாந்த மகா சமாஜத்தினருக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். நீங்கள் அடியேனுக்குப் பணித்துள்ள தொண்டாற்றப் போதிய அறிவும் ஆற்றலும் ஆராய்ச்சியும் என்பால் இல்லை என்பதை யான் முற்றும் உணர்ந்துள்ளேன். ஆயினும் உங்கள் அன்பினின்றும் பிறந்த ஆணையை மறுத்தற்கஞ்சி உங்கள் துணைகொண்டும் இறைவன் பெருங்கருணைத் திறத்தினும் எனது கடனாற்ற முயல்கின்றேன். இத்தொண்டாற்றுங்கால் நிகழும் குறைகளைக் களைந்து நிறையைக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

## தொண்டைநாடு

"தொண்டைநாடு சான்றோ ருடைத்து" என அவ்வையாராகிய அருந்தமிழ் மூதாட்டியால் எடுத்திசைக்கப்பட்ட பேரிசை வாய்ந்தது தொண்டைநாடாகும். "எந்நாட்டுப் பெருவளமும் எவ்வெவர் கோட்பாடுகளும் இயம்பவல்ல, பொன்னாட்டுப் பொன் செருக்கும் பன்னாக்குப் பனி செருக்கும் போக்கும் இந்த நன்னாட்டைப் புலவரெல்லாந் தொண்டைநாடென வுரைப்பர் ஞாலமங்கை, தன்னாட் போதனைய முகக்கனிவாயாங் காரணத்தின் சார்பாற் போலும்" (காஞ்சிப்புராணம் - திருநாட்டுப்படலம் - 144) என்றபடி பூமாதேவிக்கு இந்நாடு கனிபோன்ற வாயாகிய காரணத்தின் இது தொண்டைநாடெனப் பெயர் பெற்றது. தொண்டைநாட்டின் சிறப்பைக் கூறப் போந்த சைவசித்



தாந்தச் சிங்கமாகிய மாதவச் சிவஞான சுவாமிகள் காஞ்சி புராண நாட்டுப்படலத்தில், "திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்தைந் திணைவளமுந் தெரிந்து காட்ட, மருத் தொண்டை வாச்சியர்சூழ் குன்றைநகர்க் குலக்கவியே வல்லான் அல்லாற், கருத்தொண்டர் எம்போல்வார் எவ்வாறு தெரிந்துரைப்பார்.........." என்று தெய்வச் சேக்கிழாரின் புலமையைச் சிறப்பித்துக் கூறினரெனில் எம்மனோர் தொண்டைநாட்டின் சிறப்பைப்பற்றி எவ்வண்ணம் கூற இயலும்.

## காஞ்சிமாநகர்

நாம் ஈண்டுக் குழுமியுள்ள இக்காஞ்சிமாநகரம் இத்துணைச் சிறப்பு வாய்ந்த தொண்டைநாட்டிலுள்ள ஒரு நகரமாகும். 'காஞ்சி நிலமகளின் உந்தித்தானமா யிருத்தல் பற்றி வந்த பெயர்; 'க' என்பது சிரம், இன்பம், பிரமன் என்ற பொருள்களையுடையதனாலும் அஞ்சித்தலென்பது - பூசித்த லென்னும் பொருளாதலாலும் காஞ்சி என்பதற்குச் சென்னிமேற் கொண்டு பூசிக்கத்தக்க சிறப்பு வாய்ந்தது என்றோ, தன்னில் தங்குபவர் பேரின்பத்தை அடைவர் என்றோ, பிரமன் வழிபட்டுப் பேறு பெற்றான் என்றோ கொள்ளுதல் வேண்டும். இக்காஞ்சியானது திருக்கச்சி ஏகம்பம், கச்சிநெறிக்காரைக்காடு, கச்சிமேற்றளி, ஓணகாந்தன்றளி, கச்சி அநேகதங்காவதம் என்ற பாடல் பெற்ற திருப்பதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இது காசி, காஞ்சி, அவந்தி, அயோத்தி, மதுரா, மாயா, துவாரகை என்ற சப்தபுரிகளுள் ஒன்றாகும். இது "நகரேஷு காஞ்சி" என்று காளிதாச மஹா கவியால் எடுத்தாளப்பட்டுள்ளது. பஞ்சபூத ஸ்தலங்களுள் இது பிருதிவி ஸ்தலமாகும். சைவ சமயாசாரியர்களுள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் இடக்கண் பெற்ற இடம் இதுவன்றோ! கச்சியப்ப சிவாசாரியார் ஸ்கந்தபுராணம் இயற்றிய இடம் குமரகோட்டமன்றோ!

அருகர் பல்கலைக்கழகம் அமைத்து வடமொழி தென்மொழி வளர்த்த இடம் இக்காஞ்சி நகரம். ஸ்ரீ வரதராஜப் பெருமாள் சந்நிதியுள்ள இடமன்றோ இது! இந்நகரத்தில்

பலவித சாஸ்திர சம்பந்தமான கல்வெட்டுகளும் சிலாசாஸனங்களும் காணலாம். ஏழாம் நூற்றாண்டில் ஹிவான்ஸ்யாங் என்ற சீன யாத்திரிகர் இவண் போந்து சில நாள் இங்கு வதிந்து இந்நகரத்தின் சிறப்பைப்பற்றி அழகாக எழுதியுள்ளனர். பல்லவ அரசர் பலர் இந்நாட்டை ஆண்டு வந்தனர். அவருள் முதல் மகேந்திரவர்மன் என்ற பல்லவ அரசனைத் திருநாவுக்கரசர் சமண சமயத்தினின்று சைவசமயத்தில் சேர்த்தனர். அம்மையார் முப்பத்திரண்டு அறங்கள் வளர்த்த நகரம் இதுவே. அன்றியும் அம்மையார் தழுவ அரனார் குழைந்த இடம் இதுவன்றோ! இதனுண்மை பரசிவம், பராசத்தி, குடிலாசத்தி இம்மூன்றின் சொரூபமாயும் நிஷ்கள, சகள, சகள நிஷ்கள சொரூபமாயும், சோமாஸ்கந்த சொரூபமாயும், சத்தி பின்னுபின்ன சொரூபமாயும் விளங்குவதாகும். இதனால் இந்த க்ஷேத்திரம் முத்தி க்ஷேத்திரமெனவும், புத்தி க்ஷேத்திரமெனவும், புத்தி முத்தி க்ஷேத்திரமெனவும், மூர்த்தி, தலம், தீர்த்தம், பர்வதம் முதலிய பல விம்மிதம் அமைந்த சைவ க்ஷேத்திரமெனவும் கூறப்படும்.

இச்சைவ சித்தாந்த மஹா சமாஜமானது இற்றைக்கு இருபத்துநான்கு ஆண்டுகட்கு முன்னர் 1912-ம்வருடம் இக்காஞ்சிபுரத்தில் சைவத் திருவாளர் த. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் தலைமையில் கூடியது என்பதை உங்களுள் சிலர் அறிவீர்கள். மறுமுறையும் இச்சமாஜ ஆண்டு விழா இவண் நடப்பதால் சைவமணம் இங்குக் கமழ்கின்றது என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது.

## சைவ சித்தாந்தம்

சைவ இளைஞரைப்பற்றிக் கூறுமுன்னர் சைவம் என்பது யாது என்பதையும் சித்தாந்தம் எது என்பதையும் ஆராய்வாம். சிவசம்பந்தமுடையது சைவம் எனப்படும். சிவம் என்பது அகண்டமாயும், அருள் ஒளியாயும் உள்ளது. அது ஆதி அந்தம் அற்றது; ஒப்பு உயர்வற்றது; உரையுணர் விறந்தது; எங்கும் நிறைந்தது; என்றும் உள்ளது; எல்லாம் வல்லது; மலரகிதமானது; குணங்குறி யற்றது; கற்பனை கடந்தது; நாமரூபமில்லாதது; மேலும் அது தூலம் சூக்குமம், சுத்தம் அசுத்தம், பேதம் அபேதம், குணம் குற்றம், குறைவு நிறைவு, உயர்வு தாழ்வு முதலிய விகற்பங்களற்றது. அது எவ்வகைச் சமயத்தோர்க்கும் அவ்வப்பொருளாய்த் தன்னை மெய்யன்போடு வணங்கும் அன்பர்களின் அன்பே தனக்குரிய வடிவாய் விளங்கும் பரம்பொருளாம். சிவம் என்னும் சொல்லுக்கு மங்கலம் என்பது பொருள். மேலே கூறப்பட்ட மங்கலப் பொருள் யாவும் இறைவனிடத்தில் இருப்பதால் அவருக்குச் சிவன் என்ற திருநாமம் உண்டாயிற்று. இத்தகைய தனிமுதற் பொருளை வணங்குவோர் சைவராவர். அவ்விறைவனை வழிபடும் மார்க்கம் சைவமாம்.

சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதும் அவர் அருளிய வேத சிவாகமங்களே முதல் நூல்கள் என்பதும் சைவசமயத்தின் கொள்கைகளாம். தேவாரத் திருமுறைகள் தமிழ் வேதமெனப்படும். திருநீறும் கண்டிகையும் பசுபோதங் களையவல்ல வைதீக சிவசின்னங்களாம். ஸ்ரீ பஞ்சாக்கரமே வீடுபேற்றைத் தரவல்ல மகாமந்திரமாகும். இது கருதியன்றோ, “காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பது, வேதநான்கினு மெய்ப்பொருளாவது, நாதனாம நமச்சிவாயவே” என்று ஆளுடைய பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளி யுள்ளார்.

குருலிங்க சங்கம வழிபாடே சிவபெருமானுக்குச் செய்யும் சிறந்த வழிபாடாகும். பதி பசு பாசம் என்ற மூன்று பொருள்களும் அநாதி நித்தியப் பொருள்களாம். சரியை, கிரியை, யோகம் என்னும் மார்க்கங்களை முறைப்படி அனுஷ்டித்து ஞானத்தினால் சிவனடியைச் சேர்ந்து சிவமாந்தன்மை யடைதலே முத்தி எனப்படும். இவற்றைத் தமிழில் விளக்கும் ஞான நூல்கள், சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் என்ற இன்னோரன்ன பிற பதினான்கு சாத்திரங்களாம். சித்தாந்தம் என்பதற்கு முடிவு என்பது பொருள். வேதத்தின் முடிவாகிய வேதாந்தத்தின் சாரமா

யிருப்பது சைவம். ஆகவே சைவம் சித்தாந்த மெனப்பட்டது. இதனை ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள் "ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த, ஆராவின்ப வருங்கனி பிழிந்து, சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனமுதருந்தினர் சிலரே" என்றதனால் அறியலாம்.

## இளமையின் வாய்ப்பு

இதுகாறும் சைவத்தைப் பற்றிக் கூறினேன். இனி இளைஞர்களைப் பற்றிக் கூறுதும். நமது வாழ்க்கையில் சிறந்த பருவம் இளமைப் பருவம் என்பது கற்றோரும், மற்றோரும், பாவலரும், பாமரரும் ஒப்புக்கொள்ளக் கூடியதொரு உண்மையாகும். நமது உள்ளத்தைக் கொள்ளை கொள்வது இளமை யன்றோ? இளமை யில்லையேல் உலகில் இன்பம் இல்லை யென்றே கூறலாம். புல் பூடுகளிலும், செடி, கொடிகளிலும் விலங்குகளிலும் மக்களிலும் இளமை அரும்பி நம் கண்ணையும், கருத்தையும் கவர்கின்றதன்றோ? இளைஞரது உள்ளம் மாசற்ற தூய்மையான உள்ளமாகும். வஞ்சகம், அழுக்காறு, உயர் குலத்தவன் தாழ் குலத்தவன் என்ற வித்தியாசம், செல்வந்தன் வறிஞன் என்ற உயர்வு தாழ்வு பாராட்டுதல் இளைஞர்மாட்டில்லை என்பது எல்லோரும் அறிந்ததன்றோ! இளமையின்கண் அன்பும் அருளும் பரந்த நோக்கமும் பொலிதல் இயல்பு. கடவுளருள்ளும் நமது சமயாசாரியருள்ளும் அநேகர் இளைஞரன்றோ! "என்றும் இளையாய்" என்று நக்கீரரால் விதந்தோதப்பட்ட முருகன் இளையோனன்றோ? பொய்கண்டார் காணாப்புனிதமெனு மத்துவித, மெய்கண்ட நாதனருள் மேவுநாளெந்நாளோ" என்று தாயுமான தயாபரரால் புகழ்ந்தோதப்பட்ட மெய்கண்டார் இளைஞரன்றோ! சைவ சமயாசாரியருள், ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய நம்பியும், ஆளுடைய அடிகளும் இளைஞர்கள் அல்லவா! நமது சமயத்திற்கு உழைத்த அன்னாரை அவ்வழியில் நாம் ஏன் பின்பற்றுதலாகாது?

இளமை உணர்ச்சிக்கும் உற்சாகத்திற்கும் ஓர் உறைவிடம் என்று கூறுதல் மிகையாகாது. தற்காலத்தில் நகராண்



மைக்கழகத் தேர்தல்களிலும் சட்டசபைத் தேர்தலிலும் ஊக்கங்கொண்டு ஊண் உறக்கமற்று நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி அல்லும் பகலும் உழைப்பவர் இளைஞரன்றோ? இதாலி தேசத்துத் தலைவன் முசோலினியும் டர்க்கி தேசத் தலைவர் காமல் பாஷாவும் தலைமைப் பதவி பெற்றது இளைஞர் இயக்கத்தாலன்றோ! இது கருதியே ஓர் ஆங்கில ஆசிரியர் "என்னிடம் சில இளைஞர்களைக் கொடுங்கள் யான் ஒரு புதிய உலகமும் சுவர்க்கலோகமும் படைப்பேன்" என்று கூறியுள்ளார். "Give me youths, I will make a new Heaven and a new Earth".

## ஒழுக்கம்

இளமையில் நாம் கைக்கொள்ளும் பழக்கமே நம்மை விட்டு என்றும் அகலாது. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' 'ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையாது' என்ற பழமொழிகளை நாம் கேட்டுள்ளோம். ஆகவே சமப உணர்ச்சியானது மாசற்ற இளமை உள்ளத்தில் தற்போது படியுமேல் அது நமது இறுதிவரை நின்று நிலவும். ஒருவனது பிற்கால ஆக்கமும் அழிவும் இளமை ஒழுக்கத்தின்பாற் பட்டனவாம். ஆகவே நாம் முதல் நல்லொழுக்கத்தை ஓம்புதல் வேண்டும். "ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற பொய்யா மொழியை நாம் போற்றுதல் வேண்டும். ஒருவன் ஒரு சமயத்தைப் பற்றிக் கற்கு முன்னர் சிறந்த ஒழுக்கமுடையவனாய் இருத்தல் வேண்டும். இக்கருத்தையே ப்ரௌனிங் என்ற ஆங்கில ஆசிரியர் அழகாகக் கூறியுள்ளார்கள். Religion is nothing without morality. Teach a child at first nothing of theology. Religion based upon theology can never contain any moral element. Morality must come first, Religion will follow" (Prof. Oscar Browning) "சிறந்த ஒழுக்கமே மனிதனின் இலட்சியமாகும்" என்றார் காந்தியடிகள். ஒழுக்கம் என்பது இளைஞர் கற்கவேண்டிய முதல் நூலாகும் என்றார் ரஸ்கின்

என்ற ஆங்கில ஆசிரியர். "All education must be moral first ; intellectual Secondary" (Ruskin) ஒருவனுக்கு நல்லொழுக்கம் இல்லையெனில் அவன் எச்சமயத்தையும் கைக்கொள்ளல் இயலாது. சமயம் என்பது ஒருவனது ஒழுக்கத்தைத் திருத்தும் கருவியாம். இதே கருத்தை மாக்ஸ்முல்லர் என்பவர் நன்றாக எடுத்துக் காட்டியுள்ளார். "Religion consists in the perception of the infinite under such manifestations as are able to influence the moral character of man (Max Muller)

## உடம்பைப் பேணுதல்

ஒழுக்கத்தினைப் பற்றித் தொகுத்துக் கூறினும். இனி அவற்றை வகுத்தும் விரித்தும் கூறுவாம். நாம் உடம்பைப் பேணுதல் வேண்டும். "சுவரை வைத்துக் கொண்டு சித்திரம் எழுதவேண்டும்" என்ற பழமொழியை யாம் கற்றுள்ளோம்; கேட்டுள்ளோம். ஆனால் அக்கருத்தின்படி நடக்கின்றோமா? நம் நாட்டில் அநேகர் நாற்பது அல்லது ஐம்பது ஆண்டு வருமுன்னரே உயிர் இழக்கின்றனர். ஆனால் மேனாட்டார் நம்மினும் அநேக ஆண்டுகள் ஜீவித்திருப்பதற்குக் காரணம் அவர்கள் தங்கள் உடலைப் போற்றுவதே. ஒருவன் உடல்வலிமை பெற்றால் மனவலிமை பெறலாம். வலிவற்ற ஒருவன் பயமுள்ளவனாயிருப்பான். பயம் ஏற்பட்டவுடன் பொய் முதலியன உண்டாகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாதலின் நாம் நோய்களுக்காளாகாமல் உடலை ஓம்புதல் வேண்டும். ஆகவே தினமும் நாம் அரைமணி நேரமாவது காலையேனும் மாலையேனும் தேகப்பயிற்சி அல்லது தேகப்பயிற்சிக்கு வேண்டிய விளையாடல்களில் ஈடுபடுதல் வேண்டும். உடல் ஓம்புதலைப்பற்றிப் பல பெரியோர் சிறந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அவைகளுள் சில ஈண்டு கூறுவேன். யோகஸூத்ரங்களின் ஆசிரியரான பதஞ்சலி முனிவர் "வலிமைகளிலே மதியை நிறுத்தி ஸம்யமம் (ஆழ்ந்த தியானம்) செய்தால் யானையின்



பலம் முதலியன கைகூடும்" என்றார். இராமகிருஷ்ண பரமஹம்ஸர் "தர்மிஷ்டர் உடம்பைப் போற்ற வேண்டும். அது ஆத்மாவின் கோயில். நித்யப்பொருள் அதனுள்ளே விளங்குகின்றது" என்று கூறியுள்ளனர். சுவாமி விவேகானந்தர் "வலிமையுறு நோயின்றி உடம்பைக்காத்தல் அவசியம். உடம்பு மிகச்சிறந்த கருவி. அதனினும் சிறந்தகருவி உன்னிடமில்லை. ஆதலால் அதை வலியதாக நோயற்றதாக வைத்துக்கொள்; உனது உடம்பு எஃகைப்போல் வலியதென்று பாவனைசெய்துகொள். மெலிந்தோருக்கு விடுதலையில்லை. மெலிவை யெல்லாம் துறந்துவிடு. உடம்பு வலியதென்று அதனிடம் சொல். அறிவு வலிதென்று அறிவினிடம் சொல். உன்னிடத்தில் எல்லையற்ற திடமும் நம்பிக்கையும் கொண்டிரு" என்று எழுதியுள்ளார்கள்.

## தமிழ்மொழி போற்றல்

தமிழ் என்னும் சொல் இனிமைப் பண்புணர்த்துவதாம். "தேனுறை தமிழும் திருவுறைகூடலும்" என்னுங் கல்லாடத்தினும் "தமிழ் தழியசாயலவர்" என்னும் சிந்தாமணியாலும் "வண்டு தமிழ்ப்பாட்டிசைக்குந்தாமரையே" என்னும் இராமாயணத்தினும் புலவர்கள் இனிமை என்னும் பொருள்படத் தமிழ் என்ற சொல்லை ஆண்டுள்ளனர். திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்றமெறிந்த குமரவேளும் அருந்தவமாற்றிய அகத்தியனாரும் ஆய்ந்த இப்பசுந் தமிழைப் போற்றுவது நமது கடமையன்றோ! தாய்மொழியாகிய தமிழைத் தமிழராகிய நாம் போற்றுகின்றோமா? இல்லை இல்லை என்றே கூறுதல்வேண்டும். தாய்மொழியைப் போற்றுவதில் மலையாளர்கள் தெலுங்கர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். உலகம் போற்றும் வங்காளக் கவியாகிய ரவீந்தரநாத் தாகூர் என்பார் தாம் இயற்றிய எல்லா நூல்களையும் தமது தாய் மொழியாகிய வங்காளத்தில் இயற்றியுள்ளார்கள். ஆனால் நம்முள் ஆங்கிலம் கற்ற அநேகர் தமிழில்பேசுவது தங்கள் நிலைக்குத் தாழ்மையேயென்று

தங்கள் அறியாமையால் கருதுகின்றனர். நம்மிடம் பாஷாபிமானம் இல்லையேல் தேசாபிமானம் வளராது.

இனி ஆங்கிலமும் தமிழும் ஒருசேரக்கற்றவர்களுக்கு ஒரு சில கூறவிரும்புகின்றேன். மேனாட்டு பூத பௌதிக ரசாயன சாஸ்திரங்களை நம் தாய் மொழியில் மொழிபெயர்த்தல் நமது கடமையாகும். ஆசிரியர் பாரதியார் இக்கருத்தை நன்றாகவலியுறுத்திச் சென்றனர் "புத்தம் புதியகலைகள்-பஞ்ச பூதச்செயல்களின் நுட்பங்கள் கூறும் மெத்த வளருது மேற்கே - அந்த மேன்மைக்கலைகள் தமிழினில் இல்லை. சொல்லவுங் கூடுவதில்லை—அவை சொல்லுந்திறமை தமிழ் மொழிக்கில்லை, மெல்லத்தமிழினிச்சாகும் - அந்த மேற்கு மொழிகள் புவிமிசையோங்கும் என்றந்தப்பேதை உரைத்தான் ஆ! இந்தவசை யெனக்கெய்திடலாமோ, சென்றிடு வீரெட்டுத்திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்து சேர்ப்பீர்" என்று தமிழ்த்தாய் கதறுவதாகப் பாரதியார் கூறியுள்ளது இவண் நோக்கத் தக்கது. நமது சித்தாந்தக் கொள்கைகள் முன்னமே மேனாட்டில் சில விடங்களில் பரவியுள்ளன. அவைகளை மேனாட்டார் நன்றாக அறியும்படிச் செய்யவேண்டுமானால் நம்முடைய சித்தாந்த சாஸ்திரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அன்னார் அறியும்படிச் செய்தல் வேண்டும். சென்ற சில ஆண்டுகட்கு முன்னர் திருவாளர் நல்லசாமிப் பிள்ளை B. A. B. L. அவர்கள் ஆங்கிலத்தில் சித்தாந்த தீபிகை (The Light of Truth or Siddhanta Depika) என்றதோர் பத்திரிகையைச் செம்மையாக நடத்திவந்தனர். எக்காரணத்தால் அப்பத்திரிகை நின்று விட்டது என்பதை யான் அறியேன். அது போன்ற பத்திரிகையை மறுபடியும் புதுப்பித்தல் சாலச் சிறந்த தொண்டாகும். வேதத்தை மாக்ஸ்முல்லர் என்ற ஆங்கில ஆசிரியர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர். இதனாலன்றோ வடமொழி அறியாதிருந்தும் நாம் வேதத்தைப் படிக்க இயல்கின்றது. தற்காலத்தில் சில பெரியார் வேதத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் துறையில் உழைக்கின்றனர். அன்னார் மிகவும் போற்றற்குரியர். வில்லியம் ஹண்டர் (Rev. William Hunter) என்பவர் சைவ சித்தாந்த சாத்திரத்துள் ஒன்றாகிய சிவப்பிரகாசத்தை மொழி பெயர்த்துள்ளார்கள். அன்னார்க்கு நமதுநன்றி உரியதாக.



## சமய உணர்ச்சி

நம்முள் அனேகருக்குச் சமய உணர்ச்சி மிகக்குறைவு என்றே கூறலாம். ஆனால் நமது மகமதிய சகோதரரை எடுத்துக் கொள்வோம். அவர்கள் ஒரு நாளைக்கு நான்கு அல்லது ஐந்து முறைகள் தங்கள் கோயிலுக்குச் சென்று தங்கள் இறைவனை வணங்குகின்றனர். கோயிலுக்குச் செல்ல வசதியில்லாதவர் தங்கள் வீட்டிலேயே இறைவனைக் குறித்த நேரத்தில் வணங்குகின்றனர். நமது கிறித்தவ சகோதரர்களும் தங்களுடைய மாதா கோவிலுக்கு வாரத்திற்கு ஒரு முறையேனும் சிலர் தினமும் செல்கின்றனர். ஆனால் சைவருள் எத்துணைப்பேர் தினம் ஆலயத்திற்குச் செல்கின்றனர்? "ஆலயந் தானும் அரனெனத்தொழுமே" என்ற மெய்கண்டாரின் அருள்வாக்கினைக் கடைப்பிடித்து ஒழுகுபவர் நம்மவருள் எத்துணையர் உளர். சிலர் ஆலயத்துள் யாது உள்ளது எல்லாம் நமது மனதில் உள்ளது என நாத்திகம் பேசி நாத்தழும்பேறி நிற்கின்றனர். தற்காலத்தில் மேனாட்டில் உலோகாயதமதம் (Materialism) பரவிக்கொண்டு வருகின்றது. ஆனால் நம் நாட்டிலுள்ள தனிச்சிறப்பு என்னவெனில் நம் நாட்டில் அனேக காலமாக இறைவன் ஆண்டான் என்பதும் நாம் அடிமை என்பதுமாகிய கொள்கை வேரூன்றி இருக்கின்றது. அக்கொள்கையை மாற்றச் சில விதண்டா வாதிகள் தற்போது முயற்சி செய்கின்றனர். உலோகாயதம் பழுத்த இடம் ருஷ்யா என்று கூறலாம். அங்கே தற்போது ஆலயங்களெல்லாம் அடைபட்டுள்ளன. தற்போது ஸ்பெயின் தேசத்தில் நடக்கும் உள்நாட்டுக் கலகத்தால் ஆலயங்களைப் பண்டம்சேமித்து வைக்கும் இடமாக வைத்துக்கொண்டனர். இவைகளை எல்லாம் கண்டும் கேட்டுமுள்ள சில சீர்திருத்தக்காரர்கள் நம் நாட்டில் சில ஆலயங்களில் பல அட்டூழியங்கள் நடக்கின்றன

என்றும் நாம் அங்கு செல்லுதல் கூடாதென்றும் எங்கும் பறைசாற்றுகின்றனர். அந்தோ! அன்னார் வலையில் சிக்குண்ட இளைஞர்பலர் தாங்கள் கோயிலுக்குச் செல்லுதல் கூடாது என்ற அவசரமான முடிபுக்கு வந்துள்ளனர். அவர்கள் அக் கருத்தோடு நிற்றலாகாது. நமது கையில் புண் வந்தால் நமது கையை வெட்டி விடுவோமா? மாட்டோம். அப்புண்ணைப் போக்குதற்குவேண்டிய மருந்திட்டு அது இனி வாரா மற்படியும் தடுப்போம். அது போலவே தற்போது ஆலயங்களுள் குற்றம் குறைகள் நிகழுமேல் நாம் அவ்வாலய தர்மகர்த்தரிடம் சென்று அவ்வாலயத்திற்கு வேண்டிய சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று அன்னாரை மன்றாடிக் கேட்கவேண்டும். அதற்கு அவர் மறுத்தால் சட்டத்தினால் அன்னாரைத் தாக்குதல் வேண்டும்.

நம்மவருள் சிலர் கடவுளர் உருவங்களைப் பொம்மையாகக் கருதுகின்றனர். தங்கள் வியாபாரத்திற்கு ஒரு வர்த்தகக்குறி (Trade Mark) யாகக் கொள்கின்றனர். "பிள்ளையார் மார்க்கு பீடியைப் பிடியுங்கள்" என்றும் "சுப்பிரமணியர் மார்க்கு சுருட்டை உபயோகியுங்கள்" என்றும் தங்கள் வியாபார விளம்பரத்தில் அச்சிட்டிருக்கின்றனர். என்னே! அன்னாரின் அறியாமை! ஆனால் சில ஆண்டுகளுக்கு முன் சில வர்த்தகர்கள் மகமதியருக்குத் திவ்விய ஸ்தலமாகிய மெக்காவின் ஓவியமும் மற்ற மசூதியின் ஓவியங்களும் ஜப்பான் பாய்களில் தீட்டியிருந்தனர். அதைக்கண்ட மகமதியர் உடனே போலீஸ் அதிகாரியிடம் தெரிவித்து நீதிமன்ற மேறி அவ்வித அட்டூழியங்கள் மறுமுறையும் நடக்க வொட்டாமற்படி வழிதேடினர். ஆனால் நம்முள் அநேகருக்குச் சமயப்பற்று குறைவாக இருப்பதால் இதுபோன்ற அட்டூழியங்களைத் தடுக்க வழிதேடாமலிருக்கின்றனர்.

"சைவத்தின் மேற்சமயம் வேறில்லை" என்பதையும் "சைவ சமயமே சமயம்" என்பதையும் "ஈறில்லாதவன் ஈசன் ஒருவனே" என்பதையும் அநேகர் மறந்தனர். "உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே" என்பதை நம்மவர் அனைவரும் சிந்திக்கிறார்களா? இல்லை இல்லை என்றே கூறலாம். எத்தனை இந்துக்கள் மொஹரம் பண்டிகையில் அல்லாசாமியைத் தூக்கிக் கூத்தாடுகின்றனர்! சிலர் வியாழக்கிழமைதோறும் மகமதியரின் பள்ளிவாசலுக்குச் சென்று பாத்தியா பண்ணுகின்றனர். என்னே! அவர்கள் அறியாமை! மற்றும் பலர் தங்களுக்கு நோய்வரின் மாரியம்மன் குற்றமென்று எண்ணி நூற்றுக்கணக்கான ஆடுகளையும் கோழிகளையும் மாரியம்மன் கோவிலுக்கெதிரில் வெட்டி வீழ்த்திப் பாபத்திற்கு ஆளாகின்றனர். "உங்கள் மக்களும் நீங்களும் நோய்பட எங்கள் மக்களும் யாங்களும் என் செய்தோம்" என அப்பிராணிகள் ஆற்றுவதை அன்னார் அறிகின்றார்களில்லை. "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று" என்ற பொய்யாமொழியினை அன்னார் மறந்தனர் போலும். உயிர்ப் பலி வேண்டுமென்று கேட்கின்ற கடவுள் ஒரு கடவுளாகுமா? அவ்வாறு கேட்பின் அதனிடத்துக் கடவுள் தன்மை உண்டோ? இக்குருட்டு வழக்கம் மாண்டாலொழிய சைவம் தழைக்காது. இது சத்தியம். சைவர் என்று தங்களைச் சொல்லிக்கொண்டு சிலர் புலால் உண்கின்றனர். அன்னார் சைவராகார். சைவம் என்றசொல் தூய உணவு என்ற பொருளில் தற்காலத்தும் வழங்குகின்றது.



## சமுதாய சீர்திருத்தம்

"பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமையான்" என்ற தேவர் குறளை அனேகர் சிந்திக்கின்றார்களில்லை. பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டுதலைத் தொலைத்தல் வேண்டும்.

முற்காலத்தில் குலத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற கொள்கை அத்தனை மும்முரமாக இல்லை. அப்பூதி அடிகள் ஆளுடைய அரசைப் போற்றினாரன்றோ! அந்தண குலத்துதித்த ஆளுடைய பிள்ளையாரும் பாணர் குலத்துதித்த திரு நீலகண்ட யாழ்ப்பாணரும் கொண்ட தொடர்பை அறியாத சைவர் உளரோ! திருநாவுக்கரசரும் "சாத்திரம் பலபேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு

"என் செய்வீர்!" என நமக்கு அறிவு ஊட்டியுள்ளனர். இம்மட்டோ? திருவாசகத்தைத் திருவாய்மலர்ந்தருளிய மாணிக்கவாசகப் பெருந்தகையாரும் "சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை அல்லலறுத்தாட் கொண்டு" என்று குறிப்போந்தார். திருநாளைப்போவாரின் அன்பு தலையாய அன்பன்றோ!

நமக்கு நேரில் தோன்றும் ஆறறிவுடைய மனிதனிடத்தில் நமக்கு அன்பில்லை என்றால் நாம் காண இயலாத கடவுளிடத்து நமக்கு அன்பு எவ்வாறு உண்டாகும். இக்கருத்தை நாம் விவிலிய நூலில் பரக்கக் காணலாம். "He that loveth not his brother whom he has seen cannot love God whom he had never seen. (1 John IV. 20). தீண்டாமையை ஒழிக்க முன்வந்துள்ள திருவிதாங்கூர் அரசர் போற்றற் குரியரன்றோ! உலகம் போற்றும் காந்தி அடிகளாரும் இத்துறையிலன்றோ உழைத்து வருகின்றனர்.

நக்கீரர் தலைவனும் தலைவியும் ஒத்த பண்பும் ஒத்தநலனும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியும் உடையவராய் இருத்தல் வேண்டுமென்று குறிப்போந்தனர். அவ்வாறின்றேல் அவர்கட்கு இல்லறத்தை நல்லறமாகச் செய்ய இயலாது. ஆகவே பெண்களுக்குக் கல்வியளித்து அவர்களுக்குச் சில உரிமையும் கொடுத்தல்வேண்டும். பாண்டிய நாட்டில் சைவமாகிய பயிரைப் பால்விட்டு வளர்த்த தாய் நமது மங்கையர்க்கரசி யன்றோ! இது கருதியே சேக்கிழார் "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" என்று விதந்தோதி யுள்ளார்கள். திலகவதியாராலன்றோ சைவம் புத்துயிர் பெற்றது!

## நமது கடமை

சைவசமயமானது தொன்றுதொட்ட சமயம் என்பதைப்பற்றி யான் முன்பே கூறியுள்ளேன். அச்சமயத்தைப் பரப்புதற்காக நமது சைவ சித்தாந்த சமாஜம் தோன்றி இற்றைக்கு முப்பத்தொரு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் தற்போது இதில் உள்ள அங்கத்தினர் 400 மேல்



இல்லை. அத்தொகையும் சென்ற ஆண்டினும் இவ்வாண்டு குறைந்துளது எனத்தெரிகின்றது. ஆகவே இக்குறையை நிறைவாக்குவது நம்முடைய தலையாய பணியாகும். சைவ சமயாசிரியர் சந்தான குரவர் அறுபத்து மூன்று நாயன்மார் ஆகிய இவர்களுடைய திருநட்சத்திர நாட்களைச் சிறப்பாக நடத்துவது சைவர் ஆற்ற வேண்டிய தொண்டாகும். பாடல் பெற்ற திருப்பதிகளுக்குச் சென்று தரிசனம் செய்யவேண்டும். பாடல் பெற்ற ஸ்தலங்களுள் உள்ள சில ஆலயங்கள் க்ஷீண தசையில் இருக்கின்றன. அவைகளைப் புதுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். நமது சமயக்கொள்கைகளைச் சுருக்கமாக எழுதி எல்லோருக்கும் இலவசமாக வழங்கலாம். இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் முதலிய தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் வித்வான் பரிட்சையில் தேறியவர்களுக்கும் தேவாரமேனும் திருவாசகமேனும் கூடுமானால் இரண்டையும் இலவசமாக அளிக்கலாம்.

இன்னும் அடக்க விலைப்பதிப்பில் வெளிவராத சில நூல்கள் உள. அவைகளையும் நமது சமாஜச் சார்பில் வெளிவரும்படிச் செய்தல் நமது கடமையாகும். பெரியபுராணம் திருவிளையாடற் புராணம் முதலிய புராணங்களில் உள்ள நயங்களைப் படித்துச் சில ஆராய்ச்சி நூல்கள் மேனாட்டு முறையில் எழுதி வெளியிடலாம். தேவாரத்திலுள்ள இயற்கை வர்ணனைகளை ஒரு புத்தகமாக வெளியிடலாம்.

ஒவ்வொரு சிற்றூரிலும் பேரூரிலும் சைவசமய சங்கங்கள் ஏற்படுத்தி அவைகளை நமது சமாஜத்தோடு இணைத்து விடலாம். இளைஞராகிய நாம் மாதத்திற்கு ஒரு முறையேனும் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறையேனும் சைவப்

பெரியார் பலருடன் சேர்ந்து பற்பல விடங்களுக்குச் சென்று சைவப் பிரசாரம் செய்யவேண்டும்.

சமயப்பற்றில்லாது உறங்கிக் கிடப்பவர்களைத் தட்டி எழுப்புபவர் பெருஞ் சொற் கொண்டல் புரிசை முருகேச முதலியார் போன்ற சைவப் புராணிகர்களே. ஆகவே அன்னாரை ஆதரித்தல் சைவத்தை ஆதரித்ததாகும். அருமைச் சைவ சகோதரர்களே! நமது சைவ சமயத்தைப் போற்றி மேற்கூறிய தொண்டுகளை ஆற்றுதற்கு வீறுகொண்டு எழுங்கள்! எழுங்கள்!

சைவத்தோழர்களே! இதுகாறும் என் புன்மொழியைப் பொறுமையுடன் கேட்ட உங்கள் பெருந் தகைமைக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்ட இச்சமாஜத்தாருக்கும் என் மனமார்ந்த வந்தனத்தை மறுமுறையும் செலுத்துகின்றேன்.

# சமாஜ உத்தியோகஸ்தர்கள்

[காஞ்சிபுரத்தில் நடைபெற்ற 31-ம் ஆண்டு விழாவில் இரண்டாம் நாள் (2-1-1937) பிற்பகலில் நடந்த தேர்தலின் முடிபு. கீழ் வரும் பெயர்கள் ஒவ்வொன்றின் முன் சைவத் திருவாளர் என்றும், பின் அவர்கள் என்றும் சேர்த்து வாசிக்கவும்.]

**தலைவர்**

ந. சிவகுருநாத பிள்ளை

**உதவித் தலைவர்கள்**

திவான்பகதூர். கீ. தெய்வசிகாமணி முதலியார்
ச. சச்சிதானந்தம் பிள்ளை

**பொதுக் காரியதரிசி**

ம. பாலசுப்பிரமணிய முதலியார்

**உதவிக் காரியதரிசி**

ஜி. கலியாணம் பிள்ளை

**பொருட்காப்பாளர்**

தி. க. சுந்தரம் பிள்ளை

**பத்திராசிரியர்**

அ. சோமசுந்தரம் செட்டியார்

**உதவிப் பத்திராசிரியர்**

மா. துரைசாமி முதலியார்

**ஏனைய நிர்வாக சபையினர்**

தி. நல்லசிவன் பிள்ளை
எஸ். வையாபுரி பிள்ளை
திரு. வி. உலகநாத முதலியார்
பி. ஆலாலசுந்தரம் செட்டியார்
திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
க. முனிசாமி உடையார்
பி. தியாகராஜ பிள்ளை
கின்றை. தங்கவேல் முதலியார்
வே. தியாகராஜ முதலியார்
ரா. ஷண்முகசுந்தரம்செட்டியார்
ச. நடேச முதலியார்

**வரவேற்புக் காரியதரிசி**

ஏ. ஏ. இரத்தினசபாபதி முதலியார்

**மாதக் கணக்குப் பரிசோதகர்**

க. இரத்தின முதலியார்

**ஆண்டுக் கணக்குப் பரிசோதகர்**

ஈ. க. தணிகாசல முதலியார்

**பத்திராசிரியக் கழகம், பணியாளர் கழகம்**

ந. மு. வேங்கடசாமி நாட்டார்
மா. வே. நெல்லையப்ப பிள்ளை
மு. கதிரேசச் செட்டியார்
ச. சச்சிதானந்தம் பிள்ளை
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை
சாமி. வேலாயுதம் பிள்ளை
அ. சோமசுந்தரம் செட்டியார்
ம. பாலசுப்பிரமணிய முதலியார்
மா. துரைசாமி முதலியார்

**ஆராய்ச்சிக் கழகம்**

மு. கதிரேசச் செட்டியார்
கா. சுப்பிரமணிய பிள்ளை
ந. மு. வேங்கடசாமி நாட்டார்

ச. சச்சிதாநந்தம் பிள்ளை
ம. சுவாமிநாத சிவாசாரியார்

## வெளியூர் ஆலோசனை சபை

### செங்கற்பட்டு

வா. தி. மாசிலாமணி முதலியார்
க. வஜ்ரவேல் முதலியார்
ப. தானப்ப முதலியார்

### வடஆர்க்காடு

வடநாங்கூர். அருணாசல முதலியார்
கீ. நாராயணசாமி முதலியார்
புரிசை. முருகேச முதலியார்

### தென்ஆர்க்காடு

சொ. இராஜகோபாலசெட்டியார்
பு. வே. தேவராஜ முதலியார்
எம். சின்னசாமி ரெட்டியார்

### தஞ்சாவூர்

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை
சாமி. வேலாயுதம் பிள்ளை
த. பா. சிவகுருநாத பிள்ளை

### திரிசிராப்பள்ளி

ம. பெரியசாமி பிள்ளை
அ. மு. சரவண முதலியார்
எஸ். கனகசபாபதி பிள்ளை

### இராமநாதபுரம்

தெ. பழ. சித. சதாசிவ செட்டியார்
சாத்தூர். கந்தசாமி முதலியார்
வெ. நா. இலக்குமண செட்டியார்

### திருநெல்வேலி

தெ. ச. சு. சோமசுந்தரம் பிள்ளை
கா. சுப்பிரமணிய பிள்ளை
மா. வே. நெல்லையப்ப பிள்ளை

### மதுரை

ஆர். எஸ். பதி
எஸ். முத்துகருப்ப பிள்ளை
டி. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார்

### கோயன்புத்தூர்

சி. எம். இராமச்சந்திர செட்டியார்
சி. கே. சுப்பிரமணிய முதலியார்
அடிகைக்கிழார் - சிதம்பரனார்

### திருவிதாங்கூர்

ரா. பதுமநாப பிள்ளை

### பெங்களூர்

வி. சே. ஆறுமுக முதலியார்

### நீலகிரி

சிவப்பிரகாச சேதிராயர்

### சேலம்

அ. வரதநஞ்சைய பிள்ளை
அ. மாணிக்க செட்டியார்
வீ. உலகவூழியனார்

### புதுக்கோட்டை

வ. பழ. சா. சாமிநாத செட்டியார்
ம. பெரி. வீர. அழகர்சாமிவேளார்

# சமாஜம்
# நிறைவேற்றிய தீர்மானங்கள்

[*இவை* 2-1-37*ல் சமாஜக் காரியக் கூட்டத்தில் காஞ்சிபுரத்தில் நிறைவேறின.*]

1. ஒரு புத்தகத்தை வெளியிடுங்கால் ஏற்படும் காகிதச் செலவு, அச்சுக்கூலி, பைண்டுக்கூலி, சில்லறைச் செலவு ஆகிய இவற்றோடு, இவற்றில் கால் பங்குத் தொகையைச் சேர்ப்பதால் கிடைக்கும் மொத்தத் தொகைக்கு மேற்படாத வகையில் அவ்வெளியீட்டின் மொத்தவிலை விகிதத்தைச் சமாஜ நிர்வாக சபை குறிப்பது அவ்வெளியீடு அடக்க விலைப் பதிப்பு எனப்படுதற்கு இழுக்காகாது என்றும், அத்தகைய சமாஜ பதிப்பை அங்கத்தினர் ஒருவர் தமது சொந்தப் பொறுப்பிலும் செலவிலும் சமாஜத்திற்கு எவ்வித வருவாயும் செலவும் தாராத முறையில் வெளியிடுதல் இழுக்காகாது என்றும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

2. திருவிதாங்கூர் மகாராஜா தீண்டாதார் எனக் கருதப் படுவோர்க்குத் திருக்கோயில் நுழைவுரிமை தந்து நிறுவியுள்ள சட்டதிட்டங்கள் மிகவும் பாராட்டத்தக்கன வென்றும், இவற்றைப் பின்பற்றி ஏனைய அதிகாரிகளும் கோயில் நுழைவுரிமையை நல்க வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

3. "அப்பரும் சம்பந்தரும்" என்று திரு. அ. பொன்னம்பலனார் எழுதியுள்ள நூலைப் பறிமுதல் செய்து பரவாது தடுத்தற்கு இச்சமாஜ நிர்வாக சபை அரசாங்கத்தினரைக் கண்டு முயற்சிக்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

# வரவேற்புக் கவிகள்

## I

### மகாநாட்டுத் தலைவருக்கும் இளைஞர் தலைவருக்கும் சமாஜ வரவேற்பு

கஞ்சமலர் சொரி தேறலுண்ட நுணல்தேக் கெடுக்குங் கழனி சூழ்ந்த, வஞ்சியர்கள் குடைந்தாடும் பாலிவயப் பெருக்கதனால் வளமிக் கார்ந்த, மஞ்சு தவழ் மாடநிறை தொண்டைவள நாட்டினுயர் மகிழ்மீக் கூர, விஞ்சையர்க ளெஞ்சகலா வினியதமிழ் மணங்கமழும் வியன்சேர்காஞ்சி.

மன்னியவந் நகரிலணி பெறுஞ்சைவ சித்தாந்த மகா சமாசந், துன்னரிய முப்பானொன் றாண்டுநிறை விழாவதனை யூக்க மிக்க,பன்னுரிமைத் தலைமைவகித் துளமகிழ்விற் கேற்ற தொரு பரிவை யூட்டும், நன்னயமார் பிரசங்கச் சோனைமழை பொழியவிவ ணன்கு வாரீர்.

என்னவுங்கற் றுணர்ந்துநனி மிகவழகா யெடுத்துரைக்கு மிறும்பூ தெய்த, தன்னிகரின் மொய்ம்புடைய போதகா சிரிய ரெனுந் தன்மை வாய்ந்த, சொன்னயமார்ந் தொளிர்சைவப் பிரகாச வச்சியந்த்ரத் துணைவ யார்க்கும், இன்னபரி சென்ன வெழி வியம்பவொணுத் தூத்துக்குடி யிருந்த வந்து.

பெற்றசிவ குருநாத நற்சைவத் திருவாள பேர்பெற் றோங்க, உற்றபெரும் புலமைவகித் துயரியதோ ரருட்செல்வ வுழுவலன்ப, கற்றவரும் மெச்சவரும் விசுவாச முறுமகிப கவின்சேர் வாச, சொற்றவரு வாய்மைசெறி சமயநெறி நிருவகிக்குந் துணைவ வாரீர்.



சென்னைநகர் இறித்தவநற் கலாசாலை தனிலமருஞ் சீர்சான் மிக்க, துன்னுதவித் தமிழ்ப்புலவர் பூமிப்பாக் கத்துவருந் தொன்மை சான்ற, என்னரிய ஆலால சுந்தரஞ் செட்டியாரெம், ஏ. யெழின்மிக் கார்ந்த, வன்னமிகுஞ் சைவஇளைஞர்மகா நாடதனுக் குறுதலைமை வகிக்க வாரீர்.

மன்னு சிவசமய மாமனுநீ றக்கமணி
துன்னு திருத்தொண்டர் தூயதமிழ்—பன்னருஞ்சீர்
மங்களநற் சித்தாந்த மகாசமா சக்கொள்கை
துங்கமிக வாழ்க துணிந்து.

குகஸ்ரீ பண்டித ரத்தினம் - புழலை - திருநாவுக்கரசு முதலியா ரியற்றியது.

---

## II

### திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்களுக்கு வரவேற்பு

**சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா**

[தரவு]

நிலமகட் குயிரென்ன நிலவுநற் றென்னாட்டிற்
குலவுறு மெழில்தூத் துக் குடிநகர் தனிலென்றுந்
தவகுரு வெனவாழ்ந்து சைவநூல் தெரிந்துரைக்குஞ்
சிவகுரு நாதநின் றிருப்பெயர் தகவாய்த்தே !

[தாழிசை]

அதாஅன்று,

முத்தாந்த நெறியடைய முயலுவோர் தாமெல்லாம்
சித்தாந்த நெறிநீங்கிப் பேறடையப் பெருஞ்சைவ
சித்தாந்த சபைநடத்தித் திகழுநின் திகழ்வென்னே !

அதாஅன்று,

பெருந்தெய்வ நெறியென்னப் பேசுசிவ நெறிவிளங்க
அருஞ்சைவப் பிரகாச அச்சியல் நிலையத்தின்
வருஞ்சைவ நூல்பரப்பி மகிழுநின் மகிழ்வென்னே !

அதாஅன்று,

பல்லான்ற கலையெல்லாம் பயின்றுநன் குயர்கேள்விச்
சொல்லான்ற நிலைமையுடன் சுரிகுழலா ளொருபாகன்
நல்லான்ற திருவடியே நயக்குநின் நயப்பென்னே !

எனவாங்கு,

[சுரிதகம்]

உள்ளுதொ றுள்ளுதொ றுவகையும் வியப்புங்
கொள்ளுமெம் முளத்துக் குதிகொளு மன்பினிற்
காணிய வேட்ட கருத்தினம் வருக
மாணுரை மீண்டு வழங்கிட வருக
தெய்வத் தன்மை திகழ்தரு காஞ்சியில்
சைவசித் தாந்த மகாசமா சத்தின்
முப்பத் தொன்றென மொழிதரும் ஆண்டு
செப்பரு நிறைவிழாச் சிறந்திட வருக
வான்முகில் வரவினின் வருகை
தான்மிகு பயனெலாந் தாவரு குகவே.

வரவேற்புக் கழகத்தினர்.

இயற்றினோர், காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக ஆசிரியர், வித்வான் புலிசை. திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள்.



## III

### சைவத்திருவாளர் பூ. ஆலாலசுந்தரச் செட்டியார், M. A. அவர்களுக்கு அளித்த வரவேற்பு

#### நேரிசை ஆசிரியப்பா

சீர்மலி தொண்டைத் திருநா டதன்கட்
பேர்மலி ஆளுடைப் பிள்ளையார் பாடல்
பெற்றொளிர் கள்ளிலம் பெருமூ தூரரு
குற்றுயர் நலத்தி னுறையுமாந் தர்க்குப்
பூரிப் பாக்கம் பொலிதர விளங்கும்
பூரிப் பாக்கமென் புகழ்நகர் வந்து
நூலா னவைபல நுவல்தர வறிந்த
ஆலால சுந்தர அறிவோய் வருக
இனியநற் றமிழின் எம். ஏ. என்னும்
நனியுயர் சிறப்பின் நல்லோய் வருக !
சென்னைக் கிறித்துவத் திகழ்கல் லூரியின்
முன்னிய தமிழின் முதல்வோய் வருக !
சைவ இளைஞர்தம் மெய்கொளும் பேரவை
காஞ்சியம் பதியிடைக் கவின
வாஞ்சையி னுண்மகிழ் வாவரு குகவே.

வரவேற்புக் கழகத்தினர்.

இஃதியற்றியவர், வித்வான், திரு. S. அருணை வடிவேல் முதலியார், ஆசிரியர், மெய்கண்டார் கழகம், காஞ்சிபுரம்.

# சமாஜ ஆண்டு விழா

[G. கல்யாணம், உதவிக் காரியதரிசி]

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் முப்பத்தோராம் ஆண்டு விழாவும், அதையொட்டிய சைவர் மகாநாடு, சைவ இளைஞர் மகாநாடு முதலியவைகளும், முத்திதரும் நகர் ஏழனுள் முக்கியமாம் கச்சி எனப் போற்றப்பெறும் காஞ்சிபுரத்தில் ஸ்ரீ நாராயண சேவாச்சிரமத்தின்கண் அமைக்கப்பெற்றிருந்த சிவஞானப்பந்தரில் 1937-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1, 2, 3ஆம் தேதிகளில் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

1-1-37 முதல்நாள் காலை 6 மணிக்கு எல்லா அன்பர்களும் தேவார திருவாசக பாராயணம் செய்துகொண்டு முறைப்படி திருவேகம்பத்தில் திருக்கோயில் வழிபாடு செய்தனர். அக்கோயிலகத்தேயுள்ள மாவடியின்கீழ் ஒரு கூட்டம் கூடிச் சமாஜத்தின் இரண்டாவது பதிப்பாகிய திருஞானசம்பந்தர் தேவாரம் வெளியிடப்பட்டது. பின்னர் 8 மணிக்கு மகாநாட்டுத் தலைவர் தூத்துக்குடி, உயர்திருவாளர் - ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள், ஆடிசன்பேட்டை ஜவுளிக்கடை சத்திரத்திலிருந்து யானைகள் குதிரைகள் குடைகள் முதலிய விருதுகளுடனும், பாண்டு, மேளம் முதலிய வாத்தியங்களுடனும் அன்பர்கள் புடைசூழ ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். தெருக்களிலெல்லாம் தண்ணீர் தெளிக்கப்பெற்றிருந்தது; தலைவர்களை வருகவென்றழைக்கும் வளைவுகளும், கொடி முதலிய தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. ஊர்வலம் சிவஞானப்பந்தரையடையுமுன் ஆங்கு மாபெருங் கூட்டம் கூடியிருந்தது. சிவஞானப்பந்தரோ கொடிகளாலும், பூக்களாலும் கண்கவர் வனப்



புடையதாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. தூண்களில் எல்லாம் கருத்தைக் கவரும் பல நன்மொழிகள் எழுதித் தொங்கவிடப்பட்டிருந்தன. சமாஜ அமைச்சர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைவர் அவர்களைத் தலைமை வகிக்குமாறு விண்ணப்பித்துக்கொண்டனர். திருவாளர்கள் வச்சிரவேல் முதலியாரும், மணி. கோடீச்சுர முதலியாரும் அதை ஆமோதித்துப் பேசினர். தலைவர் தலைமை பூண்டனர். வரவேற்புக் கழகத்தின் சார்பாகத் திரு. அருணைவடிவேல் முதலியார் அவர்களும், சமாஜத்தின் சார்பாகத் திரு. திருஞானசம்பந்த முதலியார் அவர்களும் தலைவருக்கு வரவேற்புப் பத்திரங்களை வாசித்துக்கொடுத்தனர். வரவேற்புத் தலைவர் திரு. ம. சாமிநாத முதலியார் அவர்கள் தம் வரவேற்பு விரிவுரையை நிகழ்த்தினர். (௯௦-ம் பக்கம் காண்க). சமாஜ அமைச்சர் ஆண்டு அறிக்கையைப் படித்தனர். (௨௦-ம் பக்கம் பார்க்க). பின்னர் அவைத்தலைவர் அவர்கள் தம் தலைமைப் பேருரையை நிகழ்த்தினர்கள். (௧-ம் பக்கம் நோக்குக). இத்துடன் அன்று காலைக்கூட்டம் முடிவடைந்தது. ஊர்வல ஆரம்பத்திலும், மகாநாடு ஆரம்பத்திலும் முடிவிலும் அதிர் வெடிகள் வெடிக்கப்பட்டன.

மாலை 3 மணிக்கு மறுபடியும் கூட்டம் தொடங்கியது. கீழ்க்கண்ட சொற்பொழிவுகள் நிகழ்ந்தன :—

திரு. சமரபுரி முதலியார்—“ தியானிக்கற்பாலர் யாவர் ?”

„ பூ. ஆலாலசுந்தர செட்டியார், எம். ஏ.
—“ திருக்கோவையாரும் திருவாசகமும் ”

„ ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
—“ தேவாரத்தில் அகத்துறைப் பாடல்கள் ”

„ முத்துசாமி நயினர்—“ அன்பமே யின்பம் ”

„ திரு. வி. கலியாணசுந்தர முதலியார்—“திருவெம்பாவை”

கடைசியாகத் தலைவர் கருத்துரை கூறியதும் இரவு 8-30 மணிக்கு முதல்நாள் கூட்டம் இனிது முடிந்தது.

2-1-37 இரண்டாம் நாள் காலை 8-30 மணிக்கு சமாஜ விடுதியான 'தமிழரசு' ஆசிரியர் டாக்டர் மாசிலாமணி முதலியார் அவர்களுக்குச் சொந்தமான கல்யாண மண்டபத்திலிருந்து சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைவர் திரு. பூ. ஆலாலசுந்தர செட்டியார் எம். ஏ. அவர்கள் ஊர்வலமாக மகாநாட்டுப் பந்தருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். திரு. வச்சிரவேல் முதலியார் முன்மொழிய, திருவாளர்கள் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை, புரிசை முருகேச முதலியார் இவர்கள் பின்மொழியத் தலைவர் தலைமை பூண்டனர். தலைவர் தம் பேருரையை (௬௬ - ஆம் பக்கம் பார்க்க) நிகழ்த்திய பின்னர்த் திருவாளர்கள் G. கலியாணம், ச. சிவகுமாரன், தி. கு. கி. நாராயணசாமி நாயுடு இவர்கள் முறையே "நால்வர் வாழ்க்கையின் நற்பெரும் போதனை," "இளைஞர் இனியாவது செய்ய வேண்டுவது யாது", "சைவ இளைஞரின் எதிர் காலப்பணி" என்பன பற்றிச் சொற்பொழிவாற்றினர். திருவாளர்கள் புரிசை முருகேச முதலியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார், ச. சச்சிதாநந்தம் பிள்ளை, வே. தியாகராய முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் முதலானோர் சமாஜ மாத வெளியீடான "சித்தாந்தத்"திற்கு அங்கத்தினர் சேர்க்க வேண்டிய முயற்சிகளைப் பற்றிப் பேசினர். தலைவர் கருத்துரையின் பின் நன்றிகூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது.

அன்றுமாலை 2 மணிக்குச் சமாஜ விடுதிக் கெதிரிலுள்ள பள்ளிக் கூடத்தில் சமாஜக் காரியக் கூட்டம் நடந்தது. உத்யோகஸ்தர்கள் தேர்தல், தீர்மானங்கள் நிறைவேற்றல் முதலியன நடைபெற்றன (௫௧, ௫௨ - ஆம் பக்கம் பார்க்க). 4 மணிக்கு சிவஞானப் பந்தரில் மகாநாடு தொடங்கியது.



பேரறிஞர்கள் கீழ்க்குறித்துள்ள சொற்பொழிவுகளை ஆற்றினர்:—

திரு. சாத்தூர் கந்தசாமி முதலியார், பி. ஏ
—"திருத்தொண்டர் திருவுள்ளம்"

" S. சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்.,
—"தமிழர் சமயமும் நாகரிகமும்"

" K. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்.,
—"மாணிக்கவாசகர் வரலாறும், திருவாசகமும்"

" ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.,
—"இச்சமயத்திற்கு வேண்டிய சமயம்."

சமாஜம் நடத்தும் சைவத் தேர்வுகளில் வெற்றிபெற்றவர்களுக்கு இளஞ் சைவப்புலவர் பட்டமும் பரிசும் வழங்கப் பெற்றன. தலைவர் கருத்துரையின் பின் இரண்டாம் நாள் கூட்டம் இனிது முடிந்தது.

3-1-37 மூன்றும் நாள் காலை 9 மணிக்குக் காஞ்சி மெய்கண்டார் கழகம், திருநெறித் தமிழ்க் கழகம் இவைகளின் சார்பில் ஆலடிப் பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள விளக்கொளியீசர் திருமுன் அமைக்கப் பெற்றிருந்த பந்தரில் ஒரு பெருங் கூட்டம் குழுமியது. உயர்திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள் தலைமை வகித்தனர். திருவாளர்கள் அருணை வடிவேல் முதலியார், புரிசை முருகேச முதலியார் இவர்கள் முறையே "ஆதிபுரீசப் படலம்," "காரைக்காலம்மையார் புராணம்" இவைகளைப் பிரசங்கம் செய்தனர். பின்னர்க் கோயில் வழிபாடு நடந்ததும் கூட்டம் முடிந்தது.

மாலை 3 மணிக்குச் சிவஞானப்பந்தரில் மறுபடியும் கூட்டம் கூடியது. கீழ்க்கண்ட சொற்பொழிவுகள் நிகழ்ந்தன:—

திரு. அ. மு. சரவணமுதலியார்—"திருக்குறிப்புத்தொண்டர்"

" டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எம், ஏ., பி. எல்.,
"சம்பந்தர் திருவாக்கு"

" டி. எஸ். வேலாயுதம் பிள்ளை, பி. ஏ., எல். டி.,
—"திருநெறித்தமிழ்'

இடையே சமாஜ அன்பர்கள் புகைப்படமெடுக்கப்பட்டார்கள். தலைவர், சொற்பொழிவாளர்கள் முதலியவர்களுக்கு சமாஜத்தின் சார்பாக அமைச்சர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களும், வரவேற்புக் கழகத்தின் சார்பாகத் திருவாளர்கள் என். எஸ். இராஜரத்தின முதலியார், வச்சிரவேல் முதலியார், புரிசை முருகேச முதலியார் முதலியவர்களும் வந்தனை கூறினர். அவைத்தலைவர் தம் முடிபுரையில் சீரிய கருத்துக்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தனர். கடவுள் வாழ்த்துடன் இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது. தலைவர் மேளவாத்தியங்கள் முழங்க, வாண வேடிக்கைகளுடன் ஊர்வலமாக சமாஜ விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மூன்று நாட்களிலும் சொற்பொழிவுகளுக்கு இடையிடையே காஞ்சிபுரம் தேவாரத் திருப்புகழ்ப் பாராயண சபையினர்களும், திரு. சுந்தர ஓதுவார்மூர்த்திகளும் இன்னிசைப் பாடல்களால் கூட்டத்தினரைப் பேரானந்தத்தில் திளைப்பித்தனர். உள்ளூர், வெளியூர்களிலிருந்து பெண்மக்கள் உள்பட திரளானவர்கள் வந்திருந்து சொற்பொழிவுகளைக் கேட்டு ஆனந்தித்தது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். கச்சிப்பதியெங்கும் சிவமணங்கமழ்ந்தது; சைவ மக்களுக்குப் புத்துணர்ச்சி யெழுந்தது. வரவேற்புக் குழுவினர் மகாநாட்டுக்கு வந்த அன்பர்களுக்கு "உண்டி நாலு விதத்தில் ஆறுசுவைத் திறத்தினில்" படைத்துக் களிப்பித்தது மறக்கற்பாலதன்று. இந்த ஆண்டு விழாவைச் செவ்வனே நடாத்திவைக்கத் திருவாளர்கள் ம. சாமிநாத முதலியார், மு. கண்ணப்ப முதலியார், நெ. சா. இராஜரத்தின முதலியார், வச்சிரவேல் முதலியார் முதலிய பல அன்பர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி பெரிதும் போற்றத் தக்கது. அன்னவர்கள் என்றுஞ் சைவ சமயத் தொண்டில் தலைசிறந்து நிற்க இறை திருவருள் பாலிக்குமாக.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.'

# தூத்துக்குடியில் ஆண்டுவிழா

[ந. சிவகுருநாத பிள்ளை]

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 53 - ஆம் ஆண்டு நிறைவு விழா 1936-ஆம் டிசம்பர் மீ 26-27 ஆம் நாட்களில் சென்னை நகராண்மைக் கழகக் கல்வி அதிகாரி உயர்திரு ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B. A. L. T தலைமையில் நடைபெற்றது. மாலை 3மணிக்குப் பேரவை தொடங்கப்பெற்றது. சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசி உயர்திரு ம. பாலசுப்பிரமணிய முதலியார் B. A,. B. L. அவர்களால் பேரவை திறந்து வைக்கப் பெற்றது. பின்னர்த் தலைவர் நியமனமும் வரவேற்பும் நடைபெற்றன. அமைச்சரவர்களால் சபையின் 53-ஆம் ஆண்டு அறிக்கை படிக்கப்பெற்றது. தலைவரவர்களால் சித்தாந்த உண்மைகளைப்பற்றியும் அவற்றை வளர்க்க வேண்டியமுறைகளைப் பற்றியும் முன்னுரையாக இனிது விளக்கிக் கூறப்பெற்றது. அதன்பின்னர் உயர்திருவாளர்கள் T. S. கந்தசாமி முதலியாரவர்கள் B. A, (சாத்தூர்) அ. மு. சரவண முதலியாரவர்கள் (லால்குடி), ஆசிரியர். அ. வரதநஞ்சையபிள்ளையவர்கள் (ஜலகண்டபுரம்), கிருபானந்தவாரியவர்கள் (சென்னை) ஆகிய பெரியோர்களால் முறையே "திருக்குறள்," "திருக்குறிப்புத் தொண்டர்" "உலகியல் நெறியும் உண்மைச் சமயமும்" "கைத்தல நிறைகனி" என்னும் பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் நுண்பொருள் பொதுளச் செய்யப்பெற்றன. கடவுள் வாழ்த்துடன் முதல் நாள் கூட்டம் நன்குநிறைவேறிற்று.

இரண்டாம் நாள் (27-12-36) காலை சிந்துபூந்துறை ரிட்டையர்டு தாசில்தார் உயர் திரு மா. வே. நெல்லையப்ப பிள்ளை B. A., அவர்கள் தாம் சைவசித்தாந்த ஆராய்ச்சியில் கண்ட உண்மைகளை விளக்கிக் கூறினார்கள். மீண்டும் மாலை 3-30 மணிக்குப் பேரவை தொடங்கப் பெற்றது.

உ

சிவமயம்

# திருப்புகழ்

கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, மயில் விருத்தம், வேல்விருத்தம், திருவகுப்பு, திருவெழுகூற்றிருக்கை, உரைக்குறிப்புகள், தெய்வப்பெயரட்டவணை, விஷய ஆராய்ச்சி அட்டவணை, வரலாறுகளின் அட்டவணை, தலக்குறிப்பட்டவணை, இலக்கண விசேடங்கள், அரும்பொருளகராதி, பாட்டு முதற்குறிப்பகராதி, அருணகிரிநாதர் சரித்திரம், நூலாராய்ச்சி, அருணகிரிநாதரைக் குறித்து ஆன்றோர் கூறிய பாடல்கள் முதலிய அருமையான சிறப்புக்களுடன், பல ஏட்டுப்பிரதிகளிற் காணப்பெற்ற சிறந்த பாடங்களைக் கொண்டு, இதுவரையில் அச்சிடப்படாத பல புதிய திருப்புகழ்ப் பாடல்களோடு 1361 பாடல்களும் 1108 பக்கமுங்கொண்ட ஒரே நூலாக நல்ல கிளேஸ் காகிதத்திற் சுத்தமாக அச்சிடப்பட்டு முழு கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுத் திருவண்ணாமலையில் நமது சமாஜத்தின் 30-ம் ஆண்டு நிறைவு விழாவில் அருணகிரிநாதர்க்கு அருள்புரிந்த முருகவேள் சந்நிதியில் வெளியிடப்பட்டது.

தனிப்பிரதி விலை ரூ. 3. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12.

நான்கு பிரதிகள் விலை ரூ. 10. ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 2½.

உடனே பிரதிகட்கு மணியார்டர் மூலம் விண்ணப்பம் செய்க.

கிடைக்குமிடம்:—

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு,

மயிலாப்பூர், சென்னை.

அவைத் தலைவரவர்கள் முதல் நாள் நடந்த சொற்பொழிவுகளுக்கு முடிவுரை கூறினார்கள். பின்னர் உயர் திருவாளர்கள் ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், அ. மு. சரவணமுதலியாரவர்கள், கிருபானந்தவாரியவர்கள் முறையே "அப்பர் அடிகளின் உட்கிடை" "பார்த்தன் சிலையும் பரமன் நிலையும்" "உனைத்தினந்தொழுதிலன்" என்னும் பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகளைக் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் நிகழ்த்தினார்கள். ஒவ்வொரு சொற்பொழிவுக்கும் தலைவரவர்களால் முடிவுரை விளக்கமாகக் கூறப்பட்டது. அதன் பின்னர் மேன்மை பொருந்திய திருவாங்கூர் மன்னரவர்கள் தமது சமஸ்தானத்திலுள்ள கோயில்களில் தாழ்த்தப்பெற்ற மக்கட்கு உரிமை வழங்கியது பற்றி அம்மன்னரவர்கட்கு நன்றி பாராட்டப்பெற்ற ஒரு தீர்மானமும் செய்யப் பெற்றது. தலைவரவர்கட்கும் சொற்பொழிவாளர் முதலானோருக்கும் நன்றி கூறப்பெற்றுக் கடவுள் வாழ்த்துடன் சபை இனிது நிறைவேறிற்று.

இரண்டு நாட்களிலும் உள்ளூர் வெளியூர் அன்பர்கள் ஆயிரக்கணக்காகக் குழுமியிருந்தனர். இடையிடையே தமிழ் மறை இன்னிசையுடன் ஓதப்பெற்றது.

விழாவின் சார்பாக மூன்றும் நாள் (28-12-36) ஸ்ரீமதி ஆறுமுகத்தம்மாள் அவர்கள் தலைமையில் சைவமங்கையர் மகாநாடு நடைபெற்றது.

எல்லாம் வல்ல சிவபிரான் திருவருளால் 53-ஆம் ஆண்டு நிறைவு விழா இங்ஙனம் சிறப்பாக நடைபெற்றது.

Reg. M. 2330.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.


| மலர் ௧௦ | தாது ஆண்டு மாசித் திங்கள் 1937ஆம் பிப்ரவரிமீ | இதழ் ௨ |
|---|---|---|


## வேண்டுகோள்

[பத்திராசிரியர்]

சைவ சித்தாந்த மஹா சமாஜத்தின் 31ஆம் ஆண்டு விழா சென்ற மாதத்தில் காஞ்சிபுரத்தில் நடந்தபோது சித்தாந்தப் பத்திரிகை சந்தாதாரர்கள் வருஷத்திற்கு வருஷம் குறைந்து வருகிறார்களென்றும், சந்தாதாரர்களே சமாஜ அங்கத்தினராயிருப்பதால் சமாஜ அங்கத்தினர் நாளுக்கு நாள் குறைந்து வருகிறார்களென்றும், பத்திரிகையைச் செவ்வனே நடத்தி நல்ல விஷயங்களைப் பத்திரிகையில் வெளியிட்டால் சந்தாதாரர்களை மிகுதியாய்ச் சேர்க்கக்கூடுமென்றும் சமாஜக்காரியதரிசி அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப் பத்திரிகையை மிகத் திறமையுடன் வெளியிடுவதற்கு அறிவும் திறனும் அனுபோகமும் உள்ள சமாஜ அங்கத்தவர்கள் பலிருந்தும் யாரும் முன்வரவில்லை.

௧

அதனால் காரியதரிசியார் என்னை அப்பதவியை வகிக்கும்படி நியமித்தார்கள். பத்திரிகையைச் செம்மையாய் நடத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய ஆற்றலும் அனுபோகமும் எனக்குச் சிறிதுமில்லாதபடியால் அப்பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்தேன். அப்போது சமாஜ அங்கத்தினர் சிலர், பத்திரிகையை நடத்துவதற்குக் கட்டுரைகள் வரைந்து உதவி புரிவதாக ஒப்புக்கொண்டு பேருக்கு மாத்திரம் நான் பத்திராசிரியனாக இருக்க வேண்டுமென்று சொன்னபடியால், எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணை கொண்டும் சமாஜ அங்கத்தினர் பலர் உதவியைக் கொண்டும் ஒருவாறு நடத்தலாமென்ற நம்பிக்கையுடன் இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். நமது சித்தாந்தப் பத்திரிகையும் சைவ சமயமும் செழித்து ஓங்கவேண்டுமானால், சமாஜ அங்கத்தினர் அனைவரும் நல்ல கட்டுரைகளை எழுதி அனுப்பியும், சந்தாதாரர்கள் பலரைச் சேர்த்தும் உதவினால்தான் முடியும். அங்ஙனம் சமாஜ அங்கத்தினர் அனைவரையும் உதவிபுரியுமாறு மிக்க வணக்கத்துடன் வேண்டிக் கொள்ளுகிறேன். கட்டுரைகள் ஒவ்வொன்றும் கூடுமான வரையில் சித்தாந்தம் வெளிவரும் அளவில் 5, 6 பக்கங்களில் முடிவுகொண்டதாக இருத்தல் நலம். சைவ சமயக் கருத்துக்களை அதிகக் கல்வி அறிவில்லாத மக்களும் எளிதில் உணரும் வகையில் தெரிவித்தல்வேண்டும்.

# அன்பு நெறியே சைவ சமயம்

[பத்திராசிரியர்]

நம்முடைய சைவ சமயமானது உலகில் நிலவும் சமயங்களிலெல்லாம் மேலான சமயமென்றும், மற்றச் சமயங்களெல்லாவற்றிலுமுள்ள உண்மைகளை யெல்லாம் தன்னுளடக்கி அவற்றைப் படிமுறையாகக் கொண்டதென்றும் பல பெரியோர்களால் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக,

“ஓதுசமயங்கள் பொருளுணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவு மிவற்றுள்
யாதுசமயம் பொருள்நூல் யாதிங்கென்னில்
இதுவாகும் அதுவல்லதெனும் பிணக்கதின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தேகாண
நின்றது யாதொருசமயம் அதுசமயம் பொருள்நூல்”

என்று நமது சித்தாந்த சாத்திரம் முழங்குகின்றது. அப்படிப்பட்ட மேன்மை வாய்ந்த நமது சைவ சமயத்திற்கு அடிப்படையாக உள்ளது யாதெனில் அன்பு என்பதே. அன்பிற்கும் சிவத்திற்கும் வேறுபாடு இல்லை என்று பெரியோர் கூறுவர்.

“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே”—திருமந்திரம்.

“இன்பமே என்னுடை அன்பே”—திருவாசகம்.

கடவுள் எவ்விடத்தும் இருந்தபோதிலும் சுயநலம் அற்ற அன்பு எவ்விடத்து இருக்கின்றதோ அவ்விடத்து விளக்கமாய் இருக்கின்றார். “யாரேனும் அன்புசெயின் அங்கேதலைப் படுங்காண் ஆரேனுங் காணா அரன்” என்றது திருக்களிற்றுப்

படியார். அந்த அன்பிற்குச் சாதி, குலம், நிறம், தேசம் என்னும் பாகுபாடு கிடையாது. இவற்றின் வேற்றுமையைக் கண்டு அன்பினால் மாறுபடும் இயல்பை யுடையவர்கள் சாதாரண மக்கள். இந்த மாறுபட்ட உணர்ச்சியானது கடவுளை அடைதற்கும், இவ்வுலக வாழ்க்கையில் மக்கள் இன்பத்தை நுகர்தற்கும் தடையாயுள்ளது. இந்த வேற்றுமை உணர்ச்சியே தற்காலத்தில் வெவ்வேறு தேச மக்களையும் தனித் தனி வகுப்பு (Nations) களாகப் பிரித்துள்ளதோடு அவர்களுக்குள் நிகழும் சச்சரவுகளுக்கும் துன்பங்களுக்கும் காரணமாகவும் இருக்கின்றது.

"சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு"

என்று மணிவாசகனார் கூறுகின்றார். இதனால் சாதி குலம் பற்றிய வேற்றுமை உணர்ச்சி துன்பத்தை விளைவிக்கின்றதென்று தெரிகின்றது. எவ்விடத்தில் அன்பு உண்டோ, அவ்விடத்தில் இன்பம் உண்டு. எவ்வளவுக்கு எவ்வளவு அன்பு பெருகுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு இன்பமும் பெருகும். இதனாலன்றோ காரைக்கால் அம்மையாரை "உனக்கு யாது வேண்டும்?" என்று சிவபெருமான் வினவியபோது "உன்னிடத்து அன்பு வேண்டும், பிறவாமை வேண்டும், பிறந்தால் உன்னை என்றும் மறவாமை வேண்டும்" என்று கூறினார். இதனைச் சேக்கிழார்,

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போதுன் னடியின்கீ ழிருக்க வென்றார்" என்றும்,

மணிவாசகனார்,

"வேண்டும் நின்கழற்கண் அன்பு"



"பெறவே வேண்டும் மெய்யன்பு"

என்றும் கூறிப் போந்தார்கள்.

உலகில் மக்களும் ஏனைய ஜீவராசிகளும் உயிர் வாழ்வதன் இலட்சியம் இன்பம் அடையவேண்டும் என்பதே. அன்பினால்தான் இன்பம் வருமென்று கண்டோம். துன்பம் கலவாத பேரின்பம் அனுபவிக்கவேண்டுமானால் ஒருவருக்கு என்றும் அழிவில்லாத நித்தியப் பொருளான இறைவனிடத்துப் பேரன்பு நிகழவேண்டும் என்று சைவத்திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் கூறுகின்றன. கடவுளிடத்து அன்புண்டானால்தான் உலகில் உள்ள உயிர்களிடத்து அன்புண்டாகும். கடவுளிடத்து அன்பு இல்லாவிடில் உயிர்களிடத்து அன்பு நிகழாது.

"ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்
எவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கு மன்பில்லார்"

என்று சிவஞானசித்தியார் கூறுகின்றது.

ஏனைய மதத்தினரிடத்தும் "Fatherhood of God and Brotherhood of man" என்னும் பழமொழி வழங்குகிறது. நம் தமிழ் மறையானது கடவுள் எல்லா உயிர்களுக்குந் தாயும் தந்தையுமாயிருக்கிறார் என்று அறைகின்றது. இதனை,

"தாயுந் தந்தை பல்லுயிர்க்கும்
தாமே யாய தலைவனார்"

என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கால் அறியலாம்.

கடவுள் எல்லா உயிர்களுக்கும் தாயுந் தந்தையுமாயிருக்கின்றார் என்ற எண்ணம் உண்டானால்தான் எல்லா மக்களும் சகோதரர்களென்ற உணர்ச்சி உண்டாகி அவர்களிடத்து அன்பும் நிகழும். நம் இந்திய தேசத்தில் முன்

காலத்தில் ஜாதிப் பிரிவினைகள் இருந்தபோதிலும் வகுப்புத் துவேஷம் இல்லாமல் இருந்தது. மேல்நாட்டு நாகரிகம் சம்பந்தப்பட்ட இக்காலத்தில் வகுப்புத் துவேஷம் மிகுந்திருக்கிறது. உலகத்தில் மக்களிடத்து சுயநலப் பேய் தாண்டவமாடுகிறது. அதனால் ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் பணம் திரட்டித் தாங்களும் தங்கள் சுற்றத்தாரும் சுகம் அடைந்தால் போதும் என்று கருதுகிறார்கள். ஒவ்வொரு தேசமக்களும் தங்கள் தேசம் வியாபாரத்திலும் செல்வத்திலும் மேம்பாடு அடைந்தால் போதும் என்று கருதுகிறார்கள். அது காரணமாக மேல்நாடுகளில் ஒவ்வொரு தேசமக்களிடத்தும் பகைமை உணர்ச்சி வளர்ந்து, அவர்கள் யுத்த தளவாடங்களுக்காகக் கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்துகொண்டு வருகிறார்கள். எப்போது சண்டை தொடங்குமோ, ஆகாய விமானங்களிலிருந்து எப்போது வெடிகுண்டுகள் விழுந்து கொலை யுண்போமோ என்று அவ்விடத்து மக்கள் உள்ளங்களில் பயமும் கலக்கமும் குடிகொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் மக்கள் மனதில் இன்பம் எப்படி நிகழும்? மக்களெல்லாம் உயிர் வாழ்வது இன்பம் அடைதற்கல்லவா? மேல்நாட்டினர் போகும் போக்கினால் இன்பம் அடையமுடியுமா? அப்போக்கை நாம் பின்பற்றினால் நம் தேச மக்கள் இன்பம் அடையவே முடியாது. இன்பம் அடைய ஒரே வழிதான் இருக்கின்றது. அதுதான் அன்புநெறி. அந்த அன்பும் கடவுளிடத்தும் அவர் அடியவரிடத்தும், ஏனைய மக்களிடத்தும் ஜாதி, குலம் முதலிய வேற்றுமை உணர்ச்சியின்றிச் செலுத்தப்படல்வேண்டும். அதுதான் உண்மைச் சைவம். இந்த உண்மைச் சைவம் உலகமெல்லாம் பரவுமாறு எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக.

# அருள் முருகாற்றுப்படை

என்னுடைய நாதனெழுத்தாறு பாவாறு
மின்னுந் தலந்தாறு மீராறு—மன்னுமுக
மோராறு வேதத்தி னுள்ளாறு பொன்னெடுந்தோ
ளீராறு கண்ணா றிரண்டு.

இந்திர ரிடமுஞ் சந்திரர் வலமு
மெழுகட லீட்டமும் வழுவறு வானமு
மாசறு மதியமும் வீசிய வேலும்
தாமரைத் தடமும் பூமலர்ப் பொழிலும்
பற்ப ராகமுங் கற்பகக் காவும்
வண்டமிழ் பறையுஞ் சண்ட மாருதமுந்
தவநெறிச் செல்வமுஞ் சிவநெறிச் சைவமுஞ்
சக்கர பாணியும் விக்கின விநாயகனும்
வலம்புரி யோனு நலம்புரி வாக்கனும்
போற்றிய பொய்மெய் யாக்கிய மகிபரு
மெழுதறற் றீசரு மெழுகடற் சுருதியு
மெண்டிசைத் திகிரியு மங்குசத் தவனும்
பெருக்கிய பெருமறை சுருக்கிய தோன்றலு
மச்சுத வடிவு மிச்சுர வருளு
மாகத் தோன்றி யேகத் தோருரு
வான்ற பச்சை யீன்ற சுடர்மணி
மரகத வயிரம் விரைசெறி கழனியி
னீர்த்தலம் பவளஞ் சேர்த்துட னிலங்கல்
சொல்ல வரியதோர் கல்லைப் பதியு
ளீன்ற மேக மூன்றிய பொழிலுள்
தேனமர் குழலியை வானவர் முன்னே
மணமது கொண்டு பிணியது தீர்த்து

வருவன மேனி யெரிகன லாகி
உம்பர் பாதம் ஐம்பொ னூர
முரான நதது கணைக்கா லிந்து
குறங்கு யரைதாள் மறலி திருமால்
ரோமம் எரிவ வாய வயிறு
புனலே எழுச்சி மனமே மலரோ
னெழுத்தினில் மாரன் கழுத்தினி லய்யன்
ஒருதோ ளீச னொருதோள் மாதவன்
ஒருதோள் நான்முக னொருதோ ளாதித்தன்
ஒருதோள் சந்திர னொருதோ ளிந்திர
னொருதோள் நாமக ளொருதோள் பூமக
ளொருதோள் சுருதி யொருதோள் பருதி
யிருதோள் சத்தரிடி வருண னு மாகப்
பன்னிரு தோளின் பன்னருஞ் சிறப்பே
ஓங்கிய திருக்கையில் வாங்கிய வேலு
மங்குச மயில்வே லோங்கிய சூலமும்
பாசஞ் சங்கும் வீசுஞ் சக்கிரம்
வச்சிர மழுவாள் விச்சர மெனவே
துலங்கிய வெற்றி நலங்கொடு விலங்கல்
சீரா றுப்பு மீரா று வகையுங்
கூற வரியதோ ரா று முகத்தில்
ஒருமுக மீசன் ஒருமுக மாதவன்
ஒருமுக னான்முகன் ஒருமுக மாதித்தன்
ஒருமுகஞ் சந்திரன் ஒருமுகம் விநாயகன்
பேர்த்த திருமுகம் பெற்றதோர் கருணையன்
தூர்த்த காதில் ஆர்த்த தோட்டினன்
அண்டரு மறியா எண்டிசை யாதி
நஞ்சணி கண்டன் பிஞ்சணி பிறையன்



கொன்றைச் செங்குரவ பன்றல ரெருக்கந்
தோய்ந்த செஞ்சடைய னுய்ந்த முடியினன்
பவளம் பூத்த தவள மேனியன்
ஆடும் பாம்பணி பேடு விநாயக
னயில்மேற் பச்சை மயில்மே லேறி
காலக் கோலம் போலத் திரியுஞ்
சூர னுடலை வேரறத் துணித்துங்
கணங்கொள் பூதம் வணங்கி யேத்த
பையவா ளரவ மையவா யேத்தின
னீன்ற மணியார் தோன்றிய சுடரே
ஒப்புனக் கெதிரிலை யெப்புவி யிடத்து
மாம னேனு முரிமை பூண்டு
வள்ளி பாக மெள்ளென வைத்து
பூங்கொடி மகிழ வீங்கிள முலைமேல்
மணந்தும் புணர்ந்தும் மகிழ்ந்தும் புகழ்ந்து
மேத்த வரியதோ ரெம்பெரு மானே
கூத்தன் றந்தருள் கோமளக் கன்றே
வாக்கு மனமும் பிறவுந் திருவு
மாக்கிய குமர உனையல திலையே.

பாலைப் பதியுறைவாய் பன்னிரண்டு தோளுடையாய்
மாலைக் கடம்புபடர் மார்புடையாய்—காலையினுஞ்
செய்யாய் வரைகிழியச் செவ்வேல் விடுத்தருளுங்
கையா கடைபோகக் கா.

---

## பொருள்முருகாற்றுப்படை

அருளா லுலகத் தமர்ந்தரு ளளிப்பத்
தெருளாய் பருவத் திரியம்பிகை குமார
கங்கையின் மைந்தா கார்த்திகை சிறுவா

மங்கை பங்கில் வருசுப தேசிகா
வண்ண மரகத மாமயில் வாகனா
கண்ணன் மருகா கணபதி சகோதரா
அமையாக் கருணை யம்பிகை நாட்டத்
திமையாத் தெய்வ யானைக் கிறைவா
வருசிலைக் குறவர் தருசிறு மகளிர்
பரிபுர கமல பாத சேகரா
தென்பரங் குன்றுஞ் சீரலை வாயு
மன்பி னேரக மாவினன் குடியும்
பழமுதிர் சோலை மலையினு மாகி
ஆறு நிலையினு மடியவர் மனத்தினுங்
கூறுந் திருத்தணிக் குன்றினும் பதியினு
மினிது வீற்றிருக்கு மிறைவா போற்றி
யென்று மினிய விளையாய் போற்றி
குன்ற மெறிந்த கோவே போற்றி
மாருதி மறுக மகவான் பிழைப்பச்
சூரனை முனிந்த சூரா போற்றி
நினைத்ததை முடிக்கு நிமலா போற்றி
வினைப்பகை யறுக்கும் விமலா போற்றி
ஆறா வமுதே யரசே போற்றி
சேனா பதியே செயசெய போற்றி
ஆதியு நடுவு மந்தமு மில்லாச்
சோதிமெய்ஞ் ஞானச் சுடரே போற்றி
சரவண பவனே சண்முகா போற்றி
குரைகடல் மார்பா குமரா போற்றி
சேந்தா போற்றி செட்டி போற்றி
வேந்தா போற்றி விசாகா போற்றி
கந்தா போற்றி கடம்பா போற்றி



சிந்தா மணியே செயசெய போற்றி
போற்றி போற்றி புகழ்ந்துனை யெப்போது
மேத்து வார்முன் னிமைப்பினில் வருகவே
சாற்றுவே னின்னருள் தந்தரு ளெனக்கே.

பொருள்முருகாற்றுப்படை முற்றும்.

---

## அணிமுருகாற்றுப்படை

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

பொன்னிற மேனியும் பொற்பமர் வடிவு
மின்னறு முகமும் விழிபன் னிரண்டும்
நீறணி நெற்றியும் நீணகை வாயுங்
கூறொணா வடிவுங் கூரிய மூக்கு
மாரஞ் செறிந்த வணிதிருக் கழுத்தும்
பார குண்டலமும் பற்றிய குழையு
முந்நூல் மார்பு முழுமணி வடமும்
பன்னிரு கரத்திற் பதித்த வாயுதமும்
வேல்வாள் சக்கரம் வெயிலொளி வக்கிரம்
பால்நிறை குக்குடம் பரிசைபொற் றண்டம்
வரத மபய மிருதலைச் சூலஞ்
சரமொடு சக்கரந் தன்கரத் திலங்க
செச்சை மாலையுஞ் சீரார் மருங்குல்
வச்சுடுத் தியதோர் மையில் வண்டுகிலுஞ்
சதங்கையுந் தண்டையுந் தனியணி கின்ற
பதங்க ளிடமது பதமடி வைத்து

மற்ற வலப்புற மதன்புற நீட்டி
யுற்றதோ ரட்சர முறுதி யாக
ஆறுகொண் டட்சர மதனிலா றெழுத்து
நடுவே நிறுத்தி நடுவோங் கார
ஙீங்கா ரத் தாற்கொண் மாமறை யோர்குலாவு
ரூங்கா ரத் தாற்பூண் வளைத்துப்பெம் மானிட
தெய்வ யானையைச் சீர்வலப் புறத்தினு
முய்ய வைத்தங் குயிர்பெற வணைத்தும்
மற்றதோர் பாகம் வள்ளி நாயகியை
யுற்றங் கணைத்து வுக்கிரமொ டிருத்தி
யிரட்டைக் கவரி யிருபுறத் தசைய
மருட்டினை நீக்கி மனத்தொடு மன்பொடுந்
தேவர் தானவர் சித்தர் வித்தியாதரர்
பாவையர் கின்னரர் பன்னகர் முனிவர்கள்
சரவண பவனிவ னென்று நின்னுள
மூரமுள மந்திர முறுதியொ டுரைத்துச்
சூழநின் றிருபுறந் தூய்மலர் கொடுத்து
வாழியென் றேத்தி மலரடி பணிந்து
வேண்டிய வரங்கள் விரைந்தளித் தருளு
மண்டர் நாயகமே யற்புதக் கொழுந்தே
யறுமுகத் தரசே யெமதுயிர்த் துணையே
நின்னை உன்னிட தெய்வ யானையு
மன்னிடப் புறத்தினில் வள்ளிநா யகியும்
பச்சை மயிலும் பரிந்தெ னிருதயத்
திச்சை யுடனே யினிதிருந் தருளே.

உ. அணிமுருகாற்றுப்படை முற்றும்.

---

# வருமுருகாற்றுப்படை

கருமுரு காருங் குழல்வள்ளி கேள்வன் கருதலைப்
பொருமுரு காதிபன் காட்டினக் கெனன போந்துசொன்ன
பருமரு காரிப்ப வண்ண மருண கிரியுரைத்த
வருமுரு காற்றுப் படைத்தலை வாசெந்தி மன்னவனே.

ஓம்சிவ செயசெய வருகவருக
முருகாவருக ஆளவா சிரமாறுடைப்
புண்ட ரீகக் குண்டலக் குழைபல
கண்டம தணியு
மாரமு நூலு மார்பில் நின்றியங்கச்
செச்சைத் தொங்கலுங் கச்சுடை மருங்கும்
வாழி யோங்கிய கோழிப் பதாகையுந்
தண்டையு மணியும் புண்ட ரீகமும்
வேத வொலிபாடு கீத கிண்கிணியுங்
குலவிதல சுதல நிதல தராதல
ரசாதல மகாதல பாதால லோகமு
மண்ட ரண்டங்களு மெண்டிசை பரவச்
சிறகினி லெழுவரைப் பறிய நூறிய
மரகத கலாப நிருதகுல தூரக
மேருப்பகுவாய்ப் புயங்கன் பணிவாய்க் கீன்
றூரப் பொசிக்கும் புனிதப் பிரசண்பம
மயிலுங் கடம்பு மயிலும் பிரதாபமும்
பன்னிரு கண்ணு மென்னிரு கண்முன்
நீங்கா திருப்பப் பாங்குடன் வந்து
முன்னின் றருள்க கார்த்தி கேயா
சுவாமி நமாமி சுப்பிர மண்ணியா
சரண்சரண் செய்பவ சரண்முன்புகுந் தென்னைக்
காய்ந்த மாந்தரைக் காய்ந்து இந்திரன்

பயந்த சந்தனந் திமிர்ந்த கந்த
கும்ப விம்பக் கொங்கை தங்கு
மம்பிகை குமரா அமரர் பெரிய
சிறைதனை விடுத்த தேவ தேவ
தேவ ரகசிய மூவர் மூர்த்தி
அனுவா காரப் பேருஞ் சோதி கோரா சமைய
மோக மான யோக நாத
புட்பா சனத்தி யப்பா பரமேசுவரி
அமலா பலா கமலா சனத்தி
வன்னி மண்டலத் தன்ன சரீரணி
அண்ட பூதல குண்டிர நீலி
கோலா கலத்தி பாலா மனத்தி
மூலா வெழுத்தின் மேலா யுதித்த
சேலார் விழிச்சி யேகா வடத்தி நாகார் புயத்தி
ஆலோலா முனி பாலா வேலா யுதா
சால மூலா சலாமா மேலவர்
பேரணி நெருக்கிச் சூரனை மோதிமுது
சூர தாருவான மேருவுங் கிழித்து
அகோர கோர சங்கரா கோரா
சமர பயிரவி குமரிகை வீசிக்
குறைத்தலைக் கூளி நறைப்பெரு வெள்ளம்
நள்ளிரு ளாடுங் கொள்ளிக் கண்களும்
மேக வாத பூத பசாசும்
பலபல வேடத் தலைகை கைகுவித்துப்
பரம சுகத்தின் றமருக மெடுத்து
பயிரவ ரோடு பவுரி கொண்டாட
மடம விடிலுங் காடி யிடக்கையு
மடிமிடடி யிடமிடலுகம பிற



. . . தான மூரிமூர்த்தி
அரனருள் குமரா பரம தேசிகா
சூர பயிரவ சூறைக் காரு
வீர துட்ட வீர ராகுத்த
சூர துட்ட சூர ராகுத்த
அரிய வான துரக சூரிய
ஆதி நாரன் மூரி மாதவ
விண்ணவ ரோது மண்ணில்மகா விருடி
விகட தானவர் சகட மோதிய
கிழு மேனிய காளி நாயக
முருகவருக வெனவாய் வெருவா நிற்பப்
போற்றிப் போற்றிப் புகழ்ந்தனை யெப்போது
மேத்துவார்முன் னிமைப்பினில் வருக வருகவே.

வருமுருகாற்றுப்படை முற்றும்.

---

## திருவெழுகூற்றிருக்கை

ஓருரு வாகிய தாரகப் பிரமத்
தொருவகைத் தோற்றத் திருமர பெய்தி
யொன்று யொன்றி இருவரிற் றோன்றி
மூவா தாயினை
இருபிறப் பாளரி லொருவ ராயினை
யோராச் செய்கையி னிருமையின் முன்னொ
னன்முகன் குடுமி இமைப்பினிற் பெயர்த்து
மூவரும் போந்து இருதாள் வேண்ட
வொருசிறை விடுத்தனை
யொருநொடி யதனி லிருசிறை மயிலின
முன்னீ ருடுத்த நானில மஞ்ச
நீவலஞ் செய்தனை

நால்வகை மருப்பின் மும்மதத் திருசெவி
யொருகைப் பொருப்பான் மகளை வேட்டனை
ஒருவகை வடிவி னிருவகைத் தாகிய
மும்மதன் தனக்கு மூத்தோ னாகி
நால்வாய் முகத்த னைந்துகைக் கடவுள்
அறுகு சூடிக் கிளையோ னயினை
அஞ்செழுத்ததனில் நான்மறை யுணர்த்து
முக்கட் சுடரி னிருவினை மருந்துக்
    கொருகுரு வாயினை
யொருநா ளுமையிரு முலைப்பா லருந்தி
முத்தமிழ் விரக நாற்கவி ராய
னைம்புலக் கிழவ னறுமுக னிவனென
எழில்தரு மழகுடன் கழுமலத் துதித்தனை
அறுமீன் பயந்தனை ஐந்தரு வேந்தன்
நான்மறைத் தோற்றத்து முத்தலைச் செஞ்சூட்
டன்றி லங்கிரி யிருபிள வாக
    ஒருவேல் விடுத்தனை
காவிரி வடகரை மேவிய குருகிரி, இருந்த
ஆறெழுத் தந்தணர் அடியிணை போற்ற
ஏரகத் திறைவ னெனஇருந் தனையே.

---

## சத்தி வகுப்பு

அரவின் மணிகளு மருண கிரணமு
    மழிய வொளிவிடு    தோற்றனை
அழலு மலையுறு மிளைய குமரனை
    யசுர ரொடுபொரு    ஈற்றனை



யபனு மலைவுறு மறையி னிறுதியை
    யமுத மொழிகொடு    தோற்றனை
யடிமை படுமவர் கொடுமை பொடிபட
    முடுகி யெழுமரு    ளூற்றனை
விரவி யளியின முரல்வ நறையுறு
    குவளை மலர்முக    நாற்றனை
விளைகை யொருபதொ டுபய முடையனை
    நிருத பதமயி    லேற்றனை
விருது பொருசுரு தலர்க ளுடலுயிர்
    விடுதி பெறவடு    கூற்றனை
விபுதர் புகழ்கர புரியில் வருமறு
    முகனை யனிதரு    ஈற்றனை
யிரவி மதியனல் நயன பரிபுர
    சரண கவுரிச    டாட்சரி
யிறைவி திரிபுர தகனி முனிவர்க
    ளிதைய மலரைவி    டாக்கினி
யெழுக டலுமெழு புவியு மருளியு
    மிளமை நலமழி    யாக்குயில்
இழிஞர் தொழிலது புரியு மறிவில
    ரிடர்க ளிடியவ    ராப்பிடி
வரையி லுறைபவள் கருணை மழைபொழி
    வதில சடில    மகோத்தமி
வடிவி பகவதி குமரி சிவனிட
    மருவி நிறைய    கலாத்திரு
வனச மலர்மகள் சகல கலைமகள்
    வழிய டிமைவினை    தீர்ப்பவள்
மலையி லுடைமகள் வருநன் மரகத
    வலிய மலியவள்    காக்கவே.

சத்தி வகுப்பு முற்றும்.

## களவகுப்பு

கடகரி குத்திக் குரகதம் வெட்டிப்
பிளவு படுத்திக் குறுக நறுக்கிக்
கரமுடல் கால்கண் டலையதள் வாலி
னரம்பு ரித்துக்          குவிக்கு மொருதிரள்
கவளி கரித்துப் பெரிய தெனக்குச்
சிறிய தினக்குப் பொதுவி லளித்துக்
கரையிட வேசென் றொருபிண நீதந்
திடென்று சதைக்குத்          தவிக்கு மொருதிரள்
கடைபறை கட்டித் துடியி னரப்புக்
கயிறு திரித்துப் பவள கெரித்துப்
பருமணி யாரஞ் சிறுமணி தாளம்
சதங்கை விற்கைப்          பரப்பு மொருதிரள்
கணவர தற்ற தலைகள் பொருத்திக்
கடுக வனத்துத் தலைகள் விரித்துத்
தொழுதன ராநொநங் திடுமட வார்கண்
கலங்க வெத்திப்          பறிக்கு மொருதிரள்
குடரை யறுத்துச் சிலமிள கிட்டுச்
சிலபுளி யிட்டுச் சிலவை பொரித்துச்
சிலவகை யாணஞ் சிலபணி யாரஞ்
சமைந்தி றக்கிப்          படைக்கு மொருதிரள்
குளிஞர்கள் குத்திப் பிடிபிடி புக்குப்
புதையென வொச்சத் திடியென மெத்தக்
குளகறு தேதோ யறிகிலம் யாமென்
றிரங்கி யச்சத்          திருக்கு மொருதிரள்
குடரி னிணப்பட் டுதறி விரித்துப்
பெருக வுலர்த்திச் சிறுக மடித்துக்
குழவிக ளாவென் றழுகுதை யோவென்
றுடன் படுத்துக்          கிடக்கு மொருதிரள்



குரவைக ளிட்டுப் பிணநெய் குடித்துத்
தலைகள் கனத்துக் கொழுவ வலித்துக்
கிறுகிறு நாவுஞ் சுழலுதை யோவென்
றயர்ந்து கக்கிக்          கிடக்கு மொருதிரள்
தடிகள் சுழற்றச் சவள மெடுத்துச்
சிரசுகள் தொட்டுக் கவச மிறுக்கிப்
பரிசையில் வாளுங் கடிவடி வேல்கொண்
டிலங்க வெட்டி          வெருட்டு மொருதிரள்
தவிலுரல் வைத்துப் பலகறை யிட்டுத்
தவள வுலக்கைக் கடைகொடு குத்திப்
பலிகொளு வீரங் கதிபெற வேசென்
றகங்கை கொட்டிச்          சிரிக்கு மொருதிரள்
தடமகு டத்தைப் படிமிசை வைத்துப்
பரிவொடு மெத்தச் சிவனென வற்சித்
தரகர வோசங் கரவென ஞானம்
புரிந்து பற்றற்          றிருக்கு மொருதிரள்
தரிகிட தத்தச் செககிண கிட்டத்
திமினென தித்தத் திகட வெனத்தைத்
தலைமிசைத் தாள பவுரிகள் பாடி
சிலம்ப ரற்றக்          குதிக்கு மொருதிரள்
படியுத ரத்தைக் குணமிசை வெட்டிப்
பரிய வெலும்புக் கரையது கட்டிக்
குமிழிகள் பாலுங் கரையிடை மோது
சலிங்கு கட்டிக்          குளிக்கு மொருதிரள்
பரிவொடு பற்கொப் பரைகளி லிட்டு
கருக வறுத்துப் பொரிக ளெரித்துக்
கடதட நாவின் கொடிறிரு பாலும்
பிதுங்க மொக்கிக்          கொறிக்கு மொருதிரள்

படிதிகழ் சக்ரக் கிரியுல கத்தைப்
பருமதி வட்டத் தவள விசித்ரக்
குடைநிழ லாளுந் திரிபுவ னேசன்
தனம்ப டைத்துத் தழைக்கு நரபதி
பரிமளி தப்பொற் சததள பற்பத்
திருவரை கட்கக் குலிசன வெற்றித்
திருமலை ராயன் றரணிவரா கன்
செயங்கொ ளுக்ர களத்தின் வகையே
களவகுப்பு முற்றும் சிவசுப்பிரமணியனுக்கு

---

## சொரூப வகுப்பு

ஓம் சிவசிவ சண்முகாய
மூவிரு முடியு மூவிரு முகமு
மாறிரு காது மாறிரு குழையும்
பன்னிரு தோளும் பன்னிரு கையும்
மெய்ப்பட மார்பும் முப்புரி நூலும்
கட்டிய கச்சையுஞ் சுட்டிய சுருதியும்
உபய பாதமு மபைய வரதமும்
புண்டரீ கம்போல் மலர்ந்திடும் காலில்
தண்டையுஞ் சதங்கையு
மேறிய மயிலும் சீறிய யாவு
மீறிய கரத்தில் கோழிக் கொடியுங்
கணபி லணிந்த கடம்ப மாலையும்
பவள வாயும் பன்னிரு நயனமு
மடைவுட னணிந்த ஆயுத வகைகேள்
பரிசையும் வாளும் கத்தியும் வில்லும்
வில்லு மம்புடன் சூலஞ் சக்கரப் படையும்
தண்டொடு தடியும் வெங்கொடி [பிறவும்]



அனந்தம் ஆதித்த திரண்ட திருமேனியுஞ்
சர்வா பரணந் தரித்த அழகும்
வானகத் தேவியை மருவிய புயமும்
கானக வள்ளியைக் கட்டிய கரமும்
ஆயிரங் கண்க ளாயுத மெடுக்க
ஆயிரம் பூத மடிபணிந் தேத்த
ஆயிரம் திரளைகளல கைகை கொட்ட
ஆயிரங் காப்ப வலகை நின்றாட
தேவர்கள் முனிவர்கள் செயசெய வென்ன
மாதவர் நான்மறை வாழ்த்தித் துதிப்ப
துந்திமி துடிமின தந்திமி யென்ன
தும்புரு நாரதர் தொந்தோ மென்ன
மத்தள முடன்மணி தித்திமி யென்ன
சத்த ரிஷிகளுந் தாளிணை பணிய
உவமிகள் வீணைக ளுறுமுறு மென்ன
தெய்வ ரம்பையர்கள் திருநடம் புரிய
அடியார் தினமும் அடிபணிந் தேத்தச்
சூரனைக் கடிந்து மேருவைப் பிளந்து
அமரர்கள் சிறைமீட் டருளிய சுவாமி
சமர புரிவாழ் சரவணப் பிரதாபா
சண்முகராயா சங்கரன் புதல்வா
வடிவுள்ள குமார மதனுடைய மைத்துன
மூவ ராதிபற்கு முதலாய் நின்ற
தேவாதி தேவனே சேவகா சரணஞ்
சரணஞ் சரணஞ் சரவண சரணஞ்
சரணஞ் சரணஞ் தாணுவே சரணம்
முத்தா சரணம் மூர்த்தியே சரணஞ்
கத்தா சரணங் காரண சரணஞ்
சரணம் சரணம் நின்றாளே சரணம்.

சொரூப வகுப்பு முற்றும்.

## கர வகுப்பு

அரிதிரு முருகா முக்கணன் மகனே
ஆனைக் கிளைய அயில்வேல் முருகா
அடியேன் வல்வினை யறுத்திடு மொருகை :
திரிபுர மெரிசெய நகைப்பவன் மகனே
முனமே முனிவர்கள் வந்து வணங்கிட
ஐந்திர மந்திர மகண்ட முறிந்திட
பரிவேல் மிகவொடு பாதாள லோகமும்
புகுந்தா ராய்ந்து வீடு மொருகை :
நேசக் கனல்விடு நெஞ்சை உரித்திடு
நாவை யடக்கிடு நாக மொடுக்கிடு
கீழ்த்திசை யேறக் கீழ்க்கட லேற
வருவினைப் பூதம் வல்வினை வஞ்சினை
யிவர் மடிய வேறிடு மொருகை:
பஞ்சமி சரசுவதி பார்வதி துர்க்கையும்
பங்கொடு உமையொடு பத்திர காளியுங்
கங்கையொ டாடக் காளி மகிழ்ந்திட
மூளை பிடுங்கிடு மீளப் பொருதிரு
தென்திசை யேறத் தென்கட லேற
வருவினை சூனியம் வைப்பு முறிந்திட
குழியிற் பிணமுங் குளியிற் பிணமுங்
காட்டுச் சுடலையின் பிணமும் பற்றித்
தின்றிடும் பத்திர காளியு(ம்) பற்றிடு
பூதப் பிசாசு கணங்களெல் லாம்பட
வோர்வேல் விட்டு
பற்றிப் பற்றிக் குற்றிடு மொருகை :
மண்ணும் விண்ணும் வேதாள பூதமும்
அட்டகெ சங்களுங் கிடு கிடென்ன



வரைகள் குலுங்கச் சரமுடி மயில்மிசை
ஒருகோடி யினில்வரு வாய்மேல் திசையேற
மேல்கட லேற விடுவினை தோசமும் வேண்டுவ
பேயும் சகல மருந்திய தீயெனவிடுவென
சக்கர மைந்துந் தரித்திடு மொருகை:
பாஷைகள் பலவுங் கற்றிடும் வஞ்சகர்
நெஞ்சை அகத்திட வடதிசை யேற
வடகட லேற வாயை மாயூரமு
பிடிபிடி யங்ஙனே பிண்டமு மண்டமு
மளவொடு குழலொடு ஐந்திர மோடிடு
கற்றிடுங் கண்க ளெரிந்திட வேலெறி
கற்பகக் காவென நின்றாடிடு மொருகை :
சங்கு சக்கரந் தருதிரி சூலங்
கடவுளர் சூலங் கணபதி சூலம்
எரியெரி சூலம் ஏகனர் சூலம்
திரிசூலந் திருந்திடு மருகன் சூலம்
பிடிபிடி சூலம் பிரமர்கள் சூலம்
பிடாரிகள் சூலங்
கையிலெடுத் தெறி காரண வேல்விடு
அயிரா வதமென நின் றாடிடு மொருகை :
வனமெரி புனமெரி வஞ்சகம் வைப்பெரி
காடெரி நாடெரி கணங்கள் பிசாசெரி
யெரியெரி வேலெரி அங்கொரு வேல்விடு
இந்திர சிறைவிட் டுயிர்தரு மொருகை :
அவ்விடு வவ்விடு சிவ்விடு மவ்விடு
நவ்விடு அவ்விடு உவ்விடு சிவ்விடு
ஒன்றைத் தினியே குறித்திடு எவ்விடு
மருகா இனியொரு வேல்விடு இரண

களமது வர வேறிடு மொருகை :
அரிஅரி பிரமன் திருமருகா
அரிஅரி சிவசுத பருசும அய்யா
கரிமுக நண்பா காளிகள் தந்தை
கதிரவன் கண்மணி கால காலனே
திரிலையே திரிலையே யென்றிடு மொருகை :
வேலைகள் சோரவேல் மிசைமீ தேறிடு மொருகை :
குருபர குகனே சரவண பவனே
அரிதிரு மருகா அரனார் மகனே
உனை அனுதின மறவேன் உயிர்விட்ட தெனினும்
வருவினை மாற்று வல்வினை யகத்துக்
கொடுவினைப் போக்குக் குறித்து மெரிந்திடுங்
குறைகட லேழு மதிர்ந்திடு மொருகை :
ஒருகண் பார்க்கில் நம்முயிர் தனைக்காத்திடும் :
ஒருகண் பார்க்கில் உயர்ந்திடு மந்திரம் :
ஒருகண் பார்க்கில் விண்ணுற வோங்கி வளர்ந்திடும் :
ஒருகண் பார்க்கில் அஞ்செழுத் தோடே முயன்றிடும் :
ஒருகண் பார்க்கில் அழுந்தும் பசாசை யெரித்திடும் :
ஒருகண் பார்க்கில் வேதத்தி லுயன்றிடும் :
ஒருகண் பார்க்கில் விஷத்தை யளித்திடும் :
ஒருகண் பார்க்கில் வேடத்தை வளர்த்திடும் :
ஒருகண் பார்க்கில் வஞ்சகர் நெஞ்சைப் பிளந்திடும் :
ஒருகண் பார்க்கிற் சிவசிவா நமோ வென்றிடும் :
ஒருகண் பார்க்கிற் வள்ளிக்கோர் துணையாக நிற்கும் :
ஒருகண் பார்க்கில் எமக்கோர் வச்சிராங்கியே :
ஒருமுகம் சிவமுகம் ஒருமுகம் அரிமுகம்
ஒருமுகந் திருமுகம் ஒருமுகங் கரிமுகம்
ஒருமுகம் ஓம் ஒருமுகம் ஆம்



சிறீமற் மஹாமமறிம் திகந்தாய குகாய
கார்த்திகேய கடம்பராய காங்கையராய
கேர்த்தி சரவணபவ
சண்முகாய சத்தி வித்தியாய
மயூரவாகனாய மகாசூர காலாய
சர்வசத்தி தராய சர்வ வசீகராய
சர்வ சத்துரு சங்கரா ராய சர்வதோஷ நிவாரணாய
சர்வபாவ விநாசராய சர்வ வியாதி விநாசராய
வஞ்சனை பில்லி வரைந்திடு சூனியம்
எப்பேர்ப்பட்ட பலதுட்ட தேவதையு
மடிமடி மடிந்து மிடிமிடி மிடிந்து
அறுஅறு அறுத்து துணிதுணி துணித்துப்
படுபடு பட்டுக் கெடுகெடு கெட்டுப்
பற்ப மாகப் பறந்தோடிப் போக
ஓம் சிவாகா ஹாயஹும்.

கற்பகா லத்துக்கு மழியாத சேவகம்[1]
கலங்காத விருள்விளக்கம்
காமக்கு ரோதலோப மோகமத மாச்சரியங்
கட்டறுக்கின்ற கெடுவாள்
பற்மது ஸ்ரீசர்வ ரத்தின பரணம்
படிவமுறு வச்சிராங்கி
படைகொண்டு வருகால தூதரைப் புடைகொண்ட
பரசிவ ஞான ரூபம்
அற்புத மளிக்குமுயர் சிற்பரா னந்தமே
ஆதரிக் கின்ற தெய்வம்
அயனுமறை முனிவருட னமரர்பெறு பெருவரம்
ஆதார மெவ்வுயிர்க்குஞ்

[1] சேவக.

*சற்குரு மயூரவா கனன்சிவசுப் பிரமணியன்*
*தருபழநி வருகுமாரன்*
*சரவ ணோற்பவன . . . .*
*தன்றிரு வெண்ணீறு தானே.*

*முற்றும்*

---

**குறிப்பு:—** மேல் நாட்டு அறிஞர்களைப்போல தாம் எழுதுகிற பிரபந்தங்களை எழுதுங் காலத்தையும் சந்தர்ப்பத்தையும் குறித்து வைக்கிற வழக்கம் இந்நாட்டுப் புலவர்களிடம் பெரும்பாலும் இல்லை. அது நம்மிலக்கியங்களுக்கு ஒரு குறையாக இருக்கிறது. மேலும் ஆக்கியோர் பெயரும் காலமு மறியாமல் பிரபந்தங்களை ஆராய்ச்சி செய்ய வேண்டி யிருக்கிறது.

இத்துடன் பிரசுரிக்கப்படும் நூல்கள் ஒரு பழைய ஏட்டுச்சுவடியில் உள்ளன. அவற்றின் ஒரு பகுதியாகிய 'வருமுருகாற்றுப்படை'யும் திருவெழுகூற்றிருக்கை யென்ற பிரபந்தமும் அருணகிரியார் பிரபந்தமென்று முன் அச்சாயிருக்கிற பதிப்புகளிலிருக்கிறபடியால் இந்நூல்கள் அருணகிரிநாதர் வாக்கு என்று ஊகிக்க வேண்டி யிருக்கிறது.

தமிழிலக்கியம் 96 பிரபந்த வகையில் இவைகள் ஆற்றுப்படை யென்ற பகுதியைச் சேர்ந்தன. ஆற்றுப்படை = ஆறு + படு + ஐ அதாவது (முத்தி பெறுதற்பொருட்டு) வழிப்படுத்திய தென்ப. அகவற் பாவால் விறலி, பாணர், கூத்தர், பொருநர் இந் நால்வரு ளொருவர் பரிசிற்குப் போவாரைப் பரிசுபெற்று வருவார் ஆற்றிடைக் கண்டு தலைவன் கீர்த்தியுங் கொடையுங் கொற்றமுஞ் சொல்லி 'தாம் பெற்ற பெருவளன் அவரும் பெறலாகும்' எனச் சொல்வது. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் ௩௦. இதற்கு இலக்கியங்கள் சங்க விலக்கியமாகிய பத்துப் பாட்டுள் சிறந்து விளங்கும், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை முதலியவாம். இவைகளில் திருமுருகாற்றுப்படை புலவர் ஆற்றுப்படை எனவும் விளங்கும். முத்தியைப் பெற்றவ னொருவன் மற்றவர் முத்திபெறும் பொருட்டு



ஸ்ரீ முருகக் கடவுளையே வழிப்படுத்தலையுடைய பிரபந்தமென்று மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரரால் பாடப்பெற்றது. பின் வரும் நூல்கள் முருகக்கடவுளின் அருள், பொருள் அணியை வழிப்படுத்துவது.

வருமுருகாற்றுப்படையோ முருகனை வாத் தோத்திரிப்பது. திருவெழு கூற்றிருக்கை முன் பதிப்புடன் சில மாறுதலா யிருப்பதால் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

M. P. S. துரைசாமி முதலியார்.

---

# வெளிவராத
# இரு திருப்புகழ்ப் பாக்கள்

பூரி சம்பக மாலா பூதர
லோல குந்தள பாணீ கோபித
பூக தண்ட சுரேசா சாயகு முதுபால
போக கெந்தா சாலீ தூசா
சாரி சந்தன தூணீ பூஷித
வாச குங்கும கோலா மோதர சகேகாச
பார பண்பத வேதா பாஷண
சீல சம்பட லாவீ சாலிம
பாவ சஞ்சய நாநா லோசன நவரேக
பார்மதஞ் செயுந் தாரா சாதுர
சாலி துன்பது காமா ணமற
பாஷணஞ் செய யாயா மாமிகக் கர்மதேவ
சூர கண்டன வேலா லாலிச
பாணி பங்கச நீகா ராசல
சூத புங்கவை யாணு சேர்விட பசிநேடு

சோடி சந்திர நீர்கா டோசக
டோம குண்டலி யுதாரா பாடண
சூர கந்திமி கேதா கோமள பதநீச
வீர சம்புகு தேவா நீகவி
வேணு குண்டகு ரோரோ பாடல
மேதை யந்த்ரச காயா ராயதர் சுகராய
வேத பண்டித சேசேதா மாவென .
பாவை கண்டிக லோதா காதிப
வீர பங்கதி ராதீ நாயக பெருமாளே.

தினமொரு கவிதை யேனு
மனதொடு பகர்கி லாத
சிறியனு மடிமை யாக எளிதோதான்
இனமொரு சிறிது நீயு
னருள் செய்தே புவியின்மீதி
லினிதுற மடிமை யாக வருள்கூர்வாய்
கனதன வெயினர் பாவை
நலமுற மருவு நாத
கடிகமழ் குரவ மாலை புனைமார்பா
முனமொரு தரணி சாய
வசுரர்கள் கிளைகள் சாய
முனையயில் கடவு வீர முருகோனே.

[இவ்விரண்டு பாடல்களும் புதுவை - ஆநந்தரங்கம் பிள்ளை யவர்கள் ஏட்டுப் பிரதிகளிற் கிடைத்தன; திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களால் நமக்கு அனுப்பப்பட்டன. முதற் செய்யுளின் உண்மைப் பாடமும் பொருளும் விளங்கவில்லை.—**பத்திராசிரியர்**]

# செய்தித் திரட்டு

[மயிலைகிழார் இளமுருகனார்]

## உருவத்தை மறைக்கும் கதிர்கள்

இத்தாலி தேசத்திலுள்ள மிலன் நகரத்தில் ஆசிரியர் மன்சினி என்பவர் ஓர் இயந்திரம் கண்டுபிடித்துள்ளார். இவ்வியந்திரத்திலிருந்து வரும் கதிர்கள் மக்கள்மீது படும்போது அவர்கள் உருவத்தையே மறைத்து விடுகின்றனவாம். ஒரு விருந்துக்கு வருகிறவர்கள் ஒருவரையொருவர் காணாமலே உண்கிறார்களாம். அவர்கள் உட்காரும் நாற்காலிகளும் எதிரிலிருக்கும் மேஜை கோப்பை கரண்டி முதலியனவும் மட்டுமே தெரிகின்றனவாம். எக்ஸ்ரே கதிர்கள் தசையை மறைத்து எலும்பை மட்டும் காட்டுகின்றன. இப் புதிய கதிர்கள் எலும்பையும் மறைத்து உருவத்தை முழுவதும் மறைக்கின்றன. ஒரு கூத்துக்கொட்டகை மேடையிலுள்ள நடிகர்களனைவரையும்கூட மறைக்கமுடியுமென்று இவ்வாசிரியர் கூறுகிறார். இவ்வியந்திரத்தின் உரிமை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதை விற்பதற்கு ஒரு வணிக நிலையம் விரைவில் நிறுவப்படும். தம்மீது இக் கதிர்கள் தாக்குவதால் எவ்வித சங்கடமும் தோன்றவில்லையென்று மறைக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள். மும்மலமும் சிற்றறிவும் உடைய ஒரு சிறு மனிதன் இவ்வளவு ஆற்றல் பெற்றால், நின்மலனாகிய வாலறிவன் உருக்கரந்துவந்து அருள்புரியும் வகைகளைப் பொய்யென்று ஏன் புறக்கணித்தல் வேண்டும்?

## பொங்கல் விழாவில் ஆணவத் தாண்டவம்

காரைக்குடியில் கொப்புடைய நாயகியம்மன் கோயிலில் மாட்டுப் பொங்கல் விழாவன்று விபூதிப் பிரசாதம் மாலை மரி

யாதைகளை எவர் முதலிற் பெறுவதென்பதைப் பற்றி மெய்யப்பன் சேர்வைக்கும் மெய்யப்பன் அம்பலத்துக்கும் சச்சரவு நிகழ்ந்து சிவில்கோர்ட்டு மாஜிஸ்திரேட் கோர்ட்டு உத்தரவுகள் பிறந்து சேர்வைக்கு முதல் மரியாதைகள் நடந்தன. ஆனால் மாலைகளை யணிந்து கொண்டே வீட்டுக்குப் போகக் கூடாதென்று உத்தரவு பிறந்தபடியால் மாலைகளைக் கழற்றிய பிறகே சேர்வை வீடு சேர்ந்தார். யாருடைய மாடுகளை முதலில் ஊர்வலமாக விடுவதென்பதைப் பற்றி நீதிமன்றத்துக் கட்டளை யொன்றும் ஏற்படவில்லை.

தஞ்சை ஜில்லா நீடாமங்கலத்துக் கருகிலுள்ள கீழைக்குடி கிராமத்தில் மாட்டுப் பொங்கலன்று யாருடைய மாடுகளை முதலில் ஊர்வலமாக விடுவதென்பதைப் பற்றிக் கள்ளர்கட்கும் அகமுடையாருக்கும் சண்டை யேற்பட்டு ஐயாசாமி என்பவன் கலவரத்தில் கொல்லப்பட்டான்; வேறொருவன் பலத்த காயங்களால் இறக்கும் நிலையிலுள்ளான் என்ற செய்தி கிடைத்துள்ளது. அன்பு பொங்க வேண்டிய பொங்கல் விழாவில் ஆணவம் பொங்கி வழிகிறதே! அந்தோ! பொங்கலே!

### மாதா கோயிலில் தீண்டாமை

கும்பகோணத்தில் புதியதாகக் கட்டப்பட்ட மாதா கோயிலில் ஆதி திராவிடக் கிறிஸ்தவர்கட்குத் தனியே ஓரிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. உயர்ந்த ஜாதிக் கிறிஸ்தவர்கள் உட்காரு மிடத்திற்கு இவர்கள் போகக் கூடாது. இந்த ஏற்பாட்டை மாற்றி ஜாதிவித்தியாசத்தை யொழிக்க ஒரு கிளர்ச்சி தோன்றிப் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன. ஒரு கூட்டத்தில் திரு. மரியநாதன் என்பவர் இக் கொடிய திட்டத்தைக் கண்டித்து இதற்கு ஆதரவுசெய்து இதை யொழிக்கும் முயற்சிக்குத் தடை



செய்பவர்கள் கோயிலதிகாரிகளாகிய பாதிரிமார்களே என்று இடித்துக் கூறினர். திருவாளர்கள் இராயப்பன், அனுக்கிரகம், அந்தோணிசாமி முதலியோர் மும்முரமாக வேலை செய்கின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில் போலீசுப் பாதுகாப்புடனேயே தொழுகை நடக்கின்றது. திருவாங்கூர் சமஸ்தானத்தில் தீண்டாமை, ஆலயத்திலிருந்து விலகிற்று; அது கும்பகோணத்து மாதா கோயிலில் குடிகொண்டுள்ளது போலும்! இக்கரைக்கு அக்கரை பச்சையென்று மருட்சி கொண்டு புறச்சமயம் புகும் இந்து மக்கள் இனியேனும் விழிப்பார்களாக.

## சைவ பேதம்

[ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்]

அரியசதா சிவனென்போ னநாதிசைவ னவன்பா
லவதரித்த சிவமறையோ ராதிசைவ ரிவர்பால்
உரியசிவ தீக்கைபெற்ற பூசுரர் மாசைவ
ருயர்ந்த வரசன் வணிகனநு சைவராவார்
பெரியகுவ லைப்புயத்தோ னவாந்தர சைவன்சீர்
பெறுசவன் னனுஜிய னுலோமர் பிரவரராம்
விரியவனி மிசையொழிந்தோ ரந்திய சைவத்தோர்
விரிந்திடுமேழ் சைவவித மிவையெனநூல் விளம்பும்.

என்னும் பிரமாணப்படி அநாதி சைவராவார் சதாசிவமூர்த்தி, ஆதிசைவராவார் சிருஷ்டி யாரம்பத்திலே அவ்வநாதி சைவரது சத்தியோசாத முதலிய ஐந்து முகங்களினின்றும் தோன்றிய கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், கௌதமர், அகத்தியர் என்னும் பஞ்சரிஷி கோத்திரத்துப் பிறந்த சிவப்பிராமணர். மகா சைவராவார், பிரமாமுகத்திற்

றோன்றிய வைதிகப் பிராமணருள்ளே சிவதீட்சைபெற்றவர். அநுசைவராவார், சிவதீட்சைபெற்ற க்ஷத்திரியரும் வைசியருமாம். அவாந்தர சைவராவார், சிவதீட்சை பெற்ற சூத்திரர். பிரவரசைவராவார், சிவதீட்சை பெற்ற அநுலோமர். அந்திய சைவராவார் சிவதீட்சை பெற்ற மற்றையோர் என வறிந்து கொள்க.

எனவே, சதாசிவமூர்த்தியினுடைய ஐந்து முகங்களினின்றுந் தோன்றிய காசிபர்முதலிய ஐந்து முனிவர்களுடைய கோத்திரத்திற் பிறந்தவர்களாய், சமய தீட்சை, விசேஷ தீட்சை, நிருவாண தீட்சை, ஆசாரியாபிஷேகம் ஆகிய நான்கும் பெற்றவர்களாய்க் கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி உத்ஸவாந்த முதலிய கருமங்களைத் தவறாது செய்யவல்லவர்களாய், உள்ள சிவாசாரியர்களே பரார்த்த லிங்க பூசைக்கு உரியவராவார்கள்.

இதுபற்றியன்றோ திருமூல நாயனாரும்,

"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றன்னை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தற்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமா மென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே."

என்றருளிச் செய்துள்ளார்.

பேர்கொண்ட பார்ப்பானென்றது ஆதிசைவப் பிராமணனல்லாத மற்றைய சிவதீக்ஷை பெற்ற பிராமணனாகிய மகா சைவனையும், சிவதீட்சைபெறாத சாமானியப் பிராமணனையுமே என்பதைக் காட்டிற்று.

# சமாஜ 31-வது ஆண்டு விழா

## சொற்பொழிவுக் குறிப்புகள்

### சைவர் மகாநாட்டுத் தலைவர்

### திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள் பேருரை

[உதவிப் பத்திராசிரியர்]

நம் சைவப் பெரியாரும் மகாநாட்டுத் தலைவருமாகிய பிள்ளை அவர்கள் தம்முடைய தலைமை உரையில் பல அரிய பொருள்களை யெடுத்து விளக்கியுள்ளார்கள். அவற்றுட் சில மீண்டும் மீண்டும் நினைவுகூர்தற்குரியன. ஒன்று, 'சைவத்தனிப்பெருங்கடவுள்' என்னுந் தலைப்பின் கீழ்ச் "சிவபிரானைப் பிரமன் விண்டு உருத்திரன் என்னும் மூவருள் ஒருவரான உருத்திரனென்று சில மயங்குவர்" "சிவபெருமானே பரமபதி என்பது வேதம் உபநிடதம், புராணம், இதிகாச முதலிய எல்லாக்கலைகளாலும் உணர்த்தப்பெறும்" என்று கூறுவதாம். இதனைச் சைவர்களுட் பெரும்பாலோர் உணர்கின்றார்களில்லை. சிவபிரானைப் பிரமன் விண்டு உருத்திரன் என்னும் மூவருள் ஒருவரான உருத்திரனென்றே கொண்டுள்ளார்கள். பிறசமயத்தவர் கூறும் இக்கூற்றைச் சைவ சமயத்தவர்களும் கொண்டிருத்தல் அறியாமையே. இவ்வறியாமையைப் போக்க அறிவுடைய சைவப் பெருமக்கள் ஒவ்வொருவரும் தத்தம்மா லியன்றவரை முயலல்வேண்டும். ஒரு சமயத்துக்குரிய தெய்வத்தை, அச்சமயத்தவர், அத்தெய்வத்திற்கு ஒப்பதும் மிக்கதுமான பிறிதொரு தெய்வம் இன்றெனக் கொள்வதே முறையாம். சைவர்களென்போர் சிவபெருமானுக்குச் சமத்துவமாகவோ உயர்வாகவோ பிறிதொரு தெய்வத்தைக் கொள்ளுதல்

கூடாது. அவ்வாறு கொள்வோர் சைவரென்னும் பெயருக் குரியவராகார். ஒரு தெய்வத்தொடர்புடைய எம்மதத்தின ருங் கொளற்பாலது இம்முறையே. பிற்காலத்தே தோன் றியனவும் வேத முதலியகலைகளின் முழுச்சம்மதத்தையும் பெறாதனவுமான பிறசமயங்கள் முறைபற்றியே இங்ஙனங் கொள்ளவேண்டும். வேதம், உபநிடதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய எல்லாக் கலைகளாலும் முதல்வன் என்று உணர்த்தப் பெறுகின்ற சிவபெருமானுடைய தொடர்பைப் பெற்றுள்ள சைவர்கள் தங்கள் தெய்வமே முழுமுதற் கடவு ளென உரிமையாற் கொள்வர். ஆகலின், இனியேனும் சைவர்கள் சிவபெருமான் மூவரிலொருவன் என்னும் மயக்கத்தினின்றும் நீங்குவார்களாக. தலைவரவர்கள், "'மூவரு முப்பத்துமூவரு மற்றொழிந்த தேவருங்காணாச் சிவபெருமான்' 'மூவருமறிகிலர் யாவர் மற்றறிவார்' என்பன முதலாகக் கூறப்படும் பிரமாணவாக்கியங்கள் அம்மயக்கத தைத் தீர்க்கும் மருந்தாகும்" என்று கூறும் உரைகளைச் சைவர்கள் உய்த்துணர்ந்து தெளிவு பெறுவார்களாக.

இனித் தெய்வ வழிபாடு நிகழ்தற்குரிய ஆற்றினை அறிவிக்கவே, பிள்ளை அவர்கள்,

"கற்புறு சிந்தை மாதர் கணவரையன்றி வேறோர்
இற்புறத் தவரை நாடார் யாங்களு மின்ப வாழ்வும்
தற்பொறி யாக நல்குந் தலைவநின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய் பூரணாநந்த வாழ்வே."

என்ற தாயுமானசுவாமிகள் திருவாக்கை எடுத்துக்காட்டி யுள்ளார். இஃது எதனைத் தெரிவிக்கின்றது? கற்புடைய பெண்டிர் தங்கணவரையல்லாது பிறரைக் கருதாததுபோல நாமும் ஒரே மூர்த்தியினைப் பற்றி நிற்றல் வேண்டு மென் பதை அறிவுறுத்துகின்றது. ஸ்ரீமத் - பாம்பன் குமர



குருதாச சுவாமிகளும் "தூர்த்தகுணமுள்ள விபசாரி நடையென்ன வொருதுறையின் றனந்த தெய்வந் தொழு வழுவுறாது" எனத் தெரித்துள்ளார். ஆகலின், ஒரு தேவ வழிபாடு கற்புடைப் பெண்ணின் நடையினையும் பல தெய்வ வழிபாடு வியபிசாரி நடையினையும் பொருந்தும். ஒரே மூர்த் தியினைப் பற்றி நிற்கும் இச்சிறந்த கொள்கையினைச் சைவ ரென்பாருட் பலரும் ஒரு சிறிதும் உணர்ந்தாரல்லரென்பது அன்னவர் நடைவழியாகவே அறியக்கிடத்தலினாற்றான் தலைவரவர்கள் அதுபற்றிக் குறிப்பாக எடுத்து மொழிந்தார் கள். இது பற்றிய விரிவினைப் பின்னர் விளக்குவாம்.

இனி, பிள்ளையவர்கள் வருந்திக் கூறியமற்றொன்று தீக் கையைக் குறித்ததாகும். தலைவர் "ஏனைச்சமயிகள் எல்லாம் தத்தம் சமயத்தில் விதிக்கப் பெற்றுள்ள சமயப் பிரவேசக் கிரியைகளைக் கைக்கொண்டுவரவும், நமது சமயிகள் மட்டும் வேறு எச்சமயத்திலும் காணப் பெறாத அருமையுடைய தீக்கையைக் கைக்கொள்ளாதிருப்பது வருந்தத் தக்கதாகும்" எனக் கூறிப் போந்தார்கள். சைவ சமயம் பண்டைய சிறந்த நிலையை எய்த வேண்டுமாயின், சைவப் பெருமக்கள் இதனைக் கவனிப்பது அவரைப் பொறுத்த கடமையாகும். தலைவர் கூறியபடி சமயப் பிரவேசக்கிரியை யாகிய தீக்கையை இந்நாட்டிலும் பிற நாடுகளிலும் உள்ள எல்லாச் சமயத்த வரும் கைக்கொண் டிருக்கின்றார்கள். சைவர் மாத்திரமே அதனைப் பெரும்பாலும் நழுவ விட்டிருக்கிறார்கள். சில ஆண்டுகட்கு முன் ஆண்மக்களுள்ளும் பெண்மக்களுள்ளும் தீக்கை பெறாதாரைக் காண்டலும் அருமையா யிருந்தது. இது போதோ தீக்கை பெற்றாரைக் காண்பதே அருமையாக விருக்கின்றது. இத் தீக்கை யாதாயினும் ஆக; இதனைப்

பெறுதார் சமய முதற்படியிலுங் கால்வைத்தவ ராகாரெனத் துணிந்து கூறலாம்.

இனி, தலைவரவர்கள் தம்முடைய பேருரையில் "நமது சமயம் குருட்டு நம்பிக்கையுடைய கொள்கைகளையாவது, வெறும் புராணக் கதைகளையாவது போதிப்பது அல்ல. அதன் ஒவ்வொரு கொள்கையும் அளவைப் பிரமாணங்கட்கு ஒத்ததே. மேலை நாட்டாரால் இதுபோழ்து புதிது புதிதாக நுணுகி நுணுகி ஆராய்ந்து உரைக்கப் பெறும் தத்துவ உண்மைகளை யெல்லாம் அவைகட்கு முன்னமே எழுதி வைக்கப்பட்ட சைவ சித்தாந்த சாத்திரங்களிற் கண்டறியலாம்," "சைவ சமயத்தில் சாதிகுலம் பிறப்பென்னும் தடஞ் சுழியில்லை யென்பது அறுபான்மும்மை நாயன்மார் சரித்திரங்களால் நன்கு விளங்கும்." என்று கூறுவன எல்லோர் கருத்தையும் பெரிதும் ஈர்க்கும். சுருதி யுக்தி அநுபவங்கட்கு இயைய நியாய நெறிநின்று மக்களைச் சீர்திருத்த விரும்பும் அறிஞர்கள் மேற்கண்ட தலைவருரைப் பகுதிகளை உய்த்துணரின் சைவ சமயத்தைக் குறைகூறார்; சைவ சமயம் உலகின்கண் காணப்படும் பிறசமயங்கள் எல்லாவற்றையும் தன்னுளடக்கிக் கொண்டு அவற்றைக் கடந்தும் நிற்கின்ற உலக சமயம் எனவே உணர்வர். ஆனால், 'சாதி குலம் பிறப்பென்னும் தடஞ்சுழி' சைவ சமயத்தில் இல்லையே யொழிய, சமயத்தை அனுட்டிப்பவர்களாகக் கருதப்படுவோர் பெரும்பாலோருடைய இல்லங்களிலே அஃது இல்லாமலில்லை யென்பது மறுக்கக் கூடாத உண்மையே. அவர்களும் அத்தடஞ்சுழி நின்றேறுவார்களாயின், சைவம் உலகம் போற்றும் சமயமாகும்.

பின்னர், பிள்ளையவர்கள், 'சைவ சமயத்தில் ஆண்மக்கட்கு எவ்வளவு உரிமைகளுண்டோ அவ்வளவு உரிமை



களும் பெண்மக்கட்கும் உண்டு' என்றும், பெண் மக்கள் 'சைவத்தை வளர்ப்பதற்கு வேண்டுமளவு துணைபுரிதல் வேண்டும்' என்றும் கூறுகின்றார். சைவ சமயம் இப்போதுள்ள நிலையினின்றும் ஓங்கி வளர்ந்து உலகெங்கும் பரவ வேண்டுமாயின், அவ்வாறு செய்யச் சைவத் தாய்மார்கள் தான் முன் வருதல் வேண்டும். சைவத்தை முன்னர்ப் போற்றி வளர்த்தவர்களும் அவர்களே. திலகவதியாரையும் மங்கையர்க்கரசியாரையும் தாய்மார்கள் நினைவு கூர்வார்களாக; தம் அருமை மக்கட்கும் அவர்தம் வரலாற்றை நினைவூட்டுவார்களாக. பெண் மக்கள் உள்ளத்திலே திலகவதியார் நினைவும், மங்கையர்க்கரசியார் நினைவும் தாண்டவம் புரியும் நாளே உலகத்திற் சைவம் தாண்டவம் புரியும் நாளாகும். இஃது எங்ஙனம் நிறைவேறும்? பெண் மக்கட்கெனத் 'திலகவதியார் பாடசாலை', 'மங்கையர்க்கரசியார் பாடசாலை' யென, அவ்வரசிகள் பெயராலேயே ஆங்காங்கு பாடசாலைகள் அமைக்கப் பெற்றாலொழிய அஃதெங்ஙனம் நிறைவேறும்? சைவச் செல்வர்கள் கருணைபுரிவார்களாக.

இனி, தலைவரவர்கள் சைவ சமயத்திற்குத் தொண்டு புரிய சைவ இளைஞர்களைக் கூவியழைக்கின்றார். அவர் சைவர்களின் நிலையை எடுத்துக் கூறுங்கால் "இக்காலத்தில் நமது சமயமக்களின் நிலை மிகப் பரிதபிக்கத் தக்கதாயிருக்கிறது. ஒருவர் நுமது சமயம் யாதென்றால் இந்து சமயம் என்று சொல்வார்களே யல்லாமல் சைவசமயம் என்று சொல்ல அறியார்கள். நமது சமயக் கடவுளர் பெயரோ, ஆசாரியர்கள் சாத்திரங்களின் பெயரோ சொல்ல அறியார்கள். என்னே பரிதாபம்!" என்று மொழிந்து வருந்துகிறார்கள். இவ்வருத்தமும் ஒழியச் சைவ சமயப் பாடசாலைகளே ஆங்காங்கு தோன்றுதல் வேண்டும். இல்லையாயின் இக்குறை இருந்தே

தீரும். இத்தகைய பள்ளிக்கூடங்கள் இல்லாத இக்காலத்தே தாய் தந்தையரேனும் தத்தம் மக்கட்கு சமயக் கல்வியைப் புகட்டுதலாகாதா எனின், புதல்வர்கள் சமயத்திலே சிறிது ஊக்கமாக இருக்கக் காண்பார்களாயின், அதனால் அவர்தம் இலௌகிக வாழ்விற்குக் குறைவுண்டாமென அஞ்சி அப் புதல்வர்களைத் தடைசெய்யும் தந்தையர் பலரே தற்போதுள்ளார்களென்பதறிவேம். ஆகலின் பாடசாலைகளே சாலச் சிறந்த கருவிகளாம்.

இனித் தலைவரவர்கள் தம்முடைய பேருரைக்கு முடிப்புரையாகச் சைவ அன்பர்கட்கும் சமாஜத்திற்கும் அவர்கள் செய்யவேண்டிய கடமைகளை நினைப்பூட்டுகிறார்கள். சைவ அன்பர்கள் எந்தெந்த வழிகளிலெல்லாம் சைவ சமயத்தை வளர்க்க இயலுமோ அவ்வவ் வழிகளிலெல்லாம் அதனை வளர்க்க வேண்டுமென்றும், சைவசமயத்தை உலகமெங்கும் பரவச் செய்வதற்காகச் சமாஜம், சைவ சாத்திரங்களையும் திருமுறைகளையும் அச்சிட்டு அடக்க விலைக்குத் தமிழ் நாடெங்கும் பரவச்செய்ததுபோலவே, ஆங்கிலத்திலும் நமது சமய உண்மைகளை வெளியிடவேண்டிய திருத்தொண்டைக் கொள்ளவேண்டுமென்றும் கூறுகிறார்கள். இத்திருப்பணியை முன்னின்று தொடங்குவதற்குத் திருவாளர்கள் ம. பாலசுப்பிரமணிய முதலியார்வர்கள், ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் பெயர்களையும் தலைவரே குறிப்பிடுகின்றார். சைவப் பெருமக்கள் சமாஜ உறுப்பினராக எத்துணை மிகுதியாகச் சேருகின்றார்களோ அத்துணையே தலைவரவர்களுடைய நினைவுஞ் செயலாய் நிலைபெறும். தலைவரவர்கள் எடுத்து மொழிந்தவைகளெல்லாவற்றையும் விரைவிலே இனிது முடித்து வைக்குமாறு எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேம்.

---

## திருவாளர் ம. சாமிநாத முதலியார் அவர்கள் வழங்கிய வரவேற்புரை

திரு. முதலியாரவர்களுடைய உரையில் நாம் மீண்டும் சிந்தித்து உளத்தே அமைத்தற்குரிய பொருள்கள் பல உள. "சைவ சித்தாந்தத்தின் தனிச் சிறப்பு, அது சமயங்கள் மாட்டும், நூல்கள் மாட்டும், அந்நூல்களுள் கூறப்படும் பொருள்கள் மாட்டும் கொண்டுள்ள பொது நிலையில் உள்ளது. எச்சமயத்தவரும் உண்மையையே காணும் கருத்துடையவர். எச்சமய நூலினும் அந்நூலாசிரியன் உண்மையென்று கண்ட பொருள்களே கூறப்பட்டுள்ளன. ஆகவே சமயங்களும், அச்சமய நூல்களும் அந்நூல்களுட் கூறப்படும் பொருள்களும் ஒன்றோடொன்று முரணுவன வல்ல. ஆனால் உலகில் சமயங்களும், சமய நூல்களும், நூற்பொருள்களும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் பலவாக உள்ளனவே யெனில், அவ்வேற்றுமை யுணர்வு, அவற்றை ஒருமைப்படுத்திக் காண முடியாமையினாலும், அவ்வவற்றின் தெளிவை எடுத்துக் கொள்ளாமையினாலுமே உண்டாகின்றது." என்று முதலியாரவர்கள் கூறும் உண்மையை உணர்ந்து நடப்போர் சமயப் பிணக்கை அறவே ஒழித்த சமரசவாதிகளாவர். இவ் சைவ சித்தாந்தத்தின் உண்மை நிலையும் அதுவேயாம். இவ்வுண்மை யுணராதாரே ஒருவரோடொருவர் பிணக்குண்டு இடர்ப்படுவர். ஒருவராலேயே செய்யப்பட்ட புராணங்கள் யாவும் தாம் புகழ்ந்துரைக்கும் மூர்த்தியையே கடவுளென்று கூறும் நிலையை உய்த்துணர்ந்து உண்மை காண்பார்க்கு மேலெடுத்துக் காட்டிய சமரச நிலை தெள்ளிதின் விளங்கும். எச்சமயத்தவர் எங்ஙனமிருப்பினும் சைவ சமயத்தவர் தொன்றுதொட்டே கொண்டுள்ள இச்சமரச நிலையைச் சைவர்கள் என்றும் கடைப்பிடித் தொழுகுதல் வேண்டும்.

இன்னும் முதலியாரவர்கள் இப்பொருள் பற்றியே விரித்துரைக்கின்றார்கள். அவை யாவும் போற்றத் தக்கன.

இனி, வரவேற்புரையாளர் கூறும் மற்றொரு சிறப்புப் பொருள் ஒழுக்கமாகும். அவர், "அறவொழுக்கம் இறைவன் திருவருளை எய்துதற்கு இன்றியமையாதது என்பதும் இச்சமயத்தில் கூறப்படும் தனி உண்மையாகும்" என்று கூறி, இவ்வுண்மையை மேற்கோள்கள் பல காட்டி விளக்கிச் செல்கின்றார். அறவாழ்க்கையின்றி அன்பு வாழ்க்கையின்று; அன்பு வாழ்க்கையின்றி அருள் வாழ்க்கையின்று; அருள் வாழ்க்கையே சமய வாழ்க்கை. ஆகலின், அறத்தை அடிப்படையாகக் கொள்ளாத சமய வாழ்க்கை உரிய பயனைத் தாராதென்பது ஒருதலையாம்.

இனி, சைவசித்தாந்த சமயம் தமிழ் மக்களுக்கே சிறப்புரிமையாக நிற்பதெனக் கூறிய முதலியார், அதன் பொருட்டுப் பிறர் அபிப்பிராயத்தை எடுத்துக்காட்டியபோது, டாக்டர் ஜி. யூ. போப் அவர்கள் தமது திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பின் முன்னுரையில் கூறியுள்ள ஆங்கில வாக்கியங்களையும் குறித்துள்ளார். அவற்றின் தமிழ், "இந்தியநாட்டிலுள்ள சமயங்களிலெல்லாம் மிக மிகத் திருந்தியதும், மிகுந்த செல்வாக்குடையதும், சந்தேக மென்பதின்றி இயல்பாகவே மிகுந்த மதிப்பிற்குரியதுமாகவுள்ள சமயம் சைவசித்தாந்த சமயமாகும். அது தென்னிந்தியாவிலுள்ள தமிழ் மக்களுக்கே சிறப்பாக உரியது." "தென்னிந்தியாவில் சரித்திர காலத்திற்கு முன்னிருந்திருக்கிற பழைய சமயமே சைவமாகும். அது முக்கியமாக ஆரியர் காலத்திற்கும் முற்பட்டது. அது தமிழர்களுடைய உள்ளத்தில் ஆட்சி புரிகிறது" என்பதாகும். அன்னிய நாட்டு அறிஞர் ஆய்ந்து கூறிய இக்கருத்துக்களைச் சைவர்கள் அறிந்து தங்கள் சமயத்தில் பற்றுடையவர்களாவார்களாக.

---

# இளைஞர் மகாநாட்டுத் தலைவர் உரை

இம்மகா நாட்டிற்குத் தலைமை வகித்த திருவாளர் பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் அவர்கள் சைவ சமயப் பற்று மிகுதியும் உடையவர். ஆதலின் அவர்தம் தலைமைஉரை சைவ இளைஞர்கள் பால் சமயப் பற்றை உண்டாக்குமென்பதில் ஐயமில்லை. அவர் "இளமையின் வாய்ப்பு" என்னுந் தலைப்பின் கீழ், இளமை யில்லையேல் இன்பமில்லை யென்றும், இளைஞரால் ஆகாத செயல் ஒன்றுமில்லை யென்றுங் குறிப்பிட்டு, ஓர் ஆங்கில ஆசிரியர், "என்னிடம் சில இளைஞர்களைக் கொடுங்கள்; யான் ஒரு புதிய உலகமும் சுவர்க்க லோகமும் படைப்பேன்" என்று கூறிய அரிய வாக்கியத்தையும் எடுத்துக் காட்டியுள்ளார். சைவ இளைஞர்கள், தலைவர் கருத்தை ஊன்றி நோக்குவார்களாயின், சைவ சமயத்திற்கு அவர்கள் ஆற்றவேண்டிய தொண்டு ஈதென ஒருவாறு உணர்வர்.

இளைஞர்கள், குறித்த சமயத்தொண்டைத் தளராது இயற்றுதற்பொருட்டே சிறந்த ஒழுக்கத்தைக் கைக்கொள்ளல் வேண்டும். இறைவனுடைய பெருங் கோயிலாகிய உடலைப் போற்றல்வேண்டும்என்று தலைவர் சுருக்கமாகக்கூறியுள்ளார். இந்தியர்களுக்குள்ளே உடல் நலம் பேணாதவர்களும் தாய் மொழியைப் போற்றி வளர்க்காதவர்களும் தமிழ் மக்களே யாவர். உடலை யோம்ப ஒழுக்கம் வேண்டப் படுவதுபோல் சைவ சமயத்தை யோம்பத் தமிழ் மொழியின் துணை இன்றியமையாதது. பண்டைக் காலத்திய நிலைமையையும் இக்காலத்திய நிலைமையையும் உய்த்துணர்வோர்க்கு இவ்வுண்மை இனிது புலனாம். வடநாட்டிலே தாய் மொழிப்பற்று மிக்கிருத்தலினாலேயே, சமயப் பற்றும் குறையாதிருக்கிறது. தமிழ் நாட்டிலோ, தாய்மொழிப் பற்று மிகுதியும் குறைக்

துள்ளது; ஆகவே சமயப்பற்றும் குறைந்தது. வடநாட்டிலே உலகம் போற்றும் வங்காளக் கவியாகிய ரவீந்திரநாத் தாகூர், தாம் இயற்றிய நூல்களெல்லாவற்றையும் தம் தாய் மொழியாகிய வங்காளத்திலேயே இயற்றியுள்ளார். பின்னர் அவற்றையே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். ஆங்கிலமுந் தமிழுங் கற்றுவல்ல தமிழர் இவ்வாறு செய்யக் காண்கிலேம். இனியேனும் தமிழிளைஞர்கள் பிற மொழிகளோடு சிறப்பாகத் தமிழ் மொழியைப் பயின்று, தமிழ் நாட்டிற்கு இது போது வேண்டப் படுகிற மொழித் தொண்டு, சமயத் தொண்டுகளைச் செய்தாலல்லாமல் நம் நாடும் நாட்டுச் சைவசமயமும் முன்னேற்றமடையாதென்பதொருதலை.

இனி, செட்டியாரவர்கள் சைவர்களிடத்துள்ள சமய உணர்ச்சியையும் முஸ்லிம்களிடத்தும் கிறிஸ்தவர்களிடத்துமுள்ள சமய உணர்ச்சியையும் ஒப்பு நோக்கி, நம் குறை கண்டு வருந்துகிறார். அவர்களெல்லோரும் நாடோறும் கோயிலுக்குப் போதலையும் நம்மவர் அங்ஙனம் போகாதிருத்தலையுங் கண்டு மனம் புழுங்குகின்றார். நாத்திகம் பரவுகின்றதென நாணியுரைக்கிறார். இதற்கு என்செய்வது? ஒருவர்க்கு நோய்வரின் அந்நோயின் காரணத்தையறியாது செய்யுஞ் சிகிச்சையும், அதுபற்றிய வெறும் பேச்சும் பயனற்றனவாகும். சைவப் பெற்றோர்க்குப் பிறந்த பிள்ளைகள் சிலர்பால் நாத்திகம் பரவுதற்குரிய காரணங்களைச் சுருங்கக் கூறின், அவை, சமயநெறியைப் போதிக்கும் பாடசாலைகளில் அவர்கள் பயிலாமை, தாய் தந்தையர் கவனக் குறைவு, தமிழ் நூல்களைக் கல்லாமை, இளமையிலேயே அறிவுடைய குருமார்களை யடுத்து அவர் தம் அநுபவஞ் செறிந்த அறிவுரைகளைக் கேளாமையென்னலாம். பிறமதத்



தினர்பால் இக்குற்றங்கள் மிகுதியாக இல்லையாகலின், அவர்கள் பெரும்பாலும் நல்லவர்களாகவே காணப்படுகின்றார்கள். சைவர்கள் இனியேனும் இக்குறைகளை நீக்கமுயல்வார்களாக. தமிழ் நாடெங்கும் "சித்தாந்தம்" பரவவும், சிறுவர்களும் சிறுமிகளும் அதனாலாய பயனைப் பெறவும் யாவரும் துணைபுரிவார்களாக.

இனி, கடவுளர் உருவங்களை வியாபாரத்திற்குரிய அடையாளங்களாகச் செய்திருப்பதைச் செட்டியார் கண்டிக்கிறார். மசூதியின் உருவங்களை ஜப்பான் பாய்களில் கண்ட முஸ்லிம் சகோதரர்கள் அதனைத் தடுத்தவரலாற்றையும் எடுத்துக் காட்டுகிறார். இச்சீர்திருத்தம் இளைஞர்க்கு ஆசிரியராகவுள்ள செட்டியாரையும் அவர் போன்றாரையும் பொறுத்ததாகும். தன்னலமற்ற இளைஞர்களே இத்தொண்டில் ஈடுபடல்வேண்டும். அவர்களே இயன்றவரை எங்குஞ் சென்று விரிவுரைகள் நிகழ்த்தி, சமயத்தைத் தன்னலத்திற்காகப் பயன்படுத்தும் சுயநலப் புலிகளின் அறியாமையை வெளிப்படுத்தித் திருத்தல் வேண்டும்.

இனி, பலதேவ வழிபாடு, புலால் உணவு, பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டல் முதலிய தீ நெறிகளைச் சைவர்கள் ஒழிக்க வேண்டும் என்று செட்டியார் கூறிய யாவும் போற்றத்தக்கன. இன்னும் அவர், இறுதியாக 'நமதுகடமை' என்னுந் தலைப்பின் கீழ்க் குறித்த நல்லுரைகளையும் இளைஞர்கள் ஏற்றுத் தங்கள் தங்களால் இயன்றவரை தொண்டாற்ற முன்வருவார்களாக. முதலில் சைவ இளைஞர்கள் எல்லோரும் 'சித்தாந்த'த்தைத் தங்கள் உரிமைப் பத்திரிகையெனக் கொண்டு அதனை வாங்கிப்படித்தும், தங்கள் சகோதரர்களிடைப் பரவச் செய்தும், தங்கள் எழுச்சியைக் காட்டவல்ல கட்டுரைகள் பல வரைந்தும் தொண்டாற்ற இன்றே விரைந்து வருவார்களாக. முருகநாதனருளால் இளைஞருலகம் சமய வாழ்க்கையில் திளைத்து வாழ்வதாக.

# இச் சமயத்திற்கு வேண்டிய சமயம்*

[திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள்]

மக்கள் தெய்வநிலை அடைதற்கு நன்றாக அமைக்கப் பட்டுள்ள மார்க்கம் 'சமயம்' எனப்படும். அத்தகைய சமயங்களாகக் கருதப்படுபவை பல. இச் சமயத்திற்கு-அதாவது இக்காலத்திற்கு - வேண்டப்படும் சமயத்தின் இயல்புகளை எடுத்துக்காட்டி, அவை எம்மட்டில் சைவ சமயத்தின்கண் பொருந்தியுள்ளன என்று புலப்படுத்துவதே இச் சொற்பொழிவின் தலையாய நோக்கம்.

இக் கருத்து நிறைவேறுதற்கு, தற்காலப் போக்கின் தன்மைகள் சிலவற்றை நோக்கல்வேண்டும். இயற்கையின் மர்மங்கள் பலவற்றை விரைவில் மனிதன் அறிந்து வருதலால், அதையவன் விருப்பப்படி ஓரளவு அடக்கியாளவும் பயன்படுத்திக்கொள்ளவும் வல்லவனாகிவிட்டான் என்னும் உண்மை முதலில் குறிக்கத்தக்கது. இவ் வன்மையால், உலகத்திலுள்ள பல்வேறு தேயங்களும் பண்டைக்காலத்திற் போற் பிரிந்து நில்லாமல் மிக நெருங்கிய தொடர்புடையனவாய்விட்டன. மக்கள் கருத்துக்கள் வெகுவிரைவில் யாண்டும் பரவுகின்றன. ஆகவே ஒரு நாட்டின் நன்மை தீமைகள் பிறநாடுகளையும் அடைகின்றன. அடையுங்கால், நன்மை சிறிதாகவும் தீமை பெரிதாகவும் பொதுவில் வளர்ந்துள்ளன. ஐரோப்பியப் பெரும் போர் 1914 முதல் நிகழ்ந்ததும், இன்றளவும் ஐரோப்பாவில் சமாதானம் நிலையாதிருப்பதும், அநேக லக்ஷம் மக்கள் வேலையில்லாது தவிப்பதும், இப்ப

*இது, காஞ்சிமாநகரில் 1937-ம் ஆண்டு ஜனவரியில் நடந்த சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 31-ம் ஆண்டு விழாவில் செய்யப்பட்ட சொற்பொழிவின் சுருக்கம்.



டிப்பட்ட இன்னும் பல அல்லல்களும், மேற்சொன்ன அறிவாற்றலை மனிதன் நல்ல வழியில் பயன்படுத்தாததைக் காட்டுமன்றோ! சுருக்கக் கூறின், மனிதனுக்கு உலகியலறிவு பெருத்ததுபோல் உயிரியலன்பு பெருகவில்லை என்னலாம்; மூளை வீங்கிற்று, இதயஞ் சுருங்கிற்று என்னலாம்.

இரண்டாவது, தற்கால மேனாட்டிலும் அதன் வழிப்பட்ட பிற நாட்டிலும் மரணத்தின்பின் மனிதர் நிலையைப் பற்றிய கவலை போதியவளவு இருப்பதாகப் புலப்படவில்லை. ஐம்புலக் களியாட்டத்தின் ஆரவாரத்தில், ஆன்ம இருப்பும் அதன் தேவையும் கவனிக்கப்படவில்லை. உடலை வளர்ப்பதெல்லாம் உயிர்வளர்த்தற்பொருட்டே என்னும் அடிப்படையான உண்மை போற்றப்படவில்லை.

"ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்" என்றபடி, அநேக நாடுகள் பல்வகைத் துன்பில் உழன்று கொண்டு தப்புமாறறியாது தவிக்கின்றன. பேராசைகாரணமாகப் பொறாமை, கோபம், பகை, போர் இவை பொங்கி எழுகின்றன; அரசாங்க முறைகள் தலைதடுமாறுகின்றன. பொருளாதார ஏற்பாடு பொய்யின்மேல் நிற்பதால், மிகவும் பிற்போக்கான நிலைமையை அடைந்துள்ளது. ஆழ்ந்த உண்மை காணும் ஆவலோ அமைதியோ மக்களில் பலர்பாற் காணவில்லை. சில நாடுகளில் நவீன தத்துவ ஆராய்ச்சி நூல் பல, தற்கால வாழ்வைத் தாங்கிப் பேசும் இயல்பினவாயும், அறிவியல் நூலுக்கு (சயன்சுக்கு) அடிமைப் பட்டனவாயும் காண்கின்றன. சமய போதகர் வாழ்வில் போதனையும் சாதனையும் பொருந்தியிருக்கவில்லை. சித்தத்தழகும் திருந்திய ஒழுக்கமும் சிறுத்து வருகின்றன. மேலே சுட்டியபடி, "ஊன் நோக்கும் இன்பம் வேண்டி உழல்"வதே உண்மையில் உயிர்த்திர

ளின் போக்காயுள்ளது. இன்பம் ஓர் அணுவாகவும் இடர் ஓர் மலையாகவும் இந்நாள் உலகில் காணப்படுகின்றன.

இவ்வாறுள்ள இன்னற் கேதுவாகிய நிலைமையினைப் பண்டைப் பெருஞ் சமயங்களை அறிந்தோர் கவலையோடு நோக்கி, ஏது செய்வதென்று ஏங்கிக் கொண்டிருக்கையில், தெய்வங் கொள்கையில்லாத வேறு இரு புதுச் சமயங்கள் சிற்சில நாடுகளில் முளைத்துக் கொக்கரிக்கின்றன. ஒன்று குறுகிய தேசீயம் என்பது; மற்றொன்று பொதுவுடைமைக் கட்சி என்பது. இரண்டிலும் ஓரளவு உண்மையும் நன்மையும் உள்ளன என்பது வெளிப்படை. ஆனால், அவை வேறுபல ஆழ்ந்த உண்மைகளையும், நிலைத்த நன்மைகளையும் உளங்கொள்ளாது செல்லும் போக்குடையனவாயுள்ளன. இவைகள், பண்டைச் சமயங்களின் இடத்தைத் தாம் கவரப் பார்க்கின்றன. வறுமைத் துன்பி லாழ்ந்துழலும் மக்கட்குத் தாம் சொல்லும் உபதேசங்களை உண்மைச் சாத்திரங்கள் என்கின்றன. இவைகள் தமக்குத் தாமே பிரமாணம் என்று வெளிவருகின்றன. இவற்றைப் போதிக்கும் தலைவர்கள் சமய மெய்ஞ்ஞானிகளைப்போல் போற்றப்படுகின்றனர். சமயச் சடங்குகள் போன்ற சடங்குகள் ஒரு சில இவர்கள் பிரசார முறையில் நுழைந்து, சாமானிய மக்கள் கருத்தைப் பிணிக்கின்றன. இவையும் சமயங்கள் செய்தது போலவே மக்கள் உள்ளத்திற் கிளர்ச்சிகளையுண்டுபண்ணித் தம்வழியே அவர்கள் இயங்கும்படி அவர்களைத் தூண்டுகின்றன. சமயம் கேட்பதுபோல் இவையும் மக்கள்பால் தன்னல மறுப்பும் பெருந் தியாகமும் கேட்கின்றன. பல சமயங்கள் போலவே இவையும் தனித்தனிப் பிரிவுகளை யுண்டுபண்ணுகின்றன; ஒரு பிரிவிலுள்ளோரைத் தன் பிரிவிற்கழைக்கும் சமயலங்கனப் பிரசாரத்தையும் செய்கின்றன. கிறிஸ்தவ நாடுகளி



லுள்ள சமய ஸ்தாபனங்களில் சேர்ந்துள்ள மகாஜனங்கள், மக்கட்குள்ள துன்பங்களைத் தம் சமயத்தால் போக்க முடியுமா என்று ஐயுறுகின்றார்கள். சமயவாதிகள் தங்கள் சமயத்தின் அடிப்படையான தத்துவங்களைவிட அரசியல் தத்துவங்களையே அதிகமாக மதிப்பதுபோல் அடிக்கடி தோன்றுகின்றது. சமுதாயச் சீர்திருத்தங்களும் சமயச்சார்பின்றியே நிறைவேறுதற்கான முயற்சிகள் செய்யப்படுகின்றன. கடவுளைப் பற்றிய நினைப்பு எழுதல் அரிதாயுள்ளது. அவர் இருப்பை ஒப்புக் கொள்வோரும், அவரை இயற்கையின் தலைவர் என்றும், தனித்தனி மனிதர் அந்தரங்க வாழ்வின் நாயகர் என்றும் கொள்ள இணங்குகின்றதாகத் தோன்றுகிறதேயன்றி, மக்கள் சமுதாய வாழ்விலும் அவர் ஆட்சி செல்லுகின்றது, அதற்கு இடமுண்டு என்று கொள்ளுவதாகத் தெரியவில்லை.

மேல்நாட்டு நிலை இவ்வாறுள்ளது. அதன் செல்வாக்குக்குட்பட்ட அளவில், பிற நாட்டிலும் இஃதே புலப்படுகின்றது. மேற் குறிப்பித்தபடி மக்கள் வாழ்வின் பல துறையிலும் குழப்பமும் பெருகி வரும் தற்கால நிலைமையில்-ஆகாயவிமானம், விஷவாயு, விஷக்கிருமி, பெரும்பீரங்கி முதலிய கொடிய சாதனங்கள் மனித வர்க்கமே மாய்ந்தொழியுமோ என்று நடுங்கி நிற்கும் இக்காலத்தில் - உண்மையான சமயக் குறிக்கோளும், உண்மையான சமய ஒழுகலாறுமே மக்களைக் காக்க வல்லனவாகும். அக் குறிக்கோளும் ஒழுகலாறும் தற்காலத்திலுள்ள மேல்நாட்டுக் கிறிஸ்தவ ஸ்தாபனங்களிலிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்த்தற்கில்லை. பல காரணங்களால், இந்தியாவிலிருந்தே அதனை எதிர்பார்க்கவேண்டும். மேல்நாட்டு வாடையிலிருந்து இந்தியா தப்பிவிடவில்லை. இந்தியா இந்நாளில் தன்னிலையிலிருந்து

நெறி மாறப் படிந்து கிடக்கின்றது. ஆயினும் அம் மேல்நாட்டின் தொடர்பினால், அந்நாகரிக மேம்பட்டு புத் துயிர் பெற்றெழும் ஒரு நவும் காணப்படுகின்றது. தனது உயிர் வடிவான உண்மை நிலையைக் கைவிடாது எழுந்து நின்று, பிற நாட்டிலிருந்து வரும் நலங்களை மட்டும் வரவேற் றுத் தனதாக்கிக் கொள்ளவும், தன்னிடத்தும் பிறதேயங்க ளிடத்துமிருந்து வரும் தீமைகளை அகற்றவும் ஆற்றலைப் பெருக்கி வருகின்றது. மேல்நாடுங் கீழ்நாடும் நந்தேயத்தில் இவ்வாறு எதிர்ப்பட்டு இயங்குதலின் பயனாக, ஒன்றின் குறைவை மற்றது நிறைவுசெய்து, இரண்டும் ஒருங்கு உயர் நிலை யடைய வேண்டும் என்பது திருவருட் சம்மதம் என்று தோன்றுகின்றது. பிரபஞ்சஞான வளர்ச்சி, ஒன்று சேர்ந்துழைக்குந் திறமை, தாய்மொழிப் பற்று, பொதுநல நாட்டம் முதலிய நலங்களை நாம் மேல் நாட்டாரிடமிருந்து கொண்டு, நம் நாட்டின் ஆன்மலாப நாட்டத்தையும் அது பெறற்குரிய சாதனங்களையும் அநுபவ பூர்வமாய் அவர்கட் குத் தந்து, யாவரும் இனிது வாழ்தல் வேண்டும். இவ்வாறு உலகம் நன்மை யடைதற்கு இதுபோழ்து வேண்டும் சமயத் தின் இயல்புகள் எவை என்பதை இனி ஆராய்வாம்.

(தொடரும்)

# மெய்கண்டார்

[இது திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

[கச்சி. முனிசாமி உடையார் அவர்கள், B. A.]

இச் சிறந்த உலகத்தில் உயர்ந்த மக்கட் பிறப்பெய் திய நமக்கு விருப்பு வெறுப்பு என்னுமிரண்டு முண்டு. நாம் விரும்புவதெல்லாம் நன்மையைப் பெறவேண்டு மென் பதற்கே. அப்படி விரும்பப்படும் பொருள்கள் பல உள. முயற்சி செய்தால் அவற்றைப் பெறலாம். முயற்சி செய்வ தற்கு மனம், வாய், உடல் ஆகிய மூன்று கருவிகள் நம்மிடத் துள்ளன. அவற்றில் மனமே சிறந்தது. மனம் ஒரு கருவி. நாம் அதை உடையோம். கருவி உடையானுடைய ஏவற்படி நடக்க வேண்டியதாயிருக்க, நம்மனம் நம்மேவற்படி கேட்கிற தில்லை. அதற்கு மாறாக மனத்தின் வழியே நாம் செல் கின்றோம். அதனால் நாம் உடையார் என்ற நிலையும், மனம் நமது உடைமைப் பொருள் என்ற நிலையும் போய்விடுகிறது. உடைமைப் பொருளாகிய மனத்தை நம் ஏவற்படி நடத்தும் நிலை நமக்கு வாவில்லை. அந்நிலையைச் சம்பந்தர், நாவுக்கரசர் முதலிய பெரியோர்கள் அடைந்திருந்தனர்.

" தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத் தங்கன்பு வைத்ததிலை யாகும்
நீயிடர்ப் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னோடும் போதுகண் டாயே."

என்று திருமூலர், தன் ஏவற்படி நடவாததினால் இடர்ப்பட்ட மனதைப் பார்த் திரக்கங் கொண்டு அது நன்மையடைதற் குத் தான் போமிடத்து வரும்படி அழைக்கிறார். தன் மனதை அவர் எங்கு அழைக்கின்றார் என்று வினவின்,

அ

" அறிவார் அமரர் தலைவனை நாடி
செறிவார் பெறுவர் சிலர்தத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே."

என்ற பாட்டில் பேரின்பத்தைக் காட்டுவிக்க வல்ல பெரியாரிடத்தில்சேரத் தன் மனதை அழைக்கின்றார் என்பது விளங்குகின்றது. எனவே, நாம் நன்மையைப் பெறவேண்டின் நம் மனதைப் பெரியாரிடத்தில் செலுத்தல் வேண்டும். பெரியார் மிகுந்த அறிவுடையார்.

" அறிவுடையார் எல்லாமுடையார் அறிவிலார்
என்னுடையரேனு மிலர்."

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்ற திருக்குறட் பாக்களால் பெரியவர்கள் மிகுந்த அறிவுடையவர்கள் என்பதும், பொருளற்றவற்றைப் பொருளாக மதியாது மெய்ப்பொருளைக் காண்பதே சிறந்த அறிவென்பதும் விளங்குகின்றன. மெய்ப்பொருளைக் கண்டவர்கள் யாரோ அவர்கள் தான் பெரியவர்கள். இதனால் மெய்கண்டாருடைய பெருமை விளங்குகின்றது.

இறைவன் அருளிய வேதத்தில் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் உதவும்படி சிறிய பொருள்களும் பெரிய பொருள்களும் பேசப்பட்டிருக்கின்றன. சிறிய பொருள்கள் தள்ளத்தக்கன; பெரிய பொருள்கள் கொள்ளத் தக்கன. இவ்வேதத்தில் அருமையாகப் பேசப்பட்டிருக்கின்ற பொருள் எதுவோ அதுவே குருவாகத் தோன்றி நந்திக்கு அருள, அந்நந்தி வழியில் வந்தது சிவஞான போதமாகும். அதை இயற்றியவர் தான் மெய்கண்டார். அவர் அந்நூலை நம் தாய்மொழியாகிய தமிழில் வழங்கினார்; வழங்கினதோடு



இல்லாமல் அதை மற்றவர்கள் அறியும்படியும் உணர்த்தி, அதன் பயனாக அஞ்ஞானத்தைப் போக்கும்படிச் செய்தவர்.

சிவஞானபோதத்தை மெய்கண்டார் சூத்திர ரூபமாக அருளினார். அருகிய எழுத்துக்களினால் பெருகிய பொருளை அறிவிப்பன சூத்திரங்கள். தமிழில் சூத்திர ரூபமாக உள்ள நூல்கள் வெகு சில. அவைகளும் இலக்கண நூல்கள். அறிவு நூல்களில் சூத்திர ரூபமாக உள்ளது சிவஞான போதமொன்றே.

" சிறிய அடியில் பெரிய மால்வரைப் பொருள் தெரிந்தாங்கு
அறிவு நூல்களின் முடிவெலாம் அகப்படுத் தவற்றின்
நெறியெலாம் விளக்கிய சிவஞான போதத்தைக்
குறிசெய் தீந்தமிழால் உணரா குரவனைப் பணிவாம்."

என்ற செய்யுளால் இவ்வுண்மை பெறப்படுகின்றது.

மெய்கண்டார் காலத்திலேயே இருந்த அருணந்தி சிவாசாரியார் தாம் இயற்றிய இருபா இருபஃதில்,

" மண்ணிடையின் மாக்கள் மல மகற்றும்
வெண்ணெய் நல்லூர் மெய்கண்டார் "

" கண்ணகல் ஞாலத்து கதிரவன் தானென
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ "

" காரா கிருகக் கலியாள் வேலைகின்
போரா இன்பத் திருத்திய பெரும "

என்றமையால் 'மெய்கண்ட தேவர் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுடைய மலத்தை அகற்றுகின்றவர், தன்னை எதிர்ப்பட்டாருடைய அஞ்ஞானத்தைக் கதிரவன் தோன்றி இருளை ஒழிப்பதுபோல் போக்குகின்றவர், மேலும் எதிர்ப்படாதவர்களுக்கும் அழியாத இன்பத்தைத் தருகின்றவர்' என்ற உண்

மைகள் விளங்குகின்றன. மனவாசகங்கடந்தார் தாம் இயற்றிய உண்மை விளக்கத்தில்,

> “பொய்காட்டிப் பொய் அகற்றிப் போதாநந்தப் பொருளாம்
> மெய்காட்டும் மெய்கண்டாய்”

என்றபடியால் மெய்கண்டதேவர் தம்மை அடைந்தோர்க்கு தேகாதி பிரபஞ்சம் யாவும் பொய்யென்பதைக் காட்டி, அதனால் அப்பொய் அறிவைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைத் தருகின்றவர் என்பதையும்,

> “வித்தகம் மெய்கண்ட தேவர்”

என்றபடியால் அவர் நிறைந்த ஞானத்தை யுடையவர் என்பதையும் விளக்கிக் காட்டினார். மேற்கூறிய வாற்றால் மெய்கண்டாருடைய பெருமை விளங்கிற்று.

மெய்கண்ட தேவர் இருந்த காலத்தைப் பற்றிச் சற்றாராய்ந்து அவர் வரலாற்றிற்செல்லல் இக்கால மரபின்படி அவசியமாகும். மெய்கண்டாருடைய மாணவர் அருணந்தி சிவாசாரியார், அவருடைய மாணவர் மறைஞான சம்பந்தர், அவருடைய மாணவர் உமாபதி சிவாசாரியார். உமாபதி சிவாசாரியார் சாலிவாகன சகாப்தம் 1235-ல் இருந்தவர் என்பது அவர் இயற்றிய சங்கற்ப நிராகரணம் என்ற நூலால் தெரிகிறது. இப்போது நடப்பது சாலிவாகன சகாப்தம் 1859. ஆகவே உமாபதி சிவம் இற்றைக்கு 654 ஆண்டுகட்கு முன் இருந்தவராவர். இவருக்குக் குரு பரம்பரையில் மூன்றாவதாக இருந்த மெய்கண்டாருடைய காலம், இற்றைக்கு 685 அல்லது 690 ஆண்டுகட்கு முன்னராம் என முடிவு கட்டலாம்.

நடுநாட்டிலே திருப்பெண்ணாகடம் என்ற ஊரில் அச்சுத களப்பாளர் என்ற வேளாளர் பிள்ளைப் பேறின்மையால் பல தவங்கள் செய்தும் பலனற்றனவாகிவிடத் தம் குலகுருவாகிய சகலாகம பண்டிதரிடம் சென்று குறையிரந்து நிற்க,



அவர் தமிழ் மறையாகிய தேவாரத்தில் கயிறு சாத்திப் பார்க்க,

> “பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
> வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
> வேயனதோள் உமைபங்கர் வெண்காட்டு முக்குளநீர்
> தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.”

என்ற திருஞானசம்பந்தர் தேவாரம் கிடைத்தது. இப்பாட்டின் கருத்தைக் குருவானவர் விளக்கிக் காட்ட அவராணையைச் சிரமேற்கொண்டு அச்சுத களப்பாளர் தம்மனைவியுடன் திருவெண்காடடைந்து முக்குள நீராடிச் சிவபெருமானை வழிபடுவாராயினர். அவ்வழிபாட்டின் பயனாய் அவதரித்த பிள்ளைக்கு அவர்கள், அத்தலத்து இறைவன் பெயராகிய சுவேதவனப் பெருமாள் என்ற பெயரையே பிள்ளைத் திருநாமமாகச் சூட்டினர். பிள்ளை, திருவெண்ணெய் நல்லூரில் அம்மான் வீட்டில் வளர்ந்துவருங் காலத்தில் வயது மூன்றாயிற்று. அக்காலத்தில் ஒருநாள் பரஞ்சோதி முனிவர் ஆகாயவழியாய்ச் செல்லும்போது, செலவு தடைப்பட்டமை கண்டு கீழிறங்கிச் சுவேதவனப் பெருமாளின் பக்குவத்தையறிந்து மெய்ஞ்ஞானத்தை உபதேசித்துக் குழந்தைக்கு மெய்கண்டார் என்னுந் திருநாமத்தையும் சூட்டிச்சென்றனர். மெய்கண்டார் தாம் உபதேச மூலமடைந்த பொருளைப் பொல்லாப் பிள்ளையாரிடம் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து தம்முடைய சீடர்களுக்கு முபதேசித்துச் சிவஞானபோதம் என்றொரு நூலையும் செய்தருளினார்.

சிவஞான போதம் ஓர் அருஞ்செந் தமிழ்நூல். “உயர் சிவஞான போத” மென்றும், ‘யாரும் வெல்லாத சிவஞான போத’மென்றும் அதைத் தக்கோர் மதித்துள்ளார். சிவஞான போதம் என்ற சொற்றொடர் சிவம், ஞானம்

போதம் என்னும் முச்சொற்களால் ஆக்கப்பட்டு இறைவன் அருளால் வரும் அனுபூதி ஞானம் அல்லது பரஞானத்தின் வேறாய நூலாராய்ச்சியால் உண்டாம் ஆராய்ச்சி ஞானம் அல்லது அபரஞானத்தை உணர்த்தும் நூல் எனும் பொருளைத் தருகின்றது. திருவாதவூரரை யாட்கொள்ள இறைவன் மானுடச் சட்டை தாங்கி ஒரு சிவயோகி வேடம் பூண்டு திருப்பெருந்துறையில் வீற்றிருந்தபோது அவர் கையிலிருந்த சுவடி யாதென்று வாதவூரர் கேட்கப் "பொய்ம்மையிலாச் சிவஞானபோதம்" என்று இறைவன் அருள, "சிவம் எது? ஞானம் எது? போதம் எது?" என்ற மாணிக்கவாசகர் கேள்விக்கு "நின்ற சிவம் ஒன்று, அதனைத் தேர்தல் ஞானம், ஆராய்ந்து தெளிதல் போதம்" என்று சிவபெருமான் "சிவஞான போதம்" என்ற சொற்றொடருக்கு உரை கூறினார்.

சிவஞானபோதத்தில் விளக்கப்படுவது வேதத்தில் சொல்லப்படும் ஆறுமுடிவுகளில் ஒன்றாகிய சித்தாந்தமாம்.

"வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போ தாந்தமும்
ஓதத்தகு மெட்டி யோகாந்த அந்தமும்
ஆதிக்க லாந்தமும் ஆறந்த மாமே.

என்ற திருமந்திரப் பாட்டு ஆறுவித அந்தங்களை உணர்த்துகின்றது. இதில் சித்தாந்தத்திற்கு அடையாக "மிக்க" என்ற பிரயோகம் நோக்கற்பாலது.

"சித்தம் பரனோ டுயிருற்று நீள்மனஞ்
சத்தமுதல் ஐந்தும் தத்துவத்தால் நீங்கிச்
சுத்த மசுத்தந் தொடராவகை நினைந்
தத்தன் பரன்பால் அடைதல் சித்தாந்தமே"

என்ற செய்யுளால் சித்தாந்த மெதுவென்பது விளங்குகின்



றது. சித்தாந்தமென்ற சொல்லுக்கு முடிந்த முடிவு என்பது பொருள். வேதம், உபநிஷத் இவைகளில் கூறப்படும் முடிவான பொருள் சித்தாந்தமாம். இதைப் பின்பற்றி ஒழுகுதலின் பயனை,

"சித்தாந்தத் தேசிவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தம் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டுஞ் சிவனையே"

என்ற திருமந்திரச் செய்யுள் ஓதுகின்றது. மேற்கூறிய வாற்றால் நவமான வேதத்தின் முடிவு ஞான சித்தாந்தமாகுமென்பதும், உயிர்கள் பாசத்தினின்றும் நீங்கிப் பதியை அடைவதற்கு அதுவே ஒப்பற்ற நெறியாகுமென்பதும் பெற்றாம்.

ஆகமங்களும் புராணங்களும் சித்தாந்தத்தையே வற்புறுத்துகின்றன. உபநிஷத்தின் முடிவு சித்தாந்தம். அது வைதிகம், அவைதிகமன்று என்று மகுடாகமமும், சித்தாந்தம் வேதத்தின் சாரம் என்று சுப்ரபேதாகமமும், சுருதி சாரம் சித்தாந்தம் என்று வாயுசம்ஹிதையும், ஆகமங்களில் முடிவாகச் சொல்லப்பட்ட பதி, பசு, பாசம் என்ற இரகசியமான பொருளாகிய சித்தாந்தத்தைத் தட்சிணாமூர்த்தி சனகாதி முனிவர்களுக்குச் சொன்னார் என்று வடமொழி ஸ்காந்தமும் கூறுகின்றன. உமாபதிசிவம் சித்தாந்தத்தை "வேதத்தலைதரு பொருள்" என்றார். குமரகுருபர சுவாமிகளும் சித்தாந்தத்தையே போற்றினர்.

வேதாகமங்களிலும் புராணங்களிலும் வடமொழிப் புலவர்களாலும் தென்மொழிப் புலவர்களாலும் விதந்தோதப்பட்ட சைவ சித்தாந்தத்தை விளக்கவந்த சிவஞான போதம் பொது, உண்மை என்றிரண்டு அதிகாரங்களால்

அமைக்கப்பட்டது. பொதுவதிகாரம் பதிபசுபாசங்களின் பொது இலக்கணத்தையும் உண்மையதிகாரம் அவற்றின் சிறப்பிலக்கணத்தையும் சாற்றுகின்றன. பொது இலக்கணம் தடத்த இலட்சணம் என்றும் சிறப்பிலக்கணம் சொரூப இலட்சணம் என்றும் சொல்லப்படும். ஒரு பொருள் மற்றொன்றோடு கலந்தபோதுள்ள இலட்சணம் தடத்தமாம். வேறொன்றோடு கூடாதபோதுள்ள இலட்சணம் சொரூபமாம். பொது அதிகாரத்தில் முப்பொருள் உண்மை சொல்லப்படுகிறது. ஒரு பொருளைப் பிரமாணத்தாலும் இலட்சணத்தாலும் தெரிந்துகொள்ளலாம். பிரமாணம் பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என மூவகைத்து. பிரத்தியட்சம் புறப் புறச் சமயத்தாராகிய உலோகாயதருக்கே உரியதாதலால் அது சிறந்த பிரமாணமன்று. ஆகமப் பிரமாணம் மற்ற சமயத்தாருக்குத் தவிர சைவத்தில் மந்த அறிவுடையோர்களுக்கும் பொருந்தாது. எல்லாராலும் கொள்ளக்கூடியது அனுமானப் பிரமாணமாகும். அனுமானத்தால் கண்டதைக் கொண்டு காணாதது நிச்சயிக்கப்படும். பொதுவதிகாரம் பிரமாண இயல், இலக்கண இயல் என்றிரண்டியல்களை உடைத்தாய்ப் பிரமாண இயல் மூன்று சூத்திரங்களால் கடவுள், உலகம், உயிராகிய முப்பொருள்களின் உண்மையை விளக்கி, இலக்கண இயல் மூன்று சூத்திரங்களால் உயிரின் இலக்கணம், உலகத்தின் இலக்கணம், கடவுளின் இலக்கணம் ஆகியவற்றைக் கூறுகிறது. உண்மை அதிகாரம் சாதனம், பயன் எனுமிரண்டியல்களாலாய், முதலியற்கண் மூன்று சூத்திரங்களால் சாதனம் செய்யு மதிகாரி, சாதனம் செய்யப்படும் பொருள், சாதனம் செய்யு முறை இவற்றை விளக்கி, இரண்டாவதியல் மூன்று சூத்திரங்களால் பாசவிடுதி, ஈசனையடைதல், சிவன் முத்தர் இலக்கணம் ஆகியவற்றைப் பேசுகிறது.



இந்நூல் அமைப்புக்கும் நூற்கலப்புக்கும் ஓர் இயைபுண்டு.

"கல்லால் நிழல்மலை—வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்—நல்லார் புனைவரே"

என்பது நூற்காப்பு. இக்காப்பு பன்னிரண்டு பதங்களாலாய நான்கடிகளையுடைய ஒரு செய்யுள். நூல் பன்னிரண்டு சூத்திரங்களாலாய நான்கியல்களையுடைத் தென்பதைக் காப்புச் செய்யுள் உணர்த்துகின்றது. முதலடியின் கடைச் சொல்லாகிய "மலைவு" என்பதும், இரண்டாவதடியின் முதற் சொல்லாகிய "இல்லார்" என்பதும் "மலைவில்லார்" என்று புணர்ச்சியால் சம்பந்தப்படுவது, நூலின் முதலியலின் கடையும் இரண்டாவதியலின் முதலும் சம்பந்தப்பட் டுள்ளதைக் காட்டுகின்றது. முதலியலின் கடைச் சூத்திரமும் இரண்டாவதியலின் முதற் சூத்திரமும் பசுவைப் பற்றியே பேசுகின்றன.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் எனும் நான்கு சாதனங்களுள் கேட்டலும் சிந்தித்தலும் பொது அதிகாரத்தில் ஆறு சூத்திரங்களாலும், தெளிதலும் நிட்டை கூடலும் உண்மையதிகாரத்தில் ஆறு சூத்திரங்களாலும் விளக்கப்படுகின்றன. எனவே, பொது அதிகாரம் விஷயங்களை ஆராய்கின்றவர்களுக்குரிய தென்பதும், இரண்டதிகாரங்களும் சாதன முடையார்க் குரியதென்பதும் பெறரும்.

இந்நூல் தமிழில் வழங்கப்பட்டதாதலால் தமிழ் நாடு இது வழங்கப்படு மெல்லையாகும். ஆனால் இஃது இக்காலத்துப் பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் பல தேசங்களிலும் பரவப் பெற்றிருத்தலால், இந்நூற்கு வழங்கு மெல்லை கோலல் அரிது.

வேதாகமங்கள் பொருள்களை ஓரிடத்திற் சொல்வது போல் மற்றோரிடத்திற் சொல்வதில்லை. அவைகளை ஆய்ந்து ஒற்றுமை செய்து காட்டவே சிவஞானபோதம் தோன்றிற்று. பொருள்களெல்லாம் மூன்று பிரிவுகளில் அடங்கும். அவை உலகம், உயிர், கடவுள் என்பனவாம். ஆனால் பல நூல்கள் பல திறமாக அவற்றைக் கூறுகின்றன. சுவாயம்புயம் என்னு மாகமம் சிவம், பதி, பசு, கர்மம், ஆணவம், சுத்த மாயை, அசுத்த மாயை எனப் பொருள்களை ஏழாகவும், பௌட்கரம் சிவத்தை ஒழித்து ஆறாகவும், பராக்யேயம் பதி, பாசம், ஆணவம், கர்மம், மாயை என ஐந்தாகவும், சர்வஞ் ஞானோத்தரம் சிவம், பதி, பாசம், பசு என நான்காகவும், இரௌரவம், மிருகேந்திரம் ஆகிய ஆகமங்கள் பதி, பசு, பாசம் என மூன்றாகவும் கூறுகின்றன. இவ்வாகமங்கள் அனைத்தும் ஒரே கருத்துடையனவா யிருப்பினும் பொருள்களைப் பலதிறப்படுத்திக் கூறினமையின் அவற்றை ஒற்றுமைப்படுத்திக் காட்ட சிவஞான போதம் தோன்றிற்று.

நிலையில்லாத பொருள்களின் சம்பந்தமான பிறவிக்கு அஞ்சி நிலைத்த பொருள்களின் சம்பந்தமான இன்பத்தை நுகர விரும்புவோரே இந்நூல் கேட்க அதிகாரி யாவர். சரியை, கிரியை, யோக நூல்களைக் கற்ற பிறகு இந்நூலைக் கற்றால் நூற்பொருள் நன்று விளங்கும். அன்றேல் விபரீதமாகுமென்பது பெரியார் துணிபு. இதைக் கற்றவினால் அறியாமை நீங்க ஆராய்ச்சி ஞானம் உண்டாகும்.

இனிச் சிவஞான போதம் நிலை நாட்டுவது சுத்தாத்துவிதத்தை.

"பொய் கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய் கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ."



என்னுந் தாயுமானார் பாடல் இங்குக் குறிக்கத் தக்கது. சுத்தாத்துவிதம் என்று கூறற்குக் காரணம் சிவாத்வைதம், விசிட்டாத்வைதம், கேவலாத்வைதம் என்பவற்றினின்றும் வேறுபடுத்திக் காட்டற்காம். அத்வைதம் எனும் வடமொழிச் சொல் ந+துவைதம் எனப் பிரிக்கப்படும். 'ந' என்ற சப்தத்திற்கு "சப்தகல்பத்ருமம்" எனும் வடமொழி நூல் ஆறுவித பொருள்களைக் கூறுகிறது. ஈண்டு வேண்டற்பாலன மூன்று பொருள்கள். அவை அன்மை, இன்மை மறுதலை யாகும். பிராமண குலத்திற் பிறந்தும் பிறப்பொழுக்கத்தினின்றும் தவறினானை அப்பிராமணன் என்று கூறுமிடத்து ந என்னும் சொல் அன்மைப் பொருளில் வழங்கப்படுகிறது. அப்பிரகாசம், அமலம் என்றவிடத்து அது இன்மைப் பொருளில் வழங்கப்படுகிறது. அநீதி, அதர்மம் என்றவிடத்து அது மறுதலைப் பொருளில் வழங்கப்படுகிறது. ஆதி சங்கரர் அதை இன்மைப் பொருளில் கொண்டார். மத்வர்கள் மறுதலைப் பொருளில் கொள்கின்றனர். மெய்கண்டார் அன்மைப் பொருளில் வழங்குகின்றார். கடவுளுக்கும் உயிருக்குமுள்ள அத்வைத சம்பந்தத்தை மெய்கண்டார் விளக்கு முறையே சிறந்ததொன்றாகும்.

இரண்டு பொருள்களின் சம்பந்தம் ஐக்கியம், தாதாத்மியம், சமவாயம், சையோகம் எனப் பலவகைப்படும். ஆற்று நீர் கடல் நீரோடு கலத்தல் ஐக்கியமாம். கடவுளும் உயிரும் சம்பந்தப்படுவது இதைப்போல் அன்று. "என்றுந் தெய்வம் தெய்வமே" என்றபடியால் உயிர் கடவுளோடு கூடிக் கடவுளாகாது. ஒரு மலரின் நிறம் அம்மலர் வடிவமாயிருத்தல் தாதான்மியமாம். இது குணகுணி சம்பந்தமாகும். அதாவது குணியின்ரூபமாய்க் குணம் இருத்தல். உயிர் கடவுளின்

குணமல்லவாதலாலும், உயிர் ஒரு குணி, கடவுள் ஒரு குணியாதலாலும், குணியும் குணியும் கூடுதல் தாதான்மியம் அல்லவாதலாலும், கடவுளும் உயிரும் சம்பந்தப்படுவது தாதான்மியமன்று. இதையே தார்க்கிகர்கள் சமவாய சம்பந்தமென்பர். சையோகமாவது விரலும் விரலும் கூடுதலாம். ஈண்டு விரல் முழுமையுங் கூடுதலில்லை. கடவுளும் உயிரும் சம்பந்தப்படுதல் இதுவெனின், பூரண வியாபகமுடைய கடவுள் தன்மைக்குக் குறையேற்படுமாதலின் அது சையோகமன்று. உயிர் ஏகதேச வியாபகமுடையதாதலின் அகண்டத்தில் கடவுளோடு முழுமையுங் கூடாது. இனி மெய்கண்டார் கூறும் அத்துவிதம் யாதென்பதாராய்வாம். முற்கூறிய தாதான்மிய சம்பந்தம் இருவகைப்படும். சூரியனும் கிரணமும்போல் ஒரே பொருள் குணியாகவும் குணமாகவுமிருந்து இரண்டாய் நிற்றற்கு ஏதுவாயிருப்பதொன்று. ஈண்டு பிற பொருள்களைப் பார்க்க சூரிய கிரணம் இன்றியமையாதெனினும் சூரியனைப் பார்க்க அவனே துணையாயிருப்பதை அறிகிறோம். வேறுபட்ட இரண்டு பொருள்கள் ஒன்றுகூடி இரண்டல்லாத் தன்மையை எய்தல் மற்றொருவித தாதான்மியமாம். தாள், தலை என்ற இரண்டு வேறுபட்ட சொற்கள் புணரும்போது தாடலை என்றாகிறது. இங்கு டகரம் ஒரு எழுத்தன்று. இரண்டு எழுத்துகள் ஒன்று சேர்ந்து ஒன்றாகாமலும் இரண்டுமல்லாமலும் நிற்கிறது. இதைப் போல் கடவுள், உயிர் ஆகிய இரண்டு வேறுபட்ட பொருள்கள் ஒன்று கூடும்போது ஒன்றாகாததும் இரண்டல்லாமையுமாகிய நிலையை எய்துகின்றன. இதுவே மெய்கண்டார் கூறும் அத்துவிதமாம்.

மேலும் பாணினிவியாகரணத்திற்கு உரை செய்த பதஞ்சலியார் அகரத்தை அன்மைப் பொருளிலேயே எடுத்



தாளுகிறார். துவைதம், அத்வைதம் என்பன எண்ணுப் பெயர்ச் சொற்கள். வடமொழியில் அ என்பது ஒன்று இரண்டு என்னும் எண்களின்மேல் தவிர மற்ற எண்ணுப் பெயர்கள்மேல் வராது. (அ + ஏகம்—அநேகம்; அ + துவைதம்—அத்வைதம்) ஒன்று என்பதை உணர்த்த ஏகம் என்ற சொல் இருக்க, இரண்டன்மையை உணர்த்தும் அத்வைதம் என்ற சொல்லை உபயோகிப்பதே கடவுளும் உயிரும் ஒன்றுமல்ல இரண்டுமல்ல என்ற சித்தாந்த உண்மைக்குச் சான்றாகும். ஆனால் ஒன்றே என்று மறைகள் கூறுவது முற்றறிவுடைய பதியை. சிற்றறிவுடைய உயிர்கள் பாசத்தோடு கூடினமையின் கடவுள் ஆகா. உலகமோ அறிவற்றது. ஆயின் கடவுள் இல்லையேல் ஒன்றுமில்லை என்பது அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இன்றாம் என்பது போலாம். அகரம் மற்ற உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் இயக்குவது போல் கடவுள் அடிமைகளாகிய உயிர்களையும் உடைமையாகிய உலகத்தையும் இயக்குகிறார். கடவுள் இன்றேல் உயிரும் உலகமும் இயங்கா.

முதற்சூத்திரத்தில், காணப்படும் உலகைக் கொண்டு காணப்படாத கடவுளை நிச்சயித்து, இவ்வுலகம் அவன் அவள் அது எனும் மூவகைப் பாகுபாடுடையதாய், தோன்றல் இருத்தல் அழிதல் ஆகிய முத்தொழிலுடையதாய், தோன்றுங்கால் தான் ஒடுங்குதற்கு ஏதுவாயிருந்த கடவுளினின்றும் தோன்றுகிறது என்று கூறி, இரண்டாஞ் சூத்திர முதல் அதிகரணத்தில் உலகத்தைத் தோற்றுவிக்குங்கால் கடவுள் உயிர்களோடு கூடி ஒன்றாயும், இரண்டாயும், ஒன்றிரண்டாயும் இருக்குந் தன்மையை ஆசிரியர் விளக்குகின்றார். உயிரைப்பற்றியுள்ள மும்மலங்களில் ஆணவமலம் பரிபாகமாதற்பொருட்டு சிருட்டியும், கர்மமலம் பரிபாகமாதற்

பொருட்டு ஒடுக்கமும், மாயாமலம் பரிபாகமாதற்பொருட்டு இரட்சணையும் ஆகிய முத்தொழிலைக் கடவுள் புரிகின்றார். இச் செயல்களைப் புரியும்போது அவர் பதியாகின்றார். இது கடவுளின் தடத்த லட்சணம் அல்லது பொது இயல்பெனப் படும். இத்தொழில்களைச் செய்யும்போது கடவுள் உயிருடன் கூடி நிற்கின்றார். அப்படி கூடி நிற்கின்ற நிலை மூன்று விதப்படும். அவை அபேதம், பேதம், பேதாபேதம் என்பனவாம். உயிரும் உடம்பும் கூடியிருக்கும் நிலை அவ்வாறேயாகும். ஒருவன் "என்னை அடித்தான்" என்றபோது உடலைத் தானாகவும், "என் உடம்பு" என்றபோது உடலைத் தன்னின் வேறாகவும், உடலுக்கிட்ட பெயரால் அழைக்கத் தான் செல்லலால் உடலுக்குடனாயும் இருத்தல் இவ்வுண்மையை விளக்குகிறது. உயிர்கள் உலகில் இருக்க உடலும் உயிரும்போல் அவற்றோடு கலந்து அவையாயிருந்து அபேதமாயும், அவை பொருள்களை அறிய அகரமும் மற்ற உயிர் எழுத்துக்களும்போல் வேறாய் பேதமாயும், அவை பொருள்களை அனுபவிக்கப் பண்ணும் இசையும்போலவும், பழமும் சுவையும்போலவும், அறிவுங் கண்ணும்போலவும் உடனாய் பேதாபேதமாயும் கடவுள் இருக்கிறார். ஆகவே, இறைவன் நாமாகவும், நம்மின் வேறாகவும், நம்முடனாகவும் இலனெனில் நாம் இருக்கவும், அறியவும் அநுபவிக்கவும் இயலாதென்பது பெற்றாம். இ[illegible] இம் மூன்று நிலைகளையும் ஒரே உதாரணத்தில் விளக்க ஆசிரியர் உருக்கிய அரக்கையும் அதனோடு சேர்த்தணைத்த கற்பொடியையும் காட்டுகிறார். கற்பொடியானது அரக்கோடு கலப்பினால் ஒன்றாயும், பொருண்மையால் வேறாயும் நீக்கமின்மையால் உடனாயும் இருத்தல்போல் முதல்வன் உயிர்களோடு ஒருங்கு கூடிநின்று நீக்கமின்றி நிற்றலினால் தானேயாம், உலகேயாம், தானே உலகேயாம்.



ஆசிரியர் கடைசி சூத்திரத்தில் சீவன் முத்தர் இலக்கணங் கூறுகின்றார். இச்சை அறிவு செயல்கள் இறைவனுக்கும் உள, நமக்குமுள, சீவன் முத்தர்க்குமுள. இறைவன் அவைகளை உயிர்கள் காரணமாகச் செலுத்துகின்றான். நாம் நிலையில்லாத அற்ப இன்பத்தை அளிக்கும் உலகப் பொருள்கள் மாட்டுச் செலுத்துகின்றோம். சீவன்முத்தர்களோ தம்மை விட்டுக் கழிந்தமலம் சேராமலிருக்க இச்சையையும், அன்பரோடு கூட அறிவையும், அடியார் வேடத்தையும், ஆலயத்தையும் அரனெனத்தொழச் செயலையும் செலுத்துகின்றனர்.

## கிறிஸ்தவமும் ஜப்பானும்

[உதவிப் பத்திராசிரியர்]

ஜப்பான் தேசத்திலிருந்து வந்த மிஸ்டர் டாக்யூச்சி என்பவர் சென்னையில் ஒரு விரிவுரை நிகழ்த்தியபோது கூறிய சில குறிப்புக்கள் வருமாறு :—"ஜப்பானுக்கு முதன் முதல் வந்த கிறிஸ்தவப் பாதிரிகள் மிக்க அறிவுடையவர்களாகவும் சமய வாழ்வில் ஈடுபட்டவர்களாகவும் இருந்தார்கள். அவர்தம் ஆய்ந்த அறிவும் நற்குணங்களுமே ஜப்பானியரை அவர்கள் பால் இழுத்தன. பிறகு ஜப்பானிய இளைஞர்கள் வாழ்க்கையில் அவர்களைப் பின்பற்றவும், ஆங்கிலமொழியைக் கற்கவும் தொடங்கினார்கள். பலர் கிறிஸ்தவரானார்கள்" இதனால் நாம் அறிவதென் ? கிறிஸ்தவம் பரவும் முறை எந்நாட்டிலும் ஒன்றாகவே காணப்படுகிறது. ஆன்ற அறிவும் நல்வாழ்க்கையுமுடையவர்களாய் மக்களோடு கலந்து அவர்களுக்கு வேண்டுவனவும் புரிபவர்களே நல்ல சமயத் தொண்டாற்ற வல்லவர்களாவரென் றறிகிறோம். சைவமும்

யுபகரித்த திருவாளர்கள் பு. வே. தேவராஜ முதலியார், தி. கி. நாராயணசாமி நாயுடு, முத்துக்குமாரசுவாமி நாயுடு, சுவாமி நாராயணனார் முதலியோருக்குச் சமாஜத்தின் நன்றி பெரிதும் உரித்து.

6. நமது சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று திருவெண்ணெய்நல்லூரில் சமாஜப் போஷகருள் ஒருவராகிய திரு. எம். சின்னசாமி ரெட்டியாரவர்கள் மாளிகையிலும் போதரவிலும் 24-1-1937 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணி முதல் 10 மணி வரையில் நடைபெற்றது. திரு. பு. சமர்புரி முதலியாரவர்கள் காரைக்காலம்மையார் புராணத்தை மிக அருமையாகப் பிரசங்கித்தார்கள்.

7. சமாஜத்தின் மாசிமாதக் கூட்டம் திருவொற்றியூரில் ஆதிபுரீசுரர் சந்நிதியில் 21-2-37ல் ஆரம்பவணித் திருநாளன்று இரவு 10 மணிக்குமேல் திரு. அ. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் தலைமையில் நடைபெறும்.

8. சமாஜத்தின் சைவத்தேர்வுகட்குரிய பாடங்களை மாணவர்கட்குப் பயிற்றுவதற்காகச் சென்னை, வாலாஜாபாத், காஞ்சிபுரம், திருப்பாதிரிப்புலியூர், தஞ்சை, தூத்துக்குடி முதலிய இடங்களில் வகுப்புகள் விரைவில் தொடங்கப்படும். இவ்வகுப்புகள் போறிஞர்களால் இலவசமாக நடத்தப்படும். இவைகளிற் கலந்து கொள்ள விரும்புவோர் உடனே காரியதரிசிக்கு விண்ணப்பம் செய்க. ஓரிடத்தில் வகுப்பு தொடங்குவதற்குக் குறைந்தது அறுவராவது தேவை. பாடதிட்டங்கள் முதலிய விவரங்களை ஓரணா தபால்பில்லை யனுப்பிக் காரியதரிசியிடமிருந்து பெறுக.

9. சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்போசிரியர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்கள் மயிலாப்பூர், சித்திரக்குளக் கீழ்க்கரையிலுள்ள தமது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் சிவஞான சித்தியார் சுபக்கத்தைச் சமாஜ வகுப்பாக வைத்துப் பாடமாக நடத்தி வருகிறார்கள். சைவ இளைஞர்களனைவரும் இவ்வகுப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

10. திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் திருமடத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை மாலையிலும் சிவஞானபோதம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளால் பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. அன்பர்களனைவரும் இவ்வகுப்பைப் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

11. இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் குகாநந்த நிலையத்தில் பெரியபுராணத்துள் திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரமும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரமும் முறையே திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களாலும் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களாலும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 3 மணிக்கு உபந்நியசிக்கப்படுகின்றன. அன்பர்களனைவரும் இவ்வுபந்நியாசங்களைப் பயன்படுத்திக்கொள்க.

12. பற்பல இடங்களில் தொடர்ச்சியாகவும் முறையாகவும் சைவ வகுப்புப் பாடங்கள் முதலியவற்றை நடத்தும் பெரியார்கள் உடனே நமக்கு அறிவிக்கவேண்டுகிறோம்.

மேற்சொன்ன நிலையிலே நின்ற பெரியோர்களாலேயே பரவிய தென்னலாம். இனியும் அப்படிப்பட்ட தலைவர்களே வேண்டற்பாலர். அத்தலைவர்கள் வெறுஞ் சொற்பொழிவாற்றுவதாற் பயனில்லை. அவர்கள் சொற்பொழிவு செய்தும், செய்தவாறே நடந்து காட்டியும், மற்றைத் துறைகளிலும் மக்களிடையே கலந்தும் உழைத்தல் வேண்டும். சுவாமி விவேகானந்தரைப் பின்பற்றுவோர் இந்நிலை நின்றே தொண்டாற்றி வருகின்றார்கள். மக்களுடைய உடலுக்கும் உயிருக்கும் வேண்டியனவற்றை ஒருங்கே செய்கின்றார்கள். சைவர்களும் இத்துறையில் முயன்றாலொழிய சைவ சமயம் எங்ஙனம் பரவும்? சைவ அன்பர்களே! இவ்வாறு பணியாற்ற முன் வருவோரில்லையென நினைத்தல் வேண்டாம். பணிசெய்யும் ஆட்கள் பலர் உளர். இல்லையேனும் உண்டு பண்ணலாம். வேண்டற்பாலது செல்வமே. ஆதலின், சைவச் செல்வர்கள்தான் முன்வருதல் வேண்டும். இன்னும் இறைவனுக்கெனச் செய்யவும் திருவிழாக்களிலே செலவழிக்கப்படும் பொருள் இனி இவ்வழியில் திருப்பப் பெறுமாயின் போதும். இதுபற்றிச் சிவபெருமான் சீற்றங்கொள்ளான். இன்னுஞ் சைவர்களென்போர் தலைக்கு ஓர் அணா அல்லது இன்னுங் குறைந்த தொகையை ஆண்டிற்கொரு முறை கொடுத்தாலும் போதும். அன்பர்கள் சிலர் இது போது மடங்களை நினைத்துக் கொள்வர். அவற்றைச் சிறிது காலம்வரை நம்முடைய நினைவினின்றும் அப்புறப்படுத்தி வையுங்கள். அவை நம்மைப் பின்பற்றுங் காலம் விரைவில் வரும். ஆதலின், அன்பர்கள் தங்கள் பிரசாரங்களையெல்லாம் இவ்வழியிலே திருப்பித் தமிழ்நாட்டிற் சைவப் தழைத்து, அஃது அயல் நாடுகளிலும் பரவத்தக்க முறையிலே பணிசெய் தருளுவார்களாக.

Reg. M. 2330.

OFFICE OF
8 - APR 1937

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோ னம்பலவன்
ஞானதரு வாணியையுள் நாடு.



| | | |
|---|---|---|
| மலர் ௧௦ | தாது ஆண்டு பங்குனித் திங்கள் 1937ஆம் மார்ச்சுமீ | இதழ் ௩ |



## இராமகிருஷ்ண பரமஹம்சர்

[பத்திராசிரியர்]

இராமகிருஷ்ணபரமஹம்சர் நூறு ஆண்டுகளுக்குமுன் வடஇந்தியாவில்-வங்க தேசத்தில் அவதரித்த பெரியாராவர். அவருடைய புகழ் உலகம் முழுதுமே பரவியுள்ளதென்று சொல்லலாம். அவர் பெயரால் நம் இந்திய தேச முழுதுமே யன்றி உலக முற்றும் மடங்களும் அறச்சாலைகளும் நிறுவப்பட்டுள்ளன. அப்பெரியாரது நூற்றாண்டு விழா 21-2-37 முதல் ஒருவாரம் சென்னையில் கொண்டாடப்பட்டது. இவ்வாண்டில் இந்தியாவில் பல பாகங்களிலும்,உலகில் அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் முதலிய பல தேசங்களிலும் இவ்விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் 63 நாயன்மார்கள் முதலிய சைவப் பெரியார்கள் திருநாட்களைக் கொண்டாடும்போது அவர்கள் முத்தி அடைந்த நாட்களைக்.

கொண்டாடுகிறோம். வடநாட்டுப் பெரியார் திருநாட்களைக் கொண்டாடும்போது அந்நாட்டு முறையைப் பின்பற்றி அப் பெரியார்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடுவது வழக்கமாயிருக்கிறது. இராமகிருஷ்ண பரம ஹம்சரை 63 நாயன்மார்கள் மற்றும் தாயுமானவர், இராமலிங்கர் முதலிய சைவப் பெரியார்களோடொப்பவே ஒரு சைவப் பெரியாராகக் கொள்ளுதல்வேண்டும். பிறநாடுகளில் அவதரித்த பெரியார்களை நாம் பாராட்டவேண்டுமென்றே நம்முடைய சைவ சமயாசாரியரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் "அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்" என்று கூறியுள்ளார். இறைவனுடைய பெருமையை விளக்கவந்த பெரியார்களையும் அவருடைய சரித்திரங்களையும் நாம் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்; அவர்களை வாழ்த்துதல்வேண்டும்; வணங்குதல்வேண்டும். "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்" என்று மணிவாசகனார் கூறியபடி, அப்பெரியார்களை நாம் வாழ்த்துவதனால் நாம் நல்வாழ்வை அடைவோம்; இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பப்பேற்றை அடைவோம். இராமகிருஷ்ணர் தோன்றிய காலத்தில் நமது இந்திய தேசமானது ஆங்கிலக் கல்வியாலும் மேல்நாட்டு பௌதிக (Materialistic) நாகரிக சம்பந்தத்தாலும், தனது இயற்கையான பாரமார்த்திக உணர்வு குன்றி அஞ்ஞான அந்தகாரத்தில் மூழ்கியிருந்தது. அந்த இருளைப் போக்கி மெய்ஞ்ஞான ஒளியைப் பரப்ப எழுந்த ஞானபானுவென இராமகிருஷ்ணர் தோன்றினார். அதே காலத்தில் தான் நமது தமிழ்நாட்டிலும் இராமலிங்க அடிகளும் அவதரித்தனர்.

7-வது நூற்றாண்டில் பாண்டிநாட்டிலே சைவ ஒளி மழுங்கிச் சமண இருள் மூடியிருந்தபோது, திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தம்முடைய தேவாரத் திருப்பதிகங்களா



லும் அற்புதச்செயல்களாலும் வேதநெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும் எப்படிச் செய்தனரோ, அது போன்று இராமகிருஷ்ண அடிகளும் நமது இந்தியதேசத்தை மூடியிருந்த உலகாயத இருளைப் போக்கி, வைதிக சமரச சைவ ஞான தீபத்தை ஏற்றி வைத்தனர். சென்ற மாதத்தில் வெளிவந்த 'அன்பு நெறியே சைவசமயம்' என்னும் கட்டுரையில் சொன்னபடி சைவம் அன்பு நெறியே என்று கண்டோம். இராமகிருஷ்ணர் அனைவருக்கும் போதித்தது அன்பு நெறியேயானபடியால், அவரும் நமது சைவசமயாசாரியர்கள் போன்றே உண்மைச் சைவத்தை வளர்க்க வந்த பெரியாரென்றே கொள்ளுதல் வேண்டும். அவரும் ஈசனிடத்து அன்பு வேண்டும்; அடியவரிடத்து அன்பு வேண்டும், எவ்வுயிர்க்கும் அன்பு வேண்டும் என்று போதித்தார். அவ்வழியே நடந்துங் காட்டினார். மக்கட்குச் செய்யும் தொண்டே கடவுளுக்குச் சிறந்த பூஜையாகும் என்று, தானே மக்களுக்குப் பலவித தொண்டுகளைச்செய்து வழி காட்டினார்.

"படமாடுங் கோயில் பரமற்கொன் றீயில்
நடமாடுங் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடுங் கோயில் பரமற்கஃ தாமே"

என்று நமது சைவத் திருமுறை கூறுகின்றது. அவர் கடைப்பிடித்த நன்னெறியினைப் பின்பற்றி அவருடைய சீடர்களும் பிறரும் அவருடைய பெயரால் மதபோதனைகள் செய்வதுமன்றி, மடங்களையும் பள்ளிக்கூடங்களையும் தொழிற்சாலைகளையும் வைத்தியசாலைகளையும் நடத்துகின்றனர். சைவ சமயத்தைப் பரப்பும் நோக்கங்கொண்ட நமது சைவ சித்தாந்த மகா சமாஜமும், சைவ மடங்களும் இவ்விதமான தொண்டாற்றல்வேண்டும். இராமகிருஷ்ணர் போதித்த சமய

18353
R673 ... 21.4.98
(37)0.1-6

நெறிக்கும், நமது சமயாசாரியர்கள் பரப்பிய சைவ சமயத்திற்கும் ஒருவித பேதமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இராமகிருஷ்ண மிஷன் என்னும் சங்கங்கள் உலகெங்கும் நிறுவப்பட்டு சமயத் தொண்டும் மக்கள் தொண்டும் ஆற்றி வருவதுபோல் சைவ மக்களும் தொண்டாற்ற முன்வருதல் வேண்டும். இவ்வாறு செய்வதோடு இராமகிருஷ்ண சங்கங்களுடன் நாமும் ஒத்துழைப்போமானால் சைவமானது செழித்தோங்கி உலகெங்கும் பரவும்; மக்களெல்லாம் துன்பத்தினின்றும் நீங்கிப் பேரின்பப் பெருவாழ்வடைவர்.

சைவர்களிற் சிலர் தொன்றுதொட்டு நம் முன்னோர்களால் சைவ சமயாசாரியர்களாகக் கொள்ளப்பட்ட நால்வர்களையும் அவர்கள் அருளிச்செய்த அருள் நூல்களாகிய தேவார திருவாசகத்தையும் போற்றுதல் செய்யாமல் புறக்கணித்துப் புதிதாக மற்ற நாட்டில் அவதரித்த இராமகிருஷ்ணர் போன்ற அடியார்களை ஆசாரியராகக் கொண்டு அவர்களையே போற்றத் தலைப்பட்டு விடுகிறார்கள். சைவர்களெல்லோரும் நால்வர்களை சமயாசாரியராகக் கொண்டு, இராமகிருஷ்ணர் போன்ற பெரியார்களை அப்பாலும் அடிசார்ந்த அடியார் கூட்டத்திற் சேர்த்து வழிபடல் நன்று.

# செந்திலிற் கண்டதும் கேட்டதும்

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

திருச்செந்தூரில் நடைபெறும் மாசித் திருவிழாவில் ஏழாந்திருநாளன்று காலையில், அறுமுகப்பெருமான் வெட்டிவேர் சப்பரத்தில் புறப்பட்டு உச்சிவேளைக்குப் பிள்ளையன் மண்டபத்தில் தங்கி, அபிஷேகம் முதலிய சோடசோபசாரங்கள் நிகழ்ந்த பின்னர் மாலையில் தங்கச் சப்பரத்தில் எழுந்தருளித் திருவீதி வலம்வந்து இரவில் வெங்கு பாதுஷா முதலியார் மண்டபத்தில் தங்கி, அபிஷேகாதிகள் நிகழ்ந்த பின்னர் அதிகாலையில் வெள்ளைச்சாத்துப்படியுடன் வெள்ளிச் சப்பரத்தில் திருவீதிவலம் வந்து, பிறகு மேலைக்கோயிலில் திருவிதாங்கூர் மகாராஜாவின் செலவில் அபிஷேகாதிகள் நடந்த பிறகு பிற்பகலிற் புறப்பட்டுப் பச்சைசாத்திச் சப்பரத்தில் எழுந்தருளி வீதிவலம் வந்து, எட்டாம்நாள் மாலையில் மீண்டும் திருக்கோயில் சேரும் திருவிழாக்காட்சி திருநெல்வேலி ஜில்லா வாசிகள் திரண்டுவந்து காணும் பெருங்காட்சியாகவும் தமிழ்நாட்டுச் சைவரனைவரும் கண்டு மக்கட் பிறவியின் பயனை முற்றுவித்தற்குரிய காட்சியாகவும் விளங்குகிறது. முப்பத்தாறு மணி நேரத்தில் நிகழும் இவ் விழாவின் பலன் முப்பத்தாறு தத்துவங்களைக் கடத்தலே யென்பது மிகையாகாது. இவ்விழாவிற்கு யான் சென்றபோது சமாஜத் தலைவர் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்களையும் வேறு பல பேரறிஞர்களையும் கண்டு அளவளாவும் பேறு பெற்றேன். அப்போது யான் கண்டனவுங் கேட்டனவுமாகிய சில பொருள்களைக் கீழே குறிக்கின்றேன் :—

இலை விபூதி - திருச்செந்தூரில் மூலஸ்தானத்தில் பூசைசெய்வோர் சிவதீக்கையில்லாத சத்கர்மிகள் எனப்படும்

மாத்வப் பிராமணராகிய போற்றிகள். இவர்கள் கையில் நேரே விபூதி வாங்கப்படாதென்று சிவதீக்கையுடைய சைவ சித்தாந்த வேளாள தர்மகர்த்தர்கள் இலையில் விபூதி வைத்துத் தரும் பழக்கத்தைத் தொடங்கினார்கள். வீர சைவ மடங்கள் பரம்பரையாக மேல்பார்த்துவரும் கோயில்களிலும் மடாதிபதிகட்கு வெற்றிலையில் வைத்துப் பட்டர்கள் விபூதி யளிப்பதை இன்றும் காணலாம்.

குமார விடங்கர் - வள்ளி தெய்வயானையோடு கூடிய இம்மூர்த்தியே திருவிழாவில் இரண்டு வேளையும் தனியே வாகனங்களில் எழுந்தருளி வருகிறார். சாத்திர விரோதமாக, மாசித் திருவிழாவில் வள்ளியை விட்டுவிட்டும் ஆவணித் திருவிழாவில் தெய்வயானையை விடுத்தும் உத்ஸவம் நடைபெறுகிறது. ஒவ்வொரு நாளும் குமார விடங்கர் ஒரு வாகனத்திலும் தெய்வயானையம்மையார் ஒரு வாகனத்திலும் தனித் தனியே எழுந்தருளுகின்றனர். இருதேவியரோடுங் கூடிய முருகர் ஒரு வாகனத்திலும், தேவியர் தனித்தனியே இரண்டு வாகனங்களில் பின்னும் வருவதுதான் முருகன் திருத்தலங்களில் திருவிழாமுறையாக இருக்க, இத்தலத்தில் இவ்வாறு நடக்கிறது. இதற்குக் காரணமொன்றும் கூறப்படவில்லை. இதை மாற்றுவதற்கு முயற்சியும் செய்யப்படவில்லை.

திருப்பணி மடம் - இம்மடமும் வேறு ஐந்து மடங்களும் திருவாவடுதுறையாதீனத்துக்குச் சொந்தமானவைகளாக இத்தலத்தில் உண்டு. இவற்றுள் சில பாம்புப்புற்றுகள் நிறைந்து வசிக்க முடியாத நிலையிலுள்ளன. இங்கே இவ்வாதீனத்துறவி யொருவர் பழுத்த கிழமாக மேலகரம் சுப்பிரமணியதேசிக மூர்த்திகளிடத்தில் உபதேசம் பெற்றவராக இருக்கிறார். இவருக்கு ஆதீனத்திலிருந்து எவ்வித உதவியுங் கிடைப்பதில்லை. கோயில் மேற்பார்வையாளர் திரு. அ. முத்தைய பிள்ளையவர்கள் மனமிரங்கித் தீபாவளியில் புதுத்துணிகளும் நாடோறும் கோயிலிலிருந்துபிரசாதங்களும்கொடுத்துக் காப்பாற்றி வருகிறார்கள். ஆதீனத்திலிருந்து தீபாவளி காலத்தில் சென்னையிலும் தஞ்சைஜில்லாவிலுமுள்ள உத்தியோகஸ்தர்கட்கு ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பட்டுப் பீதாம்பரங்கள் வழங்கப்படுகின்றன. இக்கிழவருக்குதவிபுரிய ஆதீனம் தவிர்வதேன்?



முக்காணிகள் - திருச்செந்தூர் ரயில் ஸ்டேஷனுக்குச் சென்றவுடனே உச்சிக்குடுமிப் பிராமணர்கள் பலாப்பழத்தை மொய்க்கும் ஈக்கள்போல யாத்ரீகர்களைச் சூழ்ந்துமொய்த்துக் கொள்வது செந்தில் சென்றோர் அநுபவம். இவர்கட்கு முக்காணிகள் என்று பெயர். ஆயிரங்குடும்பங்கட்கு மேலுண்டு. கோயில்பட்டர்களாகிய போற்றிகட்கும் யாத்ரீகர்கட்கும் இடையிலுள்ள தரகர்களாகக் கூடியவரையில் பணம் பறிப்பதே இவர்கள் தொழில். சில ஆண்டுகட்குமுன் நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் எண்ணெய் வாணிபம் செய்யும் வகுப்பினர் செந்தில் கோயிலுக்குட் செல்லலாம் என்று தீர்ப்பு சொல்லப்பட்டது. சிலநாட் கழிந்தவுடன் இரவில் அர்த்தஜாம பூஜை முடிந்து கோயிலைப் பூட்டுவதற்குச் சிறிது முன்பு ஒரு முக்காணி ஓரிடத்தில் தீ மூட்டினார். ஒருவருங் காணாவிடில் அடுத்த நாள் வாணியர் வழக்கின் முடிவு இறைவற்குடன்பாடில்லை யாகையால் தீ விபத்து நேர்ந்ததெனக் கூறக் கருதினார். ஆனால் தற்செயலாகக் கோயிலதிகாரிகள் இதைக் கண்டு பிடித்து இச்சூழ்ச்சியைத் தடுத்துவிட்டனர். இதைப் போன்ற வேறு பற்பல விஷயங்கள் இம் முக்காணிகள் சம்பந்தமாகக் கூறப்படுகின்றன. இம்முக்காணிகளை ஸ்மார்த்தப் பிராமணர்கள் சேர்ப்பதில்லை; பட்டர்களும் போற்றிகளும்

சேர்ப்பதில்லை. எதிலும் சேராத ஒரு வகுப்பாக இவர்களிருக்கிறார்கள்.

ஒன்பதுகால பூஜை—செந்திலாண்டவனுக்கு நாடோறும் காலையில் ஆறு காலமும் மாலையில் மூன்று காலமுமாக ஒன்பது கால பூஜை நடைபெறுகின்றது. இதற்குக் குமார தந்திரத்திலேனும் வேறு ஆகமங்களிலேனும் ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை.

உண்மைத் துறவு—திருவாவடுதுறை ஆதி குருமூர்த்திகள் காலத்தில் மடத்துத் துறவிகள் இறந்தவுடன் பிரேத சோதனை நடப்பது வழக்கம். அவ்வாறு ஒருவரைச் சோதித்ததில் வஸ்திரத்தில் மருந்துக்காகச் சிறிது ஓமத்தை முடிந்திருந்ததைக் குருமூர்த்திகள் கண்டு, "ஓ! ஓ!! தேகப் பற்று விடவில்லையா! இப்பிணத்திற்குச் சமாதி வேண்டாம், இதைச் சுட்டுவிடுங்கள்" என்றார். இக்காலத்திலோ........?

# திருவருட் பிரபாவத்தை விளக்கும் புதிய அற்புத சரிதைகள்*

[பாம்பன் : ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள்]

## திருவருட் பிரபாவம்

திருவருள் என்பது யாது? திருவருள் என்பது கடவுள் உயிர்கட்குச் செய்யும் அருள் என்று பொருள்படும். கடவுள் என்பது யாது? உயிர்களின் உள்ளந்தோறும்

*இது, சென்னை, இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் குகானந்த நிலயத்தில், பாம்பன் : ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள் 'திருவருட் பிரபாவம்' என்னும் பொருள்பற்றிச் செய்தருளிய பெருஞ் சொற்பொழிவின் சாரம். ஸ்ரீமத் சுவாமிகள் மொழியுமாறாகவே எழுதியுள்ளேன். உரிமையுள்ளது.—மா. து.



இருந்து அவைகளைச் செலுத்துகின்ற பரம்பொருளே கடவுள் எனப் பெறும். இறப்பும் பிறப்பும் இல்லாத சிறப்புள பரம்பொருளின் திருவருளே, இறப்பு, பிறப்பு, நோய், மூப்பு, கவலை என்னும் பலவகைப்பட்ட துன்பங்களில் என்றும் ஆழ்ந்து கிடக்கும் உயிர்களின் துன்பத்தை ஒழிப்பதாகும். திருவருட் பெருமை எத்தகையது? இயங்குவன இயங்காதனவாகிய உயிர்கள் இத்துணையவென அளவிடுதல் கூடாதாதலின் திருவருட் பெருமையையும் ஓர் அளவிற்கு உட்படுத்தி உரைத்தல் கூடாது. அஃது ஒரு முடிவிற்கு அடங்காததேயாம்.

திருவருள் எங்கும் நிறைந்து விளங்குவது. அஃது எல்லாருக்கும் உண்டாகக் கூடியது. அங்ஙனமிருந்தும் அதனை எல்லா உயிர்களும் பெறாதிருப்பது ஏன் எனின், அவை அதனைப் பெறுமை அவைகளின் பக்குவ நிலையைப் பொறுத்து இருக்கிறது; அப் பக்குவ நிலையையும் உயிர்கள் தத்தம் செய்கைகளாலேயே அடைதல்வேண்டும். அச்செய்கையைப் புண்ணியம் என்றும் பாவம் என்றும் இருவகையாகப் பகுக்கலாம். புண்ணியமே நல்வினை; பாவமே தீவினை. நல்வினை தீவினைகளைத் தெரிந்து செய்யும் சுதந்திரம் உயிர்கள்மாட்டே இருத்தலின் இறைவனுடைய திருவருளை உயிர்கள் பெறவும், அவைகளின் செய்கையே காரணமாக இருக்கிறது. உயிர்களின் இச்சை வழியே இறைவன் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் புரிகின்றான் என்பதை உணர்ந்தே வாகீசப் பெருமான், "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்று மொழிந்தருளினார் எனல் அறியக் கிடக்கிறது. திருவருள் எங்கும் நிறைந்திருந்தும் மக்கள் அதனைப் பெறுமைக்குக் காரணம் அவர்கள் அதை இச்சியாமலிருத்தலேயாம்.

பகலவன் பிரகாசியாத விடமெங்கும் இருள் நிறைந்திருப்பதுபோல் திருவருளால் தீண்டப்படாதவர்கள் அனைவரும் பாசத்தால் தீண்டப்பட்டு இருப்பர். உயிர்களுக்கு இவ்வுலகில் ஆசையை உண்டாக்கும் ஒருவகை சக்திக்கே பாசம் என்று பெயர். மக்களுடைய கண்கள் பகலிற் காணுமாறாகவும் இரவிற் காணக் கூடாதவாறாகவும், கோட்டான் கூகை முதலியவற்றின் கண்கள் இரவிற் காணுமாறாகவும் பகலிற் காணாதவாறாகவும், பூனையின் கண்கள் பகலிலும் இரவிலும் காணுமாறாகவும் அமைக்கப்பெற்று இருக்கின்றன. திருவருள் தீண்டப் பெற்றோர் கூகைத் தன்மை நீங்கிப் பூனைத் தன்மை வரப்பெற்றவரே யாவர்.

இனி, சீவ அபிமானிகளும் கடவுள் அருளைக் கைவரப் பெறார். அத்திருவருளைப் பெறுதற்குச் சீவ அபிமானம் அறவே ஒழிய வேண்டும். பாண்டவர் பத்தினியாகிய பாஞ்சாலியைச் சபையிலேநிறுத்தித் துரியோதனன் சோதரனாகிய துர்ச்சாதனன் துகில் உரியவும், அவ்வம்மை தன்னுடைய மானத்தைத் தானே காத்துக்கொள்ளும் முயற்சியில் இருந்தவரை, விரும்பிய உதவியைப் பெறாமையும், அவ்வபிமானத்தை அறவே விலக்கி நின்றதும் அவ்வுதவியைப் பெற்றதுமே தக்க சான்றாகும். ஆதலின், திருவருளைப்பெறுதற்குச் சீவஅபிமானம் விடுபடுதலோடு கடவுளுடைய உதவியும் இருத்தல் வேண்டுமென்பது நன்கு தெரிய வருகின்றது. இன்னும் கடவுள்மீது வைக்கும் பேரன்பினாலேயே திருவருளைப் பெறலாம் என்பதையும், திருவருளின் பிரபாவம் எத்தகைத்தென்பதையும் விளக்கற்குரிய சில உண்மைச் சரிதைகளை எடுத்துரைக்கின்றாம்.

### 1. கார்த்திகைச் சுவாமிகள்

யான் துறவற நடையை மேற்கொள்வதற்கு முன்னர் ஒரு பெரியாரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் இராமநாதபுரத்



திற்கு அணித்தாய திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்தில் வைகினார். அப்பெரியார் தம்முடைய ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் முழுமுதற் கடவுளாகிய முருகப் பெருமானுக்கே கொடுத்து அப்பெருமானுடைய மீளா அடிமையாய்க் காலங் கழிக்கின்றார் என்பது கேட்டமையின், யான் அவரைக் காண வேண்டுமென்னும் அவாவோடு இருந்தேன். யாவரும் அவரைக் கார்த்திகைச் சுவாமி என்று அழைத்தார்கள். ஒரு நாள் அவரைக் காணும் பொருட்டுத் திருவுத்தரகோசமங்கையை அடைந்தேன். அப்போது அவர் அங்கு இல்லை; மதுரைக்குச் சென்றார் என்பதை அறிந்தேன். பிறகு அங்குள்ள ஆலயத்திற்குச் சென்று இளம்பூரணனைத் தரிசித்து, கார்த்திகைச் சுவாமி அவர்கள் ஆலயத்திற் செய்த திருப்பணிகளையும் கண்டு திரும்பினேன். அப்போது அவ்வூரிலுள்ள பொன்னம்பலம் பிள்ளை என்னும் சிவனடியவர் ஒருவர் என்னை விசாரித்துத் தம் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனார். மாலைக்காலமாயினமையின் அவர் இல்லத்திலேயே அன்றிரவு தங்கினேன். மறுநாள் காலை ஆண்டு நின்றும் புறப்பட்டுத் திருவாரூர் கோயிலில் நடைபெறும் கும்பாபிஷேகத்திற்குச் சென்று, அங்கிருந்தும் நாகப்பட்டினத்தை அடைந்து, அன்பர் சுப்பிரமணியப் பிள்ளை வீட்டில் தங்கினேன். நாகப்பட்டினத்தில் மாலை நேரத்தில் கடற்கரையோரமாய் உலவிச் செல்லும்போது கல்லாடை உடுத்த ஒருவர் வடக்கிருந்து எதிரே வருதலைக் கண்டு, அவர், யான் காண விரும்பிய கார்த்திகைச் சுவாமியாக இருப்பாரோஎன்று எண்ணினேன். அவர் என்னைச் சந்தித்தபோது அவ்விடத்திலேயே நின்று என்னைநோக்கித் தாங்கள் யாவர் என்று கேட்டார். 'என்னைப் பாம்பன் குமரகுருதாசன்' என்பர் என்று கூறித் 'தாங்கள் யாவர்?' என்று வினவினேன். அவர் 'திருவுத்தரகோசமங்கைக் கார்த்திகைச் சுவாமி என்பர்' என்று கூறி

னார். யான் உடனே அவர் அருகிற் சென்று அவரைக் கட்டித் தழுவினேன். அவரும் என்னைப் பார்க்க விரும்பியே பாம்பன் சென்று திரும்பி வந்ததாகத் தெரிவித்தார். யான் அவரைச் சுப்பிரமணியப் பிள்ளை வீட்டிற்கு அழைத்துச் சென்றேன். அவ்விடத்திலேயே அவரும் யானும் மூன்று நாள் தங்கினோம். அவர், மதுரையில் மடம் ஒன்று கட்டுவதாகவும் அதன் பொருட்டுப் போதுமான பணம் சேகரிக்கவே பல விடங்களுக்கும் செல்லுவதாகவும் தெரிவித்தார். அப்போது அவர் குடும்பத்தை விட்டுத் துறவற நிலையை அடைந்த காரணம் யாதென்று அறிய விரும்பினவனாய் அவரை வினவியதற்கு அவர் பின் வருமாறு மொழிந்தார்:—

“யான் இறைவனது திருவருட் செல்வத்தை விரும்பிச் சில பெரியோர்களுக்கு அன்னம் படைத்து வந்தேன். ஆனால், அக்காரியத்தில் என் மனைவி என்னோடு ஒற்றுமைப் பட்டிருக்கவில்லை. ஒரு நாள் இரவு 11 மணிக்குப் பெரியார் ஒருவர் வந்து, தாம் மிகப் பசியாய் இருப்பதாகவும் உணவு வேண்டுமென்றும் கேட்டார். அப்போது உண்டு மிகுந்த அன்னத்திலும் நீர்விட்டாயினமையின், யான் புதிய உணவு சமைத்துத் தருகிறேன்; தாமதிக்க வேண்டும் என்றலும், பசித்து வந்த அப்பெரியார் பழைய உணவையே கொண்டு வரும்படி கேட்டார். உடனே யான் உள்ளே சென்று உறங்கிக் கொண்டிருந்த என்னுடைய மனைவியை எழுப்புதலும் இந்நற் செய்கைக்கு இணங்காத அவள் எழவில்லை. பிறகு நானே தண்ணீர் விட்டிருந்த அன்னத்தையும் மிகுந்திருந்த கறிகளையும் சேர்த்துப் பிசைந்து எடுத்துக் கொண்டு வந்து அப்பெரியாரை உள்ளே வரவேண்டுமென்று அழைத்தேன். அவர் தெரு வாயிற்படிக்கு அப்புறம் இருந்து கொண்டு, அங்ஙனே கொண்டுவந்திடும்படி கையை நீட்டினார். நானும் அன்



னத்தைக் கொண்டுபோய்ச் சிறிதுசிறிதாக உருட்டிக் கையில் இட்டேன். கொண்டுபோன அன்னம் அவ்வளவையும் அவர் தின்றானதும் அது மிக உருசியாக இருந்ததென்றுகூறிக் கை கழுவிக் கொண்டார். பின்னர் யான் அவரோடு யாதொரு சொல்லுஞ் சொல்லத் துணிவதன் முன் அவர் கையமர்த்தி மறைந்தார். அவர் உடல் முழுவதும் துணியால் மூடப்பட்டிருந்தமையின் அவருடைய முகமட்டுமே எனக்குப் புலப்பட்டது. அவர் மறைந்தமை கண்டு நான் விளக்கெடுத்துப் பார்க்க அவருடைய அடிச்சுவடுகளும் என் கண்ணுக்குப் புலப்படவில்லை. பிறகு நான் உண்டவர் யாவரென்பது தெரிய வேண்டுமென்னும் எண்ணத்தோடு படுத்துக் கொண்டேன். ஆனால் எனக்கு நல்ல நித்திரை வரவில்லை. விடியற் காலத்தில் ஒருவர் கனவிற்றோன்றி “ஐயா, நான் சொல்லுகிறபடி நீர் செய்ய வேண்டும். உம்முடைய உடைமைகள் எல்லாவற்றையும் நாளைய தினம் திருவுத்தரகோசமங்கை முருகனுக்குத் தானமாகக் கொடுத்துவிட்டு, நீரும் புறப்பட்டு வரவேண்டும்” என்னலும், அதற்கு அடியேன் “நான் என்னுடைய பொருள்களையெல்லாங் கொடுத்துவிட்டுப் பிறகு பிச்சை வாங்கேன்” என்றேன். அதற்கவர் உம்மிடத்திற் சோறு தின்றவன் திருவுத்தரகோசமங்கை முருகன்; அவன் இவனே” என்றுகூறி மறைந்தார். பிறகு அடியேன் அறுமுகப் பெருமானது திருமுகக் கருணையால் யாம் கடைத்தேறினோம்; நம் ஜன்மம் சாபல்யமாயிற்றென் றெழுந்து உடைமைகளையெல்லாம் முருகப் பெருமானுக்கு எழுதிக் கொடுக்குங் காரியத்தைத் தொடங்கினேன். யான் இச்செய்தியை வெளியிடலும் வக்கில் வேலையிலிருந்த எனது சகோதரர் அதனைக் கேட்டலும், உடனே வந்து என்னுடைய மனைவிக்கும், குமாரத்திக்கும் ஏதாவது பொருள் வைக்கவேண்டுமென்று கேட்டார். எனது குமாரத்திக்கு மாத்திரம் சிறிது பொருள் வைத்து மிகு

தியை முருகப்பெருமானுக்கு எழுதிக் கோயிலதிகாரிகளிடங் கொடுத்துவிட்டு, மேல் யாது செய்வதென்பதறிய இறைவனைச் சிந்தித்திருந்தேன். அன்றிரவு பெருமான், கோயிற் பூசகரிடந் தோன்றி எனக்கு அன்னமிட வேண்டுமென்றும், என்னுடைய கனவிற்றோன்றிப் பழுதுபட்டுள்ள கோயிற் கட்டடத்தைப் புதுக்க வேண்டுமென்றுங் கூறி மறைந்தார். அவ்வாறே பலருடைய உதவியினாற் கோயிலைப் புதுக்கிக் கும்பாபிடேகத்திற்காக முயற்சி செய்தேன். அத்தருணத்தில் இராமநாதபுரம் சமஸ்தானத்தில் பாஸ்கர சேதுபதி பட்டம் பெற்றமையின் யான் அவரிடஞ்சென்று கும்பாபிடேகக் காரியத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று விண்ணப்பித்தேன். அவர், அவ்வாறே 2000 ரூபா தரும்படி தம்முடைய அதிகாரிகளுக்கு உத்திரவு கொடுத்தார். திருவுத்தரகோசமங்கையில் ஒரு சாமியார் இருந்தார். யான் சேதுபதியிடஞ் சென்ற செய்தியை அவர் உணர்ந்து உடனே இராமநாதபுரஞ் சென்று இராசாவைக் கண்டு, பரதேசியாய என்னிடம் பணங் கொடுத்தல் தகுதியன்றென்றும், இராசாவே முன்னின்று அதனை நடத்தி வைத்தல் வேண்டுமென்றுங் கூறி எனக்குக் கொடுக்கும்படி உத்தரவு செய்த தொகையைக் கொடாதவாறு தடை செய்து விட்டார். யான் கஜானாவிற்குச் சென்றபோது பணங் கொடுக்கப்படவில்லை. நிறுத்தப்பட்ட காரணத்தைமட்டு மறிந்தேன். பிறகு யானே சேதுபதியவர்களிடஞ் சென்று, அவர் கும்பாபிடேகஞ் செய்ய இசைந்தது பற்றி யெனக்கு முழுதிருப்தியே யென்றும், ஆனால் அதனை விரைவில் பார்க்க விரும்புகின்றேனென்றும் விண்ணப்பித்துக் கொண்டு திரும்பியதும், திருவுத்தரகோச மங்கையையணுகிப் பகல் 12 மணிக்கு ஆலயத்திற் கெதிரில் நின்று எனக்குள்ள நோயை யெடுத்துரைத்துக் கும்பாபிடேகச் சிறப்பை யென்று காண்பேனென்று புலம்பினேன். உடனே, ‘அக்கும்பாபிடேகத்தை இன்ன நாளில் யானே செய்வேன்’ என்று ஒரு சத்தம் பிறந்தது. நிற்க.



அரசாங்க உத்தியோகத்திலிருந்த சாமாவையர் என்பவருடைய குமாரத்திக்குப் பிள்ளைப் பேறில்லாமலிருந்தது. முருகப்பெருமானுடைய விபூதிப் பிரசாதத்தை அடியேன் அவருக்கு அளித்ததன் மேல் குழந்தை பிறந்தது. ஆகலின், அவர் இத்தருணத்தில் 200 ரூபா கொடுத்ததோடு கும்பாபிடேக விடயமாக நிகழ்ந்த செய்திகள் யாவும் அறிந்துகொண்டு பலரிடத்திலுஞ் சென்று பணத்திற்காகக் கையொப்பங்கள் பெற்றுக்கொண்டு வந்து, இராசாவை யெதிர்பாராமலே காரியத்தைத் தொடங்கினார். கோயிற் பூசகர்கள் முதலிய யாவரும் சேதுபதியவர்களே செய்தால் தங்களுக்கு நல்ல பரிசுகள் கிடைக்குமென்று எண்ணினார்கள். பின்னர், சாமாவையர் அவர்களே முன்னின்று பூசகர்களை நாள் வைக்கும்படிச் சொன்னார்கள். இறைவன் அசரீரி வாயிலாக எனக் கறிவித்த நாளையே பூசகர்களும் குறிப்பிட்டார்கள். இது நிற்க.

இத்தருணத்தில் பாஸ்கர சேதுபதி அவர்களும் கும்பாபிடேகஞ் செய்வதற்காகச் சித்தஞ் செய்துகொண்டிருந்தார். ஆனால் அவ்வமயத்தில் சேதுபதி அவர்கள் சென்னைக் கவர்னருடைய கட்டளையின்பேரில் சென்னைப்பட்டினத்திற்குப் போக நேர்ந்தது. சேதுபதி அவர்களை கும்பாபிடேகஞ் செய்யவேண்டுமென்று அவரைத் தூண்டிய சாமியாரும், தம்முடைய மனைவி சூலை நோயால் வருந்துகின்றாரென்பது கேட்டுத் தம் ஊருக்குப் போய்விட்டார். ஆகலின் அவர்களுடைய தடை யொன்றுமின்றியே கும்பாபிடேகமும் திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

சின்னாட்களுக்குப் பின்னர்ச் சேதுபதியவர்கள், தரிசனத்திற்காகத் திருவுத்தரகோசமங்கைக்கு வந்தார்கள். அப்

போது அவர், என்னையும் மேற் குறிப்பிட்ட சாமியாரையும் அழைத்து, இருவருக்கும் ஒவ்வொரு சால்வையை அளித்து, அதனை யெப்போதும் போட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்றுசொன்னார். அச்சாமியார் சேதுபதியவர்கள் சொன்னவாறே அச்சால்வையை உபயோகித்துக் கொண்டார். அடியேன் மூலத்தானத்துள்ள நமது முருகநாதனுக்குச் சாற்றிவிட்டேன். இராசா மறுமுறை வந்தபோது, யான் போர்வையைச் சுவாமிக்குச் சாற்றிவிட்டதை யறிந்து, என்னையும் அழைத்துப் போர்வையை ஏன் உபயோகித்துக்கொள்ளவில்லை யென்று கேட்டார். அதற்கு யான், 'நல்ல பொருள்கள் யாவும் சுவாமிக்கென்றே இருக்கின்றேன்' என்றேன். சேதுபதியவர்கள் 'நாம் சுவாமிக்கு எவ்வளவோ செய்வோம்' என்று சினந்து மொழிந்தார். அவருடைய கோபத்தைக் கண்ட யான் அவரெதிரிலிருந்தும் விலகிப்போய்விட்டேன்.

பிறகு, அவர் இராமநாதபுரஞ்செல்லுமுன்னர், பெருமான் முருகவேளுக்குப் போட்டிருந்த போர்வையை எடுத்துக் கொண்டுவந்து சேதுபதியவர்கள் எதிரில் வைத்துவிட்டுச் சென்றேன். சேதுபதியவர்கள் ஊருக்குப் புறப்படும்போது மறுபடியும் என்னை யழைத்து அப்போர்வையைக் கொடுத்தார். யான் அதனை அங்கீகரிக்கமாட்டேனென்று கூறியதன்மேல், "அதை எப்படியாவது செய்துகொள்ளலாம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். யான் ஒவ்வொரு மாதமுங் கிருத்திகை நாளில் நம் பெருமானுக்குத் திருவிழா நடத்திவருகின்றேன்" என்று கூறி முடித்தார்.

பிறகு, கார்த்திகைச் சுவாமிகள் நாகப்பட்டினத்திலிருந்து மதுரைக்குப் புறப்பட, யானும் அவரைத் தொடர்ந்து சென்றேன். அவர், தாம் மதுரையில் கட்டிக்கொண்டிருந்த கட்டிடத்தைக் காட்டி, அதனை இன்னுஞ்



செவ்வையாகக் கட்டவேண்டுமென்றார். யான் அங்கிருந்து பாம்பனுக்குப் புறப்படுங்கால், அவர் என்னை உத்தரகோசமங்கைக்கு வரும்படி அழைத்தார். யான் பின்னர் வருவதாகக் கூறிச் சென்றேன். சில மாதங்கட்குப் பின்னர் யான் உத்தரகோசமங்கைக்கு எழுதிய கடிதம் திரும்பிவந்துவிட்டது; விசாரணை செய்ய, அவர் சமாதியாய்விட்டாரென்பதும் அதன் விவரமும் அறிந்தேன் : கார்த்திகையன்று திருவிழா நடைபெறும்போது, கார்த்திகைச் சுவாமி முருகப்பெருமானோடு கூடவே வர, பெருமான் கோயிலின் முன்பு வந்ததும் வழக்கம்போல் தீபாராதனை நடந்தது. பெருமானுக் கெதிரில் நின்றுகொண்டிருந்த அப்பெரியார் கூப்பிய கரத்தோடு கீழே யிருந்து அடங்கிவிட்டார். அவருடைய ஆன்மா மூலத்தானத்தையே அடைந்ததோ, யாதோவென்றெண்ணுகின்றேன். அவருடைய சோற்றைத் தின்ற நம் பெருமான் உயிரையுந் தின்றார். இதனால் சுவாமி முருகன் கையிலேயே அம் முத்தி யிருக்கின்றதென்பது உண்மையாகிறது.

கார்த்திகைச் சுவாமிகளுடைய முடிவினைக் கேள்வியுற்ற பாஸ்கரசேதுபதியவர்கள் நடுக்குற்று, கார்த்திகைச் சுவாமியின் உடல் அடக்கம் பண்ணப்பட்ட இடத்தை எய்திப் பலமுறையும் வலம்வந்து வணங்கி யழுதார்கள்; நித்திய பூசைக்காக வேண்டிய கட்டளைகளேற்படுத்தினார்கள்; அவரைத் தரிசியாது உணவெடுப்பதில்லையென்று நியமம் பூண்டு அவ்வாறே ஒழுகிவந்தார்கள்.

## 2. புலால் உண்ணு நாய்

யான் திருநெல்வேலியில் இரத்தின முதலியார் என்பவர் ஒருவருடைய வீட்டிற்றங்கி யிருக்கும்போது, அங்கு ஒருவர் வந்தார். அவர் நேரே கண்ட திருவருட் செயலொன்றை

யெமக்கறிவித்தது வருமாறு:—திருச்செந்தூருக் கருகில் கைலாசகேத்திர மென்னும் ஊரிலுள்ள ஒரு குடியானவன் ஒரு நாயை வளர்த்தான். அந்நாய், சைவ உணவையே தான் உண்ணும் உணவாகக் கொண்டிருந்தது.

அந்நாய் நாடோறும் அவ்வூருக்கருகிலுள்ள பார்ப்பனர் வீதி யொன்றனை யணுகி அங்குக் கிடைப்பனவற்றையே தின்று கொண்டிருந்தது. இச் செய்தியைக் கைலாச கேத்திரத்திலுள்ளவர்களும் பிறரும் அறியலானார்கள். கைலாச கேத்திரமென்னும் ஊருக்கும், அருகிலுள்ள பார்ப்பனர் பதிக்கும் இடையில் தாம்பிரபருணியாறு ஓடுகிறது. அவ்வாற்றில் வெள்ளம் ஓடுகின்ற காலத்திலும், அந்நாய் நதியைத் தாண்டிச் செல்லாமலிருப்பதின்று. ஈஸ்வர வருடம் நிகழ்ந்த பஞ்சத்தில் தாம்பிரபருணியிற் பெருவெள்ள மொன்று வந்தது. நீர் பெருகி ஊருக்குள்ளும் வந்தமையின் சனங்களெல்லாரும் கரைமீது நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது, நாடோறும் நதியைத் தாண்டிச் சென்ற நாயும் நதியைத் தாண்டுவதற்காகப் பார்த்துக்கொண்டிருந்தது. பின்னர்த் தண்ணீரில் வீழ்ந்தது. நீந்தவுந் தொடங்கியது. அது நீந்திச் செல்லுவதை யாவருங் கண்ணுறும்போது, அது நதியின் நடுவண் சென்று அப்புறம் போக முடியாது அமிழ்ந்துவிட்டது. அஃதமிழுங்கால், யாவருங் கண்டதிசயிக்கப் பெரிய ஜோதியொன்று தோன்றிப் படர்ந்தது.

### 3. நல்லறிவு படைத்த நாய்

இராமநாதபுரத்திற் கணித்தாய நாகநாதர் கோயிலில் உற்சவம் நடைபெறுவதுண்டு; அதற்குப் பலவிடங்களினின்றுஞ் சனங்கள் வந்து கூடுவார்கள். அத்திருவிழாவிற்குப் பாம்பனிலிருந்து சென்றவர்களில் சேதுராமன் என்ப



வன் ஒருவன். அவன் திருவிழாவைக் கண்டு திரும்பும்போது ஒரு நாயைத் தனியே நிற்கக் கண்டான். அவன் அதனை யழைத்தமையின் அதுவும் அவனைப் பின்றொடர்ந்து வந்தது. அது மிக உயரமாயும், கறுப்பாயும், சடை மயிரோடு மிருந்தது. பாம்பனில் சேதுராமன் அந்நாய்க்கு ஆகாரங் கொடுத்து வைத்திருந்தான். அது சைவ உணவைத் தவிர வேறு கொள்ளுவதில்லை. அது அவன் வீட்டுத் திண்ணை யோரத்திலேனும், தெரு மத்தியிலேனும் படுத்துக்கொண்டிருக்கும். சேதுராமன் வந்து அழைத்தால் போகும். அது ஒருவரையும் ஒன்றுஞ் செய்வதில்லை. அது அமாவாசை தோறும் சூரிய உதயத்திற்கு முன் சேதுவிற்குச் சென்று முழுகி வந்தது. அம்முழுக்கை அது எப்போதுந் தவறாமல் செய்து வந்தது. யாராவது ஒருவர் இறந்து போவதாயின், அஃதறிந்து அது சத்தமிடுவது வழக்கம். அது சத்தமிட்டால் ஒருவர் இறந்து போவாரென்பது நிச்சயமாகவே யிருந்தது. நிற்க.

அறிவு மிகுதியுமுள்ள அந்நாயை முன்னர் வளர்த்துக் கொண்டிருந்த ஒருவர் அது இருக்குமிடத்தை விசாரித்துக் கொண்டே பாம்பனை யடைந்தார். அவர் அந்நாயைக் கண்டதும் அதனை அணைத்துக்கொண்டு அழுதார். அந்நாயும் அவரை நன்கு தெரிந்துகொண்டது. பின்னர், அவர் நாகநாதர் கோயில் உற்சவத்தில் அதனைத் தவறவிட்ட செய்தியைக் கூறி, "அதன் அருமைக் குணங்களை யெல்லாம் அறிவீர்களா?" வென்று அங்கிருந்தவர்களைக் கேட்டார்; சேதுராமனிடம் விடைபெற்றுக்கொண்டு நாயையும் அழைத்துக் கொண்டு போனார். அந்த நாயும் சேதுராமனைப் பார்த்து, அவனை மும்முறை வலம்வந்து வணங்கிவிட்டுப் போனது.

## 4. நவபாஷாணத் தீர்த்தம்

நான் ஒரு வழக்கில் அகப்பட்டிருந்தேன். ஜமீன்தார் P. கோடசாமித் தேவர் வாதியாக விருந்தார். நான் உட்பட 12 பேர்கள் மீது அவர் வழக்குத் தொடுத்திருந்தார். அவ்வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றது. கோடசாமித் தேவர் மிக வன்மையுடையவராகலின் எங்களைத் தண்டிக்க வேண்டுமென்று நீதிபதிக்கு அறிவுறுத்தி யிருந்ததாகவு மறிந்தேன். நீதிபதி விசாரணை செய்து எனக்கு நன்மையாக முடியாதென்று கூறினார். என்னுடைய நியாயவாதி(வக்கீல்) மலாக்கா துரையாவர். அவர், நியாயாதிபதியின் எண்ணம் எனக்கு விரோதமாக விருக்கிறதென்று தெரிவித்ததோடு, மேல் நீதிமன்றத்தில் செய்யும் முறைபாட்டில் (அப்பீல்) வெற்றி பெறலாமென்றும், எப்படியும் என்னைக் காவல் தண்டனைக்குட்படுத்தே னென்றும் உறுதி கூறி 300 ரூபா தயாராக வைத்திருக்க வேண்டுமென்றார். யான் கடவுளையே நோக்கி நின்றேன். ஒருநாள் இரவு இருட்டறையில் படுத்துக்கொண்டு வழக்கைப்பற்றிச் சிந்தித்து முருகப்பெருமானை நோக்கி முறையிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் தோன்றி "பயப்பட வேண்டாம். தேவி பட்டினத்திலுள்ள நவபாஷாணத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய். வழக்குத்தள்ளப்படும்." என்றார். இவ்விடயம் எனக்குக் கனவிலுரைத்தது போல் தோற்றியது. உடனே விழித்துக் கொண்டு, சொல்லப்பட்ட செய்தி உண்மையாயின் அதனை மறுமுறையுஞ் சொல்லவேண்டுமென்றெண்ணினேன். விடியற் காலத்திலும் அவ்வாறே சொல்லப்பட்டதோடு, உடனே நானும் என்னிடத்தில் வேலைக்கிருந்த ஒருவரும் புறப்பட்டு நவபாஷாணத் தீர்த்தத்தை யடைந்தோம்; யான் அத்தீர்த்தத்தில் இறங்கி ஒருமுறை முழுகி யெழுந்ததும் என்னுடைய தலைமயிரிலிருந்து



பேன்கள் இறங்குவதுபோற் காணப்பட்டது; மறுபடியும் அப்பேன்களிற் சில நுனி மயிரைப்பற்றி ஏறின; மறுபடியும் இருமுறை மூழ்கி யெழுந்ததும் என் தலையிலிருந்த ஒரு பெருஞ் சுமை இறக்கப்பட்டதாகவுங்கண்டு விழித்தேன். அடுத்த தினமே அத்தீர்த்தத்திற்குச் சென்று மூழ்கிவிட்டு, அவ்விடத்திலேயே ஒரு வீட்டில் உணவருந்தித் திரும்பினேம். மறுவாரத்திற் குறிக்கப்பட்டிருந்த ஒரு நாளில் நீதிமன்றத்திற்குச் சென்றதும், நீதிபதி வழக்கை யெடாமல் ஒரு நாள் தள்ளி வைத்தார்; மறுநாளும் அவ்வாறே தள்ளிவைத்தார். மூன்று நாள் சென்றபோது என்னோடு என்னுடைய அன்னை, அம்மான் முதலிய யாவரும் வந்தார்கள். அங்கிருந்தவர்கள் சுமார் 300 பேர் இருக்கும். என்னுடைய நியாயவாதி மாத்திரம் அன்று வரவில்லை. நீதிபதி முடிவு சொல்லவேண்டியதே மிகுதியாயிருந்தபடியால் நியாயவாதி வந்திருக்கின்றாரென்று மாத்திரம் விசாரித்துக் கொண்டு 'வழக்கு தள்ளப்பட்ட'தென்று கூறினார். தீர்ப்பு யாவருக்கும் பெருவியப்பை விளைத்தது.

மேற்சொன்ன வரலாறுகளால் கடவுள் வழிபாடு எத்துணை அவசியமென்பது தெள்ளிதிற்றெள்ளிதே. உடலைப் பற்றிய நோயாகிய பசிநீங்க உணவு எங்ஙனம் வேண்டற்பாலதோ, அங்ஙனமே உயிரைப்பற்றிய நோயாகிய இறப்புப் பிறப்பு என்னுந் துன்பங்கள் நீங்க இறைவன் வழிபாடும் வேண்டற்பாலதாம். நாம் நாடோறும் 2, 3 முறை அன்னம் புசிப்பதுபோல் கடவுளை வழிபடுவதும் பலமுறையாக விருத்தல் வேண்டும். இறைவனை எக்காலத்தும் வழிபடுவோன் பரிசுத்தமானவனும் மிகமேலானவனுமாக விருக்கிறான். இதனாலன்றோ நமது பரதகண்டத்திருந்த பெரியார் உணவு கொள்ளுமுன் கடவுள் வழிபாட்டை யேற்படுத்

தினார்கள். "இரைதேடுவதோடிறையுந்தேடு" என்று நினைவூட்டப் பசிநோயே மிகச்சிறந்த துணையாமென அவர்கள் எண்ணினர். கடவுள் வழிபாடில்லா மனிதர் கைகால்களில்லாதவர்கட் கொப்பவார்கள். பெரிய ஞானிகளுடைய வரலாறுகள் யாவும் கடவுளை முன்னிட்டே ஞானமிருத்தல் வேண்டுமென்னுங் கொள்கையை மிகவும் வற்புறுத்திக் கூறுகின்றன.

இனி, கடவுள் வழிபாடு, எங்கும் நிறைந்து விளங்கும் இறைவன் உயிர்களின் நலத்தின் பொருட்டுக் கொண்டுள்ள மூர்த்தி வழிபாடாகவே யிருத்தல் நலம். என்னை? எங்கும் நிறைந்து விளங்கும் நிலையில் அவனை வழிபடுவது யோகி ஞானிகளுக்கே பயன்படுமாகலானும், அவனுடைய மூர்த்தி வழிபாடு யோக ஞானிகளுட்பட்ட யாவர்க்குமே பயன்றருமாகலானுமென்க. இம்மூர்த்திகள் பல திறப்பட்டிருப்பினும் ஒருவனையே பற்றியுய்தி பெறல் வேண்டும். அவ்வாறு பயன் பெற்றோர் திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மணிவாசகப் பெருமான், அருணகிரிநாத முனீந்திரர் முதலிய பெரியோராவர். மேற்சொன்ன கார்த்திகைச் சுவாமிகளுடைய சரிதையும் ஒரு மூர்த்தி வழிபாட்டையே விளக்கும். வடமொழி மறையாய அதர்வவேத சரபோபநிஷத், "சமுசார துக்க நாச முத்திப் பிராப்தியின் பொருட்டு விட்டுணு முதலிய சருவ தேவர்களையும் விட்டு எஞ்ஞான்றுந் தியேயனாகவுள்ள சிவனையே தியானித்தல் வேண்டும்." என்றும், மணிவாசகப் பெருமான் றமிழ்மறை,

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்



எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே"

என்றும், அருணகிரிநாதப் பெருமான் றமிழ்வேதம் "........ தசைகொண்டு வேய்ந்த வகம் பிரிந்தால் வேலாற் கிரிதொளைத்தோனிரு தாளன்றி வேறில்லையே." என்றுமெடுத்துரைக்கின்றன கொண்டும் அறியலாம். அத்தகைய வழிபாடொன்றே யாவர்க்கும் உடம்பாடாம்.

இனி, வாக்கு வல்லமை உலகத்தாரை வசப்படுத்துவது போல் உள்ளமே கடவுளை வசப்படுத்தும். 5 இந்திரியங்கள் மனத்திலும், மனம் பிராணனிலும், பிராணன் பரமான்மாவிலு மடங்குமாகலின், இந்திரியங்களடங்கு நிலைக்களம் உள்ளமே யென்பது தேற்படுகின்றது. இன்னும் இறைவனை நன்கு வழிபடுவதற்கும் உண்மையான பேரன்பை அவனிடத்திலே செலுத்துவதற்கும் உள்ளமே துணையாக விருப்பதால் காமதனைப் பொய் வஞ்சகம் முதலிய அழுக்குகள் அடையவொட்டாது பரிசுத்தமாக வைத்துக் கொண்டு கடவுள் வழிபாடு செய்ய வேண்டும். இவ்வழிபாடு, இக்காலத்தே, நம்முடைய முழுமுதற் கடவுளாகிய முருகப் பெருமானைப்பற்றி யிருப்பின் பெரியோரடைந்த பெரும்பயனை எளிதினு மெளிதாக வடைதல் கூடுமென்பதற் கையமின்று. 'கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன எந்தை' அருணகிரிநாத முனீந்திரரே இதற்குப் போதிய சான்றாம். சுபம்.

முற்றும்.

# இச் சமயத்திற்கு வேண்டிய சமயம்

(இதழ் - ௧0 - மலர் - உ - ககஉ-வது பக்கத் தொடர்ச்சி)

[திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள்]

இக்காலத்தில் ஒரு சமயம் நன்கு மதிக்கப்படவேண்டுமாயின், அது மக்கள் அறிவிற்கும் அனுபவத்திற்கும் பொருந்துவதாயிருக்கவேண்டும். அது அறிவியல் நூல்கள் கண்டுபிடித்திருக்கும் ஐயந்திரிபற்ற உண்மைகளை ஒத்துக்கொள்வதாயிருக்கவேண்டும். அறிவியல் நூல்களால் அனுகவொண்ணாத தத்துவங்களும், அளக்கவொண்ணாத அனுபவங்களும் உளவென்று கொள்ளுவதிலும், சமயக்கண்கொண்டு பார்க்கில் புதிய தத்துவங்களும் புதிய ஆராய்ச்சி முறைகளும் புலப்படும் என்று சமயம் போதிப்பதிலும் இழுக்கில்லை, அது உண்மையே யாதலால். ஆனால், ஆய்ந்தளந்து நிலைநாட்டப்பட்ட பிரபஞ்ச உண்மைகளை ஒத்துக்கொள்ளாமல், அவற்றிற்கு மாறான பண்டைக்கால நம்பிக்கைகளை ஆராயாமல் அப்படியே ஒத்துக்கொள்வது இக்காலத்திய சமயத்திற்கு ஒவ்வாது. சில புராதனக் கதைகள் உருவகமாய்ச் சில உண்மைகளைக் கூறுகின்றன. அவற்றைப் பருப்பொருளில் கொள்ளக்கூடாது. சில பல பழங் கொள்கைகள், பிரபஞ்ச ஆராய்ச்சிக்கு இப்போது வாய்ந்துள்ள அத்தனை வசதிகள் வாய்ந்திராத முற்காலத்தில் ஏற்பட்டவையாதலால் பிழைபட்டவையா யிருக்கலாம். அவற்றைக் கைவிடுதலால் தவறொன்றுமில்லை. ஒரு கொள்கை இந்நாளில் தோன்றியதாயினும் முன்னாளில் தோன்றியதாயினும், உண்மைச்சோதனையில் நிற்காவிடில் மாறவேண்டும்; அல்லது மறையவேண்டும். மெய்ச்சமயம் எதுவும் உண்மையையே அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டுமாதலால், அது நல்லறிஞர்



அறிவாராய்ச்சி முடிபுகளைக் கண்டு அஞ்சவேண்டுவதில்லை. இவ்வாறு அஞ்சாமல் ஆர்வத்தோடு அவ்வப்போது தெரியவரும் உண்மை முடிபுகளை அங்கீகரித்துத் தழுவிக் கோடல் இக்காலத்திற்கு வேண்டிய சமயத்தின் முதல் இயல்பாகும்.

இச்சமயமானது, அறிவியல் நூலால் அளவிட்டுரைக்க இயலாத ஆன்ம தத்துவத்தையும், உடற் சார்பிற்கு முன்னும் பின்னும் உயிர்க்கு உளவாய நிலைகளையும், உயிர், உடல், உலகம், கடவுள் இவைகளுள் ஒன்றற்கொன்றுள்ள தொடர்புகளையும்பற்றி அவற்றை அனுபவத்தாலுணர்ந்த பெரியோர்கள் அவ்வதிகாரங்கொண்டு உரைக்கும் உண்மைகளையும் தன்னகத்துக் கொண்டதாயிருக்கவேண்டும். அன்றியும், அவ்வனுபவ ஞானத்தைப் போதிய ஆர்வமும் முயற்சியும் உடைய எவர்க்கும் புலப்படுத்தும் அனுஷ்டான முறையையும், அதைக் கையாளுவோரை வாழையடி வாழையாகத் தன்னகத்தே தோற்றுவிக்கும் ஆற்றலையும் உடையதாயிருக்கவேண்டும். மேலும், இச்சமயமானது எந்நாட்டவர்க்கும் எம்மொழியாளர்க்கும் உரிமையுடையதா யிருக்கவேண்டும்.

பின்னும், அதைச் சார்ந்து நிற்போரது அன்றாட வாழ்விலும் அது விரவி நின்று, அடுப்பங்கரை முதல் அரசவைக்களமீறாக உள்ள எவ்விடத்தும் அவர்தம் எண்ணங்களையும் கொள்கைகளையும் செயல்களையும் தூய்மைப்படுத்த வல்லதா யிருக்கவேண்டும். பேசுவோர்க்கும் கேட்போர்க்கும் பொருள் தராத வெறும் தத்துவப் பேச்சுகளைப் பேசுவதில் மேன்மையுமில்லை பயனுமில்லை. மனிதன் தனித்தும் பிறரொடு கூடியும் வாழும் அன்றாட வாழ்வில் நன்மையே கடைப்பிடித்தொழுகுமாறு தூண்டுவதைத் தன் முதற்கடமையாக இச்சமயம் கொண்டிருக்கவேண்டும். அதாவது, தற்காலத்தில் பொருளாதாரத்திலும், சமூகத்திலும், அரசியலிலும், சமயத்திலும் காணும் பல்வகைப் பிணக்குகளைத் தீர்க்கும்

வழியை அது காட்டவல்லதாயும், காட்டுகின்றபடி நடக்கும் பெரியோரைத் தன்பாற் கொண்டதாயு மிருக்கவேண்டும்.

இவ்வியல்பு ஒரு சமயத்தில் நன்றாய்ப் பதிந்திருக்குமாகில், அதை வேறு பகுதிகள் மறைத்துவிடாதிருக்குமாகில், அச்சமயத்துள்ளார் மன்னுயிர்கட்குத் தொண்டாற்றும் மனப்பாங்கும் முயற்சியும் உடையரா யிலகுவர். இத்தயாமூல தன்ம உணர்ச்சியும், அவ்வுணர்ச்சியால் எழும் பரோபகாரச் செயலும் தனது முக்கிய அமிசங்களில் ஒன்றாகக் கொள்ளாத சமயம் இக்காலத்தில் பயன்படாது.

மேலும், இந்நாளில் மக்கள் மனதைக் கவரவல்ல சமயமானது உண்மைகள் யாவும் ஏதோ ஒரு நாட்டில் நிலவும் ஒரு சமயத்தில்மட்டும் உள்ளன என்று கருதாமல், எல்லாச் சமயங்களும் மெய்ச் சமயங்களே என்றும், ஒவ்வொன்று ஒவ்வொருண்மையைப் பெரிதும் வற்புறுத்துவதென்றும் கொண்டு எவற்றையும் தழுவிச் செல்வதா யிருக்கவேண்டும்.

இவ்வியல்புகளெல்லாம் பொருந்திய சமயம் நமது நாட்டில் உளதோ இலதோ என்பது அடுத்த கேள்வியாம். பிரமாணங்கள் மூன்றனுள் யுத்தியும் அனுபவமும் இரண்டாகும்; சுருதி மற்றது. ஆகவே, அறிவிற்கும் அனுபவத்திற்கும் மாறாயிருப்பவை நம் சமயத்திலும் மெய்யெனக் கொள்ளப்படா. ஆனால், நுண்ணிய உண்மைகள் பல நுண்ணறிவுடைய ஒருசிலர்க்கே அநுபவ வாயிலாகக் காணப்படும் என்பதும், அந்நுண்ணறிவாற்றல் இல்லார்க்கு அவை எட்டா என்பதும் கொள்ளத்தக்க நியாயமே. அறிவியல் நூல் காணும் முடிபுகள் அனைத்தும் என்றும் மாறாத உண்மைக் கோட்பாடுகள் என்று நாம் கூறிவிடமுடியாது. அம்முடிபுகளிற் பல, நாளடைவிற் புதிய உண்மைகள் புலப்பட்டபோது மாறுதலடைந்தன; சில அடியோடு தள்ளப்பட்டன. பலவகைத் தூலக் கருவிகளைக் கொண்டும் மான



தக்காட்சி கொண்டும் கண்டுபிடிக்கும் உண்மைகள் இவ்வாறு மாறுமியல்பின; மாறுமல் அநுபவத்திற்கு ஒத்தனவாய்க் காணுமளவும் அவற்றை அங்கீகரித்துச் செல்லலே அமையும். ஆனால், நம் சமயத்தில் யோகக்காட்சி என மேலாய காட்சியொன்று கூறப்படுகின்றது. தற்கால அறிவியல் நூல் வல்லாரது மனக் காட்சிக்கும் அப்பாற் சென்று நுண்பொருள் காணவல்லது இவ்வியோகக் காட்சி. இதனையுடையார் கண்டு கூறுவதை மற்றையோர் காணவும் முடியாது; அதுபற்றி மதிப்புரை கூறவும் அவர்க்குரிமையில்லை. இஃதிங்ஙனமாயினும், நமது சமயத்திலும் முப்பொருளையும் பற்றிய உண்மையே அடிப்படையாயுள்ளது என்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஆதலால், புத்தம் புதிய கலைகள் எத்தனை வளரினும், அவை யாவும் நம்மால் வரவேற்கத்தக்கனவே.

நமது சமயத்தின் மிகச் சிறந்த பெருமையாக நாம் இன்றும் பாராட்டவிருப்பது, நம்முள் சில பெரியோர்கள் அனுபவ ஞானிகளாக விளங்கிவருவதே. இந்த ஞான பரம்பரை நம் நாட்டில் என்றும் பொன்றினதில்லை. இந்நாளில் பொது ஜனங்கள் அளவுக்கு மிஞ்சி உலக அல்லல்களில் அகப்பட்டுத் தத்தளித்தலாலும், சரியான தலைவர்கள் போதுமானபேர் கிடைக்காமையாலும், அநுபவஞானமும், அந்த ஞானத்தில் ஆவலும் நம்மவரிற் பலருக்கு இல்லாது போய்விட்டது. எனினும், ஒரு சிலரேனும் அவ்வொளியை மங்காது காத்து வருகின்றனர்.

இனி நம் சமயமானது, அன்றாட வாழ்வின் துறைகள் அனைத்திலும், நுழைந்து மக்களது மனமொழி மெய்களைத் தூய்மைப்படுத்தும் இயல்பையுமுடையதே என்று கட்டுரைக்கலாம். நம் சமயத்தில் பொது ஒழுக்கம் சிறப்பொழுக்கம் என மக்கள் ஒழுக்கத்தில் இரண்டு நிலைகள் கூறப்படுகின்றன. பொது ஒழுக்கம் நன்றாக வாய்க்காவிடத்துச் சமயச்

சிறப்பொழுக்கம் பொருந்தி விளங்காது; உயரிய சமய அநுபவங்கள் ஒரு நாளும் நிகழமாட்டா. சமய வாழ்வு நிலைப்பதுபோல வெளிவேடத்தாற் காணினும், அது பொய்த் தோற்றமாகவே முடியும். இப் பொதுவொழுக்கம் வேண்டும் என்னும்போதே, மக்கள் தனி வாழ்விலும் சமுதாய வாழ்விலும் தூய்மையும் அன்பும் உடையராயிருக்க வேண்டுமென்பதும் வற்புறுத்தப்படுகின்றது. பஞ்சமகா பாதகங்கள் என்று எண்ணப்படும் பொய், கொலை, களவு, கள், காமம் என்னும் பாவங்கள் நீங்கினாலன்றிப் பொதுவொழுக்கம் வாய்ப்பதில்லை. இவை நீங்கியவிடத்து வாய்மை, அன்பு, அருள், முதலிய நற்பண்புகள் வளர்கின்றன. இனிச் சமய அநுபவத்திற்குரிய சாதனங்களாகக் கருதப்படும் அட்டாங்க யோகத்தில் முதலிரண்டு படிகளாயுள்ளவை இயமம், நியமம் என்பவை. இவைகளைத் திருமூல நாயனார் பின் கண்டவாறு விளக்குகின்றார்:

"கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்[1]
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கள்காமம்
இல்லான் இயமத் திடைநின் றானே."

"தூய்மை அருளூண் சுருக்கம்[2] பொறை செம்மை
வாய்மை நிலைமை[3] வரைதலே[4] மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமி[5] யீரைந்து நியமத்த னாமே."

---

[1] எண்குணன் = நல்லோரால் மதிக்கப்படும் குணமுடையவன்.
[2] உண்சுருக்கம் = ஊண்சுருக்கம் - மித உணவு.
[3] நிலைமை = உறுதியுடைமை.
[4] வரைதல் = கொள்வன கொள்ளலும், அல்லன விலக்கலும்.
[5] நேமி = நியமமாக உடையவன்.



"தவஞ்செபஞ் சந்தோடம் ஆத்திகம் தானம்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீ ரைந்தும்
நிவம்[1]பல செய்யின் நியமத்த னாமே."
(திருமந்திரம் - மூன்றாந்தந்திரம் - ௧-வது அட்டாங்கயோகம்.)

இயம நியமப்படிகள் இரண்டனுள்ளேயே எல்லாப் பொது ஒழுக்கங்களும் அடங்கிவிடுகின்றன; சமயச் சிறப்பொழுக்கமும் தொடங்கி எழுகின்றது. சமயச் சிறப்பொழுக்கம் நிலைபெற்று ஓங்குதற்குப் பொது ஒழுக்கமாகிய அடிப்படை அவசியம் என்பது உண்மையேயாயினும், அதனோடொட்டியுள்ள மற்றோர் உண்மையையும் மறத்தலாகாது. பொதுவறத்தில் நிலைத்து நிற்றற்கு ஒருவன்புலனோடு போராடுங்கால், அவனுக்குச் சமய அனுட்டானமும் சமயப்பற்றும் ஒரு வகையில் பெருந்துணையா யிருப்பதும் மெய்யே.

இவ்வாறு பொதுவொழுக்கமும் சிறப்பொழுக்கமும் ஒன்றையொன்று பற்றி நிற்கும். சமயவாழ்வு - சன்மார்க்க வாழ்வு - ஒளிநெறி வாழ்வு - சைவ வாழ்வு வாழ்வோர் யாவர் மாட்டும் அன்பும் தூய்மையும் அமைந்தே யிருக்கும்; அறிவாற்றல் வளர்ச்சியும் மன்னுயிர்த்தொண்டும் கலந்தே விளங்கும். இதனை அவர்களது தனிவாழ்விலும் சமுதாய வாழ்விலும் காணலாம். இவ்வாழ்வை வளர்க்கும் இயல்பினதே சைவ சமயமும். எனவே, இது மக்கள் இவ்வுலகில் அறம்பொருள் இன்பங்களை அடைவே நிரம்பப் பெற்று வீடடைய வேண்டும் என்னும் விழுமிய குறிக்கோளை யுடையது என்னலாம். "வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப வாழுமாறு மக்களைத் தூண்டுமியல்பினதே நம் சமயம் என்க.

(தொடரும்)

---

[1] நிவம் = (யோக மார்க்கத்திற்குக்) காரணம்.

# ஆன்ம சுயராச்சியம்*

[திரு. ந. சிவகுருநாத பிள்ளை]

**அறிவினும், திருவினும் சிறந்த பெரியீர் !**

பொன்னாட்டினு முயர்ந்த நன்னாடிது வெனப் பன்னாவலர் புகழும் சோழ வளநாட்டிலே, செந்திருமாதும், வெண்டிருமாதும் சேர்ந்துறையுங் காரணத்தால் "பூவாளூர்" எனப் பெயரிய இத்திருநகரிலே எல்லாம் வல்ல இறைவன் திருவருட்டுணைகொண்டு நடாத்தப்பெற்றுவரும் சைவசித்தாந்த சங்கத்தின் இருபத்தேழாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி மகிழ்தற்பொருட்டு நீங்களெல்லீரும் குழுமியிருக்கின்றீர்கள். இப்பேரவைக்குத் தலைமை பூணச் சங்கத்தார் அடியேனுக்கு ஆணை தந்தார்கள். அடியேன் வயதளவில் முதியோனாயினும் கல்வியறிவு ஆற்றலில் மிகச் சிறியேன் என்பதைச் சங்கத்தார் நன்கறிந்திருந்தும் இவ்வாறு பணித்தமைக்கு ஏது : அடியேன் பல ஆண்டுகளாக உயர்வொப்பில்லாச் செந்நெறியாகிய சித்தாந்த சைவத்துக்குச் சிறு தொண்டாற்றிவருவது பற்றியேயாகும் என்று துணிகின்றேன்.

இனி "ஏழையறிருகாற் பசுக்கண் மற்றிவரால் இயன்றிடத் தக்கதொன்றில்லையே" என்றபடி அடியேனாற் செய்யத் தக்கது யாதுமில்லை. "கருவிகளனைத்து மென்னுட் கலந்து நின்றியக்காநின்ற, ஒருவனையின்றி யானே உஞற்றுதலின்மையாலே" அவன் காட்டும் வழிநின்று எனக்குக் கொடுத்த தலைமைப்பணியை ஆற்றத் துணிகின்றேன். பேரவையின் தலைவராவார் தலைமையுரையொன்று நிகழ்த்துதல் ஆன்றோர் மரபாகலின் அம்முறைபற்றி யானும் ஒருரை நிகழ்த்த வேண்டியவனாதலின் முன்னுரை என்று பெயரிய இச் சிற்றுரையை இங்கே நிகழ்த்துகின்றேன். பிழைபொறுத்தல் சால்புடைய உங்கள் கடனாதலின் அவையடக்கம் மிகையேயாகும்.

*இது பூவாளூர், சைவசித்தாந்த சங்கத்தின் 27-ம் ஆண்டு நிறைவு விழாவின் அவைத்தலைவர், திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் நிகழ்த்திய முன்னுரையாகும்.



**அன்பர்களே !**

நமது நாட்டில் சில ஆண்டுகளாக எங்குபார்த்தாலும் "சுயராச்சியம்" "சுயராச்சியம்" என்னும் ஒலிப்பெருக்கம் நமது காதுகளைச் செவிடுபடச் செய்கின்றது. சுயராச்சியத்தின்பொருட்டு நமது மக்கள் செய்யும் தியாகங்கள் அளப்பில; அடையும் துன்பங்கள் பலப்பல. கற்றோரும் மற்றோரும் இரவு பகலாய் அதன்பொருட்டே உழைத்து வருகின்றார்கள். இத்துணை அரும்பாடுபட்டு நாம் இனி அடையப் போகும் சுயராச்சியம்தான் யாதோ?

இனி, நாம் சுயதேசம் என்று பாராட்டும் இந்தத்தேசம் நமக்கு எவ்வளவு காலமாகச் சொந்தமாகவுள்ளது? இந்தத் தேசத்தில் இனி நாம் எவ்வளவு காலம் வீற்றிருப்போம்? என்பனவற்றை உண்மையாக ஆராய்வோமாக.

நாம் என்னும் சொல்லுக்குரிய பொருள் ஆன்மாவே. ஆன்மா அநாதியிலேயே ஆணவ மலத்தோடு சேர்ந்துள்ள காரணத்தால் அறியாமையுட்பட்டுத் துன்புறுவதால் அம்மலத்தைப் போக்குதற்குக் கன்மம் மாயை என்னும் இரு

மலங்களையும் பொருளுடைய இறைவன் ஆன்மாக்களுடன் கூட்டுவித்தான். ஆன்மாக்கள் மாயையின் காரியங்களாகிய தநு கரணம் புவனம் போகம் என்னும் உடல், கருவி, உலகம், புசிக்கப்பெறும் பொருள்களைச் சார்ந்து நல்வினை தீவினைகளாகிய கன்மங்களைச்செய்கின்றன. இவ்வினைகள் ஆன்மாக்களால் ஆணவமலத்தின் சார்பால் 'யான்' 'எனது' என்னும் செருக்குடன் செய்யப்பெறுவதால், அவ்வினைகள் ஆகாமியம் என்னும் பெயருடன் அவற்றைச் சார்கின்றது. இங்ஙனம் ஈட்டப்படும் ஆகாமியங்களெல்லாம் சேர்ந்து சஞ்சிதம் என்னும் பெயரால் ஒரு களஞ்சியமாகத் தொகுக்கப்படுகின்றன. பின் பிராரத்தம்என்னும் பெயருடன் அவை அனுபவத்துக்கு வருகின்றன. "தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னைவீயா தடியுறைந்தற்று" "அழக் கொண்டதெல்லாம் அழப்போம்" என்னும் பொய்யா மொழிகளின்படி, வினைகளைச் செய்தோர் அவரவர்செய்த வினைப்பயன்களை அனுபவித்தே தீரல்வேண்டும் என்பது வினைச்சட்டமாதலின், அவரவர் செய்த வினைகளின் பயனாக அவ்வவற்றிற்கேற்ப இறைவன் தனு கரண புவன போகங்களைக் கொடுக்கின்றான். இனி, தனுகரண புவன போகங்கள் ஒன்றுபோல் இல்லாமல் அவரவர் செய்த வினைகளுக்கேற்ப எத்துணையோ வேறுபட்டவைகளாக இருக்கின்றன. இம்முறையிலே நாம் இந்தத் தேகத்தையும் இந்தத் தேச முதலியவைகளையும் அடைந்திருக்கின்றோம். தேகம் எப்பொழுதும் நிலையாகவுள்ளதன்று. "கருவினுள்ளழிவதாயும் கழிந்திடாதழிவதாயும், பரிணமித்தழிவதாயும் பாலனாயழிவதாயும், தருணனாயழிவதாயும், தானரைத்தழிவதாயும்" உள்ள நிலையாமையுடையது. "வினைப்போகமே யொருதேகங் கண்டாய் வினைதானொழிந்தாற் றினைப்போதளவும் நில்லாது கண்டாய்" என்றபடி எடுத்தவுடலில் அனுபவிக்க வேண்டிய போகங்களை அனுபவித்து முடிந்தவுடன் உடல் நீங்கி



விடுகின்றது. உடல் நீங்கவே அதனோடு தொடர்புடைய புவன போகங்களும் நம்மைவிட்டு நீங்கிவிடுகின்றன.

அன்பர்களே !

இவ்வுண்மையைக் கொண்டு நாம் நோக்குவோமாயின் இந்தத் தேசம் நமக்கு முன் சொந்தமாக இருந்ததில்லை; எதிர்காலத்திலும் நமக்குச் சொந்தமாக இருக்கப்போவதில்லை. நம்மைப்போல் எத்துணையோ பேர்கள் முன் இந்தத் தேசத்தைத் தமக்குச் சொந்தம் சொந்தம் என்று நினைத்து நீங்கிப்போயிருக்கின்றார்கள். நமக்கும் அவ்வாறேதான் ஆகப்போகின்றது. ஆதலின் தேசப்பற்று ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டியதும், தமது தேசத்தைச் சொந்த ஆட்சியில் வைத்துக்கொள்ளவேண்டியதும் ஒருவகையில் நமக்குக் கடப்பாடேயாயினும், நாம் செய்ய வேண்டிய தலைமையாகிய கடமையை அறவே மறந்து நிலையில்லாச் சம்பந்தமுடைய தேசத்தின் பொருட்டே இரவு பகலாய் உழைத்துஉழைத்து நமக்கு அருமையாகக் கிடைத்த இந்தப் பிறவியை இழந்துவிடுதல் தக்கதன்றென்பதே எனது கருத்தாகும்.

இனி, ஆன்மக்களாகிய நாம் தலைமையாகச் செய்ய வேண்டிய கடமை யாது என்பதை ஆராய்வோம். அது நமது ஆன்ம சுயராச்சியத்தின் பொருட்டுப் பாடுபட வேண்டியதேயாகும். ஆன்மாவின் உண்மையான நிலையை ஆராய்வோமானால் அது அறிவுடைய பொருள்; வியாபகமுடைய பொருள்; பிறப்புஇறப்பில்லாத பொருள். அங்ஙனமாகவும் நமது ஆன்மநிலை இப்பொழுது எவ்வாறிருக்கின்றது என்பதைச் சிந்தியுங்கள். இயற்கையில் அறிவுடையவர்களாக இருக்கவேண்டிய நாம், அறியாமையுடையவர்களாயிருக்கின்றோம்; எங்கும் விளங்கவேண்டிய நமது வியாபகத் தன்மை மறைந்து ஏக தேசப்பொருளாக (கண்டப் பொருளாக) இருக்கின்றோம்; பிறப்பு இறப்பு அற்றிருக்கவேண்டிய நாம்

கொள்ளி வட்டமும் காற்றாடியும்போல ஓயாது பிறப்பிலும் இறப்பிலும் சுழன்றுகொண்டிருக்கின்றோம். இவ்வாறு நமது இயல்புகளை ஒழித்து நம்மை அல்லற்படுத்தும் பொருள்கள் யாவை? அவைதான் ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படும் மும்மலங்களாகும். அவை நமக்கு வேற்றுச் சாதிப் பொருள்கள். நாம் அறிவுடைய சாதி; அவை அறிவில்லாச் சாதி. வேற்றுச் சாதியாகிய மலம் என்னும் பகைஞர்கள் நமது ஆன்ம இராச்சியத்திற் புகுந்து செய்யும் கொள்ளைகளும், துன்பங்களும் அளப்பில. நமது இயல்பாகிய அறிவுத்தன்மையைக் கெடுத்து அறியாமையைச் செய்துவிட்டனர்; நாம் வியாபகமாய் விளங்கி வியாபகத்துட்பட்ட எல்லாப் பொருள்களையும் அநுபவிக்க வேண்டியவர்களாக யிருக்க, நமது வியாபகத்தன்மையை அடியோடு கெடுத்து ஏக தேசத் தன்மையைச் செய்துவிட்டார்கள்; சுதந்தரமாக இயங்க வேண்டிய நமது அறிவிச்சைச் செயல்களைக் கெடுத்துப் பரதந்திரப்படுத்திவிட்டார்கள்; நம்முடைய சுய ரூபத்தையும் நடையுடை பாவனைகளையும் கெடுத்துத் தமது ரூபத்தையும் நடையுடை பாவனைகளையும் ஏற்றும்படி செய்துவிட்டார்கள்; நமது அருட்குணங்களைக் களைந்து தமது மருட்குணங்களை நம்மைப் பற்றும்படி செய்துவிட்டனர்; பிறப்பும் இறப்புமின்றி இருக்கவேண்டிய நம்மைத் தரையிலும், கீழ் மேலுலகங்களிலும் ஓயாது பிறந்திறந்துழலும்படி செய்துவிட்டார்கள்; இன்ப சொரூபராயிருக்கவேண்டிய நம்மை ஓயாக் கவலை பிணியென்றிவற்றுள் மூழ்கும்படி செய்துவிட்டனர்; அந்தோ! இவை மட்டுமா! நமக்கு இனியராய், நம்மோடு யாண்டும் இமைப்பொழுதும் அகலாது அத்துவிதமாய்க் கலந்திருக்கும் சிவபரம்பொருளையே நமக்குத் தெரியாமல் மறைத்துவிட்டார்கள்; முடி



வாகச் சொல்வோமானால் நம்மையே நாம் உணராவண்ணம் செய்துவிட்டார்கள்.

**அன்பர்களே!**

இங்ஙனம் மலமென்னும் பகைஞர்கள், நம்முடைய ஆன்ம இராச்சியத்தில் புகுந்து தமது மருட்குணங்களாகிய பீரங்கிகளாலும், ஆறுகோடி மாயாசக்திகளாலும் நம்மைக் கீழ்மைப்படுத்தி நமது வியாபாரத்தையெல்லாம் கெடுத்துத் தமது வியாபாரத்தை இறக்குமதி செய்து நாம் அடைய வேண்டிய பேராநந்தப் பெருஞ்செல்வத்தை அடையவிடாமல் தடுத்து அல்லலே செய்துகொண்டு வருகின்றார்கள். இவற்றையெல்லாம் நாம் சிறிதும் சிந்தியாமலும், அவற்றைத் தடுப்பதற்கு முயலாமலுமிருக்கின்றோமே. ஒரு சிறிது காலம் நமக்குத் தொடர்புடைய இத் தேசத்தின்பொருட்டு அரும்பாடுபட்டு வரும் நாம், ஆன்ம சுயராச்சியத்தின்பொருட்டுச் சிறிதும் சிந்தனை செய்வதில்லையே. அன்பர்களே, இனி நம்மைக் கீழ்மைப்படுத்தும் நமது பகைஞர்களாகிய மலங்களை ஆன்ம இராச்சியத்தினின்றும் ஓட்டவேண்டாமா? அதற்கு நாம் யாது செய்தல்வேண்டும்? முன்னர் மலமாகிய பகைஞர்களை ஓட்டிய அநுபவமுடைய பெரியார்களின் அறிவுரையை நாம் கேட்டல்வேண்டும்; அவ்வழி யொழுகுதல் வேண்டும். இனி அத்தகைய பெரியார்கள் தான் யாவரென்னில், அவர்கள் தான் நமது சமயாச்சாரியர்களாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் மணிவாசகர் என்னும் நான்கு பெருமக்கள். அவர்களால் அருளிச் செய்யப்பெற்றுள்ள தேவாரம் திருவாசகம் என்னும் அருள் நூல்களில் மலமாகிய பகைஞர்களை வெல்லுவதற்குரிய உபாயங்கள் பலப்பல கூறப்பெற்றிருக்கின்றன.

மலசத்தியும், நமது ஆன்மசத்தியும் ஒப்புடையனவாதலின் நம்முடைய சத்தியினாலே மலசத்தியை வெல்லமுடியாது. மலசத்திக்கு மேற்பட்ட அளவில்லாத ஆற்றலுடைய இறைவனது ஆற்றலைத் துணைக்கொண்டே மலமாகிய பகைஞர்களை நாம் ஓட்டல்வேண்டும். ஆதலின் அன்பர்களே, இறைவன் திருவருட்சத்தியைத் துணையாகக் கொண்டு,

"ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப் படைவாராமே"

என்று மாணிக்கவாசகப் பெருமான் கூறியபடி படையெடுத்துப் பகைஞரை ஓட்டி, நாம் வெற்றிமாலை சூடுவோமாக. இங்ஙனம் நமது ஆன்மராச்சியத்தை நமதாகச்செய்து, நமது ஒப்பற்ற தந்தையாராகிய சிவபரம்பொருளின் பேரானந்தப் பெருஞ் செல்வத்தை யடைந்து, இனிது வாழ்வோமாக. இதுவே நாம் அடையவேண்டிய உண்மையான சுயராச்சியம். இதுவே நமது மனிதப்பிறப்பின் குறிக்கோள். இதன் பொருட்டே நமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தல் வேண்டும்.

அன்பர்களே!

இதுகாறும் எனது புன்மொழிகளைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த நுங்கட்கும், சங்கத்தாருக்கும் நன்றி செலுத்துகின்றேன்.

# தேவாரத்திலுள்ள அகத்துறைப் பாடல்கள்*

[திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, திருவோத்தூர்]

திருவருள் மிக்க தலைவர் அவர்களே! சித்தாந்த சைவச் செல்வர்களே! தாய்மார்களே! சகோதரர்களே!

தேவாரத்திலுள்ள அகத்துறைப்பாடல்கள் என்னும் இப்பொருள் மிக்க அருமையும் பெருமையும் வாய்ந்தது. இதனைப் பற்றி, அறிவும் அநுபவமும் மிகவுடைய பெரியோர்களே பேசும் வல்லமை யுடையவராவர். ஆயினும், அறிவு அநுபவங்களில் மிக்க குறையுடைய எளியேனை இதுபற்றியே பேசுமாறு நம் சமாஜக் காரியதரிசியாகிய பெரியார் கட்டளையிட்டனர். நம் சமாஜக் காரியதரிசியாகிய சைவத் திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், நம் சைவத்துக்காகத் தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் உரிமை செய்து உழைக்கும் உரவோராவர். தமக்குரிய பெருஞ் செல்வத்துக்குரிய அலுவல்கள் பல இருக்க, அவற்றின் இடையே இக்காலத்துச் சைவர்கள் செய்த நல்வினைப் பயனால், சைவம் வளர்தற்குரிய முயற்சிகளைச் செய்யும் பெருந் தொண்டினை மேற்கொண்டு உழைத்துவரும் அவர்கள், ஒரு கட்டளை இடுவரேல், அதனை உண்மையோடு நிறைவேற்றுவதே என் போன்றார் செய்கடனாகும். ஆகவே, பெரியோர்களே, அடியேனுடைய சொற்பொழிவில் குணங்கள் உளவாயின், அவற்றை மேற்கூறிய சைவப் பெரியார் அவர்களுக்கும், மிகுதியாய்த் தோன்றும் குற்றங்களை எனக்கும் வகுத்துவிடுமாறு வேண்டுகின்றேன்.

* A lecture delivered at the Saiva Siddhantha Mahasamajam held on 1-1-37 at Conjeevaram.

சான்றோர்களே! தேவாரம் என்பது சைவர்களாகிய நாம்செய்த தவப்பயனாகத் தோன்றி நிலவும் செந்தமிழ்த் திருமறையாகும். தமிழறிவு சிறந்த சைவர்களுள், தேவாரமென்பது இன்னது என்று தெரியாதவர்களே கிடையாது. ஆகையால், தேவாரத்திற் பயிற்சிமிகுந்து நிற்கும் இச்சபையின்கண், தேவாரத்தின் பொதுவும் சிறப்புமாகிய இயல்புகளைப் பேசத் தொடங்குவது மிகையாகும் என்று கருதுகின்றேன். மேலும், தேவாரத்துள், திருஞானசம்பந்தப் பெருமான் தேவாரம் இன்று இரண்டாவது பதிப்பாக நம் சமாஜத்தால் வெளியிடப்பட்டுளது. ஆகவே, தேவாரத்தைப் பற்றி ஒன்றும் விரித்துரையாமல், அதன்கண் உள்ள அகத்துறைப் பாடல்களைப் பற்றிப் பேசத் தொடங்குகின்றேன்.

அகத்துறைப் பாடல் என்பதில், அகம் என்பது கூடுதற்குரிய பான்மையுடைய ஒருவனும் ஒருத்தியும் கூடுமிடத்து, அக்கூட்டத்துப் பிறக்கும் இன்பத்தைக் குறிக்கும். அஃது அகத்தே விளங்கி, உயிர்களால், அகத்தேயே அநுபவிக்கப்படும் அருமையுடையதாகலின், அதனை அகம் என்றே கூறுகின்றனர். துறையாவது, அகமாகிய அவ்வின்பத்தை நுகர்வதற்காக ஒருவனும் ஒருத்தியுமாகிய அவ்விருவரிடத்தும் நிகழும் நிகழ்ச்சியாகும். ஆகவே, அகத்துறைப் பாடல் என்பது, அகமாகிய இன்பத்தை அனுபவிப்பதற்காக நிகழும் முயற்சி நெறி பொருளாகப் பாடப்பெற்ற பாடல் என்னும் பொருள் தருவதாகின்றது.

அகத்துறைப் பாடல்கள், நமது அருமைச் செந்தமிழ் மொழிக்கே சிறப்பாக அமைந்துள்ள பாட்டு வகையாகும். இவை அகப்பாட்டு என்றும், துறைப்பாட்டு என்றும் கூறப்படும். அகப்பாட்டு என்னும் பெயர் பொருளிலக்கணமறிந்தோர் பலராலும் பயில வழங்கும் பெயராகும். துறைப்



பாட்டு என்பது யாவராலும் வழங்கப்படுவது. யாவரும் அறிந்துகொள்வதற்காக, இங்கு அகத்துறைப்பாடல் என்னும் பெயர் கொள்ளப்படுவதாயிற்று.

அகப்பாட்டுக்கள், செந்தமிழ்ப் பாட்டுக்களுள் மிக்க அருமை வாய்ந்தவை. அகப்பாட்டு ஒன்று கிடைக்குமாயின் அதற்குப் பொருள் காண விரும்புவோர், அது கூறும் பொருள், அடங்குதற்குரிய திணை, துறை, கூறுவோர், கேட்போர், மெய்ப்பாடு, பயன், உவமநலம் எனப் பலவற்றை ஆராயவேண்டும். இவற்றைக் கண்டு முடிவு செய்வதற்குக் காலமும் நீட்டிக்கும்; மனத்திற்கும் வேலை அதிகமாக இருக்கும். இவ்வாறு ஆராய்ந்து பொருள் காண்பது மிக்க இன்பமாகவே இருந்தபோதிலும், முடிவில், அதனால் மிக்க களைப்பும் உண்டாகும். அகப்பாட்டுகளுக்குப் பொருள் காணும் துறையில் முயல்வோர் பலர்க்கும் இவ்வுண்மை தெரிந்திருக்கும். இவ்வுண்மையினை நம் மணிவாசகப் பெருந்தகையே திருக்கோவையாருள், உலகறிய விளக்கிக் கூறியிருக்கின்றார்கள்.

ஒரு தலைவன், தலைவி ஒருத்தியைத் தனியே கண்டு, அவள்பால் தன் கருத்தைப் போக்கி வேட்கையால் மெலிவுற்று வருகின்றான்; அவனை அவனுடைய நெருங்கிய தோழன் கண்டு, "அன்ப, உனக்கு இம்மெலிவு ஏன் உண்டாயிற்று? உன்போன்றார்க்கு மெலிவு உண்டாகவேண்டுமாயின், அதற்கு இரண்டு காரணம் உண்டு. நம் செந்தமிழ்ப் பாட்டுவகைகளில் துறைப்பாட்டுக்களை ஆராய்வது ஒன்று, இசைப்பாட்டுக்களில் கருத்தைச் செலுத்தி ஆராய்வது ஒன்று. நீ இவற்றுள் எதையேனும் செய்தனையோ? உனக்கு இம் மெலிவு தோன்றுவதற்குக் காரணம் என்னை?" என்று வினவுகின்றான். இக்கருத்தினை, வாதவூரடிகள்,

“ சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்தும்,என் சிந்தையுள்ளும்,
உறைவான், உயர்மதிற் கூடலில் ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோ ? அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா ! தடவரைத் தோட்கென் கொலாம்மெலி வெய்தியதே?”

என்று கூறியருள்கின்றார்கள். இதனால், இனிய தமிழ்த் துறைப் பாட்டும், இசைப்பாட்டும் அறிஞர் அறிவைப் பெரிதும் வேலைகொள்ளும் அருமையுடையவை என்பது இனிது விளங்கும். இத் திருப்பாட்டின்கண், அடிகள், துறைப் பாட்டுக்களை முன்னும், இசைப்பாட்டுக்களைப் பின்னும் வைத்திருப்பதனால், இசைப்பாட்டு ஆராய்ச்சியினும், துறைப் பாட்டாராய்ச்சி பெரிதும் அருமை உடையதென்பது புலனாகும். இனி, இவ்விரண்டின் இயல்புகளும் ஒருங்கே உடைய பாட்டு உளதாயின், அஃது எவ்வளவு அருமையுடையதாகும் என்பதை அறிஞர்களே அறிந்துகொள்வார்கள். அவ்வாறே, தேவாரத்திலுள்ள அகத்துறைப் பாடல்கள் யாவும், அகத்துறை நலனும் இசைத்துறை நலனும் ஒருங்குபெற்றவையாகையால், இவற்றைப்பற்றிப் பேசுவது என்பது அருமையான காரியமென்பது கூறாமலே விளங்குமன்றோ?

அகப்பொருள், கைக்கிளை, பெருந்திணை, ஐந்திணை என ஏழு திணைகளாக வகுத்துக் கூறப்படும். இவற்றுள், கைக்கிளை என்பது பெருந்திணை, ஐந்திணை என்ற இரண்டிற்கும் தோற்றுவாய் போல்வது. ஐந்திணையென்பது, எல்லா வகையாலும் ஒத்த இயல்புடைய தலைவனும் தலைவியும் கூடிப் பெறும் இன்பம் காரணமாக நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறும். பெருந்திணை என்பது ஒவ்வாத இயல்புடைய தலைமக்கள் பின்னர், மனமொத்துக் கூடிப் பெறும் இன்பம் பொருளாக நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறுவது. தேவாரத்திலுள்ள அகத்துறைப் பாடல்கள் பலவும் “முன்னைப் பழம்



பொருட்கு முன்னைப்பழம் பொரு”ளாய், “பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றிய”னாய் உள்ள சிவபெருமானைத் தலைவனாகவும், சிவபத்தியிற் சிறந்து உயர்வற உயர்ந்த மானிட மகள் ஒருத்தியைத் தலைவியாகவும் கொண்டு நிகழ்கிறபடியால், இவை பெருந்திணைக்கே உரியவாகின்றன. “கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்” என்று கொண்டு, இவற்றை, புறப்பொருட்கே யுரிய பாடாண்டிணை என்று கொள்ளக் கருதுவர் சிலர். அத்திணையில், கூட்டமும், அதன்பின்னர் நிகழ்தற்குரிய நிகழ்ச்சியும் கூறாமல், கூடுதற்கெழுந்த வேட்கை மாத்திரமே கூறப்படும்; பெருந்திணைக்கண், கூட்டத்தையும், அதற்கு முன்னும் பின்னும் நிகழ்தற்குரிய நிகழ்ச்சியினையும் கூறுவதால், அவ்வாறு கூறப்படும் தேவார அகத்துறைப்பாடல்கள் பெருந்திணைக்கே உரியவாகின்றன.

இப்பெருந்திணையின் இலக்கணம் தொல்காப்பியத்தில் சுருக்கமாகவே கூறப்பட்டிருக்கிறது. புறப்பொருள் வெண்பா மாலை என்னும் நூலில் சிறிது விரியக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அது தேவார காலத்ததோ, அதற்கு முன்னதோ என்பது இதுபோது துணிவதற்கில்லை. இந்நிலையில் இப்பாடல்களை ஆராய்வது சிறிது கடினமாகவே இருக்கிறது.

தேவாரத்திலுள்ள அகத்துறைப் பாடல்கள் மூவர் முதலிகளால் பலவேறு திருப்பதிகளில் பாடப்பெற்றிருக்கின்றன. அவை அனைத்தையும் ஒருங்கு திரட்டி, தனித்தனியே திணையும், துறையும், கூற்று நிகழ்த்துவோரும், கேட்போரும் ஆகிய துறையுறுப்பைக் கண்டு, ஒரு நெறிப்படுத்தி, அகப்பொருள் நலம் காணவேண்டியிருக்கிறது. இவற்றைத் தனித்தனியே பிரித்துக்கொள்வது அரிதன்று; ஆயினும், பிரித்தவற்றிற்குத் திணை, துறை முதலியவற்றைக் கண்டு நெறிப்படுத்துவதற்குத் தான் ஒரு வழியும்

தெரிந்திலது. இனி, நாமாகவே, ஒரு வழியினை அமைத்துக் கொள்ளலாம் என்றால், என் போன்றார் மனநிலை வேறுபட்டிருக்கிறது. தேவாரம் பாடிய சான்றோர், தமிழ் நலமே நுகர்ந்து, தமிழ் நூலிலேயே பயின்று, தமிழறிவு சிறந்த மனப்பான்மையுடையர். என் போன்றார், இளமையில் சிறிதே தமிழ் பயின்று, பிறகு ஆங்கிலக் கல்வி பயின்று அம் மொழித் துறையிலே நினைந்து ஒழுகும் மனப்பான்மை பெற்றவர். ஆகவே, தேவாரம் பாடிய சான்றோர் மனப் பான்மை தனித் தமிழ்ப்பான்மையேயாக, என் போன்றார் பான்மை, ஆங்கில நெறி விரவிய கலப்புப்பான்மையாக நிற்றலின், நாமாக ஒரு நெறி வகுத்துக் கொள்வதும் சீரிதாகத் தோன்றவில்லை.

இந்நிலையில் தேவாரம் பாடிய சான்றோரது மனப் பான்மை கண்டு, அப்பான்மை வழியே நமது மனத்தைச் செலுத்தி, அவர் பாடலை ஆராய்வது தக்கது என்று தோன்றிற்று. அதற்குத் தேவாரம் பெரிதும் இடம் தருகின்றது. ஒரு சமயத்தில் தேவாரத் திருப்பதிகம் பாட்டியல் வகையில் எதன்பாற்படும் என்று ஒரு சங்கை பிறந்த காலத்தில், காலஞ்சென்ற ஆசிரியர் அரசஞ் சண்முகனார் என்பார் "தேவாரத் திருப்பதிகம் தொல்காப்பியம் கூறும் விருந்து என்னும் யாப்புவகையின் பாற்படும்; இதுவும் தேவாரத்திலேயே கூறப்பட்டுளது", என்று கூறி, சுந்தரமூர்த்திகள் பாடிய "விருந்தாய சொல்மாலை கொண்டேத்தி" எனத் தொடங்கும் திருப்பாட்டினை ஆதாரமாகக் காட்டினார். மேலும் அவர், "தேவாரத்துக்குப் பொருளும் அதனை ஆராய்தற் குரிய நெறியும் அத்தேவாரத்திலேயே பெறலாம்" என்றும் கூறினார்.* இவற்றை நினைவிற் கொண்டு, இச்சொற்பொழி

*இச்செய்தியினை எனக்குக் காலஞ்சென்ற விண்ணமங்கலம் தண்டாயுதபாணிக்காடவராயர் அவர்கள் கூறினார்கள்.



வுக்குரிய நெறியும் தேவாரத்திலேயே பெறவேண்டும் என்று கருதி, யானும் தேவாரத்திலேயே கருத்தைச் செலுத்தினேன். திருநாவுக்கரசர் திருவாரூரில் பாடிய திருத்தாண்டகங்களைப் படிக்கையில், "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" எனத் தொடங்கும் திருப்பாசுரம், இவ்வாராய்ச்சிக்கு ஒரு நெறி காட்டியாகத் தோன்றிற்று. அந்நெறியே பற்றித் தேவாரத்திலுள்ள அகத்துறைப் பாடல்களைத் தொகுத்தும் வகுத்தும் ஆராய்வேனாயினேன். அவை யனைத்தும் கூறின், காலம் நீட்டிக்கும் என்று அஞ்சிச் சில வற்றையே கூறத் தொடங்குகின்றேன்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் ;
மூர்த்தியவன் இருக்கும் வண்ணம் கேட்டாள் ;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டான் ;
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானான் ;
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தான் ;
அகன்றான் அகலிடத்தார் ஆசாரத்தை ;
தன்னை மறந்தான் ; தன்நாமம் கெட்டான் ;
தலைப்பட்டான் நங்கை தலைவன் தாளே"

என்பது நம் நாவேந்தர் பாடியருளிய திருப்பாசுரமாகும். இதன்கண், ஒரு நங்கை பரமனுடைய நாமம், வண்ணம், ஊர் முதலியவற்றைக் கேட்டு அவன்பால் காதற் காம வேட்கை கொள்ளுகின்றாள்; பின்பு அவனையே தனக்கு அன்னையும் அத்தனுமாவன் என்று கொண்டு, அவனுடைய பரபோகத்துக்குரிய ஆசாரத்தை மேற்கொண்டு, அதற்கு இயையாத மண்ணுலகத்து ஆசாரத்தை மறந்து ஒழுகுகின்றாள். முடிவில் தான் என்னும் தற்போதமிழந்து, அதனால் தனக்கெய்திய பெயரையும் துறந்து, பரபோக எல்லையைத் தலைப்பட்டுப் பரமசிவானுபூதியைப் பெறுகின்றாள் என்பது இதன் பொருள்.

இதன்கண் நாமம் கேட்டல், வண்ணம் கேட்டல், ஊர் கேட்டல், பிச்சியாதல் என்ற நான்கும் தேவாரத்துப் பெருந்திணைக்குரிய கைக்கிளையாகும். இவை யாவும் தலைவி பாலே நிகழ்தல் காண்க. நாமம், வண்ணம், ஊர் முதலியவற்றைக் கேட்டு எழுந்த வேட்கையால் தலைவனைக் களவிற்கூடிக் காதற் காமவேட்கை பெற்றுக் களிப்புற்று நிகழ்த்தும் கூற்றுக்கள் பெருந்திணைக்கும் உரியவாகும்.

நாமம் கேட்டாள், வண்ணம் கேட்டாள், ஊர்கேட்டாள் எனத் தலைவி செயலைக் கேள்விமேல் வைத்துக் கூறியிருப்பதை நோக்கினால், தலைவி கேள்விக்குரிய பருவமாகிய காமஞ் சான்ற பருவத்தாள் என்று தெரிகிறது. கேள்வி தானும் முன்பே கேட்டலாற் பயிற்சி பெற்றில்லாத வழிப் பயன்படாது. "கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால் தோட்கப்படாத செவி" என்பர் நம் திருவள்ளுவப் பெருந்தகையார். "கேட்டாள்" என்றது, கேள்விப்பயன் உடையவள் என்பது தோன்ற நிற்பதால், தலைவி காமஞ் சாலா இளமைப் பருவத்தேயே பரமனைப்பற்றிய கேள்விப் பயிற்சியுடையாள் என்பது துணியப்படுகிறது. படவே, தலைவி பிறந்து மொழி பயின்றதுமுதல் பரமன் நாமத்தையும் வண்ணத்தையும் கேள்வியுற்றிருந்தாளாம். கேள்வியால் ஒருவர்பால் ஒருவர்க்கு அன்பு பிறத்தல் உண்டன்றோ? அம்முறையே தலைவிக்கும் அவனது நாமவண்ணக் கேள்வியால் அவன்பால் அன்பு உளதாயிற்று. ஆயினும் அது, செயற்கையன்பாகலின், காரணம் தோன்றும்போது நினைவில் நிலவுவதும், தோன்றாக் காலங்களில் மறைவதுமாகவே இருந்து வந்தது.

இவ்வாறாக, ஒருநாள் பரமனாகிய தலைவன் பலியேற்கும் பிக்கோன் ஒருவனைப்போல உருக்கொண்டு, தலைவியின் இல்லத்துக்குப் பலிவேண்டி வந்தான். அதுபோது தலைவி,



அன்னை ஏவியதனால் வந்து பலியிட்டவள், அவனது திருவுருவைக் கண்ணாரக் கண்டாள். உடனே அவள் மனத்தில் பண்டு அவனைப்பற்றிக் கேள்வியுற்றிருந்த வடிவும் வண்ணமும் தோன்றின. அவையும் இப்போது நேரிற்காணும் வடிவு வண்ணங்களும் ஒத்து நின்றன. அதனால் அவனது உண்மைநிலையை ஆராயவேண்டும் என்னும் அவா பிறந்தது. ஒன்றன்பின்னொன்றாகப் பல எண்ணங்கள் அவள் மனத்தில் எழுந்தன. அவள் மிக்க நாணம் உடையவள் ஆகையால் பல கேட்டற்கு அஞ்சி, முதலில் "தேவரீர் பெயர் யாது?" என்று கேட்டாள். கேள்வி வழியாக முன்பே அவனுடைய நாம வண்ணங்களை அறிந்திருந்தமையின் முதற்கண் அவனுடைய நாமமே கேட்டாள். அறிந்திராளாயின் வேறுவகையாக வினவியிருப்பாள். அவன் தன் பெயரைக் கூறினான். பெயரும் பண்டு கேட்டிருந்த பெயராதலால், கண்டதும் அவனது திருவுரு முற்றும் அவள் மனத்தில் இடம்பெறுவதாயிற்று; அதன் பயனாக வண்ணங்களின் ஒற்றுமை காண விரும்பி, அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள். இதன்கண் நம் நாவரசர் மூர்த்தி என்றும், இருக்கும் வண்ணம் என்றும் கூறியருளியிருத்தலால், கேள்வியாலும் காட்சியாலும் கொண்ட அவனது திருவுரு அவள் மனத்தில் நிலைபெற நின்றமையும், வடிவும் வண்ணமும் ஒத்து நின்றமையும் இனிது விளங்குகின்றன. இதனால் அவள் மனத்தில் அவன்பால் உண்டாகியிருந்த செயற்கையன்பு உண்மையன்பாகி, காதற் காமமாகத் திரிவதாயிற்று. "அன்னவரே எங்கணவர் ஆவர்; அவருகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வேன்" என்னும் துணிவு அவள் நெஞ்சில் நிற்பதாயிற்று.

ஆனால், மனம் என்பது நிலைபெற நில்லாது அலையும் இயல்பிற்று. மேலும் பெண்மனம் என்ற வழி, அதன்

அலைச்சலுக்கு அளவில்லை. ஏனெனில், "மகளிர் மனம்போல வேறுபடும்" என்றும், "உண்ணிறை உடையவல்ல ; ஓராயிரம் மனத்தவாகும்" என்றும் சான்றோர் கூறுப. அதனால், தலைவி, "அவனைக் கூடுதல் முடியுமோ? முடியாதோ? அவன் ஊரையேனும் அறிந்திருப்பின், தோழி முதலாயினாரை அனுப்பி அவன் அருள் நிலையை அறியலாம் ; சமயம் வாய்க்கின், நாமாகிலும் நேரிற் சென்று, நம் கருத்து முற்றுவித்துக் கொள்ளலாம்," என்பன போலும் எண்ணங்களால் அலைப்புண்பாளாயினள். பின்பு ஒருவாறு தேறி, அவன் உறைபும் ஊரையும், அதன் இயல்பையும் அறிந்து கொள்ள நினைந்து, "எவ்வூரீர் எம்பெருமான்?" என்றாள். அதற்கு, அவன், "ஆரூர்" என்று செப்பினன். அதன் இயல்பு கேட்கு முகத்தால் தன் வேட்கையும் தோன்ற, "பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்" அதற்கு விடை கூறப் புகுந்த பரமன், அவள் வேட்கை நிலையினைத் தெளிய அறிந்தவனாகலின், அது மிகுந்து அவள் பிச்சியாகுமாறு, தன்னுடையாலும், மாயமொழிகளாலும் பேதுறுவித்தான். இதனால், அவள்,

"பட்டுடுத்துப், பவளம்போல் மேனியெல்லாம்
பசுஞ்சாந்தம் கொண்டணிந்து, பாதம் நோவ
இட்டெடுத்து நடமாடி, இங்கே வந்தார்க்(கு)
"எவ்வூரீர் எம்பெருமான்?" என்றேன் ; ஆவி
விட்டிடுமா றதுசெய்து, விரைந்து நோக்கி,
வேறோர் பதிபுகப் போவார் போல,
வட்டணைகள் படநடந்து, மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னினாரே."

என்பன போல்வன கூறி அலமருவாளானாள்.

தலைவன் அவளை விரைந்து நோக்கி, வட்டணைபட நடந்து, மாயம் பேசி நீங்கினதும், அவளது நெஞ்சும் நிறையும் நெகிழ்ந்து நீங்குவவாயின. அவள், இன்பத்தை வெறுத்தாள் ; துன்பத்துப் புலம்பினள் ; எதிர்பெய்து பரிந்தாள் ; ஏதம் ஆய்ந்தாள் ; பசியட நின்றாள் ; பசலை பாய்ந்தாள் ; உண்டியிற் குறைந்தாள் ; உடம்பு நனி சுருங்கினள் ; கண்டுயில் மறுத்தாள் ; கனவொடு மயங்கினள். சுருங்கக்கூறின், "பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்."



இதன்கண், "அவனுக்கே" என்றது, பண்டு கேள்வியாலும், பின்பு கண்ணாலும் கேட்டும் கண்டும் அறிந்து கொண்ட பரமனது மூர்த்தமேயாகலின், அதனையே வற்புறுத்த "அவனுக்கே" என்றும், காணாத முன்பு மனக் கோயிலில் வைத்து அன்பு செய்து போந்த திருமூர்த்தியே, கண்ணாற் கண்ட பின்டும் அங்கு நின்று நிலைபெற்ற அன்பால் பூசிக்கப்படுகிறான் என்பது தோன்ற, "பெயர்த்தும்" என்றும் கூறப்பட்டிருத்தல் காண்க.

இவ்வாறு தலைமகள், பசலை பாய்ந்தும், உண்டியிற் குறைந்தும், உடம்பு நனி சுருங்கியும் பெரிதும் வேறுபட்டு வருவதைத் தோழி அறிந்தாள். இவள் புலம்பித் தோன்றுவது காணும் தோறும், "இவள் மனத்துட் புகுந்து கலக்குவான் ஒருகாலை உளனாதல் வேண்டும்" என்று துணிந்து, காலம் நோக்கி யிருந்தாள்: இதற்குள், தலைவனும் பலமுறை இவள் இல்லத்துக்குப் பலியேற்பான் வந்து, இவளை யாவரும் "பித்தேறினள், பிச்சி" என்று கூறத்தக்க அத்துணைப் பேதுறவு எய்துமாறு திருவருள் செய்துவிட்டான். அதனால், இவள் பெருந்திணை நெறிமையிற் புகுந்து நாணம், மடம் முதலிய பெண்மைக் குணங்களைக் கடந்து, "இறந்த போலக் கூறும் கிளவி"களைக் கூறலாயினள். அப்போழ்து, தோழி, உனக்கு இவ்வேறுபாடு எதனாலாயிற்று?" என்றாளாக, அதற்குத் தலைவி,

"சிறையார் வண்டுந் தேனும் விம்மு செய்யமலர்க் கொன்றை
மறையார் பாடலாட லோடும் மால்விடை மேல்வருவார்,
இறையார், வந்தென் இல்புகுந்தென் எழில் நலமும் கொண்டார்
கறையார் சோலைக் காறூர்மேய பிறையார் சடையாரே."

இதன்கண், தலைவி தான்வாளா விருக்கவே, அவன் தானே வலிய வந்து, என் இல்புகுந்து, என் எழில்நலமும் கொண்டான் என்கின்றதனால், தன்பால் குற்றமின்மை தோன்றக் கூறித் தோழியைத் தழீஇக் கொள்கின்றாள். இறைவராதலின், தனக்குரிய இறைப்பொருளாமென என் எழிலும் நலமும் கொண்டார்; தடை செய்வாரும் இலர் என்பது தோன்ற, "இறையார்" என்றாள்.

"இவ்வாறு, நின் தொல்கவின் கெடுத்த அவனை மறுவலும் கண்டதனாலன்றோ இவ்வேறுபாடு பெரிதாயிற்று; ஆகலின், அவனை இனி மறப்பதே செயற்பாலது" என்று தோழி கூறினள். அது கேட்ட தலைவி, "ஆம் நீ கூறுவது ஒக்கும். ஆனால், அவன் கனவிடை வந்தன்றோ காட்சி தருகின்றான்; கண்டுழித் தொழ வேண்டுதலின், அவனை மறத்தல் யாங்ஙனம்?" என்பாள்,

"செஞ்சுடர்ச் சோதிப் பவளத்திரள் திகழ் முத்தனைய
நஞ்சணி கண்டன் நல்லூர் உறைநம்பனை நான் ஒருகால்
துஞ்சிடைக் கண்டு கனவின்தலைத் தொழுதேற்க வன்றான்
நெஞ்சிடை நின்றக லான்பல காலமும் நின்றனனே."

என்கின்றாள்.

இப்பரமனுக்கு மகளிரைக் கனவிலும் நனவிலும் போந்து கூடி நலன் அழிக்கும் செயலால் யாதொரு மாண்பும் இருப்பதாகத் தெரிந்திலதே என்ற எண்ணமுடையளாய்த் தோழி, தலைவனைச் சுட்டி,

"துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ ஆரிடமும் பலி தேர்வர்;
அணிவளர்கோலமெலாஞ்செய்துபாச்சிலாச்சிராமத் துறைகின்ற [பே."
மணிவளர் கண்டரோ, மங்கையைவாட மயல்செய்வதோ, இவர் மாண்

என்றாள். "ஆரிடமும் பலி தேர்வர்" என்பது பலவிடத்தும் பலி தேர்ந்து, இவ்வாறே மயல்செய்து வாடுவிக்கின்றார்; இஃது இவர்க்கொரு மாண்பு போலும்" என்ற கருத்துக்கு ஏதுவாகின்றது. இதனைக் கேட்டதும் பொறாளாய தலைவி, "அவர் அன்னர் அல்லர்; அவர் என்னொருத்தியைத் தான் இவ்வாறு செய்துள்ளார்; அவர் வேதமாகிய ஒழுக்க நூலை உலகிற்குபகரித்த முதல்வர் காண்" என்பாள்,

"போது பொன்திகழ் கொன்றை புனைமுடி
நாதர் வந்தென் நலங்கொண்டார்
பாதம் தொண்டர் பரவிய பாற்றுறை
வேதம் ஓதிய வித்தரே."

என்றாள்.

தலைவி கூறியது கேட்ட தோழி, "நீ அறியாய்; நீ நயந்த பரமன் பெண்களில் ஒருத்திக்கும் நல்லன் அல்லன்" என்பாள்,

"ஒருத்தி தன்தலைச் சென்றாளைக் கரந்திட்டான் உலகமேத்த
ஒருத்திக்கு நல்லனாகி மறுப்படுத் தொளித்து மீண்டே
ஒருத்தியைப் பாகம் வைத்தான் உணர்வினால் ஐயம்உண்ணி
ஒருத்திக்கும் நல்லனல்ல ஒற்றியூருடைய கோவே."

என்று கூறினாள், "அங்ஙனம், கங்கைக்கும் உமைநங்கைக்கும் அருள் செய்தானாயினும், என்னை வைத்தற்கு வேறிடம் இன்மையின், என்னைத் தன் பக்கலிலே வைத்தருள்வன் காண்" என்று தலைவி செப்பினாள். தோழி, "நீ இன்னும் அறிந்திலை"

"முல்லை வெண்நகை மொய்குழலாய்! உனக்(கு)
அல்லனாவ தறிந்திலை; நீகனித்
தொல்லையார் பொழில் தோணிபுர வர்க்கே
நல்லையாயிடுகின்றனை, நங்கையே!"

இதன்கண், "நின்பால் பலியேற்பான் வந்து நலங் கவர்ந்து சென்றவன், நீ மயல்கொண்டு வாடிய வழியும் வாராமையின், அல்லனுவ தறிந்திலை" என்றற்கு, "உனக்கு அல்லனுவ தறிந்திலை" என்றும், "அவ் வன்மைத் தன்மை யறியாமையால் நீ நல்லையாகின்றாய்; நங்கையாகலின் நினக்கு அது பண்பே" என்பாள், "நல்லையா யிடுகின்றனை, நங் கையே" என்றும் கூறியது காண்க.

இதைக் கேட்ட தலைவி பொருளாய்,

"ஒன்றுதா னறியார் உலகத்தவர்,
நின்று சொல்லி நிகழ்ந்த நினைப்பிலார்
துன்று வார்பொழில் தோணி புரவர்தம்
கொன்றை சூடுங் குறிப்பது வாகுமே"

என்று கூறினாள். என் மனத்தில் உள்ளது ஒன்றே; அது யாதெனில், பசலையாற் பொன்னிறங்கொண்ட எனக்கு வேண்டுவது பொன்னிறக் கொன்றைமாலையேயாகும். இவ் வுலகத்தவர் அதனை யறியாது, ஆகாதன பலவும் சேர்ந்து சொல்லி, ஆவனவாய் நிகழ்ந்தவற்றை அறவே நினையா தொழிகின்றனர். ஒரு பொருள்பற்றிய உண்மையினை ஒரு வர் கூறுமிடத்து, ஆகாதன பல கூறுவதும், ஆவது ஒன்றை யும் கூறுதொழிவதும் ஓரூரிடத்துமட்டில் காணப்படுவ தொன்றன்று; உலகமெங்கும் காணப்படுவது. அதுபற் றியே நீயும், யான் அக்கொன்றை சூடும் குறிப்பால் அதன் நிறமே விளங்கப் பொன்னிறங் கொண்டது காணுது கூறினை" என்றாள். இவ்வாறே திருவள்ளுவனாரும், "நனவி னல் நல்கார் என்பர் கனவினால் காணார்கொல் இவ்வூரவர்" (குறள். 1220) என்புழியும், தோழிபால்அயன்மை தோன்ற, "இவ்வூரவர்" என்று புலனெறி வழக்கம் செய்தமை காண்க.



இதன்மேல் தோழி சொல்லாடுவதை விடுத்துச் செல் வாள், செவிலியைக் கண்டலும், அவள், பலி வேண்டி வந்தாரைக் கண்டு நின் தோழி பரிவுற்று மெலிகின்றாள் என்று ஊரலர் கூறுவதறிதியோ? என்று மொழிந்தாள். அதுகேட்ட தோழி, அதனை மறைத்து,

"துஞ்சும் போதும் துயிலின்றி யேத்துவார்,
வஞ்சின்றி வலங்கொள் மறைக்காடரோ
பஞ்சின் மெல்லடிப் பாவை பலிகொணர்ந்(து)
அஞ்சிநிற்பது மைந்தலை நாகமே"

என்கின்றாள். பலியிட வந்த எம்பாவை, அவன் மேனி மேல் பூரணமாய்க் கிடந்த ஐந்தலை நாகத்தைக் கண்டு அஞ்சி நின்றதை அறியும் திறமின்மையின், ஏதிலார், அவன்மேற் கருத்தைப் போக்கினாள் என்றார் என்றாள். இது தோழிபால் தோன்றிய புறஞ்சொல் மாணாக் கிளவி.

இஃது இங்ஙனமாக, தலைவி தலைவன்பாற் கொண்ட அன்பு முதிர்ந்து, அவன் பிரிவாற்றாளாய், இன்பத்தை வெறுத்தும், கண் படையின்றியும் கலங்கனுர் உறுவாள். வண்டுகளை நோக்கி,

"வண்டரங்கம் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடும் அளியரசே! ஒண்மதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமை பரிந்தொருகாற் பகராயோ!"

எனவும், நாரையை நோக்கி,

"கானருகும் வயலருகும் கழியருகும் கடலருகும்
மீனிரிய வருபுனலின் இரைதேர்வெண் மடநாராய்!
தேனமர்தார்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வானமரும் சடையார்க்கென் வருத்தம்சென் றுரையாயே"

எனவும், குயில்களை நோக்கி,

"சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் டிகழ்வானோ!"

எனவும், கிளி, பூவை முதலியவற்றை நோக்கி,

"பறக்குமெம் கிள்ளைகாள்! பாடுமெம் பூவைகாள்!
அறக்கண் என்னத்தகும் அடிகள் ஆரூரரை
மறக்க கில்லாமையும், வளைகள் நில்லாமையும்,
உறக்க மில்லாமையும் உணர்த்த வல்லீர்களே"

எனவும் கழிபடர் கிளவிகள் பல தொடுத்து ஆற்றுமை மீதூர்வாளாயினாள்.

தோழி, தலைவி கேட்பக் கண்டாரை நோக்கி,

"பண்ணினேர் மொழியாள் பலியிட்டஇப்
பெண்ணை மால்கொடு பெய்வளை கொள்வது
சுண்ண மாடிய தோணிபுரத்துறை
அண்ண லாருக்குச் சால அழகிதே"

என்று கூறிப்போந்தாள். அதுகேட்ட தலைவி, பொறாளாய் "எம்பெருமான், இவர்களால் என்பொருட்டு ஏசுண்ணப்படுகின்றான். அவன் பெருமையினை இவர் அறிந்திலரே" என்பாள்,

"நல்லா ரும்அவர் தீயர் எனப்படும் சொல்லார் நன்மலர் சூடினார்
பல்லார் வெண்டலைச் செல்வரெம் பாற்றுறை எல்லாரும் தொழும்
[ஈசரே" (சம். 90)

"எம்பெருமான் தீ நிறத்தானாகையால், அவனை நல்லோர் பலரும் தீயர் என்பர்; அங்ஙனமுணராத பேதையர் அவனைத் தீமைப் பண்புடையர் என்னும் பொருண்மைகொள்வர். அவர் எல்லாரும் தொழும் ஈசராவர்" என்று தோழிக்குக் கூறினாள். அதுகேட்ட தோழி, "அன்னாய், இஃது



என்னால் நிகழ்ந்ததன்று. அயலார் பலரும் அலரெடுத்துக் கூறிப் பழி செய்தனர், காண்" என்றாள். அது பொறாத தலைவி வெகுண்டு, என் பெயரையும் கோடிக்குழகன் இயற்பெயரையும் இணைத்துக் கூறி ஏசுகின்றனர் என்ப.

"நாவளம் பெறுமாறும் அந்நன்னுதல்
ஆமளஞ்சொலி அன்புசெயி னலால்
கோமளஞ் சடைக் கோடிகாவாஎன
ஏஎன் இன்றெனை ஏசும் அவ்வேழையே"

"வீறுதான் பெறுவார் சிலராகிலும்
நாறுபூங் கொன்றைதான் மிகநல்கானேல்
கூறுவேன் கோடிகாவுளாய் என்று,மால்
ஏறுவேன், நும்மால் ஏசப்படுவேனோ"

என்று கூறி வருந்துவாளாயினாள். அதனாற் பெரிதும் ஆற்றாளாய தோழியைத் தலைவன்பால் தார் பெற்றுவருமாறு தூதுவிடக் கருதிய தலைவி.

"கரும்பமர் வில்லியைக் காய்ந்து காதற்காரிகை மாட்டருளி
அரும்பமர் கொங்கை யோர்பால் மகிழ்ந்த அற்புதம் செப்பரிதால்
பெரும்பகலே வந்தென் பெண்மைகொண்டுபோர்த்தவர்சென்றஇடம்
சுரும்பமர் சோலைகள் சூழ்ந்த செம்மைத் தோணி புரந்தானே"

எனவும்,

"என்ன தெழிலும் நிறையும் கவர்வான்
புன்னைமலரும் புறவில் திகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்
உன்னப் படுவான் ஒற்றி யூரே"

எனவும் கூறுமுகத்தால், தலைவனுடைய இயலும் இடமும் கூறினாள். காமத்துக்குரிய காமனைக் காய்ந்து, காமத்திற் சிறந்த காதற் காமம் நிறைந்த உமைநங்கையினைப் பாகமாகவுடையான் என்றும், "தன்னை முன்னம் நினைக்கத் தருவான்" "உன்னப்படுவான்" என்றும் கூறியன இயல்கள். தோணிபுரம், ஒற்றியூர் என்பன இடம்.

இன்ன செயல்களால் பெரிதும் மேனி வேறுபட்டு நின்ற தலைவிக்குத் தாயர் செய்த மருந்தும் மந்திரமும் பயன் படாமை கண்ட செவிலி, தோழியை நோக்கி, இவள் இன்னளாமாறு செய்தான் யாவன் என்றாள். அவட்குத் தோழி, தலைவன் இயல்பும் தலைவியின் காதலும் ஆய்ந்து,

“கருகுகண் டத்தன் காய்கதிர்ச் சோதியன்
பருகுபா லமுதே யெனும் பண்பினன்
அருகு சென்றிலள் ஆவடுதண்டுறை
ஒருவன் என்னை உடையகோ என்னுமே”

என்றும், தலைவியின் காதலை,

“வண்ணமும் வடிவும் சென்று கண்டிலள் ;
எண்ணி நாமங்கள் ஏத்தி நிறைந்திலள் ;
கண்ணுலாம் பொழில்சூழ் கழிப்பாலை எம்
அண்ணலே அறிவான் இவள் தன்மையே”

என்றும் கூறினாள்.

இதனைக் கேட்ட செவிலி, இவள் காதலித்த பெரியோன் எல்லாமாய் அல்லதுமாய் எப்பொருட்கும் இறைவனுமாய் நிற்கும் பரமனாகலின், அவன் இவளை ஏன்று கொள்ளுதல் கூடாதே. அவனை விரும்பி யொழுகுதலால் பயன் இல்லை. இதனை இவள் பெற்றோர்க்குக் கூறி, நம் குடிக்கு ஆசாரமாவனவற்றைச் செய்தும் என்றாள். அதனை யறிந்த தலைவி அவளை நோக்கி, “அன்னாய், அவன் எனக்கு அந்நியனல்லன். எனதுரை தனதுரையாகக் கொண்டு அனந்நியமாய் என் நெஞ்சிற் கலந்துளானாகலின், அவன் புணரப் புணரும் எனது எழில் நலம், நீங்க நீங்குதல் இயல்பு.” என்பாள்.

“உளங்கொள்வார் உச்சியார் கச்சி யேகம்பன்
ஒற்றியூர் உறையும் அண்ணாமலை அண்ணல்,
விளம்புவான் எனதுரை தனதுரையாக
வெள்ளநீர் விரிசடைத் தாங்கிய விமலன்,



குனம்புறக் கலைதுனை மலைகளும் சிலம்பக்
கொழுங்கொடி எழுச்செதங்கும் கூவிளங் கொன்றை
இளம்பிறை தவழ்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணிஎன் எழில்கொள்வ தியல்பே ”
(சம் - 123)

என்றாள்.

தன் மகள் உற்ற வேறுபாட்டைக் கண்டு ஆற்றாளாய அன்னை, செவிலியை நோக்கித் தன் மகள்,

“ பிறந்திளைய திங்கள் எம்பெம்மான் முடிமேல தென்கின்றாளால்
நிறங்கிளரும் குங்குமத்தின் மேனி அவன் நிறமே என்கின்றாளால்
மறங்கிளரும் வேற்கண்ணாள் மணிசேர் மிடற்றவனே என்கின்றாளால்
கறங்கோத மல்கும் கழிப்பாலைச் சேர்வானைக் கண்டாள் கொல்லோ ”
(நா. 12)

என்று வினவினாள். அது கேட்ட செவிலியும்,

“கண்பனிக்கும் கைகூப்பும் கண்மூன் றுடை
கண்பனுக் கெனைநான் கொடுப்பேனெனும்
வண்பொன்னித் தென்வலஞ் சுழிமேவிய
பண்பன் இப்பொனைச் செய்த பரிசிதே ” (நா. 264)

என்றாள். உடனே அன்னை மனம் மருண்டு, அத்தகையோன் முறையே வந்து மணம் பேசி வரைந்து கொள்ளாது தாழ்த்து ஒழுகுதலின், நாம் அவனுடைய செயலைப் பலரறியக் கூறிப் பழிப்போம் வம்மின் என்பாள்,

“ஊசலாம் அரவல்குலென் சோர்குழல்
ஏசலாம்பழி தந்தெழில் கொண்டனர் ;
ஓசொலாய் மகளே ! முறையோ என்று
பூசல் நாமிடுதும் புகலூரர்க்கே” (நா. 234)

என்றாள். அன்னை கூறிய இப்பூசலைக் கேட்ட தலைவி நெஞ்சு கலுழ்ந்து,

“பொன்னொத்த நிறத்தானும் பொருகடல்
தன்னொத்த நிறத்தானும் அறிகிலாப்

புன்னைத் தாது பொழிற்புகலூரரை
என்அத்தாஎன என்னிடர் கெடுமே" (கா. 234)

என்றதனால், பூசலுக்கும் ஏசலுக்கும் ஒரு பயனும் எய்தாது; அவற்றைச் செய்த பிரம விட்டுணுக்கட்கு அரியனானன். அவர் பின்பு 'அத்தா' என ஏத்தியவழி எளியனானன். ஆகலின், அவனையே அன்னையும் அத்தனுமாக வழிபடுவதே என் துயர் களைதற்கு மருந்தாம் என்றனள்.

இவ்வாறு தலைவி கனவிலும் நனவிலும் அவனையே நினைந்து கண்படையின்றி வருந்தி நிற்ப, அவன் மார்பிற்றார் வேண்டித் தோழி செல்கின்றனள். சென்றவள், பரமனுக்கு உரியார் பலரைக் கண்டு,

"சித்தம் தேறும் செறிவளை சிக்கெனும்
பச்சை தீரும்என் பைங்கொடி; பான்மதி
வைத்த மாமயி லாடு துறையான்
கொத்தி னிற்பொலி கொன்றை கொடுக்கிலே"

என்றும்,

"அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
கண்டு வீற்றிருக் குங்கருத் தொன்றிலேம்
வண்டு சேர்மயி லாடு துறையான்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே" (கா. 224)

என்றும் கூறினள். பின்பு பரமனைக் கண்டு, "ஐயனே! என் தோழி நின்னை எய்தாவிடின் இறந்துபாடு எய்துதல் குறித்து, நின்னால் அருளப்படுதல் தலையாய அறம் என்பது கூறினள்" என்பாள்,

"சுறவக் கொடிகொண் டவன்நீ றதுவாய்
உறநெற் றிவிழித் தஎம்உத் தமனே
விறல்மிக்க கரிக்கருள் செய்தவனே
அறமிக்க தென்னுமென் ஆயிழையே" (சம். 257)

என்றும்,



"குன்றே யமர்வாய்! கொலையார் புலியின்
தன்தோ லுடையாய்! சடையாய்! பிறையாய்!
வென்றாய் புரமூன்றை! வெண் காவலுளே
நின்றாய்! அருளாய் எனும் நேரிழையே."

என்றும் கூறினள். "சடையாய் எனுமால் சரணீ எனுமால்" என்னும் பதிகமும் இப்பொருண்மைக்கு ஏற்புடைத்தாயினும், அதற்கெனத் தனித்த வரலாறுண்மையின், ஈண்டுக் கொண்டிலம்.

தோழி தார்பெறுவான் சென்றவள் விரையவாராமையின், தலைவி பலபட நினைந்து மெலிந்து, நள்ளிரவில் தானே தலைவன் பதிபுக நினைந்து,

"வண்டார் கொன்றையும் மத்தம் வளர்சடைக்
கொண்டன் கோலமதியோ டரவமும்
விண்டார் மும்மதி லெய்தவன் வீரட்டம்
கண்டா லல்லதென் கண்டுயில் கொள்ளுமே."

என்று துணிவுற்றிருந்தாள். இருக்குங்கால், தோழி, பரமனை எதிர்ப்பட்டு அவன் மார்பின் மாலை பெற்று வந்து தலைவிக்குத் தந்தாள். அதனை ஏற்ற தலைவி மெய்ம்மறந்து இன்பத்தால் எழுற்றாள். அதனைக் கண்ட தாயரும் ஆயமும் பெருமகிழ்வு கொண்டு,

"மங்கை காணக் கொடார் மணமாலையைக்
கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை
நங்கைமீர், இடை மருதர் இந்நங்கைக்கு
எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே."

என்று பாராட்டுவாராயினர்.

பின்பு தலைவி, பரமன் வரவெதிர்ந்து நின்று, கூடவிழைந்து வருந்தி யிருந்தாள் என்பது,

"நீடு நெஞ்சுள் நினைந்து கண்ணீர் மல்கும்
ஓடுமாதலின் ஒண்டொடி மாதரான்

மாடநீள் மருகற் பெருமான் வரில்
கூடநீ என்று கூடல் இழைக்குமே."—(கா. 294.)

என்பதனால் விளங்குகிறது.

இவ்வாறு தலைவன்பால் தூராவேட்கையளாய் நின்ற தலைமகள் நிலையினை நம் காவரசர் "பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்" என்கின்றார். இது பெருந்திணைக்கண் "மிக்க காமத்துமிடல்" எனப்படுகின்றது. அஃதாவது காமத்து மிகுதியும், அம்மிகுதியால் உளதாகும் வன்மையும் என்று உணரப்படும். இவ்விரண்டினையும் பிரித்துக் காண்டல் கூடாமை பற்றி, மிக்க காமத்து மிடல்" என்ப. எனினும், நம் தாண்டக வேந்தர், இதன் பயனை இதனாற் பிறக்கும் செயல்மேல் வைத்து விரிப்பர்; பெற்றோர்க்கு அஞ்சி யொழுகிய தன்மை யிறந்து, உலகியலையும் உட்கொள்ளாது, மிகுகிற்கும் காமமே, மன முதலிய மூன்றன் செயற் பயனைக் கொண்டொழுகுவது எனப் பொருள் உணர்வித்து, "அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள், அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை" என்று விளக்கி யுள்ளார். அன்னையையும் அத்தனையும் அஞ்சி யொழுகிய அச்சத்தின் நீங்கல், தலைவியின் நற்றாய் கூறும் கூற்றால் தெரியப்படும். தலைவியுற்ற வேறுபாட்டைக் கண்டு பொறாளாய அன்னை, "யான் கடிந்து கூறினும், பரிந்து கூறினும், அயலார் போலக் கருதி என்னைப் பழித்துரைக்கின்றாள்" என்பாள்,

"மருந்து வானவர் உய்ய நஞ்சுண்டு கந்(து)
இருந்தவன் கழிப்பாலையுள் எம்பிரான்
திருந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்
பரிந்துரைக்கிலும் என்சொற் பழிக்குமே"

என்று கூறுகின்றாள்.

பிறிதொரு காலத்தில், அன்னை, தலைவியின் வேறுபாடு கண்டு ஆற்றாளாய், "இப்பாமன் இவளை முறையே வரைந்து



கொள்ளாமல், தொன்னலம் கெட்டுத் துயர் எய்துமாறு விடுவது தகாது என்று கூறிப் பழிப்போம்,வம்மின்" என்பாள்.

"மைசலாம் அரவல்குல் என்சோர்குழல்
ஏசலாம் பழிதந் தெழில் கொண்டனர்;
'ஓ!சொலாய், மகளே! முறையோ?' என்று
பூசல்காம் இடுதும் புகலூரர்க்கே"

என்று கூறினாள். இதனைக் கேட்டாள் தலைவி. "நன்னலம் தொலைய நலம் மிகச் சாஅய், இன்னுயிர் கழியினும் உரையல் அவர் நமக்கு, அன்னையும் அத்தனும் அல்லரோ, புலவிய தெவனோ அன்பிலங்கடையே" (குறுந். 93) என்றும், "எள்ளின் இளிவாம் என்றெண்ணி அவர்திறம் உள்ளும் உயிர்க் காதல் நெஞ்சு" (குறள்.) என்றும் வரும் பெண்மைக் கருத்தினை உட்கொண்டு,

"பொன்னொத்த நிறத்தானும் பொருகடல்
தன்னொத்த நிறத்தானும் அறிவிலாப்
புன்னைத் தாது பொழிற்புக லூரரை
என்அத்தா என என்னிடர் கெடுமே"

என்றாள். இவற்றால் தலைவி தன் பெற்றோர்க்கஞ்சிய அச்சத்தின் நீங்கினமை பெறப்படும்.

இனி, பிறர் கூறும் பழிப்புரை கேட்டு அன்னை செயிர்த்து நோக்கினள் என்று தோழி கூற, தலைவி, அது கேட்டு அஞ்சி ஒழுகும் ஆசாரத்தின் நீங்கி,

"காவளம் பெருமாறும் அங்கன்னுதல்
ஆமனஞ் சொலி அன்பு செயினல்லால்
கோமனஞ் சடைக்கோ டிகாவா என
ஏவன் இன்றெனை ஏசும் அவ்வேழையே"

என்றாள். தலைவன் தழையும் தாரும் கையுறையாகக் கொண்டு வந்து தலைவிக்குக் கொடுத்துக் காண்டல், "அக

விடத்து ஆசாரம்". இங்கு தலைவிதானே, தலைவன் பால் கொன்றைமாலை வாங்கி வருக எனத் தோழியை விடுத்தனள். "கங்கைகாணக் கொடார் முடிக் கண்ணியை; மங்கைகாணக் கொடார் மணமாலையை" என்று கூறி எதிலார் மயக்கினர். அது குறித்து வருந்தி ஒடுங்கும் மென்மையளாய தலைவி, வன்மை படைத்துக்கொண்டு,

> "வீறுதான் பெறுவார் சிலராகிலும்.
> நாறுபூங் கொன்றைத் தார்மிக நல்கானேல்
> கூறுவேன் கோடி காவுளாய் என்று !, மால்
> ஏறுவேன் ! நும்மால் ஏசப்படு வேனோ ?"

என்று கூறுவது முதலியன ஆசாரத்தின் நீங்கிய மிக்க காமத்து மிடல் ஆயின.

இங்ஙனம், தலைவி பிச்சியாயவாற்றினை முதற்கண் வகுத்தும் தொகுத்தும் கூறிய நம் தமிழரசர், பிச்சேறிய செயலை இரண்டாகக் காட்டி, முடிவில், அங்ஙனம் ஆகிய அவள், பெற்ற பேரின்பத்தை, "தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்பதனால் விளக்குகின்றார்.

இது, தன்னை மறத்தல், தன் நாமம் கெடுதல், தாள் தலைப்படுதல் என மூன்று அதிகாரணமாகப் பிரிக்கப்படும். எனினும், தன்னை மறத்தலும், நாமம் கெடுதலும் உடனிகழ்ச்சியாகலின், அவ்விரண்டனையும் ஓரடியின் ஒரு பகுதியினும், தாடலைப்படுதலை ஒரு பகுதியினும் அமைத்தருளியுள்ளனர்.

தலைவியின் மெலிவு கண்டு வினவிய செவிலிக்குத் தோழி கூறுங்கால்,

> "கண்பனிக்கும் கைகூப்பும் கண்மூன் றுடை,
> நண்பனுக்கேனை நான் கொடுப்பேன் எனும்



> வண்பொனித் தென்வலஞ் சுழி மேவிய
> பண்பன் இப்பொனைச் செய்த பரிசிதே"

என்று கூறுகின்றாள். இதன்கண், "நண்பனுக் கெனைநான் கொடுப்பேன் எனும்" எனத் தலைவி கூற்றினைத் தோழி கொண்டு கூறியிருத்தலால், தலைவி தன் தன்மை மறந்து, தன்னை அவற்கு ஓர் உடைமையாக நினைந்து, கொடைப் பொருளாகக் கருதிக் கொடுப்பேன் என்கின்றாள். ஆகவே, அவள் தன்னை மறந்தமையும், அதனால் அவட்குரிய பெயர் நீங்க, யாவரும் பிச்சி எனக் கருதிக் கூற நிற்றலால் நாமம் கெட்டமையும் விளங்கும். "உளங்கொள்வார் உச்சியார்" என்னும் பாசுரத்து, "விளம்புவான் தனதுரை எனதுரையாக" என்பது, தலைவி தலைவன் தாள் தலைப்பட்டமையுணர்த்துகிறது.

> "என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே
> மின்னு வார்சடை வேதவி ழுப்பொருள்
> செந்நெ லார்வயற் சேறையுட் செந்நெறி
> மன்னுசோதி நம்பால் வந்து வைகவே"

எனத் தலைவி, தலைவனைக் கூடியிருந்தாள், தன்னுள் மகிழ்ந்து கூறும் பாசுரம், தலைவி, தலைவன் தாள் தலைப்பட்டமையினை இனிது விளக்குவதாம்.

ஆகவே, பெரியோர்களே, தேவாரத்திலுள்ள அகத்துறைப்பாடல்கள் என்பதில், தேவாரம் என்பது சைவமக்களாகிய நாம் செய்த தவப்பயனாய் எய்திய செந்தமிழ்த் திருமறை யென்பதும், அது நமக்கு இப்போது எளிதில் கிடைப்பதால், அதைப்பற்றி வேறு கூறவில்லை என்பதும், அகத்துறைப் பாடல்கள் என்பது, அகமாகிய இன்பத்தை ஒருவனும் ஒருத்தியும் அனுபவிப்பது குறித்து நிகழும் நிகழ்ச்சி பொருளாக நிகழும் பாட்டுக்கள் என்பதும், அவை

மிக்க அருமையும் பெருமையும் உடைய என்பதும், தேவாரத்தில் வந்துள்ள அகத்துறைப் பாடல்களை ஆராய்வதற்குரிய கருவிகள் சுருக்கமாகவே இருக்கின்றன என்பதும், தேவார ஆராய்ச்சிக்குத் தேவாரமே வேண்டிய கருவிகளை உபகரிக்கிறதென்பதும், அதற்குரிய நெறியினைத் திருநாவுக்கரசர் தேவாரத்துத் திருவாரூர்த் திருத்தாண்டகம் உதவுகிறதென்பதும், நாமம் கேட்டல், வண்ணம் கேட்டல், ஊர் கேட்டல் என்பன தேவாரப் பெருந்திணைக்குக் கைக்கிளை போல்வன என்பதும், பிச்சியாய்ச் செய்வன செய்தலே பெருந்திணை யென்பதும், ஆண்டுத் தலைவியும் தோழியும் தாயரும் கூறியனவும், அக்கூற்றுவகை மிக்க காமத்துமிடலாகி, பெற்றோரை நீத்தல், ஆசாரத்தின் அகறல் என இரண்டாதலும், பிச்சியாயதன் பயன் தன்னைமறத்தல், தன் நாமம் கெடுதல், தலைவன் தாடலைப்படுதல் என மூன்றும் என்பதும், இவை ஒவ்வொன்றிற்கும் கூடிய அளவில் தேவாரத் திருநெறிப் பாசுரங்கள் அமைந்திருக்கின்றன என்பதும் பிறவும் கூறி யிருக்கின்றேன்.

இவ்வரிய பொருள்பற்றி, யான் பேசுதற்கு இடம் தந்து சிறப்பித்த சமாஜத்தினருக்கும், இதுகாறும் யான் கூறியவற்றைக் கேட்டு மகிழ்ந்து ஊக்கிய உங்கட்கும் என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு என் சொற்பொழிவை நிறுத்திக் கொள்ளுகின்றேன்.

“ தென்தமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்
அன்பன்சேவடி அடைந்தனம் அல்லலொன் றிலமே.”

—சம்பந்தர்.

# சமயக் குறிப்புகள்

[மயிலைக்கிழார் இளமுருகனார்]

## பக்ரீத்தும் சிறுத்தொண்டரும்

ஆபிரகாம் என்பவர் கடவுள் தம்மிடமிருந்து பலியை எதிர் பார்ப்பதாகக் கனாக் கண்டார்; தமது மனைவியிடம் தெரிவித்தார். இருவரும் வழக்கம்போல் பல மிருகங்களைப் பலியிட்டனர். பலியிட்ட பின்னரும் ஓரிரவு ஆபிரகாம் தமது ஏகபுத்திரனைப் பலியிடுவதாகவும், கடவுள் சந்தோஷமடைவதாகவும் கனாக் கண்டார். இக்கனாவைப் பொருட்படுத்தாதிருந்தார். மீண்டும் இக்கனாவே தோன்றிற்று. தமது மனைவியிடம் கூறினார். மனைவி கடவுள் கட்டளை அவ்வாறிருத்தல் கூடுமென்றார். இருவரும் புத்திரனாகிய இஸ்மெயில் என்பவனைக் கேட்டனர். புத்திரன் சந்தோஷத்துடன் உடன்பட்டான். புத்திரனைப் பலியிடும் வேளையில் கடவுள் திருப்தியடைந்ததாகவும், கொல்லத் தேவையில்லை யென்றும் ஒரு தோற்றம் உண்டாயிற்று. புத்திரன் கொல்லப்படவில்லை. இவ்வரிய நிகழ்ச்சியை என்றென்றும் நினைவு கூர்வதற்காகவே பக்ரீத் பண்டிகை முகம்மதியரால் கொண்டாடப்படுகிறது. பலியிடுதல் இப் பண்டிகைக்கு அடிப்படை. “ இரத்தமும், தோலும், தசையும் அல்லாவுக்குப் போவதில்லை; பத்தியும் தியாக புத்தியுமே போகின்றன ” என்று குரான் கூறுகிறது. இவ்வரலாற்றை அன்பர்கள் சிறுத்தொண்ட நாயனார் வரலாற்றோடு ஒப்பிடுக; உண்மை தெளிக.

## கவிமேரை

கார்வேட்ட நகரிலுள்ள செருகூரி கிருஷ்ணையா என்பவர் திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி மஹந்து, லாட் கோவிந்தால் ஆகிய மூவர்மீதும் தமக்குச் சில கிராமங்களின் வரும்படியில் ஒருபகுதி கவிமேரையாகக் கிடைக்கவேண்டு

புரிசை முருகேச முதலியார் ஆகிய பேரன்பர்கள் முறையே சைவத்தின் பொதுநிலையும் சிறப்பு நிலையும், சைவபூஷணம், அப்பூதியடிகள் என்ற செம்பொருள்கள் பற்றி விரித்துரைத்தார்கள். இரவில் அப்பர் நாடகம் நடைபெற்றது. இக் கூட்டத்தைச் செம்மையாக நடத்தியுபகரித்த திருவாளர்கள் வேங்கடாசல முதலியார், இலக்குமண முதலியார் அவர்கட்கு நமது சமாஜம் நன்றி செலுத்துகிறது.

---


# திருப்புகழ்

கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, மயில் விருத்தம், வேல்விருத்தம், திருவகுப்பு, திருவெழுகூற்றிருக்கை, உரைக்குறிப்புகள், தெய்வப்பெய ரட்டவணை, விஷய ஆராய்ச்சி அட்டவணை, வரலாறுகளின் அட்டவணை, தலக்குறிப்பட்டவணை, இலக்கண விசேடங்கள், அரும்பொருளகராதி, பாட்டு முதற்குறிப்பகராதி, அருணகிரிநாதர் சரித்திரம், நூலாராய்ச்சி, அருணகிரிநாதரைக் குறித்து ஆன்றோர் கூறிய பாடல்கள் முதலிய அருமையான சிறப்புக்களுடன், பல ஏட்டுப்பிரதிகளிற் காணப்பெற்ற சிறந்த பாடங்களைக் கொண்டு, இதுவரையில் அச்சிடப்படாத பல புதிய திருப்புகழ்ப் பாடல்களோடு 1361 பாடல்களும் 1108 பக்கமுங்கொண்ட ஒரே நூலாக நல்ல கிளேஸ் காகிதத்திற் சுத்தமாக அச்சிடப்பட்டு முழு கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுத் திருவண்ணாமலையில் நமது சமாஜத்தின் 30-ம் ஆண்டு நிறைவு விழாவில் அருணகிரிநாதர்க்கு அருள்புரிந்த முருகவேள் சந்நிதியில் வெளியிடப்பட்டது.

தனிப்பிரதி விலை ரூ. 3. *ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12.*

நான்கு பிரதிகள் விலை ரூ. 10. *ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 2½.*

உடனே பிரதிகட்கு மணியார்டர் மூலம் விண்ணப்பம் செய்க.

கிடைக்குமிடம்:—

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு,

மயிலாப்பூர், சென்னை.

மென்று வழக்குத் தொடுத்தனர். பிரதிவாதிகள் இத்தகைய பாத்யதை பரம்பரை பாத்யதையல்லவென்று மறுத்தனர். சென்னை உயர்தர நீதிமன்றத்தில் வரதாச்சாரியார், பாண்டு ரங்கராவ் என்ற நீதிபதிகள் இவ்வழக்கில் கவிஞர் பாத்யதை பரம்பரை பாத்யதையே யென்றும், இம்மேரை குறித்த கிராமங்களின் மேல் வாரத்தைப் பந்தகம்போல் கட்டுப்படுத்தும் வன்மையுடையதென்றும், பன்னிரண்டு வருஷத்திய பாக்கிகளைப் பெறுதற்கு வாதியாகிய கவிஞருக்கு உரிமை யுண்டென்றும் தீர்ப்புக் கூறினார்கள். பண்டைக்காலத்தில் பெருமன்னர்களாலும் குறுநில மன்னர்களாலும் கவிஞர்கட்கு அளிக்கப்பெற்ற உரிமைகள் சட்ட சூழ்ச்சிகள் முற்றியுள்ள இக்காலத்திலும் இவ்வாறு பாதுகாக்கப்பட்டது போற்றற்குரியது.

## பட்டர்கட்குத் திருநாட்களைக் குறிக்கும் உரிமையில்லை

வேங்கட நரசிம்மபட்டாசாரியர், நரசிம்மபட்டாசாரியர் ஆகிய இருவரும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் கோவில் தர்மகர்த்தர்கள் மீது ஒரு வழக்கு தொடங்கி, உபயக்காரரும் சேவார்த்திகளும் நிவேதிக்கும் தளிகையில் தங்கட்குரிய சுதந்திரங்களைத் தந்த பிறகே வினைய பணியாளருக்கும் கோஷ்டியினருக்கும் தளிகை விநியோகிக்கப்படல் வேண்டுமென்றும், திருநாட்களைப் பஞ்சாங்கம் பார்த்துக் குறிக்கும் உரிமை முதலிய பல அடங்கிய வைதிக விசாரணை என்ற பாத்யதையும் தங்கட்கே உண்டென்றும் வாதித்தனர். சென்னை உயர்தர நீதிமன்றத்தில் இலக்குமணராவ் என்ற நீதிபதி கோஷ்டி விநியோகம் நடந்த பிறகே பட்டர்கட்கு சுதந்திரம் தரப்படவேண்டுமென்றும், திருநாட்களைக் குறித்தல் முதலிய வைதிக விசாரணை யுரிமைகள் தர்மகர்த்தர்கட்கே யுண்டென்றும் தீர்ப்பளித்தார். கந்தர்சஷ்டி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி முதலிய விரதோத்ஸவ நிர்ணய உரிமைகள் கோயில் தர்மகர்த்தர்கட்கே உண்டென்பதற்கு இத்தீர்ப்புப் பெரிதும் துணை புரிவதாகும்.

Reg. M. 2330.

4 - JUN 1937
MADRAS

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.

| மலர் ௧௦ | ஈசுவர ஆண்டு சித்திரைத் திங்கள் 1937ஆம் ஏப்ரல்மீ | இதழ் ௪ |
| --- | --- | --- |

## சிவஞான யோகிகள் திருநாள்

[ந. சிவகுருநாத பிள்ளை]

ஆசிரியர் மாதவச் சிவஞான யோகிகள் திருநெல்வேலி ஜில்லா பொதியமலைச் சாரலையடுத்த பாவநாசம் என்னும் தலத்துக்கு அண்மையிலுள்ள விக்கிரமசிங்க புரத்தில் சைவ வேளாண் மரபில் திருஅவதாரம் செய்தருளினார். அவர் இளமையிலேயே திரு ஆவடுதுறையை யடைந்து துறவு பூண்டு வடமொழி தென்மொழி என்னும் இரு மொழிக்கடலையும் கரைகண்டு மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையராய் விளங்கியருளினார். நமது பெரியார் தாம் பெற்ற கல்வியின் பயனை உலகமெல்லாம் துய்த்து இன்புறத் திருவுள்ளங் கொண்டார். சோமேசர் முதுமொழி வெண்பா, திருவேகம்பரந்தாதி, குளத்தூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி, அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், செங்கழுநீர் விநாயகர்

சிவமயம்

# சமாஜ அறிக்கைகள்

1. கோடை விடுமுறையில் வெளியூர்கட்குச் செல்ல விரும்புவோர் தங்கள் புதிய விலாசங்களையும் தாங்கள் விடுமுறை முடிந்து திரும்பும் காலத்தையும் உடனே தெரிவிக்கவும்.

2. காஞ்சிபுரத்தில் நடைபெற்ற சமாஜ விழாவுக்கு மொத்தம் ரூ. 1015-10-7 செலவாயிற்று. உணவுக்காக 575-2-6, பந்தல் 133-4-4, ஊர்வலம் 50-15-0 தொண்டர்படை 50-13-0, சொற்பொழிவாளர் பிரயாணம் 83-8-7, தொண்டர் பிரயாணம் 44-8-7 உருவப்படம் 5-3-0, தபால் 6-2-3, அச்சுக்கூலி 35-4-0, மின்சார விளக்குகள் 13-14-0 பலவகைச் செலவு 16-15-4 ஆக ரூ. 1015-10-7 இஃதன்றி அச்சு வேலைகள் கொஞ்சமும், வாணவேடிக்கை முழுமையும், புஷ்ப மாலைகள் முதலியனவும் இலவசமாகக் கிடைத்தன.

3. சிவஞான சுவாமிகள் திருநட்சத்திரத்தைச் சைவர்கள் கொண்டாட வேண்டிய அவசியத்தைப் பற்றிச் சமாஜத் தலைவர்கள் விடுத்துள்ள அறிக்கையை மற்றோரிடத்திற் காண்க. அத்திருநட்சத்திரத்தன்று (19-4-37) நமது சமாஜக் கூட்டம் ஒன்று இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் குகானந்த நிலையத்தில் நடைபெறும். திருவாளர்கள் - சச்சிதானந்தம் பிள்ளை, உலகநாத முதலியார், சோமசுந்தரம் செட்டியார், சமரபுரி முதலியார் முதலிய பல அன்பர்கள் சுவாமிகள், திருவாக்கு, பாடியத்தின் அருமை முதலியன பற்றிப் பேசுவார்கள். இஃதேபோல் தமிழ் வருடப் பிறப்பன்றும் (13-4-37) இதேயிடத்தில் ஒரு கூட்டம் நடைபெறும். மேற்கூறிய அன்பர்கள் சமய குரவர் வரலாறு வாக்கு முதலியன பற்றிப் பேசுவார்கள்.

4. நமது சமாஜத்தோடு இணைக்கப் பெற்ற தஞ்சை, சைவ சித்தாந்த சபையின் எழாவதாண்டு நிறைவிழா மிகச் சிறப்பாக 14-3-37ல் திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை பி.எ.,எல் டி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் உ. அரு. அருணாசலஞ் செட்டியார், ராம. கு. ராம. இராமசாமி செட்டியார், அ. மு. சரவண முதலியார், த. பா. சிவகுருநாதபிள்ளை ஆகிய அன்பர்கள் முறையே அன்புக்கனிவால் அருட்கனி பெற்றவர், சைவ சமயம், இளையான்குடிமாறர், சுயமரியாதைச் சித்தர் என்பனபற்றிப் பேசினார்கள்.

5. இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் தாபகரான ஸ்ரீலஸ்ரீ கா. கதிரைவேற் பிள்ளையவர்கள் குருபூசை மிகச் சிறப்பாக 24-3-37ல் நடைபெற்றது. காலையில் கடவுள் வழிபாடும் குருவழிபாடும் நடந்தவுடன் ஏழை மக்கட்கு உணவு அளிக்கப்பட்டது. மாலையில் திரு. ம. பாலசுப்பிரமணியமுதலியார் தலைமை

பிள்ளைத் தமிழ் முதலிய பல பிரபந்தங்களைத் தமிழ் வளங்கொழிக்கப்பாடியருளினர். காஞ்சிப் புராண முதற்காண்டத்தை வடமொழியினின்றும் மொழிபெயர்த்துச் சொற்சுவை, பொருட் சுவை, அரும்பெரும் கற்பனைகள், சித்தாந்த சாத்திர நுண் பொருள்கள் பொதுள இயற்றியருளினர். சிவபாரத்துவத்தை இனிது விளக்குவனவாகிய அப்பயதீக்கிதர் இயற்றியருளிய சிவதத்துவ விவேகத்தையும், அரதத்தாச்சாரியார் இயற்றியருளிய சுலோக பஞ்சகத்தையும் மொழிபெயர்த்தருளினர். அன்றியும் “ தருக்க சங்கிரகம்-அன்னம் பட்டீயம்” என்னும் வடமொழித் தருக்க நூலையும் தமிழில் மொழிபெயர்த்தருளினர்.

இனி, நமது யோகிகள் தமிழின் ஒப்புயர்வற்ற இலக்கணமாகிய தொல்காப்பியத்துக்கு ஆசிரியர்கள் இளம்பூரணர், சேனவரையர், நச்சினார்க்கினியர் செய்த உரைகளை நுண்ணிதின் ஆராய்ந்து அவற்றின் வழுக்களைக் களைந்து தொல்காப்பியப் பாயிர விருத்தி, முதற் சூத்திரவிருத்தி என்னும் இரண்டினாலும் தமிழ் இலக்கண உண்மைகளை வெள்ளிடைமலைபோல் விளக்கியருளினர். அன்றியும், “சிவஞான சித்தி” என்னும் உயரிய சித்தாந்த நூலுக்கு ஞானப்பிரகாச முனிவர் சிவசமவாத பரமாகச்செய்த உரையைக் கண்டித்துச் “சிவசமவாத உரை மறுப்பு” என்னும் கண்டன நூலையருளிச்செய்தார்.

இனி நமது அடிகள் சித்தாந்த சாத்திரம் பதினான்கினுள்ளும் சிறந்து விளங்கும் சிவஞானசித்தியார் சுபக்கத்துக்குப் பொழிப்புரையும், சிவஞானபோதத்துக்குச் சிற்றுரையும், சிவஞான பாடியம் என்னும் பேருரையும் செய்தருளினர். இன்னும் நமது ஆசிரியப் பெருந்தகையார் செய்தருளிய நூல்களும், கண்டனங்களும், உரைகளும் பலவுள.



நமது பெரியார் மொழிபெயர்த்தருளிய நூல்கள் மற்றொரு மொழியினின்றும் மொழிபெயர்த்தனபோல் தோன்றாமல் தமிழ் மொழியிலேயே ஆக்கப்பட்டவைபோல் இனிது விளங்கும் பான்மையுடையன. கண்டன நூல்கள் எடுத்துக்கொண்ட பொருள்களை இனிது ஆராய்ந்து பூர்வபக்கக் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்து உண்மை நிலையிடும் சிறப்பு வாய்ந்தன. உரைகள் திட்பமும் ஒட்பமும் உடையனவாய் நூல்களின் உண்மைக் கருத்துக்களைப் பல்வேறு மேற்கோள்களுடன் இனிது விளக்கும் சால்புடையன. “சிவஞானபாடியம்” என்னும் உரைநூல் வடமொழிப் பிரம்மசூத்திரத்துக்கு நீலகண்டர், சங்கரர், இராமாநுஜர் முதலிய பெரியார்கள் வடமொழியில் இயற்றியுள்ள பாடியங்களெல்லாவற்றினும் தலைசிறந்து விளங்கும் பெருமையுடையதாகும். இது ஒன்றே “ திராவிட மாபாடியம் ” என்னும் பெயரால் தமிழில் சிறப்பாய் வழங்கப்பெறுவது.

இங்ஙனம் நமது ஆசிரியப் பெருந்தகையார் “ தருக்க சங்கிரகம் - அன்னம் பட்டீயம்” என்னும் மொழி பெயர்ப்பு நூலால் “எண்” என்னும் கண்ணையும், “ தொல்காப்பியப் பாயிர விருத்தி முதற் சூத்திர விருத்தி” என்னும் இலக்கண ஆராய்ச்சி நூல்களால் “எழுத்து” என்னும் கண்ணையும், “ சிவஞானபாடியம் ” என்னும் உயரிய நூல் உரையால் “ ஞானக்கண்ணையும் நமக்கு அளித்துச் சைவமும், தமிழும் வாழச் செய்தருளியவரன்றோ ?

இவ்வாறு செயற்கரிய பெரும் உபகாரத்தைச் செய்தருளிய பெரியார் மாட்டுத் தமிழுலகமும், சைவ உலகமும் நன்றி பாராட்டவேண்டுவது தலைமையாகிய கடப்பாடன்றோ.

ஆதலின் வரும் சித்திரைத் திங்கள் 7-ஆம் நாள் (19-4-37) அன்று நமது மாதவச் சிவஞான யோகிகள்

சித்தியடைந்த திருநாளாகிய ஆயில்ய நக்ஷத்திரம் வருவதால் அந்நாளில் சைவமக்களும், சைவசபைகளும், தமிழ் மக்களும் தமிழ்க்கழகங்களும் ஆங்காங்கு திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடி நமது நன்றியறிதலைத் தெரிவித்து அடிகளின் திருவருளுக்குப் பாத்திரராகும் வண்ணம் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

# அப்பர் படக் காட்சி

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரத்தைப் பேசும் படமாக வேல் பிக்சர்ஸ் கம்பெனியார் தயாரித்துக் காட்ட முயற்சிசெய்யத்தொடங்கிய காலத்தில் சமணர் சிலர் கிளர்ச்சி செய்து சில பகுதிகளை நீக்கியோ மாற்றியோ படத்தைத் திட்டம்செய்ய வேண்டுமென்று ஆரவாரித்தது நமது நண்பர்கள் ஞாபகத்திலிருக்கும். இவ்விஷயமாகச் சில சைவசபைகள் தீர்மானங்களை நிறைவேற்றி நமது சமாஜம் இதைக் கவனிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்ததின்பேரில் சமாஜ நிர்வாக சபை இதனை ஆலோசித்து நிர்வாக சபையினருள் சிலர் வேல் பிக்சர்ஸ் கம்பெனியாரைக்கண்டு கலந்து பேசி முடிவுசெய்யத் தீர்மானித்ததும் நண்பர்கள் அறிந்ததொன்று. சமாஜத்தின் சார்பாகத் திருவாளர் நின்றை - தங்கவேல் முதலியாரவர்கள் ஷை கம்பெனியாரைக்கண்டு பேசியதில், அப்பர் சரித்திரத்தைச் சுருக்கமாகத் திருவாளர் டி. எம். கிருஷ்ணசாமி ஐயரவர்கள் ஆங்கிலத்திலும், அதன் மொழிபெயர்ப்பைத் திருவாளர் - கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் தமிழிலும் எழுதி வெளியிடுவதென்றும் இவ்வெளியீடுகளை நமது சமாஜமும் ஏனைய சைவ சபைகளும் பார்வை



யிட்டுத் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தால் அவற்றையெல்லாம் ஆலோசித்துச் சரித்திரப் போக்கைத் திட்டம் செய்து முடித்து அம்முடிபின் முறையிலேயே படத்தைத் தயாரிப்பரென்றும் ஷை கம்பெனியார் தெரிவித்தார்கள். இதை யனுசரித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்ட சரித்திரச் சுருக்கங்கள் திருவாளர் - நின்றை தங்கவேல் முதலியாரவர்கள் மூலமாக நமது பார்வைக்கு வந்தன. இச்சிறு நூல்கள் ஒவ்வொன்றின் விலை அணா ஒன்று (தபாற்கூலி முக்காலணா). இவற்றை (1) திரு. எம். டி. ராஜன், மானேஜிங் டைரக்டர், வேல் பிக்சர்ஸ் கம்பெனி, கிண்டி. (2) சோல்டன் கம்பெனி, திருவல்லிக்கேணி என்ற விலாசங்கட்கெழுதிப் பெறலாம்.

இனி, இச்சரித்திரச் சுருக்கத்தை ஆராயுங்கால், பெரும்பாலும் பல பகுதிகள் பெரிய புராணத்தை யொட்டியே எழுதப்பெற்றுள்ளன. ஆனால் சில பகுதிகள் பெரிய புராணத்துக்கு மாறுபட்டனவாகவும் அப்புராணத்துட் காணப்படாதனவாகவும் உள்ளன. இவற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறுவது நமது கடமையாகும்.

இந்நூல் 8-வது பக்கத்தில் "மருள்நீக்கி...பல்லவ மன்னனது நெருங்கிய நண்பராயினர். (அவரைக்) கலவாது அரசன் யாதொரு காரியமும் நடத்துவதில்லை. அரசனோடு அவர் நட்பு விரைவாக வளர்ந்து பெருகி அரசனுக்கு அவரொருவரே இராஜ காரியங்கள் எல்லாவற்றிலும் அந்தரங்கத் துணைவராயினர்" என்று கூறுகிறது. இது பெரியபுராணத்துட் காணப்படாத செய்தி. மருணீக்கியார் தருமசேனரென்ற பட்டம் பெற்றுத் தேரரை வாதில் வென்று "உலகின்கண் ஒளியுடைய வித்தகராய் அமண்சமயத் தலைமையினில் மேம்பட்டார்" என்றே பெரியபுராணம் கூறுகின்

றது (39, 40 பாக்கள்). அரசகட்டும் அந்தரங்க அமைச்சுரிமையும் உண்மையில் மருணீக்கியார் பெற்றிருந்தால் சேக்கிழார் ஏன் கூறாது விடுத்தார்?

இந்நூல் 13-வது பக்கத்தில் "அரசாங்கத்திற் குயிரான அந்தரங்கங்களும் தந்திர முறைகளும் தருமசேனர் அறிந்திருந்தார். ஆதலின் அவர் பித்தனல்லவென்றால் அவரைச் சும்மா திரிய விட்டிருத்தல் தேசத்திற்கு அபாயகரமானதே. தருமசேனரது மனநிலையைப்பற்றி ஆராய்ந்து அறிக்கை செய்யும்படி அரசாங்க உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர். தருமசேனருக்குப் பைத்தியம் இல்லையென்றே அவர்கள் தெளிவாகத் தெரிந்தார்கள்.....அவரது மதவேற்றுமைக்கு அடிப்படையான காரணம் இராஜத்துரோகமா யிருக்கலாமென்றும் தெரிவித்தனர்....முடிவாக ஆலோசனைச் சபையார் அரசாங்கத்திற்கும் அரச சமயத்திற்கும் தருமசேனர் துரோகியாய் விட்டாரென்றே தீர்மானித்தார்கள்" என்று கூறப்பட்டுள்ளது. சைனக் குருமார்களைக் கலந்தபோது அவருள் முக்கியஸ்தர் எழுந்து "மகாராஜாவே, தருமசேனர் சைன சமயம் புகுவதற்கு முன்னேயே நமது சமயத்தின் உயர்ந்த சீலங்கள் அவரைப் பார்க்கிலும் திறமைசான்ற அறிவாளிகளையும், அவரினும் திடமான இருதயமுடையவர்களையும் கவர்ந்துள்ளன. தருமசேனர் வந்தபடியே திரும்பிப் போனார்; அதுபற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. மதபக்தசிகாமணிகளைப் பார்க்கிலும் மதமானது மிகவும் பெரியது.......அவர் தலையிலுள்ள ஒரு உரோமங்கூட ஊறுபடுதற்கு நாங்கள் இணங்கமுடியாது....என்றார்" என இந்நூல் 14, 15-ம் பக்கங்களிற் கூறப்பட்டுள்ளது. பின் அரசனது முக்கியமந்திரி சைன குருத் தலைவரைப் பார்த்து "அடிகளே, அரசியல் மோசம்,



அரச நம்பிக்கைத் துரோகம், அரசனை யிகழும் அகந்தைப் பேச்சு என்னுங் குற்றங்களைப் பரிகரித்தற்கு மதசம்பந்தமில்லாமல் அரசன் தானாகச் செய்யவேண்டியவை செய்தற்கும் அரசனுக்குச் சுவாதீனமில்லையென்று நீங்கள் மறுத்தல் கூடுமோ?" என்று வினவியதற்கு அக்குருத்தலைவர் "அந்தக் காரியங்களைப்பற்றி அரசனுக்கு ஆலோசனை சொல்ல நாங்கள் அருகரல்லர். குடிகளின் நன்மைக்காக எது நல்லதென்று தீர்மானிப்பதற்கு அரசனே அதிகாரி. தருமசேனர் செய்த தவறுக்காக அரசன் பழி வாங்கவேண்டுமென்று நமது மதம் வற்புறுத்தவில்லை யென்பதே நாங்கள் சொல்லக்கூடியது" என்றாரெனவும், அரசன் சைனக் குருமார்கட்கு விடைகொடுத் தனுப்பிவிட்டுத் தருமசேனரைத் தந்திரமாக வசப்படுத்தி ஒருவரும் அறியாதபடி இரகசியமாகச் சுண்ணாம்பு நீற்றறையொன்றி லடைத்துக் கொன்றுவிடும்படி இரகசியக் கட்டளை பிறப்பித்தானெனவும் 15-ம் பக்கத்திற் கூறப்பட்டுள்ளன.

இவ்விவரங்கள் பெரியபுராணத்துக்குப் பெரிதும் முரண்பட்டன. இவ்வாறு இப்பகுதியைத் திரித்துக் கூறுவதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. சைனர்கள் செய்துவரும் கிளர்ச்சிக்கு அஞ்சி, நீற்றறை நஞ்சு களிறு கடற்பாய்ச்சு ஆகிய செய்திகளை விட்டுவிடத் துணியாத இக்கம்பெனியார் வழக்கறிஞர்களின் துணைகொண்டு இவ்வாறு சூழ்ச்சிசெய்துள்ளார்களென்றே நாம் கருதவேண்டியிருக்கிறது. புறச்சமயத்தார் கிளர்ச்சிக் கஞ்சுவதும், நமது சமயத் தலைவர் சரித்திரத்தை இஷ்டம்போல் திரித்துக்கூறுவதும் இவ்விருபதாம் நூற்றாண்டிற் கேற்ற நாகரிகச் செயல்கள் போலும்!

இனி இச்சரித்திரப் பகுதியைச் சேக்கிழார் கூறும் வகையை நோக்குவாம். தருமசேனர் சிவநெறியினை எய்

இவதைக் கேட்ட அமணர் அது பொருதவராய் (79-வது பாட்டு) "நம்பெரும் சமயம் வீழ்ந்ததென" மருண்டு (80-வது பாட்டு), "அவரால் நிலையும்பெற்ற இந்நெறி இனி யழிந்த தென்றழுங்கி" (81-வது பாட்டு), "அறிந்திடில் வேந்தனும் வெகுண்டு சைவனாகி நம் விருத்தியும் தவிர்க்கும் மற்றினிநாம் செய்வதென்" என்று யோசித்து (82-வது பாட்டு), "அடிகண்மார் எல்லாரும் ஆகுலமாய் மிக அழிந்து" அரசனிடம் முறையிட (86-வது பாட்டு), அரசன் இதற் கென் செய்வதென வினவ,

"தலைநெறியா கியசமயந் தன்னையழித் தன்னுடைய
நிலைநின்ற தொல்வரம்பின் நெறியழித்த பொறியிலியை
அலைபுரிவாய் எனப்பரவி வாயால்அஞ் சாதுரைத்தார்
கொலைபுரியா நிலைகொண்டு பொய்யொழுகும் அமண்குண்டர்"

(89-வது பாட்டு) என்று சமண அடிகண்மார் தெளிவாகத் தெரிவித்ததாக நடந்ததை நடந்தவாறே சேக்கிழார் கூறுகிறார்.

"அருள்கொண்ட உணர்வின்றி நெறிகோடி அறிவென்று
மருள்கொண்ட மன்னவனும் மந்திரிகள் தமை நோக்கித்
தெருள்கொண்டோர் இவர்சொன்ன தீயோனைச் செறுவதற்குப்
பொருள்கொண்டு விடாதென்பால் கொடுவாரும் எனப் புகன்றான்"

என்பது அடுத்துவரும் 90-வது பாட்டு. தருமசேனர் சென்றவுடன் அரசன்,

"பாங்கிருந்த பாயுடுக்கை வல்லமணர் தமைநோக்கி
மற்றவனைச் செய்வதினிச் சொல்லுமென அறந்துறந்து
தமக்குறுதி யறியாத புல்லறிவோர் அஞ்சாது
நீற்றறையி விடப் புகன்றார்"

என்று 95-வது பாட்டு கூறுகின்றது. அவ்வண்ணம் செய்க வென அரசன் கட்டளையிட்டதை அடுத்த பாட்டு கூறுகின்



றது. நஞ்சூட்டல், களிற்றேவல், கடற்பாய்ச்சல் ஆகிய தண்டனை வரலாறுகளும் இவ்வாறே கூறப்படுகின்றன. இவ்வரலாற்றையும் வேல்பிக்சர்ஸ் கம்பெனியார் கூறும் வரலாற்றையும் ஒப்பிட்டு நடுநிலைமையில் நின்று நோக்கினால் உண்மை இனிது புலப்படும். இக்கம்பெனியார் கூறும் திரிபு வரலாற்றுக்கு நாமறிந்தமட்டில் ஆதாரமிருப்பதாகத் தோன்றவில்லை.

திருநாவுக்கரசு சுவாமிகள் காலத்திலிருந்த சமண சமயத் துறவிகளின் சமயப்பொறையின்மை, மறவொழுக்கம் முதலியன அச்சுவாமிகள் திருவாக்கிலும் திருஞானசம்பந்தர் திருவாக்கிலும் பற்பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன. அக்குறிப்புகட்கு மாறாகவும் சேக்கிழார் கூறும் வரலாற்றுக்கு மாறாகவும் ஒரு கதை கட்டி அதற்கு அப்பர் சரித்திரமென்று பெயரிடுவது உண்மையை விரும்புவோர் விரும்பக் கூடிய செயலாகாதென்பதை இக்கம்பெனியாருக்கும் இவர்கட்குத் துணை புரியும் பெரியார்கட்கும் உறுதியாகவும் வணக்கமாகவும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். பல நூற்றாண்டுகட்கு முன் ஒரு சமயத்தினர் இன்ன நிலையிலிருந்தார்களென்று சரித்திர முறையிற் கூறுவது சட்ட விரோதமாகாது. அவ்வாறு கூறுவதால் இன்று அச்சமயத்தினர் இகழத் தக்கவர்களென்று எவரும் கருதவேண்டியதில்லை. உயர்வும் தாழ்வும் நன்மையும் தீமையும் எல்லா மக்கட்கும் எல்லாச் சமயங்கட்கும் காலவோட்டத்தில் ஏற்படுவனவே. தாழ்வையும் தீமையையும் நினைப்பூட்டுவதால் மக்களும் சமயங்களும் அவைகளையொழித்து உயர்வையும் நன்மையையும் பெருக்கிக்கொள்ள வழியேற்படும். உயர்வு தாழ்வு நன்மை தீமை முதலியனபற்றிய விவரங்களின்றி எத்துறையிலும் சரித்திரமே எழுதமுடி

யாது. இழிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணங்கொண்டு உண்மையைத் திரித்துக் கூறுவதொன்றே ஒழுங்கீனமாகும். இதையெல்லாம் விடுத்து வீண் கிளர்ச்சிக்குப் பயந்து உண்மையைத் திரித்துக் கூறுவது "உள்ளதைச் சொன்னால் கொள்ளைக் கண்ணிக்கு கோப்பாளம்" என்ற எச்சு மொழிக்கு எடுத்துக் காட்டாக முடியும். விரிவஞ்சி இம்மட்டில் விடுத்தாம்.

திருப்பூந்துருத்திக்குத் திருஞான சம்பந்தர் அப்பரைக் காண்பதற்கு அவாக்கொண்டு முத்துப் பல்லக்கில் வரும்போது அப்பர் ஒருவருங் காணுதபடி அப்பல்லக்கைத் தாங்கி வந்ததும் பிறகு இருவரும் சந்தித்து அளவளாவியதும் பெரிய புராணத்துட் கூறப்படும் வரலாறேயாகும். சம்பந்தர் அப்பரை வினவியபோது அப்பர் "ஸ்கந்தமூர்த்தியின் பல்லக்கைத் தாங்கிவரும் பேறு பெற்றேன்" என்று கூறியதாக இந்நூல் 25-ம் பக்கத்திற் சொல்லப்படுகிறது. இது அழுத்தமாக ஆக்ஷேபித்தற்குரிய ஒரு பகுதியாகும். திருஞானசம்பந்தர் முருகப் பெருமானின் அவதாரமா அல்லவா என்பதைப்பற்றிப் பலவிதமான அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன. ஸ்மார்த்தர்கள் வைணவர்கள் கூறும் அவதார முறையைச் சைவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்பது "கவுணியர் பெருமான் உருவாய் வருவோனே" என்று திருப்புகழில் முருகவேளைப் புகழும் அருணகிரியார் திருவாக்கு. அப்பர் தேவாரத்தில் யாண்டும் சம்பந்தரை முருகவேள் அவதாரமாக அப்பர் கூறவில்லை. "நந்திசனை வாசகனுக் கொண்டார்" என்பது போன்ற தெளிவான குறிப்பு இல்லாமை அப்பர் காலத்து அக்கொள்கையில்லையென்பதை வலியுறுத்தும். சம்பந்தரே தமது தேவாரத்திற் பல விடங்களில் தமது தொல்வினை நல்வினைகளைக் குறிக்கிறார். (3.1.1,2.106.1) சுந்தரரும் சம்பந்தரைப் புகழும் இடங்களிலெல்லாம் அவதாரக் கொள்கையைக் கூறவில்லை. திருவிசைப்பா ஆசிரியர்களும் பட்டினத்தடிகளும் சம்பந்தரைக் கூறுமிடங்களில் அவதாரமென்று கூறவில்லை. நம்பியாண்டார் நம்பிகள் மும்மணிக்கோவையில் "கவுணியர் தலைவன்....மலைமகள் புதல்வன்" என்றும், சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்துள், வானவர் நாயகர் மகனார் (314-ம் பாட்டு), இறைவர் திருமைந்தர் (540), புரமெரித்தார் திருமகனார் (617), ஆறு சூடினார் திருமகனார் (1074) என்றும் கூறுவதிலிருந்து அவதாரம் என்ற கொள்கை யேற்படாது, சம்பந்தர் சத்புத்திர மார்க்கத்தை வலியுறுத்திய சமயகுரவர் என்ற கொள்கையே வலியுறுத்தப்படும். இந்த நுட்பத்தை யுணராதவரும், சைவ சித்தாந்தப் பேரறிஞர்கள் என்று கருதப்படாதவருமாகிய பல புலவர்கள் நம்பியாண்டார் நம்பிகளும் சேக்கிழாரும் கூறியவற்றை ஏனைய சமயிகள் கூறும் அவதாரக் கொள்கையென்று திரிபாகக் கொண்டு தத்தம் நூல்களில் சம்பந்தர் முருகர் அவதாரமென்று வெளிப்படையாகக் கூறினார்கள்.

"எல்லார் பிறப்பும் இறப்பும் இயற்பாவலர்தம்
சொல்லால் தெளிந்தேம்நம் சோணேசர்—இல்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்"

என்று குகைநமசிவாய தேவர் அருணகிரியந்தாதியிலும், "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்று அருணகிரிநாதர் கந்தரநுபூதியிலும், கடவுள் பிறப்பு இறப்பு இல்லாதவரென்று பெரியார்கள் பன்னிரு திருமுறைகளிலும், பதினன்கு சாத்திரங்களிலும் கூறுவனவற்றிலிருந்து பதியிலக்

சனத்துக்குச் சிறிதும் பொருந்தாத அவதாரக் கொள்கை நமது சைவ சமயத்திலில்லையென்பது வெளிப்படை. அப்பர் சுந்தரர் முற்பிறவி வரலாறுகளைக் கூறும் சேக்கிழார் சம்பந்தரை முருகரது அவதாரமென்று கூறாது விடுத்ததும், அன்னை வயிற்றிற் பத்து மாதம் கருப்பவாசஞ் செய்த பிறகே பிறந்தவரென்று (20—26) தெளிவாகக் கூறுவதும் நோக்கத்தக்கன. விரிவஞ்சி இம்மட்டில் விடுக்கின்றோம். கருப்பவாசஞ் செய்து பிறந்து பதினாறாண்டுகள் உலகில் வசித்துப் பின் சாயுச்சியபதவி பெற்ற ஒருவர் கடவுளின் அவதாரம் என்பது சைவசித்தாந்த சமயத்துக்கு ஒவ்வாத கொள்கை. அச்சமயகுரவர் ஒருவரை அத்தகைய அவதார புருஷர் என்று அச்சமயகுரவருள் மற்றொருவர் கூறுவதாக இக்கம்பெனியார் வரலாற்றைத் தயாரித்துள்ளது பெரிதும் வருந்தத்தக்கது. சமய குரவர்கள் சரித்திரங்களைத் தயாரித்துப் படமெடுக்க விரும்புவோர் அச்சமயக் கொள்கைகட்கு மாறுபட்ட விஷயங்களை அக்குரவர்களே கூறுவதாகச் சம்பாஷணைகள் சிருஷ்டித்தால் சமயகுரவர்களிடத்தில் அச்சமயிகட்குள்ள பக்தி குன்றுமல்லவா? தவறான கொள்கைகளைக் கூறுவோரைச் சமய குரவர்களென்று எங்ஙனம் நீங்கள் கொண்டீர்களென்று ஏனைச் சமயத்தவர் நம்மை எள்ளிநகையாடற் கிடமுண்டல்லவா? இவைகளையெல்லாம் ஆழ்ந்து சிந்தியாது முருகவேள்மீதுள்ள பக்தியொன்றே தங்கள் கண்களை மறைப்ப, இக்கம்பெனியார் கண்டவாறெல்லாம் குருபக்திக் கிழிவுதேடியது உண்மைச் சைவர்கள் சகிக்கக்கூடியதல்ல.

இக் கட்டுரையையும் வேறு பல காரணங்களையும் கருதிய பின்னர் நமது சமாஜத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களால் செப்பஞ் செய்யப்



பெற்ற "வேல் படக்காட்சிக் கம்பெனியார் எழுதுவித்துள்ள அப்பர்சுவாமிகள் சரித்திரம் என்னும் நூலானது சில முக்கியப் பகுதிகளில் மூலநூல்களுக்கு முற்றிலும் மாறுபட்டிருப்பதால் அந்நூலை யொட்டித் தயாரிக்கப்படும் படமானது சைவசமய பரமாசாரியர் ஒருவரைப்பற்றித் தவறான கொள்கைகளை ஜனங்களிடையே பரப்புவதாகுமாதலால் அப்படத்தை மூலநூல்களுக்கு முரணாத வகையில் திருத்தித் தயாரிக்கவேண்டுமென்றும் அது இயலாவிட்டால் அப்பர் சரித்திரப்படமே தயாரிக்கப்படல் கூடாதென்றும் இச்சமாஜம் பெரிதும் வற்புறுத்துகின்றது" என்ற தீர்மானம் 14-3-37-ல் ஏகமனதாக நிறைவேறிற்று. நிர்வாக சபையின் கட்டளைக்கிணங்கியே இக்கட்டுரையும் வெளியிடப்படுகின்றது. சமாஜத் தீர்மானமே போதுமென்று சும்மா விருந்துவிடாமல் நமது நாட்டிலுள்ள எல்லாச் சைவசபைகளும் தத்தம் கருத்துக்களை விரைவில் இக்கம்பெனியாருக்குத் தெரிவிக்கவேண்டுகிறோம்.

# சைவ சமயம்

[ஔவை. சு. துரைசாமி பிள்ளை]

இக்காலத்தில் நமது நாட்டில் பலவகையான சமயங்கள் (மதங்கள்) இருக்கின்றன. பல சமயங்களையும் பலபேர் தழுவி யிருக்கின்றனர். இவர்களில், நம் தென்னாட்டில் கிறித்தவர், முகம்மதியர், சைனர் முதலியவர்கள் கூடியஅளவில் தத்தம் சமயக்கொள்கைகளை அறிந்து இருக்கிறார்கள். ஆனால் நம்மவர்களில் பெரும்பாலோர் நமது சைவசமயக் கொள்கைகளை அறியாமல் இருக்கின்றனர். அநேகர் திருநீறு அணிவதுதான் சைவம் என்று நினைக்கின்றனர்.

சிவத்தோடு சம்பந்தமுடையது சைவம். சிவத்தோடு சம்பந்தமுடைய சமயம் சைவசமயம். அச்சமயத்தைச் சார்ந்து சிவத்தின் முதன்மையினை அறிந்து ஒழுகுகின்றவர்களை சைவர்கள் என்று பெரியோர் கூறுவர்.

சைவசமயம் என்பது நம் தமிழ்நாட்டில் புராதனமாக நிலைபெற்று நிற்கும் சமயமாகும். ஆகையால்தான் இதை அறிஞர்கள் தமிழ்ச்சமயம் என்றும் கூறுகின்றனர். ஜி. யு. போப் என்ற ஆங்கிலேயக் கிறித்துவப் பேராசிரியரும் தென்னிந்தியாவில் சரித்திரகாலத்துக்கு அதீதமான காலத்திலிருந்தே நிலைபெற்றுவரும் மிகுந்த திருத்தமான, அழகான சமயம் சைவசமயம் என்றே கூறியிருக்கின்றார். இதனால் நமது சைவசமயம் நம் நாட்டில் புராதனமாக இருந்துவரும் மிகப் பழைய மதம் என்று தெரிகிறோம்.

சைவர்கள் வழிபடும் முழுமுதற் கடவுளுக்குச் சிவம் என்று பெயர். சிவம் என்னும் பதத்திற்குச் செம்மை, இன்பம், மங்களம் என்பன பொருள். நம் நாட்டில் முன்பிருந்த சமணச் சான்றோரும் சிறிது காலத்துக்கு முன்பிருந்த கிறிஸ்துவச் சான்றோரும்கூட, தங்கள் நூல்களில் கடவுள்நிலையைக் கூறும்போதெல்லாம் "சிவகதி" "சிவகதி" என்றே கூறி யிருக்கின்றார்கள். சூளாமணி யென்னும் சமணகாவியத்தைப் பாடிய தோலாமொழித்தேவர் என்னும் சமணச் சான்றோர் முத்திச்சருக்கத்தில், "அணிவரு சிவகதியாவது இன்பமே" (செய். 6) என்றும் கிறிஸ்துவ காவியமாகிய தேம்பாவணி என்னும் நூலில், கான்ஸ்டாண்டினஸ் பெஸ்கி (வீரமாமுனிவர்) என்னும் கிறித்துவச் சான்றோர் இரண்டாங் காண்டத்துச் சோசுவன் வெற்றிப்படலத்தில் "சிவமலி தனிமுதலே" (செய். 185) என்றும் கூறியிருக்கின்றார்கள். இதனால் சைவசமயச் செம்பொருளாகிய சிவ



மென்பது, ஏனைய சமயத்தோராலும் ஒப்பக்கருதி வழங்கப்படும் சிறப்புடையதென்பது இனிது விளங்கும்.

## சைவசமயக் கோள்கை

1. கடவுள், உயிர்கள், உலகம் என்ற மூன்றும் சைவ சமயத்தின் முதற்பொருள்கள். இவற்றுள், கடவுளைப் பதி என்றும், உயிர்களைப் பசு என்றும், உலகத்தைப் பாசம் என்றும் கூறுவர்.

2. உலகம் தோன்றுவதும், இருப்பதும், இறப்பதும் ஆகிய மூன்று செயல்களை உடையது. இம்மூன்று செயல்களையும் இவ்வுலகம் செய்யும்படி அருள்பவன் கடவுள். அவனைச் சிவன், சிவம், பரமன், பரம்பொருள், சிவபரம்பொருள் என்றெல்லாம் சைவர்கள் கூறுவர்.

3. புராணங்களில் சொல்லப்படும் மற்றைய தெய்வங்கள் பிறக்கும், இருக்கும், இறக்கும். சிவபெருமான் பிறவான், இறவான், எப்போதும் ஒரு தன்மையனாய் நிலைபெற்று இருப்பவன். உலகமும், உயிரும் கெட்டபோதிலும், அவன் மாத்திரம் கெடாமல், கெட்ட அவையெல்லாம் தன்னிடத்திலேயே ஒடுக்கி நிற்பன்.

4. சிவபெருமான் உயிர்வேறு தான்வேறு என்று இல்லாமல், இரண்டறக் கலந்து நிற்கின்றான்.

5. சிவபெருமான் சருவவியாபகன். அவன் இல்லாத இடமே இல்லை.

6. உயிர்கள் செய்யும் கன்மபலத்துக்குத் தக்கவாறு சிவனே சுகதுக்கங்களைத் தருகின்றான். உயிர்களும் தாம் செய்யும் கன்மத்துக்கு ஈடாக மாறிமாறிப் பிறக்கும்.

7. மனம் முதலிய அகக் கருவிகளும் உயிர் கூடினால் தான் தமக்குரிய தொழில்களைச் செய்யும்.

8. உயிருக்கு இயல்பாகவே அறிவு உண்டு; ஆனால், குற்றமறக் காணமுடியாதபடி, அதனுடைய அறிவு, அதன் மலத்தால் மறைக்கப்பட்டிருக்கிறது. அதனால், அதனிடத்தில் குணமும் குற்றமும் கலந்து இருக்கின்றன.

9. உயிரால் மண்முதலிய பூதங்களும், தத்துவங்களும் தொழில்செய்யும்.

10. உயிர்கள் பரமன் திருவருள் துணையால், மெய்ப்பொருளை மெய்யாகவே உணரமுடியும்.

11. பரமன் ஆசையும், பாசமும் இல்லாதவன்; அந்த ஆசாபாசங்களும் அவனை அடையமாட்டா.

12. உயிர்கள் ஆசையும், பாசமும் நீங்கிப் பரமனை அடையவும், அவனுடைய பரசிவ போகத்தை அனுபவிக்கவும் முடியும்.

13. உயிர்களுக்கு மெய்யறிவு தவத்தாலே உண்டாகும். தவம் என்பது நேர்ந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதும், உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருப்பதுமாகும்.

14. பரமன் உண்டு என்று அறிந்து பக்தி செய்யும் வழி பரஞானநெறி எனப்படும். அந்த அறிவும் பரஞானம் எனப்படும். பரஞானத்தால், பரமனையுணர்ந்து பரஞான நெறியில் உயிர்கள் நின்றால், பரமன் உயிர்களின் அறிவுக்குள் அறிவாய்த் தோன்றி அருள் செய்வான்.

15. உயிர்களுக்கு மலம் காரணமாகப் பற்று உண்டாகிறது. அப்பற்று அறுமானால் உயிருக்குத் தன் அறிவும், தன்னையுடைய பரமன் அறிவும் தோன்றும். பரமனும் அந்த அறிவினிடத்தே வெளிப்படுவான்.

16. பரமன் திருப்பெயரைச் செபித்தால் பற்று நீங்கும். எவ்வுயிரும் பரமன் இருக்கும் இடமாகும் என்று



எண்ணி அவ்வுயிருக்கு அன்பு செய்தால் பற்று நீங்கும். யானும் இவ்வுயிர்களுள் ஒன்றே; என் கடன் பணி செய்து கிடப்பதே; என் உள்ளத்தும் பரமன் இருக்கின்றான் என்று நினைந்து, அவனுக்கு அஞ்சி நடந்தால் பற்று நீங்கும்.

17. பற்று நீங்கியவழி, உயிர்கள் பரசிவதரிசனம் பெற்றுப் பரமானந்தமாகிய சிவத்தை அடையும்.

18. பரமன் சன்னிதானத்தில் சாதி வித்தியாசம், நிற வித்தியாசம் தீண்டுதல் தீண்டாமை வித்தியாசம் முதலிய எந்த வகையான வித்தியாசமும் கிடையா.

19. சைவர்களுடைய கடமை:—

(அ) ஆணவம் முதலிய மூன்று மலங்களையும் களைய வேண்டும்.

(ஆ) எக்குலத்தவராயினும், எச்சாதியினராயினும் சிவநேசமுடையவரானால் அவரோடே கூடவேண்டும்.

(இ) சிவநேச முடையவரையும் சிவலிங்கத்தையும் சிவமென்றே தேறி வழிபடவேண்டும்.

(ஈ) சைவருக்குரிய திருநீற்றையும், உருத்ராக்ஷ மணியினையும் நீக்காமல், இடைவிடாமல் அணிந்திருக்கவேண்டும். சிவபெருமான் திருப்பெயரே மந்திரம்; உருத்ராக்ஷமே ஆபரணமணி; திருநீறே செல்வம். திருநீற்றை எவ்வகையாலும் மறக்கக் கூடாது.

(உ) இக்கடமையை எந்தக் காரணத்தை முன்னிட்டும் சைவன் என்பவன் கைவிடக்கூடியவன் அல்லன்.

20. சைவச் சான்றோர் பலர், "இக்கொள்கையே மற்ற மதங்களில் எதுவாயினும் உடையதாயின், அதுவும் சைவர்களால் விலக்கப்படாது." என்று கூறுகின்றனர். மேலும் சைவமல்லாத பிற மதங்களிலிருந்துகொண்டே

சிவகைங்கரியத்தால் சிவகதி பெற்ற பெரியோர்களையும் சைவர் "அப்பாலும் அடிசார்ந்த அடியார்" என்று கருதி மேற்கொள்ளும் கடமையுடையவராவர்.

இவற்றை விரிவாய்க் காண்பதற்குத் தமிழ் நூல்களுட் சிலவற்றை அறிந்தோர் வடித்துக் கூறியிருக்கின்றனர். அவையாவன :—

"வள்ளுவர், மெய்யன்பர் மொழி வாசகம், தொல்காப்பியமே,
தெள்ளுபரிமேலழகன் செய்த உரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம், தொகுசித்தி ஓராறும்
தண்தமிழின் மேலாந் தரம்"—பழைய வெண்பா.

## எச்சம்

[துடிசைகிழார். அ. சிதம்பரனார்]

இச்சொல்லானது திருக்குறளில் ஐந்து இடங்களில் வருகிறது :—

1. தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.
2. வசை என்ப வையத்தார்க் கெல்லாம்
இசைஎன்னும் எச்சம் பெறாவிடின்.
3. வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.
4. அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது.
5. எச்சம் என்றென் எண்ணும் கொல்லோ
ஒருவரால் நச்சப் படாதவன்.

மேலே காட்டிய முதற் குறளில் உள்ள **எச்சம்** என்ற சொல்லுக்குப் பரிமேலழகர் தம்முடைய உரையில் புத்திரர் என்று பொருள் கூறியுள்ளார். அதாவது, "இவர் நடுவு நிலைமையை உடையவர், இவர் அஃதில்லாதவர் என்னும் வேறுபாட்டினை, அவரவர்க்கு நன்மக்கள் இருத்தலானும் இல்லாமையானும் அறியத்தகும். *i. e.* The noble and the wicked are known by their progeny என்பதே.



இவ்வுரை பொருத்தமுடையதா? இல்லையா? என்பது தான் இங்கே நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டது.

உலக அநுபவத்தில் இவ்வுரை பொருத்தமுடையதாக இல்லை.

நல்ல புலவன் ஒருவனுக்குச் சர்வமுட்டாளான மகன் தோன்றுகிறான். நடுவு நிலைமையும் சாதுத் தன்மையும் வாய்ந்த ஒருவனுக்குக் குடிகாரனும் கொலைகாரனுமான பிள்ளை தோன்றுகிறான். அறிவில்லாத பேதை ஒருவனுக்கு, நல்ல அறிவோடுக்கூடிய நடுவு நிலைமை வாய்ந்த பிள்ளை உண்டாகிறான். இது உலகில் கண்கூடு. ஆகையால் மகனைப் பார்த்துப் பிதாவின் குணாதிசயங்களை அளந்தறிதல் கூடாத காரியமாயிருக்கிறது. ஆகையால், பரிமேலழகர் உரை அவ்வளவு பொருத்தமாகக் காணப்படவில்லை.

ஆனால், திருவள்ளுவர் கருத்துத்தான் என்ன?

திருவள்ளுவர் சில அருமையான பதங்களுக்குப் பொருள் தம்முடைய குறளிலேயே விரித்துக் கூறியுள்ளார். அத்தகைய பதங்களில் சில வருமாறு :—

(1) எச்சம். (2) தவம். (3) வாய்மை. (4) சால்பு முதலியன.

எச்சம் என்ற சொல்லுக்குப் பரிமேலழகர் கூறுகிறபடி புத்திரன் என்ற பொருள் இருந்தபோதிலும் "தக்கார் தகவிலர்...." என்ற குறளில், வள்ளுவர் அந்தப் பொருளில்

எச்சம் என்ற சொல்லை அமைக்கவில்லை. அது எற்றால் அறிதும் எனின், வள்ளுவர் "புகழ்" என்ற அதிகாரத்தில் தாம் கொண்ட கருத்தை விளக்கியுள்ளார்.

அவ்வதிகாரத்தில், வசை என்ப வையத்தார்க் கெல்லாம் இசை என்னும் எச்சம் பெறாவிடின்" என்று, எச்சம் என்ற சொல்லுக்கு இசை (=புகழ்) என்று தாம் கொண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

இக்கருத்தை ஒட்டி அக்குறளுக்கு உரையெழுதுவோமானால் "ஒருவர் தகுதியுடையார் அல்லது தகுதியில்லாதவர் என்பது, அவரவருடைய புகழால் அல்லது இகழால் அறியப்படும்" என்று தான் எழுத நேரும்.

ஒருவன் இறந்த பின் எஞ்சி நிற்பது எச்சம். அதாவது அவனுடைய நல்ல பெயரோ கெட்ட பெயரோதான். ஒருவன் இறந்தபின் உலகத்தார் அவனைப்பற்றிப் பேசிக்கொள்ளுகிற விதத்தைக் கவனித்தால் அவன் புகழ்ச்சியை உடையவன் அல்லது இகழ்ச்சியை உடையவன் என்று கூறி விடலாம். அப் புகழ்ச்சியோ அல்லது இகழ்ச்சியோதான் ஒருவனுடைய எச்சமாகும்.

இனி, ஏனைய மூன்று குறள்களில் வள்ளுவர் எச்சம் என்ற சொல்லை எப்பொருளில் வழங்கியுள்ளார் என்பதை ஆராய்வாம்.

"வினைபகை என்றிரண்டி னெச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்"

ஈண்டு "தீயெச்சம் போல" எனக்கூறித் தெளிய வைத்துள்ளார். அதாவது மிச்சம் (=எஞ்சி நிற்பது) என்ற பொருளில் வழங்கியுள்ளார்.

(இ - ள்) ஒருவன் அனுபவித்துக் கழியாமல் மிச்சம் வைக்கும் புண்ணிய பாவங்களும் அதாவது நல்வினை தீவினைகளும், முற்றும் அறவே ஒழிக்காமல் மிச்சம் வைக்கும் பகையும் ஆராயுமிடத்துத் தீயினது மிச்சம்போல பின்னர் வளர்ந்து அவனுக்குக் கெடுதி செய்யும் என்பதே.



"அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவா வுண்டேல் உண்டாம் சிறிது"

இக்குறளிலேயும் மிச்சம் என்ற பொருளில் வழங்கியுள்ளார்.

(இ-ள்) கயவராகிய கீழ்மக்களிடத்தில் ஆசாரம் (=சீலம்) ஏதேனும் கண்டால் அதற்குக் காரணம் அரசனது தண்டனைக்கு அஞ்சும் அச்சமேயாகும். அஃதன்றித் தம்மால் விரும்பப்பட்ட பொருள் கிடைக்குமாயின், அதனாலும் அந்த ஆசாரம் (=சீலம்) சிறிது உண்டாம் என்பது. *i.e.* Fear or love of gain fashions the seemingly virtuous conduct of the vile.

இனி, மேலே காட்டிய ஐந்தாவது குறளில் எச்சம் என்ற சொல்லைப் புகழ்" என்ற பொருளிலேயே வழங்கியுள்ளார். அக்குறள் வருமாறு:—

எச்சம் என்(று)என் எண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப்படாதவன்.

(இ - ள்) ஒரு பொருளையும் கொடுத்தறியாமையால் ஒருவராலும் விரும்பப்படாதவன் தான் இறந்த பின் இவ்வுலகத்தில் எஞ்சி இருப்பதாக எதை நினைப்பானோ? தெரியவில்லை என்பதே. Abandoned of men and *with no fame*, what does a loveless miser hope to carry with him when he is dead ?

ஆகையால், இதுகாறும் கூறியவாற்றால் திருவள்ளுவர் எச்சம் என்ற மொழியைப் "புத்திரன்" என்ற பொருளில்

வழக்கவில்லை என்றும், "புகழ்" "மிச்சம்" என்ற பொருள்களிலேயே வழங்கி யுள்ளார் என்றும், நூலாசிரியர் கருத்துக்கு இணங்கப் பொருளுரைப்பதே உரையாசிரியர்களுடைய கொள்கையா யிருக்க வேண்டுமென்றும் கூறினும்.

# இன்பச் சைவம்

[இளஞ் சைவப் புலவர்—மணிவாசகம்]

சைவத்துக்கு இனிமை என்றுபேர், அந்த
சைவம் மிகுசைவம் எங்கள் உயிருக்குநேர்
சைவத்துக்கு செம்மை என்றுபேர், இன்ப
சைவம் எங்கள் சமுகத்தின் விளைவுக்குநீர்
சைவத்துக்கு சுபம் என்றுபேர், அமுத
சைவம் எங்கள் வாழ்வுக்கு நிருமித்தவூர்
சைவத்துக்கு சாந்தம் என்றுபேர், அத்துவித
சைவம் எங்கள் உரிமைக்கண் தொடர்புக்குவேர்
சைவம் எங்கள் இளமைக்குப்பால், உயர்
சைவம் அன்புச்சைவம் இங்குபுலவர்க்குக் கோல்
சைவம் எங்கள் உயர்ச்சிக்குவான், வீர
சைவம் எங்கள் அயர்ச்சிக்குச் சுடர்தந்ததேன்
சைவம் எங்கள் அறிவுக்குத்தோள், தெய்வ
சைவம் எங்கள் அறியாமை கல்லுகின்றவாள்
சைவம் எங்கள் தோற்றத்தின் தாய், ஞான
சைவம் எங்கள் சிவசத்தி உளமுற்றதீ.

(பாரதி தாசன் பாடிய இன்பத் தமிழினைத் தழுவியது)

# இச் சமயத்திற்கு வேண்டிய சமயம்

(இதழ் - ௫௦ - மலர் - ௯ - ௧௯௭-வது பக்கத் தொடர்ச்சி)

[திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்]

ஒளிநெறியில் மேன்மேற் சென்று ஒப்புரவாற்றி வாழுமாறு சைவ சமயம் தூண்டிக்கொண்டிருப்பினும், எக்காரணத்தாலோ இக்காலிற் சைவ சமயிகள் பலர் வாழ்வில் இவ்வியல்பு விளங்கித் தோன்றவில்லை. 'பிற சமயிகளும் அவ்வாறே தத்தம் கூட்டத்தவரைப் பற்றிச் சொல்லி வருந்துகின்றனர்' என்று கூறிவிடுவது சைவர்கட்கு மனச் சமாதான முண்டாக்கிவிட மாட்டாது. ஒவ்வொரு சைவனும் முதற்கண் தனது உடம்பையும், மனதையும், தூய்மையும் ஆற்றலும் பொருந்திய நற்கருவிக ளாக்கிக்கொண்டு, அவற்றின் வாயிலாக உலகுக்குயிராய் விளங்கும் ஒருத்தனை உணரும் திறனைப் பெற முயலவேண்டும். அதனோடொப்பத் தன் அன்றாட வாழ்வில் தன்னைச் சுற்றிலுமுள்ள உயிர்கட்குத் தானாற்ற வேண்டிய பணிகளை யாற்றி வரவும்வேண்டும். 'சரியை கிரியைத் தொண்டே சாலும்' என்பது சரியன்று. அவ்வாறே, 'சுவாமியும் வேண்டாம்; சரியை கிரியையும் வேண்டாம்; மக்கட்பணி யொன்றே மனங்கொளத் தக்கது' என்பதும் தவறு. இருவகைப் பணியும் நுரையீரலின் இரண்டு பைகள் போன்றவை. ஒன்றில்லா விடத்து மற்றது வலுவிழக்கும்; உயிரிழக்கும்.

சைவ சமய பரமாசாரியர் வாழ்வினையும் ஏனைய பல நாயன்மார் வாழ்வினையும் உற்று நோக்கின், இவ்வுண்மை புலனாகாமற் போகாது. மன்னுயிர்த் தொண்டின் வகையும் துறையும் காலந்தோறும் சிறிது சிறிது வேறுபடலாம். ஆனால் அத்தொண்டிற்கு அவசியம் எக்காலுமிருந்தே வந்துள்ளது.

'சைவ வாழ்வு' என்றால் உடனே சிவபூசையும் சிவாலய சேவையும் திருமுறைப் பாராயணமுந்தான், அதற்குமேல் ஒன்றுமில்லை' என்று எண்ணிவிடலாகாது. புகழ்ச்சோழர், மூர்த்தி நாயனார் முதலிய சைவ நாயன்மார் சிலரும், அவ்வரிசையில் அகப்படாத வேறு பல சைவரும் பேரரசர்களாகவும், சிற்றரசர்களாகவும், படைத் தலைவர்களாகவும், திரைகடலோடித் திரவியம் தேடுபவராகவும் வேளாண்மை முதலிய பிற பல தொழில் புரிந்து செழும்பொருளும் நல் வாழ்வும் படைத்தவர்களாகவும் விளங்கினர். சேரன் செங்குட்டுவனது நாட்டுப்பற்றும் தாய்மொழிப் பற்றும் அவனைக் கங்கை வரையிற் சென்று தமிழரை அவமதித்தோரைப் பொருது வெற்றி கொள்ளுமாறு தூண்டவில்லையா? பெருந் தொண்டராகிய சிறுத்தொண்டர் என்னும் பரஞ்சோதியார் வாதாபித் தொன்னகரம் துகளாகச் சேனைத் தலைமை செலுத்தவில்லையா? சிவபாத சேகரனாகிய இராஜராஜசோழன் கலிங்கமும், கடாரமும், ஈழமும் இலக்கத் தீவமும் தன்னடிப்படுத்துத் தனிமுடி கவித் தாளவில்லையா? சைவ அரசர்களும் பிரபுக்களும் தமிழ், ஓவியம், சிற்பம், சிலம்பம், பிற கலைகள் இவற்றையெல்லாம் புரக்கவில்லையா? நம் நாட்டில் எவரும் பசியும் பிணியுமின்றி வாழ வேண்டுமென்று ஆவன யாவும் புரிந்ததில்லையா? இவை யாவும் நிகழ்ந்தனவாதலின், சைவ வாழ்வெனில் சிவமூர்த்தி வழிபாட்டோடு ஒடுங்கி நிற்பது என்று கொள்ளுதல் பொருந்தாது.

உலகமுழுதும் இன்பெய்த வேண்டுமென்னும் விழைவே சைவர்க்குரியது. அவர்கள் பரமாசாரியராம் திருஞான சம்பந்தர் திருவவதரித்ததும், புனிதவாய் மலர்ந்தழுததும் "பூதபரம்பரை பொலிய" என்றன்றே புராணங் கூறுகின்றது! "தென்னாடுடைய சிவனே போற்றி" என்றெழும்



திருவாசகம், உடனே "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று கூறுவதன் பரந்த நோக்கம் எவர்க்கும் புலப்படத் தக்கதொன்று தானே!

சிவபெருமான், "தாய்தந்தை பல்லுயிர்க்குந் தாமேயாய தலைவர்." அம்மையப்பரே உலகுக்கு அம்மையும் அப்பரும். ஆதலால் உண்மைச் சைவர் உலக நன்மையை ஒருபோதும் மறக்கற்பாலர் அல்லர்; அதற்காகத் திருவருளை முன் தள்ளித் தம்மால் "ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம்" செய்யும் கடமையுடையார். இதனினின்றும் தப்புமாறில்லை.

இந்நாளில், வறுமையும், அறிவின்மையும், குணக்கோணலும், தீயொழுக்கமும், சாதிப்பூசலும், தெய்வ இருப்பில் நம்பிக்கையின்மையும் பெருகி வருகின்றன. இத்தீமைகளை ஒடுக்கி நன்மைகளை வளர்த்தற்கான எல்லா நன்முயற்சிகளையும், சிவவழிபாடுடைய சைவர்களும் அறிவாற்றலுடன் காலமிடமறிந்து செய்தாகும் கடப்பாடுடையரே.

பெரிய ஆற்றலோடு விளங்கும் பிற சகோதர சமயங்கள் எவ்வுண்மைகளை மிகுதியாய் வற்புறுத்துகின்றன, எந்த நல்லியல்புகளைத் தம்மைப் பின்பற்றும் மக்களின் பொது வாழ்வில் இனிது புலப்படுத்துகின்றன என்பதை உற்று நோக்கி, அந்நன்மைகள் தம் சமுதாய வாழ்விலும் விளங்குமாறு சைவ சமயிகள் பாடுபடல்வேண்டும். இஸ்லாத்தில் ஏக தெய்வ வழிபாடும், மக்கள் நடைமுறையில் சகோதரத்துவமும் காணப்படுகின்றன. கிறிஸ்துவத்தில் குற்றம்பொறுக்குமியல்பும், மிகத் தாழ்ந்த மக்களிடையே வலிந்து சென்று தொண்டாற்றி அவர்களை மேனெறிக்குயர்த்திவரும் தியாக வாழ்வும் நிகழ்கின்றன. நமது இந்து சமயத்தையே நோக்கின், ஆரிய சமாஜத்தாரிடையே, பிறப்பாற் சாதி

பேணுமை, சத்தமும் சருக்கமும் பொருந்திய வழிபாடு, ஆண்மை, தியாகம் மன்னுயிர்த்தொண்டு என்பன விளங்குகின்றன. நம் சகோதர சமயமாகிய வைணவத்தின்பால் ஆசாரியபத்தியும், தமிழ்மறைகளிற் பற்றும் எழிலொடு திகழ்கின்றன. இன்னன பல. இவையெல்லாம் சைவத்தில் இல்லை என்ன வொண்ணாது. முன்னாளிற்போலவே இந்நாளிலும் சைவர்கள் இவற்றைத் தம் அன்றாட வாழ்க்கையில் புலப்படுத்தி வரவேண்டும் என்று வற்புறுத்தவே இவை குறிக்கப்பட்டன.

இது நிற்க. இக்காலத்து வேண்டிய சமயமானது ஒரு நாட்டிற்கே, ஒரு மொழிக்கே, ஒரு கூட்டத்திற்கே உரியதெனக் கூறும் இயல்பினதா யிருத்தலாகா தென்றோம். சைவத்தில் இவ்வியல்புண்டோ எனில், இல்லை என்பாம். இறைவனை நோக்கி நமதாசாரியாராம் நாவுக்கரசர் "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்கின்றார். "உலகுக்குயிராயவன் காண்" என்கின்றார். "தாயினும் நல்ல சங்கரன்" நம்மிறைவன் என்கின்றார். ஆகவே எல்லா வுலகங்களினுமுள்ள எல்லா உயிர்களையும் ஆட்கொள்ளும் இறைவன் ஒருவனே என்பது தேற்றம். ஐவகை யெனும் பூதமாதியை வகுத்த இறைவனே "சைவ முதலா அளவில் சமயமும் வகுத்தவன்" என்பர் தாயுமானார். எனவே, எல்லாச் சமயங்கட்கும் கருத்தா அவ்விறைவனே யாவன். அம்மட்டோ, "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்" என்னும் ஒரு பெருமொழியும் தேவாரத் திருமுறையில் எழுந்துளது! சைவநூல் உண்மை இங்ஙனமிருத்தலின் எச்சமயமும் மெய்ச் சமயம் என்பதும், ஆன்மாக்கள் பக்குவத்தாற் பலதிறப்பட்டவையாதலின், அவற்றிற்கேற்



பப் பல சமயங்களும் இறைவனாணையின் வழியே தோன்றியவை என்பதும், இவை யாவும் தத்தம் உண்மை நிலையில் சைவர் அன்பிற்கும் நன்மதிப்பிற்கும் உரியன வென்பதும் போதரும். இவ்வாறு சைவம் பிற சமயங்களை யெல்லாம் நீதியினால் தழுவித் தன்னகத்தேயே வைத்துப் பேணும் இயல்பும் உடையதாம்.

எனவே, சைவம் தனதடிப்படையான அமிசங்கள் யாவற்றோடும் எந்நாட்டிலும் எம்மொழியாளரிடத்தும் விளங்கக் கூடியதேயாம் என்பது தேற்றம். இந்நாட்டின் நாகரிகத்திற் கேற்பச் சில சிறப்பொழுக்கங்கள் வளர்ந்து மிளிர்கின்றன. இவற்றையும் பிறதேயத்தார் ஏற்பினும் ஏற்கலாம். எல்லாவற்றையும் ஏற்றாலன்றி அவரைச் சைவரெனப்பேணலாகாது' என்று கூறுதல் பெருந் தவறாகும்.

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள் என்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்"

என்னும் திருப்பாசுரம் குறிக்கும் சாக்கிய நாயனார் கொள்கையும் ஒழுகலாறும் இங்குக் கருதற்பாலன. "அப்பாலுமடிச் சார்ந்தார்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் யார் யார் குறிக்கப்பட்டார்கள் என்பதைச் சேக்கிழார் பெருமான் தரும் கண்கொண்டு பார்க்கும் போதும் சைவத்தின் பரந்த இயல்பு இனிது விளங்கும். எனினும், இங்ஙனங் கூறியவாற்றானே இந்தியாவில், நம் தென்றமிழ் நாட்டில், வாழும் சைவருக்கும், அவர் நாட்டில் வளர்ந்து அவரது நாகரிகத்தின் நல்லணியாய் விளங்கும் விபூதி ருத்திராக்க பஞ்சாக்கரம், சிவாலய சேவை, சிவபூசையாதிய சிறப்பொழுக்கங்கள் அனாவசியமானவை

என்று கொள்ளுதல் அடாது. இவை யாவும் இங்குள்ளார்க்கு என்றும் சிறப்பாய் வேண்டியன என்பதே கருத்தாம். அஃதில் வழியும், அடிப்படையான சைவக் கோட்பாடும் சைவ வாழ்வும் பிற நாட்டினர், மொழியினர் எவர்பாற் காணினும், அவரையும் நமர் எனவே பேணிக் கொள்ளல் வேண்டும் என்பதே ஈண்டு வற்புறுத்தப்படுகின்றது.

இத்துணைப் பெரும்பரப்பினதாய் மொழியாலும் தேயத்தாலும் கட்டுப்படாததாயுள்ள சைவம், பிறப்பு வேற்றுமையாலும் கட்டுப்படாததென்பதும் தேற்றம். இந்தியா ஒரு காலத்திலிருந்த நிலைமையை ஒட்டி, வெவ்வேறு வருணத்தார்க்குச் சிற்சில முக்கியமல்லாத வேறுபாடுகளோடுகூடிய சமயாநுட்டானங்கள் சைவநூல்கள் சிலவற்றில் வகுக்கப்பட்டிருப்பினும், சிவனை வழிபட்டுச் சீர்க்கதியடைதலில் பால்வேற்றுமை கருதியோ, சாதிவேற்றுமை கருதியோ யாதொரு தடையும் சைவத்தில் விதிக்கப்படவில்லை. சைவத்தை அநுசரித்து அவ்வழியில் நடந்துகாட்டியவர்கள் சைவசமய ஆசாரியர்களாவர். அவர்கள் வாழ்க்கையையும் போதனைகளையும் கருத்தூன்றிப் பார்ப்போர்க்கு இவ்வுண்மை வெள்ளிடைமலையென விளங்கும்.

மேற்குறித்தபடி, இக்காலத்திற்கு வேண்டிய சமயத்தின் இயல்புகள் யாவும் பண்டைச் சைவத்தின்கண்ணும் உள. இதன் தலைவனும் சிவபெருமான் "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருள்; பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியன்". அதுபோலவே அவன் அமைத்த மார்க்கமும் முற்காலத்திற்போலவே இக்காலத்தும் அதனிற் சேர்வாரை நன்னெறிக்குய்ப்பதாகும்.

இம் மாண்புடைய சைவசமயத்திற் பிறக்கும் பேறு பெற்றுள்ள சகோதர சகோதரிகளனைவரும், தாம் செய்ய



வேண்டிய தலையாய கடமைகளுள் தம் சமயம் பேணும் கடமையையும் ஒன்றாகக் கொள்ளவேண்டும். தமக்கும் தம் பின் சந்ததியார்க்கு மட்டுமன்றிப் பொதுவாய் உலகத்திலுள்ளார்க்கே இச் சமய நலங்கள் உரியவாம்படி பேணி ஒப்பித்துவிட்டுச் செல்லும் கடமையும் அவர்கட்குண்டு.

இப்பெருங்கடனைச் சைவர் செவ்வனே ஆற்றவேண்டில், அவர்கள் சைவ சமயத்தில் உண்மையான பற்றுக்கொண்டு, சைவ நூல்களைப் படிக்கவேண்டும். தமிழ்மொழிப் பயிற்சியை வளர்க்கவேண்டும். இயன்றவளவு அதனோடு தொடர்புடைய வடமொழிப் பயிற்சியும் பெற முயலவேண்டும். நாள்தோறும் நடத்தும் தம் வாழ்வின் எத்துறையினும் பாவம் அணுகாவாறு முயன்றுவரவேண்டும். அறிந்தும் அறியாமலும் வந்துசேரும் பாவங்கட்குச் சிந்தை நொந்திரங்கிச் சிவனிடம் நாள்தோறும் முறையிட்டுக் கழுவாயும், மீண்டு மப்பாவஞ் செய்யாத் திடனும் பெற வேண்டும். சிவதீக்ஷை பெற்றுத் திருமுறையும் சித்தாந்த நூலும் தத்தம் அறிவாற்றலுக்கு ஏற்றவளவு முறையாய்ப் பயிலுகையில் ஆங்கிலமுதலிய பிறபெருமொழியாளர் ஆராய்ந்துரைக்கும் அரிய அறவுரைகளையும் சமய வுண்மைகளையும் இயன்றவளவு அறிந்து காய்தல் உவத்தல் இன்றி உடன்வைத்து ஆராய்ந்து உண்மை காணவேண்டும். சிவபூசையும், கூடியவளவு சிவாலய சேவையும் பண்ணவேண்டும். இவ்வாறு தமது அறிவையும் சீலத்தையும் சிவபத்தியையும் பெருக்கிக்கொண்டு வரும்போதே, சமூக சேவையும் தம் அளவிற்கேற்றதொரு திட்டத்தின்படித் தனித்தும் சங்கங்கள் வாயிலாகவும் செய்துவர வேண்டும். உண்மைச் சமய வாழ்வினால் அன்பை வளர்த்தாலன்றி உலகில் எந்நலமும் நீடியாதாதலால், சமயத்துவேஷமும் வேறுபாட்டுணர்ச்சியு

யின்றி, முதலிற் சைவர்களிடையிலும், அதையடுத்துப் பிற இந்துக்களிடையிலும் ஏனைச் சமய அறிஞரிடத்தும் ஒற்றுமை காணும் உள்ளம்கொண்டு, கேட்போர் மனங்கொள்ளுமாறு சைவ நலங்களைத் தெரிவிக்கவேண்டும். இவ்வாறெல்லாம் திருவருளை முன்னிட்டுச் சைவர் செய்யத் தொடங்கின், இச் சமயத்திற்கு வேண்டிய சமயம் அவர்கட்கு அவர்தம் பண்டைச் சைவமேயாம் என்பது தெளிவாம். மேற்சொன்ன இலக்கணங்களைத் தத்தம் சமயத்தின்கண்ணேயே காணவல்ல பிறசமய சகோதரர்கட்கும், அவரவர் சமயமே அவரளவில் இச் சமயத்திற்கு வேண்டிய சமயமாம் என்று கொள்ளல் சரதம்.

"வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா"

# திருக்குறள் ஓர் இலக்கியமா?*

[நே. த. கிருஷ்ணசாமி]

திருக்குறள் ஓர் இலக்கியம்; அல்லது அஃது ஓர் இலக்கியமல்ல வென்பதை ஆராயுமுன் இலக்கியத்தைப் பற்றி ஆராய வேண்டுவது அவசியமாகும். இலக்கியமாவதென்ன? பெரியார் கண்ட உண்மைகளைக் கூறும் நூலுக்கே இலக்கியமெனல் பொருந்தும். பெரியார் கண்ட உண்மைகளுள்ளும் சில ஒரு காலத்துக்கே பொருந்த முள்ளவைகளாகக் காணுதல் இயல்பு. இவை இலக்கியத்திற் சேரமாட்டா. இலக்கியத்தில் கூறப்படும் பொருள்கள் எக்காலத்தும் எவருக்கும் பொருத்த முள்ளவைகளாகக் காணப்படுதல் வேண்டும். உதாரணமாக,

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.—(தீவினையச்சம்: 2)

என்னும் திருக்குறட்பாவை எடுத்துக் கொள்வாம். இதற்குப் பரிமேலழகர் 'தனக்கின்பம் பயத்தலைக் கருதிச் செய்யும் தீவினைகள் பின் அஃதொழித்துத் துன்பமே பயத்தலான், அத்தன்மையவாகிய தீவினைகள் ஒருவனாற் றீயினுமஞ்சப்படும்' எனப் பொருள் கண்டார். இஃது எக்காலத்தாவது பொய்த்ததுண்டா?

திருவள்ளுவர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். அக்காலத்தில் இது பொருத்தமாக இருந்திருக்கலாம். இக்காலத்துக்கு இது பொருந்துமா வென்பதைக் காண்டல் சிறப்பு. இக்காலத்து நமக்கு உதாரணங்களை வழங்குவது அரசியல் உலகமே. சுமார் இருபத்துமூன்று ஆண்டுகட்கு முன் தொடக்கிய ஜெர்மெனி யுத்தம் எதன் பொருட்டு? உலகம் சுகமாக வாழ வேண்டுமென்ற கருத்தோடா? இல்லையே. ஜெர்மெனி, தன் இராணுவ பலத்தால், உலகத்தையே தன் வசமாக்க எண்ணியது. அதனால் இடையில் இருந்த பெல்ஜியத்தை நாசப்படுத்திப் பிரான்ஸ் மீது படையெடுத்தது. இது, 'தனக்கின்பம் பயத்தலைக் கருதிச் செய்யும் தீவினை'யின்பாற் பட்டதன்றோ? இஃது எவ்விதப் பயனை அளித்தது. ஜெர்மெனி உலகத்தில் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. இதுவே அத்தீவினை பயக்கும் துன்பமாகும்.

*இது சென்னை கலைபணி கழக ஆண்டு விழாவின்போது திருவாளர் N. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவி எழுதியது.

இவ்வாறே பல துறைகளிலும் பல உதாரணங்களைக் கூறிக்கொண்டே செல்லலாம். இறுதியில் பெறுவது என்ன? இருபதாம் நூற்றாண்டிலும் பொருத்தமாகும்படி சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய திருவள்ளுவர் கூறிய திருக்குறள் உண்மைகளே இலக்கியத்திற்கு இலக்கணமாகும்.

எக்காலத்துக்கும் பொருத்தமான உண்மைகளை அழகு படச் சொல்லலே இலக்கியத்தின் இரண்டாவது இலக்கணம். திருக்குறள் உண்மைகளை அழகுபடக்கூறி யிருக்கிறதா என்பதைப் பார்ப்போம். உதாரணமாக,

> “இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
> வன்மை மடவார் பொறை”—**பொறையுடைமை : 3.**

என்ற செய்யுளை எடுத்துக்கொண்டு அதைப் பன்னி பன்னிப் பாருங்கள்; உள்ளுறையைக் கூர்ந்து நோக்குங்கள். ‘ஒருவனுக்கு வறுமையுள் *வைத்து வறுமையாவது விருந்தினரை ஏற்றுக்கொள்ளாமல் நீக்குதல்’. இதை மறுபடியும் திரும்ப நோக்குதல்வேண்டும். ஒருவன் வறுமையுள் வாடி வதங்குகிற காலத்தில் விருந்தினரை ஏற்றுக் கொள்வானா? இஃது அரிது. அரிய காரியங்களைச் செய்வோரே பெரியர். அதனாலன்றோ இளையான்குடிமாற நாயனார் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக வைத்து எண்ணப்படுகிறார். இஃது உவமை. இவ்வுவமை எதை விளக்க வந்தது? ‘வன்மையுள் வைத்து வன்மையாவது அறிவின்மையால் மிகை செய்தாரைப் பொறுத்தல்’. சாதாரண மனிதன் அறியாமையினால் தீங்கு செய்தாரை மன்னிப்பானா? அதனாலேயே திருவள்ளுவர் அதை வன்மையுள் வன்மை என்றார். இன்மையுள் இன்மையைக் கண்டவன் போன்று வன்மையுள்

*வைத்து என்பது உம்மைப் பொருளது.



வன்மையைச் செய்பவனும் புகழ் பெறுகிறான். இதற்குத் தற்போது உலகத்தில் கோவண ஆண்டியாக விளங்கும் காந்தி அடிகளே இலக்காவர். புறத்தே வீரசிங்கம் போன்று கர்ஜிக்கும் பண்டித ஜவஹரும், இன்றே இந்தியா சமதர்ம நாடாகிவிட வேண்டுமென்று பேரிடி முழக்கம் செய்யும் திரு. எம். என். ராயும் அடிகள் முன்பு எவ்வாறு ஆகின்றனர்? அடிகளுடைய பொறை அவர்தம் வீராவேசங்களையெல்லாம் குளிரச்செய்யவில்லையா? மேற்குறித்த இரண்டு கருத்துகட்குள்ளும் உள்ள ஒற்றுமையைக் கூர்ந்து நோக்குங்கள். வறுமையின் கொடுமையை நாம் நம்முடைய நித்திய வாழ்க்கையில் காண்கிறோம். நித்திய அனுபவத்தைக் கொண்டே விளங்காத ஓர் உண்மையைத் திருவள்ளுவர் படம் பிடித்துக் காட்டுகிறார். இதனினும் மிகச் சுருங்கிய சொற்களில் எவ்வாறு அழகுபடக் கூறுதல் கூடும்?

குறளடிகள் இரண்டனவாகவே காணப்படுகின்றன. இவ்வளவு மிகச் சுருங்கிய அடிகளை உடைய ஒரு நூல் இலக்கியமாகுமா என்று கேட்பாரும் இருக்கின்றனர். நம் கருத்தை அடிகளில் செலுத்துவதா? அல்லது பொருளில் செலுத்துவதா? நீதி நூல்களில் நமக்கு வேண்டுவது பொருள். திருவள்ளுவர் சுருங்கக் கூறி விளங்க வைப்பவர். இஃது இலக்கியத்துக்கு முக்கியமல்லவா? இதனாலேயே இடைக்காடர்,

> கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
> குறுகத் தறித்த குறள்.—திருவள்ளுவமாலை.

என்றார்.

எனவே, இலக்கியத்திற்கு வேண்டிய இலக்கணங்கள் யாவும் திருக்குறளில் இருக்கின்றனவென்று கூறி விடலாம்.

இனி திருக்குறளைக் குறை கூறுவோர் எடுத்துக்காட்டும் ஒரு குற்றத்தைக் கவனிப்போம். அன்னார் வாய் கூசாது

'திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்' என்று கூறி விடுகின்றனர். இஃது உண்மையாயின் திருக்குறளில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள் அந்நூலுக்கு முன் தோன்றிய நூல்களில் கூறப்பட்டிருத்தல்வேண்டும். அவ்வாறு யாண்டும் கண்டிலேம். பின்னர்த் தோன்றிய நூல்களில் பல இடங்களில் திருக்குறட் கருத்துக்கள் செறிந்து கிடக்கின்றன. அதனால் பெறுவது என்ன? திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல் என்றல் பொருந்தாது என்பதே. திருக்குறளின் பெருமையை நம் நாடேயன்றி ஜெர்மெனி, பிரிட்டன் முதலிய அந்நிய நாடுகளும் உணர்ந்துவிட்டன. அத்தேசத்துப் பாஷைகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதுவரை திருக்குறள் பதினெட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திரு. ஜி. யு. போப் அதன் பெருமையினைக் கண்டார்; அஃதொன்றே தமக்கு முக்திதரும் நூலெனக் கொண்டார்; தமது மாணத்துக்குப் பின் திருக்குறள் பிறந்த நாட்டிலிருந்து கிடைத்த பொருளுதவியைக் கொண்டே தமது கல்லறையைக் கட்டி முடிக்குமாறு தமது உறவினருக்கும் கூறினார். அவரும் அவ்வாறே செய்தனர். கல்லறையின்மீது 'தமிழ் மாணவன்' என்ற சொற்றொடர் தமிழ் மொழியில் பொறிக்கப்பட் டிருக்கின்றனவாம். என்னே! திருக்குறளிடத்து அவருக்கிருந்த பற்று! இப்படிப்பட்ட ஒரு நூலை முதல் நூலென்னாது மொழிபெயர்ப்பு நூல் என்னல் பொருந்துமா?

திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல் அல்ல என்பதைக் கண்டோம். இனி அந்நூலில் காணப்படும் கருத்துக்கள் வேறு நூல்களில் ஆளப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கவனிப்போம்.



திருவள்ளுவர் 'வாழ்க்கைத் துணைநலம்' அதிகாரத்தில்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

எனக் கூறியிருக்கிறார். மணிமேகலை ஆசிரியர் இவ்வடிகளை அப்படியே,

"'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை'யென மொழிந்த
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்."

என ஆண்டிருத்தல் காண்க. இவ்வாசிரியர் திருவள்ளுவனைப் பொய்யில் புலவன் என்று கூறினமை பெரிதும் உன்னற்பாலது. அவர் கூறிய பொருளுரைகள் எக்காலத்தும் பொய்ப்பதில்லை யென்பதைக் கண்டன்றோ அவர் பொய்யில் புலவர் என்று அழைக்கப்பட்டார்.

'இனியவை கூறல்' அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள,

"பணிவுடைய னின்சொல னாத லொருவற
கணியல்ல மற்றுப் பிற."

என்ற இரு அடிகளின் கருத்துக்கள் சேக்கிழாரின் கவனத்தையும் ஈர்த்துவிட்டன. இதை மனதில் கொண்டே பெரிய புராணத்தில் பல இடங்களில் 'பேசுவன பணிந்தமொழி இனியனவே' யென்றும், 'பணிவன இனிய மொழி' எனவும் கூறப்பட்டுள்ளன.

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார்."

என்ற அடிகளின் கருத்துக்களை அப்படியே சேக்கிழார் பெருமான் 'செய்வதற் கரிய செய்கை செய்தநற் றொண்டர்' என்றும், 'செயற்கருஞ் செய்கை செய்த தீரனே' என்றும் கூறியிருக்கிறார்.

இவ்வாறு பல உதாரணங்களைக் கம்பராமாயணம், சிந்தாமணி, உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த சாத்திரங்கள் முதலியவைகளில் காணலாம். இறுதியில் நாம் பெறுவதென்ன? திருக்குறள் அவரவர் விரும்பியவாறு அவர்தம் தாக வேட்கையைத் தணிவிக்கும் ஒரு நீர் ஊற்றாக விளங்குகிறதென்று கூறல் மிகையாகாது.

இனித் திருக்குறளின் சிறப்பைப்பற்றிச் சிறிது கவனிப்போம். திருக்குறளில் கூறப்பட்டுள்ள உவமைகளுக்கு நாம் வெகுதூரம் போகவேண்டியதில்லை. இவ்வாறு கூறும் உவமைகளுக்கே மதிப்பு அதிகம். உதாரணமாக,

> "தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையி னிழிந்தக் கடை"

என்ற குறட்பாவில் உள்ள உண்மையை ஊன்றிப் பாருங்கள். ஒருவன் தன் தலைமயிரை எத்தனை வாசனை எண்ணெய்களைத் தடவிச் சீவுகிறான். இவ்வளவும் அத்தலைமயிர் தலையில் இருக்கும் வரை; கீழ் வீழ்ந்தாலோ அல்லது கத்தரிக்கப்பட்டாலோ அதைப்பற்றிக் கவனிப்பார் யார்? அதுபோன்றே உயர்குடியிற் பிறந்தோர் இழிபட்டால் பிறரால் மதிக்கப்படார். இவ்வுவமைக்கு வெகுதூரம் செல்லவேண்டியதில்லையே! அவனவன் தன் நித்திய வாழ்க்கையில் காண்பது தானே.

வேறொரு பாவை எடுத்துக் கொள்வோம்.

> "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
> பின்னீர பேதையார் நட்பு"

அறிவுடையார் நட்பு வளர்பிறைச் சந்திரனைப் போன்று வளர்ந்துவரும். அறிவில்லாதவரது சிநேகம் தேய்பிறைச் சந்திரனைப் போன்று தேய்ந்துகொண்டே போகும். இவ்வுவமையைக் காணாதவன் எவனாவது உண்டா? இவ்வாறு நித்திய வாழ்க்கையில் காணும் பொருள்களை உவமையாகக் கூறும் பெருமை திருவள்ளுவனார்க்கே உரியது.



திருவள்ளுவனார் பெருமையும், அவர்தம் நூலின் சிறப்பும் தேசியக் கவியான பாரதியாரையும் வசீகரித்தன. அவர் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று கூறியிருத்தலைக் காண்க. திருக்குறள் தமிழ் நாட்டுக்குமட்டு முரியதன்று; அஃது உலகுக்கே உரியது; உலக மக்கள் பலராலும் போற்றுந் தகையது.

இன்னோரன்ன பல காரணங்களால் திருக்குறள் ஒரு சிறந்த இலக்கியம் என்று கூறுவதில் என்ன தவறு உளது? திருக்குறள் இலக்கியமாதல் உண்மையே; மூக்காலும் உண்மையே.

# குறிப்பும் விரிவும்

[மயிலைக்கிழார் இளமுருகனார்]

## ஈமத் தாழிகள்

பல நூற்றாண்டுகட்கு முன்பு, பிணங்களைக் குயப்பாண்டமாகிய ஈமத் தாழியால் (burial urn) மூடிப் புதைக்கும் பழக்கம் தமிழ்நாட்டிலிருந்தது. இது புறநானூற்றுள் ௨௫௬-வது பாட்டில் வரும் "கலஞ்செய் கோவே...... ஈமத் தாழி அகலிதாக வனைமோ" என்ற குறிப்பாலும், மணிமேகலையுள் சக்கரவாளக்கோட்ட முரைத்த காதையில் ௬௭-வது அடியில் வரும் "தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போர்" என்ற குறிப்பாலும், நற்றிணை ௨௭௧-வது பாட்டில் வரும் "மாயிருந் தாழி கவிப்ப" என்ற குறிப்பாலும், வேறு பலவற்றாலும் இனிது விளங்கும். சிலநாட்களுக்கு முன் சென்னை அரசாங்கத்துக் கல்வெட்டிலாகா தலை

வரும், மதுரைக் கல்லூரியாசிரியர் திரு. கே. எஸ். ஸ்ரீகண்டனும் மதுரையிலும் பெரியகுளத்திலும் சுற்றுப்புறங்களிலும் பூமியை அகழ்ந்து பார்த்ததில் பல ஈமத்தாழிகளையும் மட்கலத் துண்டங்களையும் கண்டெடுத்தார்கள். இப்போதுள்ள மதுரைத் கணித்தாகப் பெரிய பழைய நகரமிருக்க வேண்டுமென்று ஊகித்து மேன்மேலும் அகழ்ந்து காண்பதில் ஈடுபட்டுள்ளார்கள்.

## சமயவெறியும் கழுதையின் பெயரும்

பாஞ்சால தேசத்தில் ஹிஸ்ஸார் ஜில்லாவில் பல்வால் என்ற ஊரிலுள்ள மிருக வைத்தியசாலையில் ஒரு கழுதையிருந்தது. அதற்கு அவ்வைத்தியசாலை யதிபர் டாக்டர் ராமகோபால் என்பவர் "ஆமக்" என்று பெயரிட்டார். அவ்வூர் முஸ்லிம்கள் கழுதையின் பெயர் "ஆமத்" என்று தவறாக எண்ணினார்கள். முகமது நபியின் பெயர்களுள் ஒன்றாகிய ஆமத் என்பதைக் கழுதைக்கு வைத்தல் கூடாதென்று கிளர்ச்சி செய்தார்கள். உடனே அரசாங்கத்தார் கழுதையின் பெயர் ஆமக் என்றும், ஆமத் அல்லவென்றும் விளக்கிக் கிளர்ச்சி மேன்மேலும் வளராவகை தேடிக் கழுதையின் பெயரை "பஹதூர்" என்று மாற்றிப் பகிரங்க அறிக்கையும் வெளியிட்டார்கள். இக்கிளர்ச்சிக்கிரையாக ஒரு முஸ்லிம் பத்திரிகை தனது அச்சுக்கூடத்தையும் ஜாமீன் தொகையையும் இழக்கவும் நேர்ந்தது. கழுதைக்குப் பெயரிட்ட டாக்டர் ராமகோபாலருக்குப் பல அபாயவறிக்கைக் கடிதங்கள் வந்தன. உறங்குகையில் முரீத் ஹுசேன் என்ற ஒரு முஸ்லிம் வாலிபன் அவரைக் குத்திக் கொன்றான். செஷன்ஸ் கோர்ட்டில் அரசாங்கச் செலவில் கொலையாளிக்கு வழக்கறிஞராகவிருந்து வழக்கை நடத்த முஸ்லிம் வழக்கறிஞர் எவரும் முன்வரவில்லை. செஷன் ஜட்ஜி ஒரு ஹிந்துவை நியமித்து வழக்கை நடத்தி முடித்துத் தூக்குத் தண்டனை விதித்தார். லாகூர் ஹைகோர்ட்டில் அப்பீலில் குற்றவாளிக்குச் சம்மதமில்லாத ஒரு ஹிந்து வழக்கறிஞரை வைத்து வற்புறுத்தியது தவறென்று வாதிக்கப்பட்டது. இவ்வாதம் ஒப்புக்கொள்ளப்படவில்லை. சமயவெறி எவ்வளவு தூரம் செல்லும் என்பதை நன்கு விளக்குவதற்கு இவ்வழக்கு ஓர் எல்லைக் கல்போல் தோன்றுகிறது. கழுதையின் பெயரைத் திரிபாகக் கொண்ட பாஞ்சால முஸ்லிம்களின் சமயவெறி நமக்குத் தேவையில்லையெனினும், பீடிக்கும் சுருட்டுக்கும் இன்னோரன்ன பலவற்றுக்கும் கணேசர் மார்க்கும் முருகர் மார்க்கும் பொறிப்பது கூடாதென்று கூறும் சமயப் பற்றாவது நமக்கு வேண்டாமா ?



## கிறிஸ்தவப் பாதிரியின் கண்காணிப்பு

காஞ்சிபுரத்துக்கருகிலுள்ள ஒரு சேரியில் சாமிக்கண் என்ற கிறிஸ்தவ ஆதித்திராவிடன் மகள் கமலத்துக்கும் அவள் அத்தான் செஞ்சி என்ற ஹிந்து ஆதித்திராவிடனுக்கும் திருமணம் நிச்சயமாயிற்று. உபதேசியார் மணத்தைத் தடுக்க முயன்றார். காஞ்சிபுரத்திலுள்ள சர்ச் ஆப் ஸ்காட்லண்டு மிஷன் துரை ரெவரண்டு டாக்டர் மக்லீனிடம் தெரிவித்தார். அவர் மூதறிஞர் சபை கூட்டினார் (Session of Elders). மணத்தைத் தடுக்கவேண்டுமென்று அச்சபை தீர்மானித்தது. துரையும் வேறு பலரும் சாமிக்கண்ணைப் பல வகையில் மாற்ற முயன்றனர். முடியவில்லை. கலியாணத்தன்று நாலையில் தடுக்க விரைந்தோடினர். செஞ்சியைக் கிறிஸ்தவனாக்க முயன்றனர். அவன் மறுத்தான். கலியாணம் முருகேச பண்டாரம் என்பவனால் நடத்தப்பட்டது. இந்தியக் கிறிஸ்தவ மணச்சட்டத்தின் 68-வது பிரிவின்படி முருகேச பண்டாரத்தின்மீது உபதேசியார் கிரிமினல் வழக்கு தொடுத்

தார். டாக்டர் மக்ளீன் முதலியோர் சாக்ஷி கூறினர். செங்கற்பட்டு ஜில்லா செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை நடந்தது. தாலி கட்டுவதற்கு முன் சில ஹிந்து சமயச் சடங்குகள் கலியாணத்தன்று காலையில் நடந்தபோது கமலம் அவற்றில் கலந்து கொண்டதால் ஹிந்துவாயினள் எனவே குற்றமொன்றுமில்லையென்று வழக்கு முடிவுற்றது. கிறிஸ்தவ சமயத்திலிருந்து ஹிந்து சமயத்துக்கு வருகை எவ்வளவு சுலபமான செய்தியால் நீதிமன்றத்தில் ரூபிக்கப்படலாம் என்பதற்கு இவ்வழக்கு ஓர் உதாரணமாகும். தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவப் பெண் ஹிந்து சமயத்தைச் சேர்ந்த தனது அத்தானை மணந்து கொள்வதைத் தடை செய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் பாதிரிகள் பிரசாரம் செய்து வளர்க்கும் ஒரு சமயம் செழிக்குமா, புறச்சமயம் செல்வோர் விரைந்து செல்க, சாதி முதலிய தடைகளாற் கட்டுண்டு பரிதவிக்கும் அகச்சமயிகள் அழுங்கிக் கிடக்க என்று உறங்கி விழும் மடங்களும் தலைவர்களும் அநுஷ்டிக்கும் ஒரு சமயம் வளருமா என்பதை ஆராயவும் வேண்டுமா?

## தாழ்வின் ஆழம்

தேவகோட்டைக் கருகிலுள்ள எழுவன் கோட்டைக் கிராமத்தில் நாட்டார்களுக்கும் ஆதித்திராவிடர்களுக்கும் நீண்ட நாளாகச் சண்டையேற்பட்டிருந்தது. ஆதித்திராவிடர்கள் ஓட்டு வீடுகளில் வசித்தல் கூடாதென்றும், ஆண்கள் ஷர்ட் முதலியனவும் பெண்கள் ரவிக்கை, நகை முதலியனவும் அணிதல்கூடாதென்றும் செப்புக்குடங்கள் பித்தளைப்பாத்திரங்களை உபயோகிக்கக் கூடாதென்றும் நாட்டார்கள் வற்புறுத்தி ஆதித்திராவிடர்களை ஹிம்ஸித்து வந்தார்கள். காரைக்குடி ஹரிஜனசேவை சங்கத்தின் காரியதரிசி



ஸ்ரீமதி கமலா சிவசுப்பிரமணியம்மாள் இவ்விஷயத்தில் ஈடுபட்டு நாட்டார்க்குப் பலவகையான சமாதானங்களைக் கூறி ஒரு சமரசக் கூட்டம் கூட்டி ஆதித்திராவிடர்கள் தங்களிஷ்டம்போல் நடையுடை பாவனைகளைத் திருத்திக்கொள்ளும் உரிமையுடையவர்கள் என்பதை நிலைநாட்டினார்கள். இப்போது கிராமத்தில் கக்ஷிப் பிளவுகளின்றி நாட்டார்களும் ஆதித்திராவிடர்களும் வாழ்கின்றார்கள். அவ்வூர் நாட்டார்களின் கண்ணை மறைத்த சாதி வெறியின் வன்மைதான் என்னே! எழுவன் கோட்டையில் தாழ்வின் ஆழத்தை அளந்து கண்ட மக்கள் சாதிக்கோட்டையைத் தகர்த்து ஒரு பெண்மணியின் துணைகொண்டு "எழுவம்" என்று மார்பு தட்டி எழுந்தது போற்றத்தக்கது.

## செத்த பிறகும் உயர்வு தாழ்வா?

வேலூருக்கடுத்த துறைப்பாடி கிராமத்தில் ஒரு ஆதித்திராவிடப் பிணத்தை வள்ளுவர் தெருவழியாகக் கொண்டு போதல் கூடாதென்று முஸ்லீம்கள் ஆக்ஷேபித்தனர். கலகம், சண்டை, காயங்கள் ஏற்பட்டன. ரிஸர்வ் போலீசார் வந்தனர். இறுதியில் அந்தத் தெருவழியாகவே பிணம் சென்றது. உடம்பைப்பற்றிய உயர்வும் தாழ்வும் சுட்டெரிக்கும்வரை பிணத்தையும் தொடர்கின்றன.

## கோச்சியில் புலையர்க்குப் புதிய கோயில்

திருவிதாங்கூர் மன்னரைப் பின்பற்றாவிடினும் கொச்சி மன்னர் தமது அரசாங்கச் செலவில் எர்ணாகுளத்தருகில் நிலம் வாங்கி ஒரு சுப்பிரமணிய சுவாமி கோயில் கட்டித் தீய வகுப்பினரைச் சேர்ந்த ஒரு துறவியைப் பூசகராக ஏற்படுத்திப் புலையர்க்கு ஆலய வழிபாட்டு வசதி செய்து கொடுத்தனர். இதைப் பாராட்டிக் கொச்சி ராஜ்யத்துப் புலை

யர் சமாஜம் ஒரு மகாநாடு கூட்டி அரசர்க்கு வந்தன மளித்தது.

## உத்ஸவக்காரருக்கு உத்ஸவம்

காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேசுவரர் ஆலயத்தில் பிரஹ்மோத்ஸவத்தில் ஒவ்வொரு நாளும் உத்ஸவம் நடத்தும் செல்வரை உத்ஸவம் முடிந்தவுடன் மேள வாத்தியம் நாட்டியம் வாணவேடிக்கைகளோடு அவர் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார்கள். இந்த ஆடம்பரத்தில் கடவுளுக்கென வாணங்களும் இவர்கட்கென வாணங்களும் பங்கு போடப்படுகின்றன. வேறு பலவகையிலும் இது இகழத்தக்க பழக்கம்.

## பூப்பந்தர்

தமிழ் நாட்டிற் பல தலங்களில் திருவிழா, நடைபெறும் நாட்களில் தெருக்களில் பூப்பந்தர்கள் கட்டப்படுவதுண்டு. இவை ஓலை துணி முதலியவற்றால் ஆக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும்; பூவினால் அலங்கரிக்கப்படுவனவா யிருப்பதில்லை. ஆனால் திருச்செந்தூர் விழாவில் பூப்பந்தர்கள் பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்டனவாகவே யுள்ளன. இப்பந்தர்கட்கு இப்பெயர் இத்தலத்தில்தான் பொருத்தமாகவுள்ளது. எல்லாத் தலங்களிலும் ஆதியில் இவ்வாறே யிருந்து மக்கள் மனமும் கைவண்மையும் சுருங்கிய பின்னர்ப் பூமாலைகள் இல்லாப்பந்தர்களும் பூப்பந்தர்கள் என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்துள்ளன போலும்!

## ஈஸ்டர் முட்டைகள்

ஈஸ்டர் விடுமுறைக்குச் சில நாட்களுக்கு முன் பத்திரிகைகளில் ஈஸ்டர் முட்டைகளின் விற்பனை விளம்பரத்தை நண்பர்கள் விநோதமாய்க் கண்டிருக்கக் கூடும். முட்டை விற்பனை விளம்பரங்கள் பத்திரிகைகளில் வேறு எந்த சந்தர்ப்பத்திலும் வெளிவருவதில்லை. ஈஸ்டர் முட்டைகள் சிறப்பு வாய்ந்தனவா யிருத்தல் வேண்டும். இச்சிறப்பு, "டைம்ஸ் ஆப் இந்தியா இல்லஸ்ட்ரேடட் வீக்லி" என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. குளிர் மிக்க மேல் நாட்டில், இலை காய் பழம் முதலியனயாவுமின்றி வெறுங் கட்டைகளாய் மரங்கள் நிற்கும் கடும் பனிக் காலம் நீங்கியபின், மரங்களில் இலை தளிர் பூ பிஞ்சுகள் தோன்றும் காலத்திலேதான் இந்த ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இக்காலம் சிருட்டிக்கு ஒப்பிடப்பட்டு சிருட்டிக்கு அறிகுறியாகிய முட்டையை இப்பண்டிகையில் கிறிஸ்தவர்கள் பாராட்டுகிறார்கள். சிருட்டியில் ஏற்படும் பல வகையான தோற்றங்கட் கறிகுறியாக இம்முட்டையின் மேற் பல வர்ணங்கள் பூசப்பட்டிருக்கும். பகுத்தறிவு மிக்க மேல் நாட்டில் கிறிஸ்தவர்கள் ஈஸ்டர் பண்டிகையில் இக்குறியீட்டைப் பாராட்டுகிறார்கள். நமது நாட்டிலுள்ள ஆராய்ச்சிப் புலிகள் "குறிகளும் அடையாளமும்" என்ற அப்பர் திருவாக்கை உச்சரிக்கும்போதே சீறுகின்றன. சீற்றந் தருவது சிறுமையே.



## மூர்த்திதலம் தீர்த்தம்

நமது அரசரின் தம்பியாகிய கெண்டு கோமகனுருக்குச் சில மாதங்கட்குமுன் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ஞான ஸ்நானம் செய்யப்பட்டது. பாலஸ்தீன தேயத்தில் எருசலேம் நகரில் யோர்தான் நதியின் தண்ணீர் கொண்டு வரப்பட்டது. அரச குடும்பத்தின் புராதன மாதா கோவிலில் இத்தண்ணீரால் காண்டெர்பரி மடாதிபதி ஞான ஸ்நானம் செய்வித்தார். எருசலேம் நகரும் யோர்தான் நதியும் இயேசு கிறிஸ்துவின் வரலாற்றில் நெருங்கிய தொடர்புடையன. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முறையின்

சிறப்பை நமது கிறிஸ்தவ மன்னர் குடும்பம் போற்றுகிறது. "கங்கை யாடிலென் காவிரி யாடிலென்" என்ற திருவாக்கை விபரீதமாக உரைத்து, நம்மவர் மூர்த்தி தலம் தீர்த்தம் என முறையாய்த் தொடங்காது, வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கப் பெறாது இறக்கின்றனர்.

# உள்ளங் கவர் கள்வன்*

[G. கலியாணம், B.A., Dip. Econ.,]

அகத்துறைப் பாடல்கள் அநேகம் தேவாரத்தில் நிறைந்திருக்கின்றன. ஆளுடைய பிள்ளையார் முதன் முதலில் அருளிய "தோடுடைய செவியன்" என்ற தொடக்கத்த செய்யுளும் அத்தகையதே. அச்செய்யுளின் கண்ணே "உள்ளங் கவர்கள்வன்" என்ற சொற்றொடர் வருகின்றது. தலைவியாக இருக்கின்ற என் உள்ளத்தை இவன் கவர்ந்து கொண்டான் என்பது அதன் பொருள். "தோடுடைய செவியன் விடை யேறியோர் தூவெண் மதிசூடிக் காடுடைய சுடலைப் பொடி பூசி" என்று கூறப்பட்ட வடிவத்தையுடைய தலைவன், தலைவியின் உள்ளத்தைக் கவர முடியுமா? இவ்வடிகளின் நுண் பொருள்களை ஆராய்குனர் கவர்தல் கூடும் என்ற முடிபுக்கு வருவார் என்பது ஒரு தலை.

முதலில் "தோடுடைய செவியன்" என்ற சொற்றொடரை எடுத்துக் கொள்வோம். இறைவனைக் கிறிஸ்துவர், முகம்மதியர் முதலியோர் ஆண்பாலில் கூறுகின்றார்கள். ஏன்? பெரும்பாலும் எல்லாச்சமயத்தவரும் அப்படியே. சாக்தேயம் என்னும் மதம் சக்தியான பெண்பாலை வழிபடுகின்றது. வாமவம் என்ற மதமும் அப்படியே. ஆனால் நம் சைவ சமயமோ ஆண்டவனை ஆணும் பெண்ணுமாகக் கொள்கின்றது. ஆணெலாம் இறைவன் பெண்ணெலாம் தேவி. மணிவாசகப் பெருந்தகையார்,

"தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"

என்றருளி யிருப்பதுவுங் காண்க. இறைவனுக்குத் தடத்த லட்சணம் (பொதுவியல்பு), சொரூப லட்சணம் (சிறப்பியல்பு) என்ற இரண்டு இலட்சணங்கள் உண்டு. இறைவன் நம்மீது வைத்துள்ள கருணையால் நாம் அவனை அறிந்து உய்யும் பொருட்டு மூன்று வடிவங்களைக் கொண்டுள்ளான். சித்தியாரில்,

"உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவிறந்த
வருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வானபோது
திருமேனி யுபயம் பெற்றோஞ் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே"

என்று கூறியிருப்பது நோக்கத்தக்கது. இறைவனுக்கு அருள் திருமேனி; நரை, திரை, மூப்பு முதலியவை கிடையா. நமக்கு மாயா உடல்; மாயாபோகம்; மாயா உலகம். ஆண்டவனுக்கு அவைகள் இல்லை. நம்முடைய அறிவு சிற்றறிவு. நாம் காரிட்ட ஆணவக் கருவறையில் கட்டுண்டு இருக்கின்றோம். இறைவன் பேரறிவினனாய் யாவையுங் கடந்து நிற்கிறான். தாவர வர்க்கங்களிலும் ஆண் பெண் வடிவங்கள் உண்டு. எல்லா அறிவுடைய உருவங்களிலும், தேவர்களிடத்

*சைவ சித்தாந்த மகா சமாஜத் தலைவர் தூத்துக்குடி உயர்திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் சென்னை இராயப்பேட்டை ஸ்ரீபால சுப்பிரமணிய பக்தஜன சபையில் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவி எழுதியது.

தும், கடைசி சதாசிவத்தின் வரையிலும் ஆண் பெண் வடிவம் இருக்கின்றது. இறைவன் அவ்வாறு இருத்தலாலேயே உலகத்தில் ஆண் பெண் வடிவங்கள் இருக்கின்றன. அப்படியிருக்க வேண்டியதுவே. இறைவன் கடின குணத்துடன் மாத்திரமாவது, அல்லது மென்மையான குணத்துடன் மாத்திரமாவது இருந்தால் போதாது. சி=சிவம், வ=சத்தி என்றும், சி=சீ என்று சிவம் வெறுக்க, வ=வா என்று சத்தி அழைத்து அணைத்துக்கொண்டது என்பர். "தாயுடன் சேர்ந்துபின் தந்தையைக் கூடி" என்பர் பட்டினத்தடிகள். பஞ்சகிருத்தியங்கள் செய்யும் நிலையில் திரோதானசத்தியென்றும், பின்னர்ச் சிவத்தோடு சேர்க்கும்பொழுது பராசத்தியென்றும் பெயர். சிவம் வேறு, சத்தி வேறல்ல.

> "பொன்னிறங் கட்டியினும் பூணினு நின்றாற்போல்
> அந்நிறம் அண்ணலும் அம்பிகையும்"

என்பது திருக்களிற்றுப்படியார்.

இரண்டாவதாக "விடையேறி" என்பதை நோக்குவாம். மக்களாய்ப் பிறந்தோர்க்கு அறம் மிகவும் முக்கியமானது.

> "சிறப்பீனுஞ் செல்வமு மீனும் அறத்தினூஉங்
> காக்க மெவனோ உயிர்க்கு"

என்பர் திருவள்ளுவனார். ஆதலின் உயிர்க்குச் சிறந்த சாதனம் அறம். விடை தர்மசொரூபம்; அதுவும் வெள்விடை. ஆண்டவன் அம்மையப்பனாக இருக்கின்றதோடல்லாமல் தர்மத்தையே பீடமாகக் கொண்டவன் என்பதை வற்புறுத்தவே அச்சொற்றொடர் எழுந்தது.

இனி "ஓர் தூவெண் மதிசூடி" என்பதை ஆராய்வாம். இது இறைவன் மிகுந்த தூய்மை யுடையவன், களங்கமில்லாதவன் என்பதைக் காட்டுகின்றது. சந்திரன் சிவனை அடைக்கலமாக வந்தடைந்தான். "தம்மை யடைந்தார்



வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தங்கடனாவதுதான்" என்றபடி சிவபெருமான் அவனைச்சடையில் தரித்தருளி, சாபத்தை நீக்கி ஆட்கொண்டார். இறைவன் வந்தடைந்தோர் வினைகளை நீக்கி ஆட்கொள்ளும் தன்மையுடையவன் என்பது இதனால் பெறப்படுகின்றது.

கடைசியாகக் "காடுடைய சுடலைப்பொடி பூசி" என்பதைக் கவனிப்போம். இறைவனுக்குச் சாதாரணமாகப் படைத்தல் காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்கள் உண்டு. அழித்தலும் இறைவன் நம் மாட்டுக் கொண்டுள்ள பெருங் கருணையால்தான். வேறு சமயத்தவர் சிலர் அழித்தற்றொழிலையுடைமையால் உங்கள் கடவுள் வன்கண்மை உடையார் என்று கூறுவர். அழித்தல் நிகழாவிடில் "உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரத்து யோனிபேதம்" என்று கூறப்பட்டிருக்கும் சீவராசிகள் அத்தனையும் பல்கி உணவு, இடம் முதலியவைகளுக்கு வருந்த வேண்டுமல்லவா? சைவத்தில் ஐந்தொழில்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஏனைச் சமயத்தார் மறைத்தல், அருளல் என்ற மூன்றல்லாத இரண்டு தொழில்களைச் சொல்லமாட்டார்கள். உயிர்களிடம் செய்யும் இந்த இரண்டு தொழில்கள் மற்றச் சமயங்களில் கூறப்படவில்லை. மற்ற மூன்றும் தனுகரண புவனபோகம் என்ற புற உலகத்தில் நிகழும் நிகழ்ச்சிகள். ஆன்மாக்கள் சிருட்டியில் தோய்ந்து தோய்ந்து களைத்துக் கிடக்கின்றார்கள். "எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்" என்பர் மணிவாசகனார். கடைசியாக ஒன்றும் செய்யாத நிலையை யடைகின்றன ஆன்மாக்கள். அழித்தல் என்பது இளைப்பாற்றல் என்று சொல்லப்படுகின்றது. உலகம் ஐந்து கூறுகளாகப் பிரிக்கப்பட்டு ஐந்து சத்திகளின் அதிகாரத்தில் விடப்பட்டிருக்கின்றது. சர்வமும் சுடுகாடுதான். அவன் ஒருவன் தவிர எல்லாம் சுட்டெரிக்கப்படுகிறது.

யில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. திரு. கெ. த. கிருஷ்ணசாமி முதலியார் "அன்பர் பணி" என்பது பற்றியும் திரு. வி. உலகநாத முதலியார் "நால்வர்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

6. வாலாஜாநகர் ஏகாம்பரநாதர் திருவிழாவில் பத்து நாட்களிலும் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளால் முறையே விநாயகர் மகிமை, வேலுமயிலும், மாதேவி, நமது கடமை, குகபாத நட்பு, பார்வதி திருமணம், ஜீவ காருண்யம், கற்பு, கடவுளும் உயிர்களும், நால்வர் பெருமை என்பன பற்றிய சொற்பொழிவுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

7. கோடை விடுமுறையைச் சீட்டாட்டத்திலும் சினிமாக் காட்சியிலும் பாழாக்கிவிடாமல் நமது சமாஜத்தின் சைவத் தேர்வுகட்குரிய பாடங்களைப் பயில்வதிலும் பயிற்றுவதிலும் செலவு செய்யுமாறு சைவ இளைஞர்களையும், சைவ ஆசிரியர்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

8. திருவாளர்கள் தெய்வசிகாமணி முதலியார், சோமசுந்தரம் செட்டியார், நல்லசிவன் பிள்ளை, உலகநாத முதலியார், பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய ஐவரும் இவர்கள் தேர்ந்தெடுக்கும் வேறு சிலரும் ஒன்று கூடி அரசாங்கத்தினரைக் கண்டு "அப்பரும் சம்பந்தரும்", "உண்மை விளக்கம்" என்று வெளிவந்துள்ள நிந்தனை நூல்களைப் பறிமுதல் செய்விக்க வேண்டுமென்று சமாஜ நிர்வாக சபை 14-3-37ல் தீர்மானித்தது.

---

## சிவஞான பாடியம்

சைவ சித்தாந்த சாத்திரப் பெருங் கருவூலமாக விளங்கும் சிவஞானபாடியம், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாக வெளி வந்துவிட்டது. இப்பதிப்பில் சிவஞான போதமூலம், சிவஞான சுவாமிகளுடைய பாடியம், வடமொழிச் சிவஞானபோத மூலம், சிவஞானபோதச் சூர்ணிக்கொத்து, மெய்கண்டார் வரலாறு, சிவஞான சுவாமிகள் வரலாறு, பாடியத்தைப்பற்றித் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதிய ஆராய்ச்சி அணிந்துரை முதலியன அடங்கியுள்ளன. இவ்வரிய நூல் இம்முறையில் இவ்விலைக்கு எவராலும் தரப்படவில்லை. நல்ல கிளேஸ் காகிதத்தில் ௬௭௪ + 40 பக்கங்கொண்ட முழுக் கலிக்கோ பைண்டு செய்யப்பெற்ற அழகிய பதிப்பு.

**தனிப்பிரதி விலை ரூபா ஒன்று;** *ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஒன்பது*

**பதினொரு பிரதிகள் விலை ரூபா பத்து ;**

*ரயில்வே பார்சல் கூலி, தபாற் கூலி வேறு*

**உடனே பிரதிகட்கு மணியார்டர் அனுப்புக.**

எல்லாவற்றையும் ஒடுக்கி, தான் ஒடுங்காத நிலையில் இருப்பது பதியின் முக்கிய இலக்கணம். எந்தப் பொருளில் ஒன்று ஒடுங்குகின்றதோ அதுவே மறுபடியும் உற்பத்திக் கிடமாக இருக்கின்றது. சுட்டெரிப்பது திருநீறு. அது அவன் ஆற்றலைக் குறிக்கின்றது. உருத்திராக்கம் அல்லது கண்மணி அவன் கருணையைக் காட்டுகின்றது.

சிவத்தைச் சேர்ந்தாலல்லது மலத்தைப் போக்கமுடியாது. அதற்கு மலமற்ற ஒருவனாகிய சிவனை யடையவேண்டும். கள்வன் தெரியாது மறைந்துகொண்டிருப்பவன். ஆண்டவன் எங்கே மறைந்திருக்கிறான்? அவன் எங்கும் வியாபியாக உள்ளவன்; எள்ளில் எண்ணெய் போல் இருக்கின்றான். "என்னுள்ளத்துள்ளே ஒளித்தான் ஒரு கள்வன்" "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்பது தேவாரம். இறைவன் எல்லாப் பொருள்களிலும் அதுவதுவாய்க் கலந்து மறைந்திருக்கின்றான். விறகிற் றீயினன்; பாலிற்படு நெய்போல்பவன். சிற்றறிவு நீங்கி இறைவன் திருவடியோடு கலத்தலே முத்தி. "ஊனக்கண்பாசமுணராப்பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி" என்பது சிவஞானபோதம். பரவசப்பட்டிருக்கும் உயிரை இறைவன் தன்வசப்படுத்திக் கொள்கிறான் என்பதையே ஞானசம்பந்தமூர்த்திகள் உள்ளங் கவர்கள்வன் என்ற திருவாக்கால் அறிவிக்கிறார் என்பது உணரக்கிடக்கின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் 7-4-37-ல் சென்னைக்கு விஜயஞ் செய்துள்ளார்கள். சென்னையின் பல பாகங்களில் சொற்பொழிவுகள் நடைபெறுமென்று தெரிகிறது.

Reg. M. 2330.

4 - JUN 1937

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானதந்த வாணியையுள் நாடு.



| | | |
|---|---|---|
| மலர் ௧௦ | ஈசுவர ஆண்டு வைகாசித் திங்கள் 1937ஆம் மேமீ | இதழ் ௫ |



## திருநந்திதேவர்*

உலகத்திற் பல ஜீவன்கள் இருந்தபோதிலும் மனிதனைமட்டும் உயர்வாகக் கருதுவானேன்? மனிதனிடத்து ஓர் உயரிய குணம் இருக்கிறது. அதுவே தன்னைப்பற்றி ஆராயும் குணம். இவ்வித அறிவே உயர்ந்ததாகும். இதுவே ஆன்மாவைத் தூய்மைப்படுத்தவல்லது. மற்றவையெல்லாம் ஒரு சமயம் இருந்து மறு சமயம் மறைவன. அவை சிற்சில இடங்களுக்கோ சிற்சில சமயங்களுக்குமட்டுமோ பயன் படுவன.

பின்னர் உடம்புக்கும் உயிருக்குமுள்ள சம்பந்தம் என்ன? உடல் வேறு; உயிர் வேறு. இந்நிலையை அறியக் கூடிய அறிவு இன்னும் நமக்கு வரவில்லை. தற்போதைய நம்முடைய அறிவு ஐந்தாகப் பிரிந்து நிற்கிறது.

---

(*இது, ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலை வெள்ளீச்சரத்தில் 25-4-37ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு. திரு. கே. த. கிருஷ்ணசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.)

ஒன்று பலவாகப் பிரியும்போது பலம் குறைவது இயற்கை. பள்ளத்தின் வழி நீர் ஓடுவதுபோல ஐம்புலன்களின் வழி ஓடும் அறிவு கண்ணின் வழியே வெகுதூரம் செல்கிறது. மற்றவை நம்மிடமே உள்ளன. அவை சிறிது தூரத்தில் உள்ளவைகளையே அறியும் தகுதியுடையன.

கண்ணால் பார்க்கப்படுவதே உலகம். ஆங்கிலத்தில் பார்ப்பதற்கு லுக் (Look) என்று சொல்கிறோம். பார்ப்பது லோகம். இது லுக் என்பதன் தாதுவினடியாகப் பிறந்தது. இவ்வுலகத்துப் பொருள்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு. உலகத்தை நன்றாகப் பார்ப்பவனே தன்னைப் பார்க்கிறான். இல்லாதவன் தன்னைப் பார்ப்பது இல்லை. எதிரில் உள்ளதைமட்டும் அறிவது அறிவன்று. இவ்வித அறிவை யுடையவன் மனிதனாகக் கருதப்படமாட்டான். சாதாரண உலகில் பெரியோர் வைத்துவிட்டுப்போன சொத்தைக் கொண்டு காலந் தள்ளுபவனுக்கு மதிப்பு அதிகமா? அல்லது தானாகவே கஷ்டப்பட்டு நெற்றிவியர்வை நிலத்தில் விழச் சம்பாதித்து அதனால் ஆம் பயனை அநுபவிப்பவனுக்கு மதிப்பு அதிகமா? பின்னவனுக்கே மதிப்பு அதிகம் என்று கூறுவதில் தடை சொல்வார் யார்? அதனால் உயர்ந்த பொருள்களைக் காண்பதே அறிவாகும். உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்று அறிந்து கொள்வதுமட்டும்தானா நம்மறிவுக்குத் தகுதி? நம்மறிவு அதையும் தாண்டிச் செல்லுதல் வேண்டும்.

உலகத்துக்கு வேறொருபெயர் ஜகத் என்பது. ஜ-தோன்றுவதைக் காட்டும் ஓரெழுத்து. க - மறைவது. இவ்வுலகம் தோன்றி மறைவதென்பதை இப்பதம் குறிக்கிறது. தோன்றின பொருள் மறையும்; மறைந்த பொருள் தோன்றும். ஐந்து பூதங்களும் ஒரே காலத்தில் இருந்தது இல்லை. ஒவ்வொரு பூதத்துக்கும் சக்தி உண்டென்பதைத் தற்கால விஞ்



ஞான ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆகாய சக்தியினால் இக்காலத்தில் எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றன. இவ்வைந்து பூதங்களும் தோன்றின காலத்தை அறிவது அரிது.

ஆகாசம், வாயு, தேயு, நீர், மண் என்ற முறைப்படியே இவை ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின. இவை ஒன்று சேர்ந்ததே உலகம். சிலர் உலகம் இயற்கையென்பர். அன்னார் உலகத்தில் சூடு, குளிர் முதலிய இருவித குணங்களிருப்பதை அறியார். இரண்டுவித வேறுபட்ட குணங்களிருப்பின் அஃது இயற்கை உலகமாகுமா? இதனால் இவ்வுலகம் ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதே. உலகம் உண்டான போதே நாம் உண்டானோம். உலகத்திலுள்ள ஐந்து பூதங்களும் ஒன்றுபட்டிருத்தலால் இதை ஒரு சித்புருஷன் ஆட்டிவைத்தல் வேண்டும்.

இவ்வுலகத்தை ஈசாவாஸ்யம் என்றும் கூறலாம். ஈசனால் படைக்கப்பட்டதே ஈசாவாஸ்யம். அவனே தன்னால் படைக்கப்பட்ட உலகத்தைக் காப்பாற்றுபவன். உயிரற்ற பொருள்களைக் கூட்டிவைக்க ஒருவன் இருப்பதாலேயே அவை ஒன்று சேர்ந்து இயங்குகின்றன.

இவற்றைக் கூட்டுவிப்பவனை நீ எவ்வாறு உணர்வாய் என்ற கேள்வி எழலாம். நமக்குப் பக்கத்திலுள்ள காற்றை நாம் காண்கிறோமா? காணாததால் காற்று இல்லையென்று கூறிவிட முடியுமா? சில சமயங்களில் அக்காற்று உஷ்ணமாய் இருப்பதையும் சில சமயங்களில் அது குளிர்ச்சியாயிருப்பதையும் உணர்கிறோம். அதனால் காற்றென்பது உண்டென்று நிரூபிக்கிறோம். அதுபோலக் காணாததைக் கண்டு கூறுவோரே பெரியோர். இதை வேறோர் உதாரணத்தாலும் விளக்குவாம்.

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு சிறு பையன் சேர்ந்து இரண்டு மாதங்களை ஆயினவென்று வைத்துக்கொள்வோம். வேறொருவன் இரண்டு வருஷங்களாக வாசிக்கிறான். கல்வி உத்தியோகஸ்தர் வரும்போது 'ட' என்ற எழுத்தைக் கரும் பலகையில் எழுதி முன்னவனைக் கேட்டால் அவன் என்ன கூறுவான்? ஒரு கோடு என்பான். பின்னவனோ 'ட' என்ற ஒலியைக் குறிப்பதென்பான். இருவருக்கும் வித்தியாசம் என்ன? முன்னவன் கண்டதைக் கண்டவாறே கூறினான். பின்னவனோ கண்டதை மனத்தில் கொண்டு கண்ணுக்குக் காணப்படாத ஒன்றைக் கூறினான். இவ்விருவரில் பின்னவனையே நாம் மெச்சுகிறோம். அப்படியே பெரியோரும்.

உயிரற்ற பொருள்கள் ஒன்று சேர்ந்தபோது மனிதனைக் காட்டிலும் அறிவுடையனவாகின்றன. உதாரணமாகக் கடிகாரத்தை எடுத்துக்கொள்வோம். அஃது உயிரற்ற பொருள். ஆயினும் மனிதன் அறிவுக்கு எட்டாத கால அளவை அது காட்டுகிறது. எனவே, அது மனிதனைக் காட்டிலும் அறிவுள்ளது. அச்சிறப்பு அதற்கு எவ்வாறு வந்தது? அதற்குள் ஒரு சித் புருஷன் இருந்து அதனை ஆட்டிவைப்பதனாலன்றோ?

ஈஸ: என்ற பதத்துக்கே கடவுள் என்பது பொருள். இது காப்பாற்றுபவன் என்பதை உணர்த்துகிறது. காக்க உள்ளவனே கடவுள். அக்கடவுள் இரக்கம் அல்லது அன்புமயமாகவே யிருக்கிறார். இதனாலேயே திருநாவுக்கரச சுவாமிகள் வேதாரண்யத் தேவாரத்தில்.

"இரக்கமொன்றிலீர்..............."

என்று கடவுளைச் சுட்டுகிறார். தயை இல்லாவிடில் ஆன்மாக்கள் ஜீவிக்கமாட்டா. அதனால் கடவுளிடம் அன்பு உண்டு. இதை நாம் காண்பதில்லை. இதற்கு உதாரணமாக எதைக் கூறுவது? முன்னர்க் கூறிய காற்றையே கூறலாம். இக்காலத்தில் காற்றுக்கு எடைஉண்டு என்பது கண்டு பிடிக்கப் பட்டபோதிலும் நாம் அதைக்காண்கிறோமா? இல்லையே! கடவுள் சோதனைக்கு அகப்படாதவன். அதனாலேயே பெரியோர் அக்கடவுளைச் 'சோதனைக்ககப்படாச் சோதீ! உன்னைச் சோதிக்கத்துணிந்தேன்' என்று கூறினர். உலகத்தைப் பார்க்கப் பார்க்கவே நமக்குக் கடவுள் நினைவு உண்டாகிறது.



பால்தயிராகத் திரிதல்போலப் பஞ்சபூதம் இத்தேசமாகத் திரிந்தது. பஞ்சபூதப்பரிணாமமே உலகம் என்பர். காணம் தப்பினால் மரணம் உண்டாவது நிச்சயம். காணத்தை நாம் இருதயம் (Heart) என்று கொள்ளலாம். பிரிந்துகிடக்கிற பஞ்சபூதங்களையும் கடவுள் அன்பால் ஒன்று சேர்த்துக் காக்கிறார். நாம் அவரிடம் அன்பு பாராட்டவில்லையேல் அவர் நம்மை வெறுப்பார். கடவுளுக்கு எல்லாரிடத்தும் ஒரேவிதமான அன்பு உண்டு.

இக்காலத்தில் சிறிய உதவிசெய்தவருக்கும் நாம் வந்தனம் (Thanks) செலுத்துகிறோம். கடவுள் அன்புக்கு நாம் கைம்மாறு காட்டுகிறோமா? ஈசன் நமக்கு இவ்வளவு பெரிய உலகத்தைக் கொடுத்தான். அதை நாம் மறந்துவிட்டோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்று திருவள்ளுவர் கூறுகிறார். செய்த நன்றியை மறப்பது கொலைசெய்தலுக்குச் சமமாகும்.

கடவுளிடத்து நாம் நன்றியை எவ்வாறுகாட்டுதல் கூடும். அவனைப் பற்றிய நினைவு சதா நம்மிடம் இருத்தல்

வேண்டும். ஆனால் அவனோ நம் எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவன். அதனாலேயே மணிவாசகனார் கடவுளை, "மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே" என்றார். தைத்திரீயோப நிஷத்தும் வாக்கு மனம் கடந்ததே கடவுள் என்று கூறுகிறது.

அப்படிப்பட்ட கடவுளைக் காணுதல் எவ்வாறு? உருகிய உள்ளத்துக்கு அவன் வெளிப்படுவான். 'உள்ளம் உருகின் உடனாவன்' என்பது திருவுந்தியார்.

'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'—**பட்டினத்தார்.**

'அழுதால் உன்னைப் பெறலாமே...........'—**மணிவாசகனார்.**

அவனைத் தவிர நம்மைக் காப்பார் ஒருவர் இல்லை. அதனால் அவனொருவனே நமக்குக் கதி.

இதுவரை கடவுளைப் பற்றியும், அக்கடவுளைப் பற்றிய நினைவே சதா நம்மிடம் ஏன் இருத்தல் வேண்டுமென்பது பற்றியும் பேசினோம். இனி நந்தி தேவரைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

நந்தி என்ற பதத்துக்கே சந்தோஷமாயிருப்பவன் என்பது பொருள். பிறரைச் சந்தோஷப்படுத்துபவனும் அவனே. நந்தியோடு 'ஆ' சேர்த்தால் ஆநந்தி என்றாகிறது. ஆனந்த மயமே நந்தி. சந்தோஷம் நிலைத்திருப்பதன்று; ஒரு காலத்தில் மறையக் கூடியது. ஆனால் ஆனந்தமோ என்றும் நிலைத்திருப்பது. நந்தி, நம்பன் முதலியன கடவுள் பெயர்கள்.

இனி நந்திக்குடைய வேறுபல பெயர்களைக் கவனிப்போம்.

தேவர் என்பதும் நந்தியின் பெயர். தேவர்க்குரிய சிறப்புக்கள் என்ன? அவர் அதிக வயதுள்ளவர்; அமுதம் சாப்பிட்டவர்; பொன்னுலகத்தில் இருப்பவர்; கிழத்தனம் இல்



லாதவர்; காளைப் பருவம் உடையவர்; நல்லனவற்றைச் செய்து புகழுடம்பு பெற்றவர்.

"ஆதியிலும் திருநந்தி அனாதியிலும் திருநந்தி
வாதனையால் விளையாட வருமிடமும் திருநந்தி
தீதிலாத் திருநந்தி திகழ்பெருமைத் திசைமுகனார்
ஓதிடினும் அவர்க்குவாய் ஒருகோடி போதாவே"

என்று ஞானக் கூத்தர் நந்திபெருமான் பெருமையைக் கூறியிருக்கிறார்.

ஒருவருக்கு ஆசை உண்டாயின் அன்பு குறையும்; அதனால் அறிவு குறையும். அதனால் பிறவாமலிருக்க ஆசைப்படுங்கள் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்'—**திருக்குறள்.**

ஆசைகளைப் பூர்த்தி செய்தவர் திருநந்தி. 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்.' பிறர்க்கு உபகரிப்பதே செல்வர்க்கு அழகு. நந்தி ஆனந்தச் செல்வர். அவர் நமக்கு உதவி செய்யாமல் இரார். இதனாற்றான்,

"செம்பொருளாகமத் திறன் தெரித்து
நம்பவ மறுத்தநம் நந்தி வானவன்"

என்று கூறப்பட்டிருக்கிறது. தெரித்து என்பது என்னைத் தெரியும்படி செய்து என்ற பொருளில் வந்திருக்கிறது.

ஒருவன் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் அறியாமையே மிகும் என்று திருவள்ளுவர் திருக்குறளில் கூறியிருக்கிறார். அதனால் படிப்பதாலேயே நம் சந்தேகங்கள் தெளிவுறா. நாம் ஒரு குருவைக் கொள்ளுதல் வேண்டும். திருநந்திதேவரே நமக்கேற்ற குரு. குருவுக்கு மேகத்தை ஒப்பிடலாம். சமுத்திரத்திலுள்ளது

உப்பு நீர். அது குடிக்க உதவாது; குளிக்க உதவாது. அது போலவே சாத்திரக்குப்பை. சாத்திரக்குப்பை நமக்கு உதவாது. ஆனால் மேகமாகிய குரு என்ன செய்கிறார். மேகம் சமுத்திர நீரை உட்கொண்டு நமக்குச் சுத்த நீரை அளிப்பதுபோலக் குரு சாத்திரக் குப்பைகளின் உட்பொருளைக் கொண்டு நமக்கு உபதேசமாக வழங்குகிறார். அதனால் கடவுள் குருவாக வந்த மூர்த்தமே திருநந்திதேவர்.

“ அங்கணன் கைலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபுக் கெல்லாம் முதல்குரு நாதன் ஆகி ”

என்று நந்திதேவரைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

இணைப்பை யறிந்தால் பிரவர்த்தியை விடுகிறோம். ஓடுகின்ற அறிவு பிரவர்த்தியின்பாற் பட்டது. அதைக் கட்டுப்படுத்தலே நிவர்த்தி மார்க்கமாகும். நாம் நிவர்த்தி மார்க்கத்தில் செல்ல எண்ணுகிறோம். இதைக் கற்றுக் கொடுப்பவர் கோயிலிலுள்ள நந்திதேவர். ஆகமம் இதையே கூறுகிறது. ஆகமம் என்பதற்கு வருகிறது என்பது பொருள். மந்திரியாக இருந்த மணிவாசகனார் பரமகுருவின் வரவை நோக்கி அழுதமை பெறுகிறோம்.

இனி நந்திக்குரிய குணங்கள் யாவை என்பதை ஆராய்வோம். அவர்க்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருகிறது. நந்தியெம்பெருமானுக்கு நந்தியென்பது தீக்ஷாநாமம். நாமம் மட்டும் இருந்து பிரயோசனம் இல்லை. அதனாலேயே அவர்க்கு அதிகாரம் வழங்கப்பட்டது. பெயர் இருந்து அதிகாரம் இல்லாவிட்டால் பிரயோசனம் இல்லாமையைத் திருக்குறள் விளக்குகிறது. சிவபெருமான் நந்திக்கு அதிகாரம் கொடுத்தமையைத் திருவையாற்றுப் புராணம்,



“ வருநந்தி மிசைக்கொண்டு வானுலவுந் திரிபுரங்கள்
கருநந்தி விழநகைத்த கண்ணுதலோ னென்றுலகக்
குருநந்தி யையாறன் குலவுமுனி மைந்தனுக்குத்
திருநந்தி தேவனெனத் திருநாமஞ் சாற்றினனே ”

என்ற செய்யுளில் கூறுகிறது.

நந்திதேவர்க்குரிய அங்கங்கள் என்ன? இதைத் திருவையாற்றுப் புராணம்,

“ மற்றிணையி லாக்கயிலை மலைநாத னந்திக்கு
நெற்றியிற்கண் ணாலுபுய நெருப்புருவம் பிறைகொண்முடி
சற்றுமொரு குறையில்லாச் சாரூபம் பணித்தருளிப்
பெற்றியினா லருட்சுரிகைப் பிரம்புமருள் செய்தனனே ”

என்று கூறுகிறது.

நெற்றிக்கண் ஆசையில்லாமையைக் காட்டுகிறது. ஆசையை உண்டாக்கவந்த மன்மதனை எரித்தது நெற்றிக் கண். நான்கு புயங்கள் சாதாரண மனிதரல்லர் என்பதைக் காட்டுகின்றன.

நெருப்பின் நிறம் தனியேயிருக்கும் தன்மையுடையதல்ல. சார்ந்ததன் நிறத்தையே அஃது உடையது. அதனால் நெருப்பின் நிறம் வெண்மை என்னலாம். நந்தியின் வடிவம் வெண்மை. இது நெருப்பைக் குறிக்கிறது. கடவுள் அழல்வடிவினன். அதனால் கடவுளின் அம்சமே திருநந்தி.

நந்திதேவர்க்குச் சந்திரனும் உண்டு. சந்திரன் இரவில் சஞ்சரிப்பவன். அதனால் அவன் தோஷசஞ்சாரி. தோஷத்தில் சஞ்சரித்து நன்மை உண்டாக்குபவன். இதுவே குருவின் நோக்கம்.

நந்திதேவர்க்கு அளித்திருப்பது சாரூப முத்தி. முத்தி மூன்றுவகைப்படும்; பழிபடுமுத்தி, பதமுத்தி, பரமுத்தி. முத்தி அல்லாதது பழிபடுமுத்தி. படிப்படியாக வருவது

பதமுத்தி. எல்லாவற்றையுங் கடந்தது பரமுத்தி. பரமுத்தியே சாரூபமுத்தி. கடவுளிடமிருந்து எல்லாப் பாக்கியமும் கொண்டவர் சாரூப முத்தியடைந்தவர். இஃது ஒரு குறைவுமில்லாதது. சிவபெருமான் உருத்திரரெல்லார்க்கும் சாரூப முத்தி யளித்திருந்தபோதிலும் நந்தியெம்பெருமானுக்கு அளித்ததுபோல அதிகாரம் தரவில்லை. அதிகாரம் அடிக்கவும் அணைக்கவும் உபயோகப்படுகிறது.

திருநந்திதேவர்க்குப் பிரம்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதற்காக? சந்நிதானத்தை மறைப்பவர்களை அடிப்பதற்காக. அடிபட்டவரே ஆண்டவனை நினைப்பர்.

நந்திதேவர் உடைவாளையும் உடையவர். இதுவும் அதிகாரத்துக்கு அறிகுறி.

நந்திதேவரின் வலது கையில் மழுவும் இடது கையில் மானும் உண்டு. மான் வேதத்தைக் குறிப்பது. பட்டினத்தார் திருவொற்றியூர் ஒருபா ஒருபஃதில்,

“வேதம் மான்மறியே.........”

என்று கூறியிருக்கிறார். வேதமாகிய மான்குட்டியைத் தாங்கியிருக்கிறார் என்பது வேதமாகிய பொருளைத் தாங்கியிருக்கிறார் என்று பொருள் படும். வலது கையிலுள்ள மழு வீரத்தைக் காட்டுவது; ஆண்மையை உணர்த்துவது. மழுவை விட்டதாக எந்தச் சரிதமும் கூறவில்லை. மழு சம்ஹரிக்கும் தன்மையுடையது. அதனால் கடவுள் சம்ஹார கர்த்தாவாகிறார். எல்லாவற்றையும் சம்ஹரிப்பவனே உண்டாக்க வல்லவன். இதுவே கடவுள் சக்தி. சம்ஹாரன் என்ற பதத்துக்கு ஒழுங்காக இழுத்துக்கொள்பவன் என்பது பொருள். சம்ஹாரம் ஓய்வு பெறுதல். இது கடவுளின் அன்பின்பாற்பட்டது. எல்லா ஜீவன்களையும் ஒரே காலத்தில் ஓய்வு படுத்துதலே மகா சம்ஹாரம். இவ்வதிகாரம் திருநந்தி



தேவர்க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாட்சியாகப் பிரம்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

திருநந்திதேவர் ஒரு சித்தனுமாவர். சித்தன் வாழ்வு பற்றித் திருவேரகத்தைப்பற்றிய திருமுருகாற்றுப்படை உரையில் நச்சினார்க்கினியர் கூறியிருக்கிறார். சித்திசெய்யத் தொடங்கியவன் ஞானியாகமாட்டான். நினைவு இல்லாமல் சித்தி கைவரப் பெற்றவரே சித்தர். திருவையாற்றுப் புராணம்,

“யோசனைகள் பன்னிரண்டா யிரமுள்ள திருமலையிற்
பேசரிய சாரூபம் பெற்றகண நாதருக்கும்
பாசமிலாச் சித்தருக்கும் பாரிடங்க ளானவர்க்கு
மாசின்மே லதிகாரம் ஐயனீந் தருள்செய்தான்”

என்ற செய்யுளால் நந்தியெம்பெருமானுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டமை கூறப்பட்டிருக்கிறது.

இவ்வளவு அதிகாரத்தோடு கூடிய நந்திக்கு ஆலயத்தின் காவல் தரப்பட்டிருக்கிறது. இதை மேற்படி புராணம்,

“ எழுமதில் புடைசூழ்ந்த விருநான்கு வாயிலுக்கும்
வாழியதன் றனைப்பணிய வருமடியார் யாவரையும்
சூழவரு காலங்க ளறிந்துவிடுந் தொல்பணிக்கு
மாழிசூழ் புவித்தன் ஆலயத்தினுங் காவல் கொடுத்தான்”

என்று கூறுகிறது.

இக்காவலின் திறத்தை மன்மதன் சரித்திரம் விளக்குகிறது. மன்மதன் சிவபெருமான்மீது பாணத்தை விடத் துணிந்தான். நந்தி ‘உம்’ எனவே அவன் பெருமூச்சு விட்டான். நந்தியின் காப்பைக் கண்டதும் அவன் பயம் கொண்டான்.

பெரியபுராணம்,

“நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அனேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்

மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
நாப்பதக் கயிலைமால் வரைதான்.''

என்பதால் நந்தி கோயில் காவல் பூண்டமை விளங்குகிறது.

ருத் என்றால் துக்கம் என்று பொருள். ரன் ஓட்டுகிறவன். அதனால் ருத்ரன் துன்பத்தை ஓட்டுபவன் "இடும்பை நோய் ஓட்டும் உருத்திரன்" என்று சிவஞான முனிவர் கூறுகிறார். இப்பெயரும் திருநந்திதேவர்க்குப் பொருத்தமாகும். எப்படி? ஒருகாலத்தில் தேவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து சிவபெருமானிடம் சூரபன்மனைப்பற்றி முறையிடச் சென்றனர். பிரமாவே முதல் சென்றார். அவர் நந்தியை நோக்கி,

"நந்தியெம் போதுகேள் நங்கள்பால் துன்பெலாம்
சிந்தை செய்திடுதி"

என்று கூறினார். இக்கூற்றைக் கண்டு நந்திதேவர் பரிதாபப் பட்டார். துன்பப்படுபவரைக் கண்டு பரிதாபப்படல் சான்றோர் இயல்பு.

உடனே நந்திதேவர் உள்சென்று பரமனுடைய ஆக்ஞையைப் பெற்றுத் தேவர்களை உள்ளே அழைத்துச் சென்றார். இதனாலேயே நந்திதேவர்க்குத் தூயவன் என்ற பெயரும் உண்டாயிற்று. நந்திக்குச் சைலாதிபதி என்ற ஒரு பெயரும் உண்டு. அவர்க்குத் தண்டித்தற் பணியும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரு சமயம் பிரம்மா செய்த யாகம் ஒன்றுக்கு நந்திதேவர் அனுப்பப்பட்டார். ஆங்குத் தக்கன் சிவபெருமானை இழித்துகூறினான். நந்தியெம்பெருமான் இருகாதுகளையும் பொத்திக் கொண்டு 'சிவ, சிவ' என்றார். இதுவே மந்திரம் சொல்லவேண்டிய முறை. நம்முடைய காதுக்கும்



கேளாதபடி நாம் மந்திரத்தைச் சொல்லுதல் வேண்டும். உடனே தக்கன் தலைபோகவென்றும், அவ்விடத்தில் ஆட்டுத்தலை உண்டாவதாக வென்றும் நந்திதேவர் சாபம் போட்டார். ஆட்டுத்தலை மற்றொருதரம் தூஷியாது என்பதனால் அவ்வாறு சபித்தார் போலும்.

காசியில் வில்வநாதருக்குத் துரோகம் செய்யஎண்ணிய வியாஸரைத் தண்டித்தவரும் திருநந்திதேவரே.

'எனைத்தானும் நல்லவைகேட்க அனைத்தானும் ஆன்ற பெருமைதரும்' என்ற திருக்குறள்படி உபதேச அளவே நமது குணமும் இருக்கும். அவ்வளவே பெருமையும்.

சனற்குமாரர் பிரமதேவருடைய புத்திரர்; முருகப் பெருமானுடைய சிஷ்யர்; என்றும் இளமையுடையவர்.

பரமேஸ்வரரிடத்து உபதேசம் பெற்றவர் அனந்த தேவர். அவர் ஸ்ரீகண்டருக்கு உபதேசித்தார். அவர் நந்திதேவர்க்கும், நந்திதேவர் சனத்குமாரர்க்கும், சனத்குமாரர் சத்திய ஞான தரிசனிக்கும், அவர் மெய்கண்டாருக்கும் உபதேசித்தனர். இது பரம்பரையாக வந்த உபதேசம். உபதேசம் இருவகைப்படும்; ஒன்று நூல்வகையாகவருவது; மற்றொன்று பரம்பரைவழியாக வருவது.

"எந்தைசனற்குமரன் ஏத்த இயல்பாய் நந்தி உரைத் தருளும் ஞானநூல்" என்றார் பெரியாரும். ஆசாரியமுறையில் நமக்கு அனுக்கிரகம் பண்ணுகிறவர் திருநந்திதேவரே.


# திருக்குறள் விளக்கம்

திரு. கி. குப்புச்சாமி முதலியார் பதிப்பு

பரிமேலழகர் உரையும், தெளிவான விளக்கவுரையும். விலை ரூ. 9⅓. கி. சிவப்பிரகாச முதலியார், 3/2, பிள்ளையார் கோயில் தெரு, கிருஷ்ணாம்பேட்டை, திருவல்லிக்கேணி P. O. என்ற விலாசத்துக் கெழுதிப் பெறுக.

# உற்றார் யார்?

[பத்திராசிரியர்]

உற்றார் என்னும் பதத்திற்கு நன்மையைச் செய்பவர் என்று பொருள் கொள்ளலாம்.

உலகில் நாம் உற்றார் உறவினர் என்று யாரைக் கருதுகின்றோம்? தாய் தந்தையையும், உடன் பிறந்தாரையும், ஏனைய சுற்றத்தாரையுமே கருதுகின்றோம். ஒரு குழந்தையானது பிறந்தவுடன் அது, தாயினால் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கப்படுகிறது. அது, முதல் முதலாகத் தனக்கு உற்றவர் என்று தாயைக்கருதுகிறது; பிறகு தாயின்மூலம் தந்தையைத் தனக்கு உற்றவர் என்று தெரிந்துகொள்ளுகிறது; பிறகு படிப்படியாக சகோதர சகோதரிகளையும், பிற சுற்றத்தாரையும் உற்றார் என்று தெரிந்துகொள்ளுகிறது; வயது முதிர முதிர தனக்கு உற்றார் என்று கருதப்பட்டவர்களெல்லாம் தன்னுடைய நன்மையைக் கோரினவர்கள் அல்ல என்றுந் தெரிந்து கொள்ளுகிறது. சில சமயங்களில் நமக்கு எவர் நன்மையைச் செய்வார் என்று எதிர்பார்க்கின்றோமோ அவர்களே நமக்குத் தீமையைச் செய்கின்றார்கள். உலகில் சிலவேளைகளில் தாய்மார்களே தாங்கள் ஈன்றெடுத்த அருமைப் புதல்வர்களைக் கொன்று விடுவதாகவும் காண்கின்றோம். ஆகையால் நம் தாய்தந்தையர், உடன்பிறந்தார் முதலியோரை நமக்கு உற்றவர் என்று கொள்ளுதல் யாங்ஙனம்? அவர்கள், நாம் இவ்வுடலை விட்டபிறகு துணைபுரிய வல்லரா? "பரிந்தசுற்றமும் மற்றுவன்துணையும் பலரும் கண்டழுதெழ உயிருடலைப், பிரிந்துபோம் இது நிச்சயம் அறிந்தால் பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்த்துக், கருந்தடங் கண்ணிபங்கனை உயிரைக் காலகாலனைக் கடவுளை விரும்பிச், செருந்தி



பொன் மலர் திருத்தினை நகருட் சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வாக்கு. காலன் உயிரைக் கவர வரும்போது அன்புடைய சுற்றத்தார்களும் மற்ற வலிய துணைகளும் இருந்தும் என் செய்ய வல்லர்? சுவாமிகள் நமக்கு என்ன போதிக்கின்றார்? உலகில் உறவினர் நண்பர் முதலானவரை நமக்கு உற்ற துணையென்று கருதுதல் கூடாது. ஒரு நாள் உடலைவிட்டு உயிர் நீங்கிவிடுமென்பது நிச்சயம். இதை நன்றாய்ச் சிந்தித்துப் பாருங்கள். சிந்திப்பீராயின் அறியாமையோடு இவ்வுலக வாழ்க்கையே பெரிதென்று எண்ணி "அருமாநிதி இயற்றி என்றும் வாழலாம்" என்பது நிறைவேறாத காரியம் என்ற முடிவுக்கு வருவீர்கள். பிறகு யாரைத் துணை கொண்டால் பிறவிக் கடலினின்றும் கரையேறலாமென்றால், அங்கயற் கண்ணியாகிய அருட்சத்தியைத் தனது இடது பாகத்திற் கொண்டவனும், உயிர்க்குயிராயிருப்பவனும், நம்முடைய உயிரைக்கவரும் காலனுக்குக் காலனுமாயிருப்பவனுமாகிய சிவபெருமானிடத்து மெய்யன்பு பூண்டு அவனையே சரணாகதியாக அடைந்தால், அவன் அருட்டுணை கொண்டு துன்பங்கள் நிறைந்த பிறவிக் கடலினின்றும் கரையேறலாம் என்று அறிவுறுத்துகின்றார்.

இது போன்ற பொன்மொழிகள் சைவத்திருமுறை பன்னிரண்டிலும் நிறைந்துகிடக்கின்றன. அவற்றுள் சிலவற்றை மாத்திரம் இவ்விடத்தில் குறிப்பிடுகிறேன்.

சிவபெருமானைத் தவிர்ந்து நமக்கு உற்றார் ஒருவருமில்லை என்பதை,

"உற்றார் ஆருளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக் குற்றார் ஆருளரோ"

"உற்றாரி லாதார்க் குறுதுணை யாவன ஓதினனால்
கற்றார் பரவப் பெருமை யுடையன காதல்செய்ய

இற்பார் தமக்குக் கிளரொளி வானகந் தான்கொடுக்கும்
அற்றார்க் கரும்பொருள் காண்க ஐயாற னடித்தலமே"

என்னும் அப்பர் சுவாமிகள் தேவாரங்களாலும்,

"குறைவிலா நிறைவே குணக்குன்றே
கூத்தனே குழைக் காதுடை யானே
உறவிலேனுனை யன்றிமற் றடியேன்
ஒருபிழைபொறுத் தாலிழி வுண்டோ
சிறைவண் டார்பொழில் சூழ்திருவாரூர்ச்
செம்பொனே திருவாவடு துறையுள்
அறவனே யெனை அஞ்சலென் றருளாய்
யாரெனக்குற வமரர்க ளேறே"

"எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்றுயென் றுன்னையே உள்குகின்றேன் உணர்ந்துள்ளத்தால்
புற்றாடரவா புக்கொளியூ ரவிநாசியே
பற்றாகவாழ்வேன் பசுபதியே பரமேட்டியே"

"உற்றனன் உற்றவர்தம்மை யொழிந்து உள்ளத்துள்பொருள்
பற்றினன் பற்றினன் பங்கயச் சேவடிக்கேசெல்ல
அற்றனன் அற்றனன் ஆமாத்தூர் மேயான் அடியார்கட்கான்
பெற்றனன் பெற்றனன் பெயர்த்தும் பெயர்த்தும் பிறவாமைக்கே"

என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரங்களாலும்,

"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

என்னும் திருவாசகத்தாலும் அறியலாம்.

ஐம்புலன்களால் அறியக் கூடிய உறவினர்களை உற்றாரென்று கருதாமல், ஐம்புலன்களால் அறிய முடியாதவனும் மெய்புணர்வினால்மட்டும் அறியக்கூடியவனுமாகிய இறைவனை உற்றவரென்று கருதுவது சுலபமான காரியமல்ல. இறைவ



னுடைய குணங்களைப்பற்றியும் அவன் நமக்கு எப்படி அருள் செய்கின்றானென்னும் விஷயத்தைப்பற்றியும் சதா காலமும் கற்றும் கேட்டும் சிந்தித்தும் வந்தாலொழிய இவ்வெண்ணம் மனதில் பதியாது.

"பற்றி நின்ற பாவங்கள் பாற்ற வேண்டில் பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில், சுற்றி நின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டிற் சொல்லுகேன் கேள் நெஞ்சே துஞ்சா வண்ணம், உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும் உன்னையல்லால் ஒரு தெய்வம் உள்கேனென்றும், புற்றரவக்கச் சார்த்த புனிதாவென்றும் பொழிலாரூராவென்றே போற்றா நில்லே" என்னும் திருத்தாண்டகத்தில் மக்கள் துன்பங்களுக்குக் காரணமாகிய பாவங்களையும் வினைகளையும் போக்கி, பேரின்ப முத்தியை அடையும் வழியை அப்பர் சுவாமிகள் கூறுகின்றார். நீயே என்று பிரிநிலை ஏகாரம் கொடுத்ததனால் இறைவனை யொழிய வேறு ஒருவர் ஒற்றவரும் உறுதுணையும் ஆகாரென்று பெறப்படுகிறது.

காரைக்காலம்மையாரை, மற்றொரு மாங்கனியைக் கொண்டு வரும்படி, தன் கணவன் ஏவியபோது, அவர் அதனை இறைவரை வேண்டிப்பெற்றார் என்னும் விஷயத்தை,

"உற்றவிடத்துதவும் விடையவர் தாள், தம்மனங்
கொண்டுணர்தலுமே அவாருளாற்றாழ் குழலார்,
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக்கனி யொன்று"

என்று சேக்கிழார் பெருமான் இறைவனுடைய உற்றவிடத்து உதவும் தன்மையை மிக அழகாகக் கூறுகிறார். ஆகையால், நாம், முழுமுதற் கடவுளாகிய இறைவனே நமக்கு உற்றவரும், உறுதுணையுமெனக் கொண்டு மன மொழி மெய்களால் அவனை எக்காலமும் வழிபட்டுப் பிறவிப் பெருங்கடலை நீந்தி முத்திக்கரை ஏறுவோமாக.

# இருதயம் மூளையா?

[இஃது, ஒரு மனிதனுடைய உடலில் இருதயத்தானத்தைக் குறிப்பிடும் பொருட்டு, ஸ்ரீமத் - பாம்பன்: குமரகுருதாச சுவாமிகளவர்கள், பெரிதும் வேதாகமாதி நூலுரைகளின் துணை கொண்டு செய்தருளிய சொற்பொழிவின் குறிப்பாகும்—மா. துரைசாமி முதலியார்.]

சூடாமணி நிகண்டிலும், பிங்கலந்தை நிகண்டிலும் மார்பை நெஞ்சம், மருமம், ஆகம், உரம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. பிங்கலந்தையில் மனதை முன்னம், அகம், உள்ளம், இதயம், நெஞ்சு, உள் எனக் குறிக்கப்படுகிறது. அமரமென்னும் வடமொழி நிகண்டில் ஹ்ருதயம், ஹ்ருத் என்னுமிரண்டும் பதும வடிவாயுள்ள மாமிசத்துக்குப் பெயரெனக் குறிக்கப்படுகின்றன. சப்தரத்நாகரம் ஹ்ருத் என்பதை மனஸ், ஹ்ருதயமென்னுங் குண்டி, மார்பு எனக் கூறுகிறது. தலையிலுள்ள மூளையை மஸ்திஷ்கம், கோர்த்தம் என அமரம் கூறுகிறது. சிரஸ், கபாலம் ஆகிய இவை கூறப்படவில்லை. அப்பர் சுவாமிகள் 'நெஞ்சே நீ நினையாய்' என்றருளிச்செய்தார்களே யல்லாமல் 'தலையே நீ நினையாய்' எனப் பாடவில்லை. 'தலையே நீ வணங்காய்' என்றருளினர். இவற்றால் சிரசுக்கு வேறாகவே இருதயமென்பது பெறப்படுகிறது.

இன்னும், 'அக்நிகோத்ராத்மனே ஹ்ருதயாய நம:.... ........சிரஸே ஸ்வாஹா' என்று ருத்ரநமகம் கூறுகிறது. பிண்டமூலம் அக்கினி மண்டலம், இருதயம் சூரிய மண்டலம், கபாலமத்தி சந்திரமண்டலம் என யோக நூலார் கூறுவர். சிரம் ஸ்ரீபர்வதம், லலாடம் கேதாரம், புருவமத்தி வாரணாசி, குசம் குருக்ஷேத்ரம், இருதய சரோருகம் பிரயாகை, இருதயமத்தி சிதம்பரம், மூலாதாரம் கமலாலயம் எனத் தர்



சனோபநிஷதம் சாற்றுகிறது. மூலாதாரம் திருவாரூர், நாபி திருவானைக்கா, மணிபூரகம் திருவண்ணாமலை, இதயம் சிதம்பரம், கண்டம் திருக்காளத்தி, புருவமத்தி காசி, பிரமரந்திரம் கயிலை, துவாதசாந்தம் மதுரை எனத் திருவாலவாய்த் திருவிளையாடற் புராணங் கூறுவதாயிற்று. இவற்றாலும் சிரசுக்கு வேறாகவே இருதயமென்பது பெறலாம். ஆறுதாரத்தாலும் நெஞ்சமே இருதயமென்பது சித்தித்தது.

இனி, சாண்டில்யோபநிஷதம் 14 உலகங்களைப் பிண்டத்தே கூறிச் செல்லுமிடத்து,

1. அகப்பாதம் அதலம்
2. புறப்பாதம் விதலம்
3. பரடு நிதலம்
4. கணைக்கால் சுதலம்
5. முழங்கால் மகாதலம்
6. தொடை இரசாதலம்
7. இடை தலாதலம்
8. நாபி பூலோகம்
9. வயிறு புவர்லோகம்
10. இருதயம் சுவர்லோகம்
11. தோள் மகர்லோகம்
12. கண்டம் ஜனோலோகம்
13. புருவமத்தி தபோலோகம்
14. சிரசு சத்தியலோகம்

என்று கூறுகிறது. இவற்றுள் 'சித்தம் போத சம்பந்தமாயிருத்தலாற் சித்தவுறையுளாம் நாபிப் பகிர்முகப்பூலோகமும், போதவுறையுளாம் இருதயம் பகிர்முகச் சுவர்லோகமுஞ் சம்பந்தந்தா லொற்றுமையுறும்; ஆறுதார நியதியிலும் நாபி, இருதயமாகிய இவ்விரண்டுமே மத்தியி லுறுகின்றன; நடு வொழிவதின்று.' இவற்றாலும் சிரசுக்கு வேறாக இருதய மேற்பட்டது.

மைசூர் அரண்மனை மருத்துவரெழுதிய வைத்திய படமும் இச் செய்தியையே வலியுறுத்துவதாகும்.

இன்னும், தைத்திரீயாருண சாகை நாராயணம், 'புர மத்தியிலே (=சரீர நடுவில்) (தஹரம்=) சிறிதாயும், பாவமிலதாயும், (பரம) ஆன்மாவிற்குச் சிறந்த வீடாயுமிருக்கின்ற இதய கமலம் எதுவோ, அதனிற் சோகமிலதாய தகராகாசமுளது; அதன் உள்ளுளது உபாசிக்கத்தக்கது' என்றும், பைங்கலோபநிஷதம், "கலசத்திலுள்ள தீபம்போலத் தேக மத்தியிலிருக்கின்ற ஆன்மாவைத் தியானித்தல்வேண்டும்: அங்குட்ட மாத்திரனாய்(=பெருவிரலளவினனாய்)ப் புகையில்லாத வொளி வடிவினனாய், உட்புலத்திருந்து விளக்கம் புரிபவனாய், நாசமிலியாயிருக்கின்ற ஆன்மாவாய கூடத்தனைத் தியானித்தல் வேண்டும்" என்றும் கூறுமாற்றானும் சிரசுக்கு வேறாக இதயகமலமும் ஆன்மவிருக்கையுமேற்பட்டன. கலசத்தின் மத்தி தேகமத்தி யென்றமையின் நடுவெளியில் ஆத்மாவிருக்கின்றது. மேலுங் கீழுமில்லை. கலசத்தின் தலையெனக் கூறப்படவில்லை. சரீரமத்தி மூலாதாரமாகவேனும் இருதயமாகவேனு மேற்படும். சிரசு ஏற்படாது. அதோமுக கமலம் பின் வருதலின் மூலாதாரமுங் கோடற்பாலதன்று. அதோமுக இதயகமலமென்பதை, ருக்வேத ஸௌபாக்ய லக்ஷ்ம்யுபநிஷத்து, "அதோமுகமாயுள்ள இருதய சக்கரம் எட்டிதழ்களோடுங் கூடியுள்ளது. அதன் நடுவிலே சோதிமய இலிங்காகாரம் தியானித்தல்வேண்டும்" என்று கூறுவதினின்று மறியலாம். மாபாடியமும் "கீழ்நோக்கித் தோன்றியதோர் திவ்ய கமலம்" என்கிறது. இவற்றானும் சிரசு ஏற்படாது.

இன்னும் ஸுபாலோபநிஷத் "ஹ்ருதயஸ்யமத்யே லோஹிதம் மாம்ஸம் பிண்டம் யஸ்மிந்தத் தஹரம்" என்று கூறுவதனால் இருதய கமலமுகை சிவந்த மாமிச பிண்ட



மென்பதும் அதன் மத்தியிலேயே தஹரமிருக்கிற தென்பதும் வெளியாகிறது. இருதய மத்தியென்றது நெஞ்சினையேயாம். யஞ்ஞத்திற்கு நெஞ்சு ஓமகுண்ட மென்றும், இருதயம் யூபத்தம்பமென்றும் தைத்திரீயாருணசாகை நாராயணம் கூறுகிறது. அவ்யூபத் தம்பமே தம்பாகார முகையாம். சிவந்த மாமிச பிண்டம் மண்டையுமன்று, மூளையுமன்று; மூளை வெண்மை நிறத்தது. தைத்திரீயாருணசாகை நாராணம் "பத்ம கோசப்ரதீகாசம்" என்றியம்புமாற்றான் இதய கமலத்தினைக் குறிப்பாக வெடுத்துரைக்கிறது. (கோசம்=முகை). அவ்வுபநிடதமே "தஸ்ய மத்யே வந்ஹிசிகா= அதன் மத்தியில் அக்கினி சிகை" யென்றும் ஓதுகிறது. இங்ஙனம் இதய தாமரைமுகை தம்பமென்பவற்றானும் மண்டை மூளை யென்பன சித்தியா; இருதய பிண்டத் தலமே சித்தித்தது.

சௌபாக்ய லக்ஷ்ம்யுபநிஷத் "அதோ முகமாயுள்ள இருதய சக்கரம் எட்டிதழ்களோடுங் கூடியுள்ளது" என்றது போலவே நாரத பரிவ்ராஜகோப நிடதமும் ஆறாம் உபதேசத்தே, சீவனாயுள்ளோன் சரீரத்திற் சஞ்சரிக்கு ஞான்று இதய தாமரையின்,

1. கிழக்குத் தளத்திற் புண்ணிய விருத்தியும்,
2. தென்கீழ்த் தளத்தில் ஆலசியமும் நித்திரையும்,
3. தெற்குத் தளத்திற் குரூர புத்தியும்,
4. தென்மேற்றளத்திற் பாவபுத்தியும்,
5. மேற்குத் தளத்திற் கிரீடைப் பிரீதியும்,
6. வடமேற்றளத்திற் கமனபுத்தியும்,
7. வடக்குத் தளத்திற் சாந்தியும்,
8. வடகீழ்த் தளத்தின் ஞானமும்,
9. கர்ணிகை (பூவின் கொட்டை)யில் வைராக்கியமும்,
10. கேசரம் (பூந்தாது) என்பதில் ஆன்ம சிந்தையும்

உண்டாகின்றன வென்று உணர்த்துகின்றது. இவ்விவரம்

ஹம்ஸோப நிஷத்திலும் சில பேதமாகப் படிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கர்ணிகையிற் சூரியனும், சூரியனுக்கு நடுவணிற் சந்திரனும், சந்திரனுக்கு மத்தியில் அக்கினியும், அக்கினி நடுவில் மகேசனும், சதாசிவனும், சிவனு முளரென்று நிசுவாச காரிகை கூறுமென்பதை,

“ இதய தாமரைக் கருணிகை தன்னி
லினனுமவ் வினனடுவணின் மதியும்
மதியினுப் பணிற்கனலு மக்கனலுண் மகேசன்
றாய சதாசிவன் சிவனுங்
கதழ்வொடே யுளரெனு நிசுவாச
காரிகைச் சொலின்முடிவி னிற்கின்ற
பதியெனுஞ் சிவனே குகனென்றோர்
பவர்க்கும் பிறப்புளதோ பசுபதியே ”

என்ற திருப்பாவினாலு முணர்ந்திடுக.

இதழ்கள் இருதய முகையின் உட்புலத்துள்ளன. குகையிலிருப்பவன் எனின் இரகசியப் பொருளாயுள்ளோன் எனவாம். குகை = இரகசியம். குகையென்பது உபநிடதங்களில் வரு வசனங்களால் ஆன்மாக்களின் இருதய குகையேயாமென்ப தேற்படுகின்றது. மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ள பைங்கலோப நிடதமும், “ கலசத்திலுள்ள தீபம் போலத் தேக மத்தியிலிருக்கின்ற ஆன்மாவைத் தியானித்தல்வேண்டும் : அங்குட்டமாத்திரனாய் (=பெருவிரலளவினனாய்), புகையில்லாத வொளி வடிவினனாய், உட்புலத்திருந்து விளக்கம் புரிபவனாய், நாசமிலியா யிருக்கின்ற ஆன்மாவாய கூடத்தனைத் தியானித்தல்வேண்டும் ” என்று கூறுகிறது. இவ்வுண்மைப் பொருணிலை இருதயமாகவினன்றே கல்லாலந்தண்ணிழற்கீழ் எழுந்தருளியிருந்த பரமாசாரியன்,



“ ..........................உரத்திற் சேர்கொள்
கரதல மொன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி
ஒருகணஞ் செயலொன் றின்றி யோகுசெய் வாரி னுற்றான் ”

எனக் கந்தபுராணங் கழறுமாறு தனது சின்முத்திரை வலக்கரம் இருதயத்தானஞ் சாருமாறு வைத்துணர்த்தினன். சின்முத்திரை = மோனமுத்திரை. “குறியதனுளிதயத்தே யரனைக் கூடுங் கொள்கையதி லரனவர் ” என்ற சிவஞான சித்தியார் பாட்டுங் கவனிக்கற்பாற்று. முத்திரைக் கரம் தலையிலேனும் மற்றெவ்விடத்திலேனும் வையாமல் உரமாகிய நெஞ்சில் வைத்ததென் ? மனமடங்கிய நிலையிலே தீபாகாரமே மத்தியிற் றெரிகின்றது. புருவமத்தியிலே பார்க்கத் தோன்று மொளி கண்ணொளியே. இதனை ஆன்மா, பரமான்மா வொளியென்பது அறியாமை.

மனம் முதலிய அந்தக் கரணங்களை நோக்குங்கால், “கண்டத்திற் சங்கற்ப விகற்பங்களைச் செய்யு மனமும், முகத்தில் நிச்சயத்தைப் புரியும் புத்தியும், இருதயத்தில் அபிமானத்தை யுண்டுபண்ணும் அகங்காரமும், நாபியில் முன்னிழைத்த காரியத்தைச் சிந்திப்பதெனும் அவதாரணத்தை யிழைக்குஞ் சித்தமுமுள்ளன”வென்று சாரீரகோப நிடதம் சாற்றுகிறது. இதனால் இருதயத்தானமே அபிமான அஹங்காரத்திற்கு இருப்பிடமாகிறது. (அஹங்காரம்— அஹம் = நான்; காரம் சாரியை). இன்னும் மனத்திற் சந்திரனும், புத்தியிற் பிரமாவும், சித்தத்தில் க்ஷேத்ரஞ்ஞனும் (விஷ்ணு), அகங்காரத்தில் உருத்திரனும் அபிமான தேவதைகளாக விருக்கின்றனரென்று யஜுர்வேத ஸுபாலோப நிடதம் சொல்லுகிறது.

இனி, மேலாலவத்தை கீழாலவத்தைகளைப் பார்க்கின், மாபாடியத்துள்,

| | | |
|---|---|---|
| லலாடம் - சாக்கிரம் - கருவி | | 35 |
| கண்டம் - சொப்பனம் | ,, | 25 |
| இதயம் - சுழுத்தி | ,, | 3 |
| உந்தி(நாபி) - துரியம் | ,, | 2 |
| மூலம் - துரியாதீதம் | ,, | 1 |

என்று சொல்லப்பட்டுள்ளது. இதனால் அணுத்தன்மைப் பட்டு நிற்கும் ஆன்மா தலைமூளையிலிருக்கின் அது சாக்கிரத்தான மெனப்படாது. சுழுத்தித் தானஞ் சுருங்கி நிற்கின்றது. இதனினுஞ் சுருங்கியுள்ள துரியமுந் துரியாதீதமும் நடுவிலிருக்கும் ஆன்மா கீழே கருவிகளோடு கூடி நிற்கும் முறையாம். இது மேலே கூடி நிற்றலே சொப்பனமுஞ் சாக்கிரமும். மூன்று கருவிகளோடு அவத்தைப்படும் சுழுத்தி பகிர்முகம்; அதனுள்முகத்தே ஆன்மா விருக்கின்றது. நாபியும் மூலமும் அதோமுக கமலமுடையனவல்ல. நடுவிருக்கும் ஆன்மா மேலுங் கீழும் போந்து ஐந்தவஸ்தைப்படுதல், ஆமை முன்னிரண்டு காலையும் கழுத்தையும் உள்ளிழுத்துக் கோடல்போலும்; பின்னிரண்டு கால்களையும் பின்னிழுத்துக்கோடல்போலுமென்க. கால் நான்கும் தலையும் நீட்டி நிகழ்வதுபோலும் சாக்கிராவத்தை. மழைக்காலத்துண்டாம் ஒருவித நத்தை நடுவிலிருந்துகொண்டு தலையை வெளியில் நீட்டி நடப்பதும், இடையூறெதிர்ப்படின் உள்ளடங்கி நின்றுவிடுவதும் பிறகு வெளிப்படுவதும் இங்கெடுத்துக் கிளத்தும் ஆன்ம நிலைக்கு உவமானமாக்கப்படும். மூட்டைப்பூச்சி பலநாள் ஆகாரமின்மையால் இருக்குமிடம்விட்டு நடுவிடத்தில் அடங்கியிருக்கும். இதனை யாவருங் காணலாம். ஆன்மா அப்போது ஒடுக்க முறைப்படியே இதயத் தடங்கிநிற்கும். மரணகாலத்தில் பிராணன் உடலைவிட்டு மேனோக்கும். அப்போதுதான் அணுத்துவப்பட்டு நிற்கும் ஆன்மாவும் மேனோக்கிச் சென்று



விடும். கனவிற் சுழுத்தி மத்தியாலவத்தையாகலின் சுழுத்தித்தானத் திருந்தபடியே நிட்டைகூடித் தன்னிலை காண்பவன் ஆன்மா.

பிராணனை மேலாகவும் அபானனைக் கீழாகவுங் கொண்டு நடுவிருக்கும் அங்குட்ட வளவுடைப் புருடனினும் அந்தப் பிராணன் மேம்படு பொருளாதலின்று; அதுபோலவே சூக்கும லிங்கம் இருக்கின்ற மூலத்தானத்திற்கு மேலே தூலலிங்கமாகிய தூபிவரையு மெழுப்பப்பட்டிருப்பனவெல்லாம் அத்தானத்தினும் மேம்பாடுடையனவாய் மதிக்கப்படுவனவல்ல; ஆகலின், ஆறுதாரத்தினும் நெஞ்சத்திற்கு - அனாகதத்திற்கு மேலிடத்தே விசுத்தி, ஆஞ்ஞை முதலிய தானங்களிருக்கின்றமையின் அவை தகராலயத்தினும் மேம்பாடுடையனவாகா.

ஆன்மா, கண் காது மூக்கு முதலிய கருவிகளோடு கூடியறிதல்போலவே மூளையோடு கூடி யோசிக்கும். கண் முதலியன கருவியாயிருத்தல்போல மூளையுங் கருவியேயாம். இது ஜாக்கிராவத்தைக் குரியதே. அறிவுக்குரிய மூளையில் ஆன்மா விருக்குமெனின், அப்படிப்பட்ட கண் காது முதலியவற்றிலு மிருக்குமெனல் சாலும். கண் கெட்டவனும், காது கெட்டவனும், மூளை கெட்டவனு மிருக்கின்றமையின் அம் முடிவொன்றுஞ் சாலாது. தலையிலிருந்து கொண்டு ஆன்மா வொன்றையும் பாவிப்பதில்லை. நெஞ்சிலிருந்து தான் பாவிக்கின்றது. நெஞ்சந்தான் திடுக்கிடுகின்றது. நானென அகங்கரித்தெழுவதும் அங்கேதான் காணப்படுகின்றது. நானெனச் சுட்டுமிடமும் அவ்விடந்தான். ஆன்மா அங்கேதானிருக்கின்றதெனல் புலப்படுகின்றது. எண்ணம் அங்ஙனம் உண்மையினாலன்றோ இதயகமலங் குளிரின் முகமுங் குளிருகிறது; மலருகிறது. மூளையிலிருப்பதாகக் குறிப்பிடல், மேலே கூறிப் போந்த பிரமா

ணம் ஏது திருட்டாந்தங்கட்கெல்லாம் விரோதப்படும். இதய பங்கய குகையிலுள்ள ஆன்மாவே இடைகலை பிங்கலை சுழுமுனை முதலிய நாடிகளிலும் வியாபியா யிருக்கின்றது. சிரசே பிரதான மென்பது பகிர்முகம். இருதயமே பிரதான மென்பது அந்தர் முகம். அந்தர் முகமே விசேடம். கண்டத்தின் மேலாகக் கண் முதலிய அறிகருவிக ளிருக்கின்றனவே யெனின், அவற்றின் விசேடக் கருவிகளாய அந்தக்கரண சிரேட்ட அகங்காரம் இருதயத்திலன்றோ விருக்கின்றது. பிரமாணங்கள் மேலே வந்துள்ளன. சிவாலய அந்தர்க்கத மூர்த்திக்கு மேலாக விருக்கின்ற சிகர கலசம் முதலியன மூர்த்தியினு முயர்வுடையன வல்ல; பகிர்முகத்தன. தேரின் சிகரத்தையும் ஆலயம் அமைக்கப்பட் டிருக்கின்றதையும் நன்கு கருதின் இருதயத்தானத்திலேயே இறையுமிருக்கின்றனனென்பது புலனாம். ஆன்மலிங்கம் இருதய குகையிலுளது. கூடஸ்தன், மோன முத்திரை முதலியவுங் கருதுக.

விராட்புருடனது சென்னிமிசை 12-ல் அந்தச் சிவலோகந் தடத்த மூர்த்திக்குளது. அதுவும் பகிர்முகத்ததே. அந்தர் முகஞ் சொரூப பரம்பொருளது. அஃது ஆன்ம விலக்கண வியாபகத்தாற் பூரணம். தஹராகாசமாகிய இருதய குகையில் இரண்டான்மாவுள. "குகையின்கட் பிரவேசித்தவை யிரண்டான்மாக்களே; அங்ஙனங் காணப்படலான்" என்னும் பிரஹ்ம ஸூத்ரத்தாலும் இஃதறியக் கிடக்கிறது.

யானைக்கு மூளை பெரிதாக விருந்தும் அது பேரறிவுள்ளதாகக் காணப்படவில்லை. ஆகலின், மூளையே அறிவுக்குரியதென்பது முற்றுஞ் சாலாது. அதனோடு சில ஏதுவும் வேண்டும். மனிதனுக்கும் அப்படிப்பட்டதுண்டு. கொடி, செடி, மரம் ஓரறிவிற்று. அதற்கு மண்டையும் மூளையுமில்லை. புழு ஈரறிவிற்று. அதற்கும் மண்டையும் மூளையு



மில்லை. இவ்வாற்றானும் மூளைக்கு வேறாகவும் உணர்ச்சிக் கருவி யிருக்கலாமென்ப தேற்படுகின்றது.

மூளையே ஆன்மாவென்பது இரத்தமே ஆன்மாவென்பது போன்றது. இரத்தம் ஆன்மாவன்று. மூளையும் ஆன்மாவன்று. 'குளோராபார' மென்னு மயக்க மருந்தாலும் இஃது வெளியாம்.

இரசம், இரத்தம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம் ஆகிய 7-ம் தாதுப்பொருள்கள். பிராண சுவாசமும் ஆன்மாவன்று. நித்திரையில் சுவாசமிருந்தும் அறியக்கூடவில்லை. மனத்திற்கும் பிராணனுக்கும் சம்பந்த முண்டு. ஒன்றிலொன் றடங்கும். ஒரு நோக்கப்படும்போது சுவாசமும் அதனோடு ஒன்றுபட்டு நிற்கும். ஒவ்வொரு நோக்கத்தும் அஃதப்படியே நிற்கின்றது. நித்திரையில் மனமடங்கி விட்டமையால் சுவாசம் அதிகம் வெளிப்படுகின்றது.

இருதய சோதனை செய்வோர், 'இருதயத்தை யறுத்துப் பார்த்தோம். அதில் வெளியில்லை. ஆகாசமில்லை. அதனால் ஆன்மா மூளையிலிருக்க வேண்டு'மென்பர். மண்டையிலுள்ள மூளையிலும் வெளி காண முடியாது. இடையில்லாமல் மூளை நிறைந்திருக்கிறது. மூக்கு நுனியில் கிராணேந்திரிய முண்டென்பதை யறுத்துச் சோதிப்பது எவ்வளவு கூடாமையோ, மற்றைய இருதய முதலிய பொருள்களைச் சோதிப்பதும் அவ்வளவு கூடாமையாம்.

இருதய குகையானது ஒரு சவ்வாலே தடுக்கப்பட்ட இரண்டு பகுதியாய ஒவ்வொன்றிலுங் கீழு மேலுமான இரண்டிரண்டு அறைக ளிருக்கின்றன. அவற்றுள் மேலுள்ளன விரியும்போது கீழுள்ளன சுருங்கும். கீழுள்ளன விரியும்போது மேலுள்ளன சுருங்கும். இரத்த நடை சுவாச நடைகட்கும் அங்கே சம்பந்த முண்டு. அவ்விடத்தே டக்டக் என நிகழ்வது காணலாம். 2-ம் இரண்டு திருவடிக ளென்க

அங்கிகழ்ச்சியிலே எல்லா நாடிகளும் நடக்கின்றன. அஃதில்லையாயின் அசைவு, சுவாசம், உணர்ச்சி யெல்லாம் நின்றுவிடும். இஃதிரவும் பகலும் இடைவிடாது நிகழ்கின்றது. இதுவே தகராகாச தாண்டவம். இதுவே சிதம்பர நடனம். ஸாமவேத தர்சநோபநிஷதம் "சிதம்பரந்து ஹ்ருந் மத்யே = இருதயமத்தி சிதம்பரம்" என்று கூறுகிறது. இது தூலமாகவுஞ் சூக்குமமாகவு முளது.

---

வாகீச முனிவர் அருளிய

# ஞானாமிர்தமூலமும் விளக்கவுரையும்

[ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, ஔவைத் தமிழக மாணவர் கழகம், திருவோத்தூர்]

## நூல் ஞானபாதம்

### அகவல் 8

பிறழா நிலைமைப் பெரும்பெயர் ஞானக்
கறையறு பாதம் முறையுறக் கழறின்,
பசுபா சத்தொடு பதியாய் பெற்றி,
மதியோர் பசுமூ வகையென மதிப்பர்
பன்னிற் கேவலன் சகலன் இன்னியற்
சுத்தன் கேவலற் சொற்றிடின் நித்தன்
மெய்த்தகு குணமிலி வியாபி மொய்த்து
மலநனி புணர மறைவோ னிலனெனச்*
செய்தியு மறியோன் மையில மூர்த்தன்
வலியில னசேதன னொளியிலி இறையலன்
மாயா வுதர மரீஇத் தேயாப்
போக நினைந்த சகலற் கெய்திய
மூாண்மிகு கூற்றை மூரித்த அரன(து)
அருங்கலை யமர விரிந்திருஞ் சேதனம்
அடையா விச்சை யடையத் தடையில்
விடயப் பகுதி விரவிப் புடையே
பொங்கி யராகம் புணரத் தங்காது
ஆசை யெங்கணு மாசற நிமிர
வெற்பிரதான மொற்கமில் குணத்தொடு
புத்தி முதலிய தொத்தினி தறழப்
பிணித்தவிற் பிணிப்பினன் பசுமற் றிணைத்த
நியதி முன்னர் இயலிரு வினையிற்
பிறழா தறழப் பின்னர்க் குறையாக்
காலங் காலத் தளவைப் பாலிற்
காட்டத் தொழிலொடு போகத் தாட்டுண்(டு)
இரியாத் தத்துவ கலையினி லிவணம்
பரியாப் பந்தம் பந்தித் தொருவழி
அறிவு சிறிதமர்ந் தாக மாய
பிரியா மோகினிப் பெரும்போ கத்தைத்
தானென எண்ணி ஆறு முன்வினைப்
பயன்பல மாந்தி வியந்துறை காலை
வல்வினை எல்லை செல்லாக் காலத்
தொல்லென வொப்ப வுயர்பெருஞ் சிவனரு
சத்தினி பாதந் தழைப்ப மெய்த்தகு
குருபரம் பரன தருளின் செவ்வி
வம்பறு சம்பிர தாயத் தஞ்சுடர்
உற்ற காலைச் சொற்றொடர் பற்றுத்
தேயா தியாவு மாயறி வகன்ற
வாயாச் சிவன தணிகிளர் சீர்த்தி
நின்மலத் தியையும் பின்மலத் தியையான்
அந்தமில் பந்தமற் றிவணம்
சிந்துதல் சிந்தல் தெரியுங் காலே.

*'இலனெனச்' என்பது அச்சுப்பிரதியிற் காணும் பாடம்.



இது, பரமசிவன் ஆகமத்தில் அருளிச்செய்த சதுர்ப் பாதங்களில், "ஞானபாதமாவது பசு, பாச, பதியென்ற

மூன்றையும் ஆராய்ந்தறிதலாம் '' என்று கூறி, இவையிற்றிற் பசுவினது கேவல சகல சுத்தாவத்தை இலக்கணம் கூறியது.

இதன்கண் "பிறழா நிலைமை" (1) என்பதுமுதல் "சுத்தன்" (6)என்பதுவரை ஒரு தொடராகவும், "கேவலற்சொற்றிடின்" (6) என்பது முதல், " இறையவன் " (10) என்பது வரை ஒருதொடராகவும், "மாயாவுதரம் மரீஇ"(11) என்பது முதல், " பிணிப்பின் பசு " (21) என்பதுவரை ஒரு தொடராகவும், "மற்றிணைத்த" (21) என்பதுமுதல், " வியக்துறை காலை " (31) என்பதுவரை ஒரு தொடராகவும், " வல்வினை யெல்லை " (31) என்பதுமுதல், " பின்மலத்தியையான " (40) என்பதுவரை ஒரு தொடராகவும், " அந்தமில் " (41) என்பது முதல், " தெரியுங்காலே " (42) என்பதுவரை ஒரு தொடராகவும் கொள்ளப்படும்.

முதற்றொடர் (1—6)

*பிறழா நிலைமைப் பெரும்பெயர் ஞானக்*
*கறையறு பாசம் முறையுறக் கழறின்*
*பசுபாசத்தொடு பதி ஆய்பெற்றி ;*
*மதியோர், பசு மூவகைஎன மதிப்பர் ;*
*பன்னில், கேவலன், சகலன், இன்னியல்*
*சுத்தன்.*

இது, ஞானபாதமாவது பசு, பாசம், பதி என்ற முப் பொருளையும் ஆராய்ந்தறிவது என்றும், அவ்வாராய்ச்சி யுடையோர் பசுவை மூவகையாகப் பகுத்து ஆராய்வர் என்றும் கூறுகின்றது.

உரைமுடிபு :—ஞானபாதம் கழறின், பெற்றி (ஆகும்); மதியோர் மூவகை என மதிப்பர் ; (அம் மூவகையினையும்) பன்னில், (அவை) கேவலன், சகலன், சுத்தன் (என்பனவாம்).

உரை :—என்றும் திரியாத நிலைமையால் உளதாகும் பெருமையினையுடைய பொருளாகிய ஞானம் என்னும் குற்றமற்ற பாதத்தை, முறையே, விளங்கக் கூறின், அது, பசுவும், பாசமும், பதியுமாகிய மூன்றையும் ஆராயும் அறிவு நெறியாகும். அறிவுடையோர், பசுக்கள் (ஆன்மாக்கள்), மூன்றுவகையான அவத்தை யுடைமைபற்றி, அவற்றை, மூவகையாக வகுத்து ஆராய்வர் ; அவ்வகையினைக் கூறின், அவை, கேவலன், சகலன், இனிய இயல்பினையுடைய சுத்தன் என்பனவாம்.



ஒரு பொருட்கு உளதாகும் பெருமை, அதன் பண்பு, தொழில் முதலிய இயல்புகளால் விளங்கும். பெரும்பெயர்ப்பொருளாகிய செம்பொருட்குப் பிறழா நிலைமைச் சிறப்பியல்பாதலின், அதனைப் " பிறழா நிலைமைப் பெரும் பெயர் " (1) என்றார். பிறழா நிலைமையாவது தோற்றக் கேடுகளின்றியமைந்த நித்தியநிலை. இனி, பிறழா நிலைமையும், பெருமையுமுடைய பெயர் எனக் கோடலும் ஒன்று. பெரும்பெயர் ஞானப் பிறழா நிலைமைக் கறையறுபாதம் என்று அந்வயித்து, " ஞானமென்னும் பெரிய பெயரையுடைத்தாய ஒருபடித்தான குற்றமற்ற பாதம் " எனப் பழைய வுரைகாரர் கூறுவர். பெயர் என்றது பொருளையே என்க. பொருளும் தொழிலுமாய், உலகியல் இயங்குதல் கண்டு, அதனைச் சுட்டி நிற்கும் மொழியுலகையும், (சொற்பிரபஞ்சத்தையும்) ஆசிரியர் தோல்காப்பியனார், " சொல்லெனப் படுப பெயரே வினையென், றாயிரண் டென்ப அறிந்திசினோரே " என்றும் கூறினர். அதனால், " பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும், வினையிற் றோன்றும் பாலறி கிளவியும் " எனவரும் கிளவியாக்கச் சூத்திரத்துக்கு ஆசிரியர் சேனாவரையர், " பெயரென்றது பொருளை " யென்று கூறினர் ; ஆசிரியர் நச்சினார்க்கினியரும், "பெரும்பெயர் முருக" (முருகு. 269) என்ற விடத்தில், " பொருள் " என்றே பொருள் கூறினர். இனி, " பெரும்பெயர்ப் பிரமனென்

னும் பீடினுற் பெரிய நீரான்" (சீவக - 207) என்புழிப் போலப் பெயர் என்றதற்குப் புகழ் எனப் பொருள்கொண்டு, ஈண்டு அது பிறழா நிலைமையால் உளதாகிய புகழ் என்று கூறினும் ஒக்கும்.

"ஞானபாதம்" என்னாது, "ஞானக் கறையறு பாதம்" (2) என்றதனால், ஏனைச் சரியை, கிரியை, யோகம் என்ற மூன்று பாதங்களும் அபர முத்தியாகிய பத முத்தியே பயப்பனவாய், ஞான பாதம் பயக்கும் பரமுத்தி எய்துவிக்கும் ஏற்றமில்லனவாய் நிற்கின்றன என்பது பெற்றும். பிறண்டும், சரியை முதலிய மூன்று பாதங்களையும் புறவங்கம் என்றும், ஞானபாதத்தை அந்தரங்கம் என்றும் வகுத்து, அவற்றுள், "ஆடியல் அந்தரங்கம் புறவங்கத்தின் மைந்தமல் பெய்தும்" (75 : 14-16) என்றும் இந்நூலாசிரியர் கூறுகின்றார். சரியை முதலிய மூன்றும் அபரமாகிய பதமுத்தியே நல்குவனவாம் என்பதை, "மேதக்கோர், செய்யும் சரியை திகழ்கிரியை யோகத்தால், எய்தும்சீர் முத்தி பதம்" (போற்றி: 77-9) என்ற உமாபதி சிவனார் திருவாக்கு வலியுறுத்தும்.

இனி, சரியை முதலிய அம்மூன்றும் ஞானப் பேற்றுக்கு ஏதுவாகலின், அம்முறைமை தோன்றத் தடைவிடைகளால் இதனை விளக்கவேண்டியிருத்தலின், "முறையுறக் கழறின்" (2) என்றார். கழறுதல், அன்பால் இடித்துரைத்தல். பரமுத்தியை நோக்கப் பதமுத்தி அபரமுத்தியே என்பதைக் கட்டுரைத்துத் தெருளுவிக்குமாறு தோன்ற, "கழறின்" என்றார்.

எண்ணொடு, பசுவிற்கும் பதிக்கும் கூட்டப்பட்டது. பசு, ஆன்மா. ஆன்மாக்கள் அநாதியே பாசபந்தமுடையவாகலின், அவ்வுடைமைப் பொருண்மை தோன்றப் பசு என்றே ஆன்றோர் கூறியிருக்கின்றனர். பசுவென்பது வட



சொற் சிதைவு. பச்-பந்தித்தல்; உ, செயப்படு பொருண்மை விகுதி. இவற்றைப் பந்தித்து நிற்கும் கருவி பாசம் எனப்படும். பச் - சந்தித்தல் ; அ, கருவிப் பொருண்மை விகுதி. பசுபாசத்தால் நிகழும் வினைப் பயனை, அப்பசு நுகருமாறு கூட்டுவிக்கும் முதல்வன் "பதி" எனப் பெரியோரால் வழங்கப்படுவன். ஆய் பெற்றி, வினைத்தொகை. பெற்றி பெறுதற்குரிய முறை; ஈண்டு இஃது அறிவின் மேல் நின்றது.

மதியோர், பரஞானிகள் ; "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க, வருஞானம் பல ஞானம், அஞ்ஞான விகற்பம்" (சிவ - சித்தி - சூ. 11:2.) என்பவாகலின் "பரமுத்திக்குரிய பரம்பொருள் நெறியினை யாராயும் மதி, பரஞானமாயிற்று. ஆகவே, அதனையுடையோர் செயலும் பரஞானச் செயலேயாகலின், அம்முறையே நிலவ "மதிப்பர்" (4) என்றார். பசு என்றதனால் தொகையும் "மூவகை" யென்றதனால் வகையும் காட்டி, அவ்வகையினை விரிக்கத் தொடங்குகின்றாராகலின், "பன்னில்" (5) என்கின்றார். தொகுத்தும், வகுத்தும், விரித்தும் கூறுவது நூற்புணர்ப்பு முறை.

வீடுபேற்றுக்குரிய நெறி நிற்கும் உயிர்களை உயர்திணை ஆண்பாலாகக் கூறுவது நூன்மரபாகலின், கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூவகைக் காரணவத்தை வழிநிற்கும் ஆன்மாவை, "கேவலன், சகலன், சுத்தன்" (5-6) என்றார். ஏனை வருமிடங்களிலும் இதுவே கூறிக் கொள்க. உயிர் எய்தும் இவ்வவத்தை நெறியினை அருணந்திசிவனார்.

"கேவல சகல சுத்தம் என்றமூன் றவத்தை ஆன்மா
மேவுவன் : **கேவலம்** தன்னுண்மை ; மெய்பொறிக ளெல்லாம்

காவலன் கொடுத்த போது சகலனும்; மலங்க ளெல்லாம்
ஓவினபோது சுத்தம் உடையன் உற்பவம் துடைத்தே ''

—சிவ - சித்தி - 4 : 37.

என்றனர். இதன்கண், "கேவலம் தன்னுண்மை" யென்று சுட்டியதனை, கொற்றவன்குடி உமாபதிசிவனார்,

" ஈங்குவரும் கலாதியொடு குறியுருவ மொன்றும்
இன்றிமல மன்றியொன்று மில்லையெனு மியல்பாய்
ஆங்கறிவை அறிவரிதா அறிகருவி அணையா,
ஆதலினால் இருள்மருவு மலர்விழி போலதுவாய்
நீங்கும் வகையின்றி நித்த வியாபகமாய் அங்கண்,
நிற்பது கேவலமென்று நிகழ்த்தும் நூலே''

—சிவப் - 2 : 15.

இவ்வாறு, கேவலம் சகலம் என்ற இரண்டிலும் மலத்தோடு இயைந்து நிற்கும் ஆன்மா, சுத்தத்தில் நின்மலனாய், பின்பும் மலத்தோடு கூடுதலிலனாய், தூய சிவாநுபூதிப் பேரின்பனாய் நிற்றல்பற்றி அவ்வான்மாவை, " இன்னியல் சுத்தன் '' (5-6) என்று விசேடித்தார் என அறிக.

இதுகாறும் கூறியவாற்றால், சரியை முதலிய நால் வகைப் பாதங்களுள், ஞானபாதம் பரமுத்தியும், ஏனை மூன்றும் பதமுத்தியும் பயக்கும் என்பதும், அவற்றுள் பரமுத்தி சிறந்தமையின், அதற்குரிய ஞானபாதம், பசு, பாசம், பதி யென்ற முப்பொருளையும் ஆராயும் அறிவு நெறியாம் என்பதும், அவற்றுள் நிறுத்த முறையால், பசு காரணவத்தைக்கண் கேவலன், சகலன், சுத்தன் என மூன்று இயல்பு உடையனும் என்பதும் கூறியவாறும்.*

*இன்றியமையாது இயைபவை யெல்லாம் ஒன்ற உரைக்கும் உரை விரிவு குறித்து இத்தொகுப்புரை மறுவலும் ஆங்காங்குக் கூறப்பெறும். அதனால், கருத்துரையினும் இது சிறிது விரிவுடைத்தாகும்.



## இரண்டாந் தொடர் (6—10)

6 ......கேவலற் சொற்றிடின், நித்தன்,
மெய்த்தகு குணமிலி, வியாபி, மொய்த்து
மலனனி புணர மறைவோன் இலன்எனைச்
செய்தியும், அறியோன், மையில் அமூர்த்தன்,
10 வலியிலன், அசேதனன், ஒளியிலி, இறையலன்.

இது, கேவலாவத்தைக்கண் நின்ற ஆன்மாவின் இயல்பு கூறுகின்றது.

உரைமுடிபு :—கேவலனைச் சொற்றிடின், அவ்வான்மா நித்தன் என்பது முதலாக இறையலன் என்பது ஈறாகக் கூறிய இயல்புகளை யுடையன் என்பதாம்.

உரை :—ஆன்மா கேவலாவத்தை யுடையனாய் நிற்கும் நிலையினைக் கூறின், அவ்வான்மா, அநித்தியப் பொருளாகான்; உடம்புடன் தக்கிருக்கின்ற அராகாதி குணம் இல்லாதவன் ; எங்கும் வியாபித்து நிற்பவன் ; ஆணவமலம் சூழ்ந்து மிகவும் நெருங்கி மறைப்பதனால், தன்னை யறியாது அம்மலத்துள்ளே மறைபவன் ; சுதந்தரம் இல்லாதவன் ஆகலின், தனக்கென எச்செய்கையும் இல்லாதவன் ; நிறைந்த அறிவில்லாதவன் ; குற்றமில்லாத அருவமாயிருப்பவன் ; வலியில்லாதவன் ; இச்சையில்லாமையால் அசேதனம் போல்பவன் ; ஒளியில்லாதவன் ; எவர்க்கும் எதற்கும் கருத்தனுமல்லன்.

அராகாதி குணம் என்றது புத்தி குணம் எட்டுமாம். அவை : தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதருமம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் என்பனவாம். மெய்த்தகு குணம் என விசேடித்ததனால், ஏனைப் போக்கியகாண்டக் கருவிகளும் கொள்ளப்படும். மேற்கூறிய குணமெட்டனுள், முன்னர்க் கூறிய நான்கும் சத்துவக் குணத்தாலும், அவைராக்கியம் இராசதக் குணத்தாலும்,

ஒழிந்த மூன்றும் தாமதக் குணத்தாலும் நிகழ்வன என வகுத்து, குணமிலி என்றற்கு சத்துவ முதலிய முக்குணமும் இல்லாதவன் என்று பழையவுரை கூறும். மலத்தோடு பிரிவின்றி அதனால் மறைக்கப்பட்டிருத்தலால், "மோய்த்து, மலம் நனி புணர மறைவோன்" (௮) என்றார். இதுபற்றியே மெய்கண்டதேவரும், "இவ்வான்மாச் சகசமலத்தினால் உணர்வின்று" (சிவ. போ. சூ. 4 : அதி. ௨) என்று அருளினர். வினைச் செய்தியும் இலன் என மாறுக. இலன் எனச் செய்தியும் என்ற பாடம் பொருட்பேறின்று. அறியோன் என்பது அறியான் என்பதன் செய்யுள் முடிபு. இஃது ஈண்டு அறிவிலன் என அறிவினது இன்மை தோன்ற நின்றது. மூர்த்தனாகியவழி, அதற்கேற்ப வரும் குணஞ் செயல்களாற் குற்றம் எய்துதலின், "மையில் அமூர்த்தன்" (9) என்றார். மூர்த்தம், உருவம், வலியுளனாகியவழி, போகத்திற் கொள்கையுடையனாய், மலமறைப்பிலனாய், ஆன்மா தன்வயத்தனும் என்பது எய்துமாகலின் "வலியிலன்" (10) என்றும், கருவி கரணங்களைக் கூடாத முன்னெல்லாம் அசேதனம் போன்று கிடத்தலின், "அசேதனன்" (10) என்றும், மலத்தால் மறைக்கப்படுவது குறித்து, "ஒளியிலன்" (10) என்றும், இக்கூறிய இன்மைகளை மாற்றி, தான் வேண்டியதனை வேண்டியவாறு செய்து கோடற்குரிய முதன்மை இலனாகலின், அதனை யாப்புறுப்பார், "இறையலன்" (10) என்றுங் கூறினார்.

இக்கூறியவற்றையே அருணந்தி சிவனார், "ஆன்மா, கேவலத்தில், அறிவிலன்; அமூர்த்தன்; நித்தன்; அராகாதி குணங்களோடும் செறிதல் இலன்; கலாதியோடும் சேர்தல் இலன்; செயல்கள் இல்லான்; குறியிலன்; கருத்தா அல்லன்; போகத்திற் கொள்கை இல்லான்; மலத்தினோடும் பிறிவு இலன்" என்றனர். இவற்றை எங்கள் சிவஞான



முனிவர், மூர்த்தமின்மை, கலாதியோடு சேர்வு இன்மை; அராகாதி குணங்களோடு செறிவின்மை, குறியின்மை, அறிவின்மை, செயல்கள் இன்மை, கருத்தாவன்மை, போகத்திற் கொள்கையின்மை, நித்தியமுடைமை, வியாபகமுடைமை, மலத்தோடு பிறிவின்மை என முறைப்படுத்துவர். அவர் கூறியனவும் ஈண்டைக்கு ஏற்புடையவாகலின், அவற்றையும் கூறுதும்:

"ஈண்டு அமூர்த்தம் என்றது உடம்பின் பிராகபாவத்தை; நித்தமென்றது தோற்றக் கேடுகளின் பிராகபாவத்தை; வியாபகமென்றது ஏகதேசத்தின் பிராகபாவத்தை."

இதுகாறுங் கூறியவாற்றால், ஆன்மா கேவலத்தை எய்திய வழிப்படும் மூர்த்தமின்மை முதலாக மலத்தோடு பிறிவின்மை ஈறாகக் கூறிய இயல்களை எய்திநிற்குமாறு உணர்த்தியவாறும்.

### மூன்றந் தொடர் (11—21)

மாயா வுதரம் மரீஇத் தோயாப்
போகம் நினைந்த சகலற்கு எய்திய
மூரண்மிகு கூற்றை மூரித்த அரன(து)
அருங்கலை அமர விரிந்(து) இருஞ் சேதனம்
அடையா விச்சை அடையத், தடையில்
விடயப் பகுதி விரவிப் புடையே
பொங்கி அராகம் புணரத் தங்கா(து)
ஆசை எங்கணும் மாசற நியமா
எற்பிர தானம் ஒற்கமில் குணத்தொடு
புத்தி முதலிய தொத்(து) இனி(து) உறழப்
பிணித்தலின் பிணிப்பினன் பசு.

இஃது ஆன்மா சகலாவத்தையுடையனாய் நிற்குமுறையைக் கூறுகின்றது.

உரை முடிபு:—உதரம் மரீஇ, போகம் நினைந்த சகலற்கு, (அச்சகலம்) எய்திய, கலை அமர, இருஞ்சேதனம் விரிந்து, விச்சை அடைய, விடயப்பகுதி விரவி, பொங்கி, அராகம் புணரத்தங்காது, ஆசை யெங்கணும் நிமிர, பிரதானத்தினின்றும் (தோன்றிய) குணத்தொடு, புத்தி முதலிய தொத்து, உறழப் பிணித்தலின், பசுபிணிப்பினன் ஆகும் என்பதாம்.

உரை:—மாயாகாரியமான உடலைப் பொருந்தி, குறையாத போகங்களை நுகர்வதற்கு நினைந்து சகலாவத்தைக்கண் நின்ற ஆன்மாவை, அவ்வவத்தை வந்து எய்துமாறு, வலிமிக்க கூற்றுவனைக் கடிந்த பாசிவத்தால், அரிய கலாதத்துவம் தோன்றிப் பொருந்துதலின், ஆன்மா அறிவு விரிந்து, அடைவதற்கரிய வித்தியாதத்துவத்தை அடைவதனால், தடையில்லாத விடயங்கள் ஐந்தினும் கலந்து, அவற்றின் ஞானமே சிறந்து, அராகதத்துவம் கூடுதலால், அந்நிலையில் நில்லாது, எவ்விடத்தும் ஆசையானது குற்றமற எழுந்து நிலவ, ஒளி பொருந்திய பிரகிருதியிலிருந்து தோன்றிய, ஒடுங்குதல் இல்லாத, குணத்தோடு, புத்தி முதலிய தத்துவத்தொகுதிகள், மிக்குச் செறிந்து பிணிப்பதனால், ஆன்மா பிணிப்புண்டு பசுவாயினன்.

எனவே, கேவலத்தில் தன்னுண்மையாய் நின்ற ஆன்மா சகலத்தில் மாயாகாரியமாகிய உடலோடு பொருந்தி, குறையாத போகங்களை நுகர்தற்குரியனாகின்றான் என்றும், அவ்வாறு ஆகுமிடத்து, கலாதத்துவம் பொருந்துவதால் தனது பெரிய ஆன்மவறிவும், வித்தியாதத்துவத்தால் விடயவறிவும், அராக தத்துவத்தால் ஆசைப்பெருக்கும் முறையே பெறுவன் என்றும், அதனால் குணதத்துவமும் புத்திதத்துவத் தொகுதியும் மிக்கு அவனைப் பிணிக்கின்றன என்றும், அவனும்பிணிப்புண்டு பசுவாகின்றான் என்றும்கூறியவாறும்.



மாயையைப் பெண்ணென வுருவகம் செய்பவாகலின், அதன் காரியமாகிய உடலை "மாயாவுதரம்" (11) என்றும், உடலும் கருவியுமில்வழிப் போகநுகர்ச்சி கூடாமையின், மரீஇத்தேயாப் போகம் நினைந்த சகலற்கு" (11-12) என்றும் கூறினர். உதரம், வயிறு, ஈண்டு ஆகுபெயராய், உடலையுணர்த்திற்று. பிறுண்டும், "மாயாவுதரம் மரீஇயோன்" (ஞா. 10:3) என்பர். நினைந்த என்னும் காரணப் பொருட்டாய பெயரெச்சம், சகலன் என்னும் வினைப்பெயர் கொண்டது. எய்திய என்பது செய்யியவென்னும் வினையெச்சம். கேவலன், சகலனாதற்கண் எய்திய கலை எனக்கொண்டு பெயரெச்சமாக்கினும் அமையும்.

தான் குறித்த உயிரைத் தப்பாமற் கொண்டு செல்லும் வலி மிகுதியுடைமையின், கூற்றுவனை, "முரண்மிகுகூற்றை" (13) யென்றும், அதன் வன்மையினை முரித்தல், வரம்பிலாற்றலையுடைய பாசிவத்துக் கல்லது இன்மை தோன்ற, "முரித்த அரனது" (13) என்றும் கூறினார். சகசமலத்தால் மறைப்புண்டு, தன்னறிவு விரியாது ஆன்மாவுக்கு, அது விரியுமாறு, கலாதத்துவத்தைப் பொருந்துவிக்கும் அவனது முதன்மை தோன்ற, "அரனது அருங்கலை யமர" (14) என்றார். இத்தொடர்மொழிப் பொருள் சிதையாமல், அரனால் அருங்கலை அமர என்னும் தொடர்மொழிப் பொருளோடு சென்று மயங்குதலின், மூன்றுவதன்கண் ஆறுவது மயங்கிற்றெனக் கொள்க. இஃது "வினையுருபும் அன்னமரபின மானமிலவே சொன்முறையான" (தொல். சொல். சேனா. 111) என்பதனாலமையும். கலை, கலாதத்துவம். அஃதாவது, "மூலமலத்தில் மறைப்புண்டு சூனியம் போன்ற ஆன்மாக்களுக்குப் போக நுகர்ச்சியின் பொருட்டு மலசத்தியிற் சிறிதே நீக்கி, ஆன்மாக்களுக்குக் கிரியா சத்தியை விளக்குவது. கலித்தல் செலுத்துதலும் நீக்குதலுமாகலின், மலத்தை

நீக்குதலால் கலையெனப் பெயராயிற்று. மலம் வியாபகமாகலின், அதனை நீக்குதலாவது நெருப்பினது சுடுதற் சத்தியை நிகழவொட்டாது தடுக்கும் குளிகைபோல மலத்தினது மறைத்தற் சத்தியை ஆன்மாவின் கிரியா சத்தியின்கண் நிகழவொட்டாது தடுத்து நிற்றலாம். சிறிதே நீக்குதலாவது, வினைக்கீடாகப் புத்திதத்துவத்தின் வியாபாரத்திற்கு யாது யாது விடயமாம், அவ்வவ்விடயத்தில் நிகழும் மறைத்தற் சத்தி மாத்திரையே நீக்குதல் எனக் கொள்க'' என்பது மாபாடியப் பெருமொழி. அனாதியே ஆன்மாவை ஞான திரோதகமாய் மறைத்து நிற்கும் மூலமலத்தின் மறைத்தற் சத்தியையும் நீக்கி விளக்கும் அருமை தோன்ற, ''அருங்கலை'' (14) என்றார்.

இவ்வாறு கலாதத்துவத்தால், மலமறைப்புச்சிறிதே நீங்கி, ஆன்மா, கிரியாசத்தி தன்கண் விளங்க, கிரியைக்குரிய சிற்சத்தியானது, கருமுகிலால் மறைப்புண்டிருந்த ஞாயிற்றினொளி, அம்முகிலின் மறைப்புச்சிறிது நீங்கிய மாத்திரத்தே விரிந்து தோன்றுவது போல, மலமறைப்புச் சிறிது நீங்கிய மாத்திரத்தே விரிந்து விளங்குமாறு தோன்ற, '' இருஞ்சேதனம் விரிந்து '' (14) என்றார். சேதனம், ஈண்டு கிரியைக்குரிய ஆன்ம சிற்சத்தி.

கிரியைக்குரிய ஆன்மசிற்சத்தி தோன்றி வினைமுதலாதலையெய்தி நின்ற ஆன்மாவுக்கு, ஞானசத்தியை விளக்கி விடயத்தை யறியும் அறிவுக்குக் கருவியாகிய வித்தியாதத்துவத்தை அடைவித்தல், கலையால் விரியும் ''இருஞ்சேதன''த்தின் பயனாகலின், ''அடையாவிச்சை யடைய'' (15) என்றார். விச்சையென்றது வித்தியா தத்துவத்தை. ஆன்மாவின் ஞான சத்தியை எழுப்பிச் கிரியைவழி எய்தும் போக நுகர்ச்சிக்கட் செலுத்தும் அடைவினால், '' அடையாவிச்சை '' யென்று கூறப்பட்டது. கலை யெழுங்காறும் எழாதிருந்து, அஃது



தெழுந்து கிரியைக்கண் ஆன்மாவைச் செலுத்தியவழி, வந்து அடையும் என வித்தியா தத்துவத்தின் அடைவு காட்டுவார் ''அடையா விச்சை அடைய'' என்றார். இவ்வாறு கலையாலும், வித்தையாலும் கிரியாசத்தியும், ஞானசத்தியும் தோன்றுதலால், விடயங்களை யறியும் அறிவு சிறத்தலின், ''விடயப்பகுதி விரவிப் புடையே பொங்கி'' (16-17) என்றார். விடயப்பகுதி என்றது ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற ஐந்து. இவை முறையே சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் எனப்படும். ஆன்மாவின் ஞானசத்தி ஓசை முதலிய விடயப்பகுதியில் விரவித் தொழிற்படுமிடத்து, விடயஞானம் மிக்குவருதலால், அதன் வரவினை, ''புடையே பொங்கி'' எனக் குறித்தார். இயற்கையேயுள்ள ஆன்ம சிற்சத்தியை நோக்க, விடயஞானம் இடையே தோன்றும் செயற்கையாதலின், அதன் வளர்ச்சி ''புடையே பொங்''குதல் எனப்படுகின்றது. படவே, கலையால் கிரியையும், வித்தையால் ஞானமும் விளங்கப்பெற்ற ஆன்மா, விடயங்களில் விரவி விடயஞானம் பெறுதல் கூறியவாறாயிற்று.

விடயஞானம் பெறுதற்குச் சமைந்த ஆன்மா, விடயங்களை நுகரவேண்டி, இச்சா சத்தியினை இன்றியமையானாகின்றான். அதனை எழுப்புதற்குரிய தத்துவம் அராக தத்துவமாகலின், அஃது எழுந்து ஆன்மாவை அடைவது கூறுவார், ''அராகம் புணர'' (17) என்றார். அராக தத்துவம் அவைராக்கியம் எனப்படும் ஆசை நிகழ்தற்கு ஏதுவாய் நிற்பது. அது தோன்றியதும் ஆசை உண்டாவதற்கு இடையீடு இன்மையின், ''தங்காது ஆசை யெங்கணும் மாசற நிமிர''(18) என்றார். வெறுப்பு எனப்படும் வைராக்கியத்துக்கு மறுதலையாய் எழுவது குறித்து, '' மாசற நிமிர '' என்றார் போலும். இனி, மாசற என்பதை ஆசு அற எனக்கொண்டு, பற்றுக்கோடின்றி யாண்டும் வரம்பிறந்து பரவ என உரைப்

பினுமாம், "ஆசைக்கோர் அளவில்லை" என அறிந்தோர் கூறும் அறிவுரை காண்க. நிமிர என்றார், அஃது இடையறவின்றி மேலும் மேலும் உயர்வது குறித்து; மெய், வாய் முதலிய பொறி வாயிலாக விடயஞானம் பெறுகுவதனை, "பொங்கி" (17) என்ற சொற்குறிப்பால் எய்துவித்தது நோக்குவார்க்கு, "நிமிர" என்னும் சொற்குறிப்பு இறும்பூது பயக்கும்.

அவ்வியத்தமாய் நின்ற மூலப்பகுதி குண தத்துவம் தோன்றுமிடத்து வியத்தமாய் விளங்குதலால், அதனை "எற்பிரதானம்" (19) என்றார். எல், விளக்கம், பிரதானம், மூலப்பகுதி. இது, போக்கிய வடிவாய் நின்ற தத்துவ பிரபஞ்சங்களுக்கெல்லாம் மூலகாரணமாகலின், "பிரதானம்" எனப்பட்டது. குணம் மூன்றும் ஒன்றற்கொன்று மிக்கும், குறைந்தும், சமமாயும் நிற்றலன்றி, ஒன்றனுள் ஒன்று ஒடுங்கிநிற்றல் இன்மையால், "ஒற்கமில் குணத்தொடு" (19) என்றார். "புத்தி முதலிய தொத்து" (20) என்றது புத்தி தத்துவம் முதல் மண் ஈறாகக் கூறிய தத்துவம் இருபத்து நான்கும் என்க. அவை, கரணம் நான்கு, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, பூதம் ஐந்து ஆக இருபத்துநான்காம். அந்தக் கரணங்களுள் ஒன்றாகிய சித்தத்தை மனத்துள் அடக்கி, குண தத்துவத்தை ஒன்றாக்கி, இருபத்துநான்கு என்பாரும் உளர். ஆயினும் "ஒற்கமில் குணத்தொடு" எனக் குண தத்துவத்தைப் பிரித்துவிட்டமையின், கரணம் நான்கெனக் கொண்டு விரித்தலே ஈண்டு ஆசிரியர் கருத்தாம். பசு என்னும் சொற்பொருளும் பிணிப்பினன் என்பதேயாகலின், "பிணிப்பினன் பசு" (21) என்றது சொற்பொருள் விரித்தல்.



## நான்காந் தொடை (21—31)

..............மற்(று) இணைத்த
நியதி முன்னர் இயல் இருவினையின்
பிறழா(து) உறழப் பின்னர்க் குறையாக்
காலம் காலம் தளவைப் பாலிற்
காட்டத் தொழிலொடு போகத்(து) ஆட்டுண்டு
இரியாத் தத்துவ கலையினில் இவ்வணம்
பரியாப் பந்தம் பந்தித்(து) ஒருவழி
அறிவு சிறிதமர்ந்(து) ஆகமாய
பிரியா மோகினிப் பெரும் போகத்தைத
தான்என எண்ணி ஆறு முன்வினைப்
பயன்பல மாந்தி வியந்துறை காலை.

இதுவும் அது.

உரைமுடிபு:—மற்று, (பரமன்) இணைத்த நியதி, வினையின், பிறழாது உறழ, பின்னர், காலம், காலத்தளவை காட்ட, தொழிலொடு போகத்து ஆட்டுண்டு, கலையினில், இவ்வணம் பந்தம் பந்தித்து, ஒருவழி, அறிவு அமர்ந்து, மோகினி, ஆகமாய போகத்தை, தானென எண்ணி, முன்வினைப்பயன்மாந்தி, வியந்துறை காலை என்பது.

உரை:—இனி, பரமன் வகுத்த நியதிதத்துவம் முன்னர்ச் செய்யப்பட்ட இருவினையின் பயனைத் தவறாமல் நியமித்துக்கொடுப்ப, பின்பு, குறையாத கால தத்துவம் அப்போக நுகர்ச்சிக்குரிய காலவெல்லையை முறையே வரையறுத்துக் காட்ட, போக போக்கியத்தின் பொருட்டு உண்டாகும் முயற்சி நுகர்ச்சிகளால், ஆன்மா அலைப்புண்டு, நீங்காத தத்துவங்களால் இவ்வாறு நீக்குதற்கரிய கட்டுக்களால் பிணிப்புற்று, ஒருவழித்தான காணவறிவு சிறிதுகூடி, எங்கும் பிரிப்பின்றி வியாபித்து நிற்கும் மாயையினுடைய காரியமாகிய மிக்க போகத்தை நுகர்தற்கு ஏதுவாக வந்த தேகத்

தையே தானென்று கருதிக்கொண்டு, அளவில்லாத பண்டை வினைப் பயன்களை நுகர்ந்து மகிழ்ந்து வாழ்வன் என்றவாறு.

இருவினைக்குமுரிய இருவகைப் பயனும், தம்மைச் செய்தவினை முதலைத் தாமே சென்று கூடும் சேதனங்கள் அல்லவாகலின், அவற்றைச் சேர்ப்பிக்கும் முதல்வனாகிய பரமன் என்பது வருவிக்கப்பட்டது. வினைமுதலைத் தொழிற் பயனை உறுமாறு வகுக்கப்படும் நியமமுடைமையின், "இணைத்த நியதி" (21-2) என்றார். நியதிதத்துவமாவது: "கலை முதலிய மூன்றானும் தொழில், அறிவு, இச்சை விளங்கிப் போக நுகர்ச்சிக்கட் செல்லும் ஆன்மாக்கள் உயர்ந்த போகத்தில் விழைவும், இழிந்த போகத்தில் வெறுப்பும் உடையரன்றே; அதனால், பிறரால் ஈட்டப்படும் நல்வினைப் பயனைக் கவரவும், தம்மால் ஈட்டப்படும் தீவினைப் பயனை நீக்கவும் எண்ணுதல் உடைமையின், அங்ஙனம் ஆகவொட்டாது, அவரவரான் ஈட்டப்படும் வினையின் பயனை அவரவரே நுகருமாறு அரசாணைபோல நியமித்து நிறுத்துவது நியதிதத்துவம் என்க" என்பது மாபாடியத் திருமொழி. ஒருவினையின் பயன், அதனைச் செய்த வினை முதலைச் சாருவதன்றி, பிறர்க்காதல் கூடாதாயினும், சார்தற்குரிய இயைபுடைய பிறரைச் சார்தலும் உண்டு. புதல்வர் செய்யும் பிதிர்க்கடன் தந்தையைச் சார்தலும், தந்தை செய்தது மகனையும், குடிகள் செய்தது அரசனையும், அரசன் செய்தது குடிகளையும் சார்தலும் உண்டென அறிஞர் கூறுப. ஆகவே, யாதானுமோர் இயைபும் இன்றி, ஒருவர் செய்த வினைப்பயன் பிறரை யடைதல் இல்லையாகலின், "பிறழாது உறழ" (23) என்றார்.

இனி, காலதத்துவமாவது: "கலை, வித்தை, அராகங்களால் தொழிலும், அறிவும், இச்சையும் விளங்கும்போது நுகர்ச்சிக்கட் சென்ற ஆன்மாக்களுக்குக் கணம், இலவம், துடி என்றற்றொடக்கத்தால் பலவேறு வகைப்பட்டுப் போக வரையறைப்படுத்துவது," என்பது மாபாடியம். கலை, வித்தை முதலிய தத்துவங்கள் தோன்றுதற்கண் ஏதுவாம் இயைபுடைமையின், காலத்தைக் "குறையாக்காலம்" (23-4) என விசேடித்தார். போக நுகர்ச்சியின் அளவுக்குத் தக்கவாறு விரிந்தும் சுருங்கியும் வரையறைப்படுதலின், வரையறைக்குரிய பான்மையினை "பாலிற்காட்ட" (24-5) என்றார்.

இவ்வாறு கலை முதலிய ஐவகைத் தத்துவமும் ஆன்மாவுக்கு உபகாரமாய்த் தொழிலும் போகமும் இச்சையும் பயந்து இடையறாது இயக்குதலால் இயங்கும் ஆன்மாவின் செய்கையினை, "தொழிலோடு போகத்து ஆட்டேண்டு" (25) எனச் சிறப்பித்தார். தொழிலும் போகமும் கூறவே, இச்சை கூறாமே எய்துதலால், சொற் சுருங்குதல் கருதி அதனைக் கூறிற்றிலர் போலும். தொழிலும் போகமும் ஏதுவும் பயனுமாய் ஆன்மாவை அலைத்தலால், அதற்கேதுவாகும் தத்துவமும் ஓய்வின்றி ஆன்மாவை நீங்காது தொழிற்படுத்துதல் தோன்ற, "இரியாத்தத்துவகலையினில்" (26) என்றும், இவ்வாற்றால் ஆன்மா செய்வன எதிர்வின்கண் நிகழ்வனவற்றிற்கு ஏதுவாய், அதனைப் பிரிப்பின்றிப் பிணித்து நிற்றலின், அதற்கு உபகாரமாகும் இச்சையினை, "பரியாப்பந்தம்" (27) என்றும், இச்சைவயப்பட்ட ஆன்மா போகமும், அதற்குரிய தொழிலும் புரிதற்கண் சென்று அலமருதல் தோன்ற, "பந்தித்து" (27) என்றும் கூறினர். பந்தித்தல் ஈண்டுப் பிறவினைப்பொருட்டு.

இவ்வண்ணம் தொழிலும், போகமும், இச்சையும் விளங்கப்பெற்ற ஆன்மா, இவற்றால் எய்துதற்குரிய முயற்சி நுகர்ச்சிக்குரிய காணவறிவு, இத்தத்துவங்களால் சிறிது தலைக்கூடப் பெறுவது தோன்ற, "ஒருவழி அறிவு சிறிதமர்ந்து" (28) என்றார். அறிவு, ஆன்மா கருவி காணங்களைக்

கொண்டு முயற்சியும் நுகர்ச்சியும் எய்துதற்குரிய அறிவு. அறிவு பெரிதமர்ந்த வழி, இவ்வாற்றால் உண்டாகும் பந்தமும், அதன் பயனாகிய சிற்றின்பமும் தோன்றி உவர்ப்பை விளைவித்து வீடு பேற்றின்கண் வேட்கையும், அதுபற்றிய முயற்சியும் ஆன்மாவுக்குக் காட்டுமன்றே; அதனை விலக்கி, கரணவறிவின் சிறுமை காரணமாக, தானல்லாத தேக முதலியவற்றைத்தான் எனப் பிறழ வுணர்ந்து உழலும் ஆன்மாவின் இயல்பு காட்டுவார், ''அறிவு சிறிதமர்ந்து'' என்றார். பசித்துண்டு பின்னும் பசிப்பானைப்போல நோக்கிற்றையே நோக்கும் சிறுமை நோக்கம் தருதலின், அச்சிற்றறிவை, ''ஒருவழி அறிவு'' என்றார். பிரிப்பின்றி எங்கும் வியாபித்து நிற்கும் இயல்பு தோன்ற, மாயையினை "பிரியாமோகினி" (29) என்றார். போகம் பயந்து, அதனால் ஆன்மா அதனையே மோகித்துக் கிடக்கப் பண்ணும் இயல்பு குறித்து, அதனை ''மோகினி'' யென்றார். மோகினி, ஆகமாய பெரும் போகத்தைத் தானென எண்ணி என இயைக்க. தனுகரணங்கள் மாயையின் காரியமாகலின், அவற்றை ''ஆகம்'' (28) என்றும், அவற்றின் வழி எய்தப்பெறுவது குறித்துப் போகத்தை, ''ஆகமாய பெரும்போகத்தை'' (28-9) என்றார். நுகருந்தோறும் நுகருந்தோறும் போகம் கிளைத்து வருதலின், ''பெரும்போகம்'' (29) என விசேடித்தார்.

போக நுகர்ச்சிக்கண் தனுமுதலியவற்றோடு வேறற நின்று நுகரும் ஆன்மா கரணவறிவு சிறிதே யமர்ந்து கரணத்தோடு கூடி நிலவும் தேகத்தைத் தான் என வுணர்தலல்லது வேறே அறிதற்குக் கூடாமையின், "தானென எண்ணி'' (30) என்றார். அங்ஙனம் எண்ணித் தேகத்தால் நுகரப்படுவன செய்யப்பட்ட வினைப்பயனே யாகலின், " முன்வினைப் பயன்பல மாந்தி " (31) என்றும், அதனால் மகிழ்ந்து, தன்னையும் தன்னையுடைய முதல்வனையு மறியாது



மயங்குமாறு தோன்ற, " வியந்துறை காலை " (31) என்றும் கூறினார்.

இதுகாறும் கூறியவாற்றால், கேவலத்தில் தன்னுண்மையாய் நின்ற ஆன்மா, மாயாகாரியமாகிய உடலொடு பொருந்திப் போக நுகர்தற்குச் சகலாவத்தையினை யடைகின்றான் என்பதும், அக்காலை, கலாதத்துவத்தால் ஆன்மவறிவும், வித்தியா தத்துவத்தால் விடயவறிவும், அராகத்துதவத்தால் ஆசையும் பெற்று, நியதி தத்துவத்தால் நுகர்தற்குரிய போகப்பகுதியும், காலதத்துவத்தால் அப்போக நுகர்ச்சிக்குரிய காலவரையறையும் பெற்று, போக நுகர்ச்சிக்குரிய தொழிலும் அறிவும் இச்சையும் விளங்க அவற்றால் உளதாகும் கரணவறிவால், மாயாகாரியமாகிய தனுகாணாதி சட்டகத்தையே தானெனக் கருதி, பசித்துண்டு பின்னும் பசிப்பானைப்போல நுகர்ந்தொழிந்த போகத்தையே மேன்மேலும் விழைந்து பல பிறப்புக்களையும் பிறந்து அலமருவன் என்பதும் கூறியவாறும். இவற்றையே சுருங்கிய நிலையில், எம் அருணந்திசிவனார்,

" உருவினைக் கொண்டு போகபோக்கியத் துன்னல் செப்பல்
வருசெயல் மருவிச் சத்த மாதியாம் விடயம் தன்னில்
புரிவதும் செய்திங் கெல்லா யோனியிற் புக்கு ழன்று
திரிதரும் சகல மான அவத்தையிற் சீவன் சென்றே "

எனவரும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் (சூ. 4 : 39) விளக்கியருளினர்.

## ஐந்தாந்தொடர் (32—40)

வல்வினை எல்லை செல்லாக் காலத்(து)
ஒல்லென ஒப்ப உயர்பெருஞ் சிவனது
சத்திநி பாதம் தழைப்ப மெய்த்தகு
குருபரம் பான(து) அருளின் செவ்வி

5. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூரிலிருந்து சென்னைக்கு விஜயம் செய்ததை உள்ள மகிழ்ச்சியோடு பாராட்டிய நமது சமாஜத்தினர் திருமயிலாப்பூர் கபாலீச்சரத்தில் நடந்த சித்திரைத் திருவிழாவை யொட்டி ஐந்து நாட்களில் வெள்ளீச்சரத்தில் சுவாமிகளுடைய சொற்பொழிவுகளைத் தொண்டர் குழாங்கள் கேட்டின்புறுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். 18-4-37 முதல் ஐந்து நாட்கள் சுவாமிகள் முறையே திருநந்தி தேவர், சிவஞான சுவாமிகள், விடையூரும் விமலன், மஹோத்ஸவம், தேரூரும் திரிபுராந்தகன் என்னும் செம்பொருள்கள் பற்றிச் சிந்தைக்கினிய செவிக்கினிய சொற்பொழிவுகளைப் பல உபநிடத மேற்கோள்களுடனும் பன்னிரு திருமுறை பதினான்கு சாத்திர மேற்கோள்களுடனும் கூடவரும் மகளிரும் சிறுரும் அறியக்கூடிய எளிய முறையில் நிகழ்த்தினார்கள். இவற்றின் சுருக்கம் இவ் விதழிலும் தொடர்ந்து வரும் இதழ்களிலும் சிறுகச் சிறுகவாக வெளிவரும்.

6. சிவஞான சுவாமிகள் திருநாள் மிகச் சிறப்பாகத் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் கொண்டாடப் பெற்றது. நமது சமாஜத்தில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமையில் திரு. பூ. சமரபுரி முதலியாரவர்கள "சிவஞான சுவாமிகள் திருவாக்கு" என்பது பற்றி விரித்துரைத்தார்கள். தலைவரவர்கள் மிக விரிவாகச் சிவஞானசுவாமிகள் அருளிச் செய்த பல நூல்களின் பகுதிகளிலுள்ள அருமைகளையெல்லாம் விளக்கினார்கள். விக்கிரமசிங்கபுரத்தில் சுவாமிகள் திருக்கோயிலில் சிறந்த வழிபாடு நடந்த பின்னர், ஒரு மாபெருங் கூட்டத்தில் திருவாளர்கள் - ந. சிவகுருநாத பிள்ளை, கா. சுப்பிரமணிய பிள்ளை, டி. எஸ். கந்தசாமி முதலியார், ச. முத்துக்குமாரசாமி பிள்ளை முதலிய பல அன்பர்கள் சுவாமிகள் வாழ்க்கை, தவம், வாக்கு, பாடியம். முதலியன பற்றிப் பேசினார்கள். திராவிடமாபாடியச் சுவடியை ஊர்வலமாக உத்ஸவம் நடத்தியும் மகிழ்ந்தார்கள். தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம் முதலிய பல விடங்களில் இக்குருபூசை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

7. நமது சமாஜத்தோடு இணைக்கப் பெற்ற இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 33-ம் ஆண்டு விழா ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமையில் மிகச் சிறப்பாக 30-4-37 முதல் மூன்று நாட்கள் சபையின் குகாநந்த நிலையத்தில் நடைபெற்றது. திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் ஒரு சுருங்கிய சொற்பொழிவு செய்து சுவாமிகளை அன்போடு வரவேற்றார்கள். சுவாமிகள் இச்சபையின் பெயரையே பீடிகையாகக் கொண்டு பல அரிய கருத்துக்களைப் பல உபநிடத மேற்கோள்களோடு விளக்கித் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள். பிறகு முதல் நாள் ஸ்ரீமதி பண்டிதை கிருஷ்ணவேணி யம்மையார் 'காவியம்' என்பது பற்றியும். இரண்டாம் நாள் ஸ்ரீமான்கள் கே. பாலசுப்பிரமணிய ஐயரும் தை. ஆ. கனகசபாபதி முதலியாரும் முறையே "அருள்வாக்கு" "திருமுருகாற்றுப்படை" என்பன பற்றியும் விரிவுரைகள நிகழ்த்தி

வம்பறு சம்பிர தாயத்(து) அஞ்சுடர்
உற்ற காலைச் சொற்றொடர்(பு) அற்றத
தேயா(து) யாவுமாய் அறி(வு) அகன்ற
ஆயாச் சிவன(து) அணிகிளர் சீர்த்தி
நின்மலத்(து) இயையும்; பின்மலத்(து) இயையான்.

இஃது ஆன்மா சுத்தாவத்தையுடையனாய் நிற்கும் நிலைமையை உணர்த்துகின்றது.

உரைப்பாடம் :—(இங்ஙனம் ஆன்மா முன்வினைப்பயன் பல மாந்தி வியந்துறை காலை) எல்லை செல்லாக் காலத்து, ஒல்லென வல்வினை ஒப்ப, சிவனது சத்திநிபாதம் தழைப்ப, குருபரம்பரனது அருளின் செவ்வி, சம்பிரதாயத்து அஞ்சுடர் உற்றகாலை, தொடர்பற்று, தேயாது, யாவுமாய் ஆயா அறிவகன்ற சிவனது சீர்த்தி நின்மலத்து இயையும்; பின் மலத்து இயையான் என்பது.

உரை :—இங்ஙனம் ஆன்மா பூர்வ கன்மபலங்களை நுகர்ந்து மகிழ்ந்து வருமாற்றால், எல்லையின்றிக் கழியும் காலத்தால் மலபரிபாகப்பட்டு, வலிய வினைகளும் விரைபச் சமமாதலால் உயர்வும் பெருமையுமுடைய பரமசிவனது சத்திநிபாதம் உண்டாக, மெய்ம்மை தக்கிருக்கின்ற குரு பரம்பரனுடைய திருவருள் பெறுதற்குரிய பக்குவத்தில், பழமையான தீக்கையாகிய அழகிய ஒளி பொருந்துங் காலையில், சொல் வரம்பு கடந்து, குறைவின்றி எல்லாமாய், யாவற்றையும் இடல்பாகவே முற்ற வுணரும் பரமசிவனுடைய அழகுதிகழும் கீர்த்தி பொருந்திய நின்மல சிவானந்தத்தில் அழுந்துவன்; அழுந்திய ஆன்மா, பின்னர் ஆணவ மலத்தோடு கூடுவதிலன்.

(தொடரும்)

Reg. M. 2330.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.



| | | |
|---|---|---|
| மலர் ௧0 | ஈசுவர ஆண்டு ஆனித் திங்கள் 1937ஆம் ஜூன்மீ | இதழ் ௬ |



## முருகவேட்கு முடிசூட்டு விழா*

[மா. துரைசாமி முதலியார்]

ஒரு காலத்திலே தேவர்களைக் காத்தற்பொருட்டு இறைவன் இளமைத் திருக்கோலத்தைக் கொண்டனன். இவ்விளம்பூரணன் கங்கைநீர் நிரம்பிய நாணற் புல்லொடு கூடிய பொய்கையிலே ஆறு திருமுகங்களையுடைய குழந்தையாய் விளங்க, அதனைக் கண்ணுற்ற திருமால் முதலிய தேவர்கள் மலர்மாரி சொரிந்தார்கள்; கார்த்திகைப் பெண்களையழைத்து, அம்முருகநாதனுக்கு அமுதூட்டுமாறுங் கட்டளையிட்டார்கள். அவன் குழந்தையேயென நினைத்தே போலும் கண்களை இமைகள் காப்பதுபோல் அப்பரம்பொருளைக் காத்து நின்றார்கள்.

தேவர்கள், "சூரபதுமனதியருடைய பகையையொழித் தருளுமாறு நாம் இறைவனை வேண்டினோம்; அவன் ஒரு குழந்தையைத் தந்தருளினானே" என்று எண்ணினார்கள்

* இது, பெரிதும் பாம்பன்: ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகளருளிய ஸ்ரீமத்-குமாரசுவாமியம், திருப்பா ஆகிய நூல்களினின்றும் எடுத்ததாகும்.

போலும். ஆகலின், முருகனென வந்த முதல்வன், தான் இறைவனென்பதைத் தேவர்களெல்லோரும் உணருமாறே, சிறந்த திருவிளையாடல்களைச் செய்தருள வேண்டுமென்று திருவுளங்கொண்டு, அவ்வாறே செய்யத் தொடங்கினான். முதலிலே, ஆறு திருமுகங்களையுடைய ஒரு குழந்தையாய் விளங்கிய அவன், கார்த்திகை மாதர்களுடைய கைம்மலர்களில் ஆறு குழந்தைகளாகவாயினான். உடனே பலவேறு திருமேனியனெனவுந் தோன்றிப் பல திருவிளையாடல்களையுஞ் செய்தருளினான். ஒரு பிள்ளை யோக நித்திரையிலே அமர்ந்து விளங்கியது. ஒரு குழந்தை உலாவியது. ஒன்று பாம்புபோல நகர்ந்தது. ஒன்று தரையிலே தவழ்ந்தது. ஒன்று ஓடியது. ஒன்று தாயின் கையைப் பிடித்துக்கொண்டு சென்றது. ஒன்று ஓய்வின்றி எழுந்தும் விழுந்தும் விளையாடிற்று. இரண்டு குழந்தைகள் பெருமிதத்தோடு குற்றமற்ற சண்டைகளைச் செய்தன. பல குழந்தைகள் ஆகாய வெளிகளிலே தாவி விளையாடி மீட்டும் பூமியை யடைந்தன. வாக்குமனங் கடந்த பரம்பொருளின் திருவிளையாடல்களின் வகையெல்லாஞ் சொல்லால் அளவிடப்படுமோ ?

பின்னர், உமையம்மையார் கயிலையினின்றும் எழுந்தருளி வந்து இளம்பூரணனுடைய ஆடல்களைக் கண்டு மகிழ்ந்து, தன்னுடைய திருக்கரங்களால் அக்குழந்தைகளை ஒருசேர அணைத்தனள். அவை அவ்வாறே திரண்டு அறுமுகமுடைய ஒரு திருமேனியனென அமைந்து, அம்மையாரூட்டிய அமுதத்தையுமுண்டது. பின்னர், இளம்பெருமான் பார்வதி பரமேச்சுரரோடு திருக்கைலாயமலையை யடைந்து புரிந்த திருவிளையாடல்களோ எண்ணில. அத்திருவிளையாடல்களில், அக்குழந்தையானது சூரியனுடைய குதிரையின் மீதேறியது ; சந்திரனது தேரிலேறிச் சென்றது ; இந்திரன் முதலான தேவர்களுடைய யானைகளின் மிசை அழகு பொருந்த அமர்ந்து நடத்தியது. இன்னும் புலி, சிங்கம் முதலியவற்றின் மீதும் ஏறி யெங்கு முலாவியது. இறைவன், இப்பிள்ளைத் திருக்கோலத்தை விடுத்துத் தேவ



லோகத்தைச் செம்மைப்படுத்துந் திருவுளத்தோடு ஒரு கிழவனாயும் அங்குலாவினான். அன்றியும் விலங்குகளும் பறவைகளும் தம்மை மறக்கும்படியாகக் காட்டி னடுவே சென்று ஒரு வீணை யுண்டுபண்ணி அதனை வாசித்தான். இன்னும், தனது தாளினால் ஏழு கடல்களையும் உடைத்துப் பெருக்கெடுக்க விட்டான். வானளாவிய சத்த குலகிரிகளையும் தகர்த்து விட்டான். திக்கு யானைகள் யாவற்றையும் பந்தென மகிழ்ச்சியோடு விண்ணிலெறிந்து விளையாடினான். இவ்வாடல்களாற் சிதைவுற்றவைகளையும் முன்போலவேயாக்கித் தான் துன்பமணுவுமில்லாத தூயன் எனவுங்காட்டினான். இத்திறத் திருவிளையாடல்களை வேறு எத்தேவர் செய்ய வல்லுநர் ? எவருஞ் செய்ததாகவுள்ள வரலாறும் இதுகாறுமின்றே.

பின்னர், பெருமான் மேருமலைக் கெழுந்தருளி, அதன் வலிய சிகரங்களைப் பெயர்த்தெடுத்துத் திசை யெங்கும் வீசி விளையாடினான். அதனைத் தடுக்கும் பொருட்டுத் திசைக் காவலர் சூழ அங்கு வந்த தேவேந்திரன் தனது வச்சிராயுதத்தை எறிந்தான். அது வெந்து சாம்பராகியது. அது கண்ட இந்திரன், ‘இவனொரு பெரியோனே’ என்று மிகவும் மனம் நொந்தான். அப்போது ஆண்டவன் அம்மேருச் சிகரங்கள் கிடுகிடென நடுங்கும்படியாக அசைத்தான். ஐராவதமென்னும் தேவயானையும் ஐயன்விட்ட பாணமொன்றினால் மடிந்து விழுந்த பின்பு, முருகன் நான்கு அம்புகளை ஏவ, இந்திரன் தன்னுடைய முடி, கொடி, கவச மென்பவைகளை இழந்து உணர்வையு மிழந்து நிலத்தில் விழுந்தான். இவ்வாறே இயமன், அக்கினி, வருணன், வாயு, சூரியன், சந்திரன் முதலிய தேவர்களும் ஒவ்வொருவராக வந்து எதிர் நின்று போர் புரிந்து, தலைவன் ஏவிய ஒவ்வோ ரம்புகளாலேயே கொடிப் பொழுதில் தரையிலே வீழ்ந்தனர். இளம் பெருமானென விளங்கும் இறைவன் மேருமலையில் நின்று கொண்டு, இத்திறத்திருவிளையாடல்கள் புரிவதைத் தேவ

குருவானவர் அறிந்து, விரைந்தோடிவந்து குமாரபெருமானை நோக்கி, "பிரணவ சொரூபியே! அறுமுகச்சிவனே" என்று தோத்திரித்தபோது, பெருமான், "உண்மையறியமாட்டாத நீங்கள் எல்லோரும் உயிர்பெற்றெழுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினன். எழுந்த தேவர்களெல்லோரும் வந்து முருகனுடைய திருவடிச் சன்னிதியில் வீழ்ந்து பணிந்தனர். அப்போது, தம்மைச் செவ்வையாய் அவர்கள் அறிந்துய்ய வேண்டுமென்றே கருணையினால் திருவிளையாடல் பல இதுகாறும் புரிந்த ஆண்டவன், "நம்மைச் செவ்வையாய் அறிந்து நன்மையடைவீர்களாக" என்று கூறி, 'ஏழுபாதாள லோகங்கள் திருவடியிலும், ஏழு தீவுகளின் புடவி கணைக்காலிலும், ஏழுகடல்கள் உடுத்தவுடையிலும், திசைகள் புயங்களிலும், ஆகாயம் நாபியிலும், தியுவென்னுஞ் சுவர்க்கம் சென்னியிலும், சந்திரன், சூரியன், அங்கியென்பன அழகிய மூன்றுகண்களிலும், மேலாயமேகங்கள் கேசங்களிலும், விண்மீன்கள் அக்கேசாலங்கிருத மலர்நிலைகளிலும், சிவபரம்பொருள் ஆன்மாவிலும், சிவசத்தியாகிய கௌரி மதியிலும், விட்டுணுவாகிய சனார்த்தனன் இடப்பாரிசத்திலும், பகவானாகிய பிரமன் வலப்பாரிசத்திலும், பாரதிவேத வாக்கிலும், இலக்குமி திருநிலையிலும், பிராணாதி பத்து வாயுவும் வாயு நிலையிலும், காலாக்கினி ருத்திரன் சீற்ற நிலையிலும், அக்கினி தேவன் சாடராக்கினியிலும், அனந்தாதி மாநாகங்கள் நூபுரம் முதலிய காலணிகளிலும், ஓடதி யனைத்தும் உரோமங்களிலும், அண்டகோடிக ளெல்லாம் அவ்வுரோமங்களின்மேய பேன் முட்டை நிலையிலுமாகக் காணப்பட்டுச் சுடர்கோடி பகற்கதிரெனக் குளிர்கோடி இராக்கதிரென மிளிர்கோடி காலாக்கினியெனப் பிரகாசியா நின்ற தனது பரமாற்புத வுறையுளான அப்பரமேசுர வடிவினை அளப்பறு மகிமையுடைய ஐயன் காட்டியருளினன். அவ்



வடிவினொளியினால், தரிசித்த தேவர்களுடைய விழிகள் கணப்போது பார்வையின்றி மாழ்கின. சுரர்களாகிய பிரம விட்டுணுக்கள் முதலிய தேவசிரேட்டரனைவருங் கந்தபிரானாகிய அவனது அளவிலாத் தேஜோமண்டலத்தில் ஆயிரத்தில் ஓரமிசவளவே யறிந்தனர்; அதிகமறிய வலியிலராயினர். இவ்வாறு ஆயிரத்தில் ஓரமிசத்தை அவனருளாற் காணுந் திவ்யவிழிகளைப் பெறீஇய விட்டுணு முதலிய தேவர்கள், முழந்தாள் வரையிலுமுள்ள உரோமங்களுள் ஓரோவொன்றிலும் ஆயிரக்கணக்கான பலகோடி பேன் முட்டைகள் அடுக்கடுக்காய்ச் செறிவுற்றிருத்தலையும், பிரமாண்ட கோடிகளாம் அம்முட்டைகளுள் உலகங்களையும், அவையவற்றுள் அதனையதனைச் சார்ந்த இறப்பு நிகழ்வு வரவென்னுங் காலங்கட்குரிய பல்புவனங்களையும், மன்பதையினையும், பிரமவிட்டுணுக்கள் முதலிய தேவர்களையும், அவ்வவ்வாவரணங்களையும் கண்ணுற்று, ஆ! ஆ!! இவை யென்னே! இஃதென்னே! என இறும்பூதெய்திப் பெரிதும் அஞ்சிநின்று, வேத வாக்கியங்களால் எண்ணில்லாத தோத்திரங்களைச் செய்து வணங்கினார்கள்.' அப்போதுதான் உண்மை யுணரப்பெற்ற தேவேந்திரன், பெருமானை நோக்கி, 'சருவாண்டங்களுள்ளும் நிறைந்திருக்குங் கடவுளே! எங்களைப் பகைத்த சூரபதுமனாதியோரை அழித்து, எங்களைக் காத்தருள்வாயாக" என்று விண்ணப்பித்தான். தனிப் பரம்பொருளாகிய முருகபிரானும் "அவ்வாறே செய்வோம்" என்றருள, தேவர்கள் அப்போதே இழந்த நலம் யாவும் பெற்றவர்போல மனங் குளிர்ந்தார்கள்; முருகவேளே தங்களைக் காக்கவந்த தலைவன் என்று உணரப்பெற்றார்கள். உடனே உள்ளக் களிப்பெய்திய திருமால் முதலிய தேவர்கள் தேஜோமயனாகிய முருகவேளோடு திருக்கைலாயத்திற் கணித்தாகவுள்ள பருவதமாய்த் தபோதனர் நெஞ்சுபோலப் பரிசுத்தமாய் விளங்கும் ஓரிடத்தை

யடைந்து, ஆங்குப் பொற்கோயி லொன்றமைத்து, அதனடுவே அழகிய சிங்காசனமிட்டு, மூப்பிறப்பறியா முருகவேளை நோக்கித் "தேவரீர் இதன்மீ தெழுந்தருளல்வேண்டும் என்று வேண்டினர். முருகநாதனும் அவ்வாறே அமர்ந்தருளினன். சிறப்புப் பொருந்திய வசிட்டர் முதலாகவுள்ள பிரமதேஜசுடையார் பலர் அங்கு வந்து, பரப்பிரமமே குழவிப்பான்மை கொண்டமர்ந்த குமரக்கடவுளின் திருவடிகளை வணங்கினர். பின்னும் அவர்கள், பரிசுத்தமான ஆகாய கங்கைநீரைக் கொண்டு, நல்ல வேதமந்திரங்களைச் சொல்லிக் கொண்டே, அழகிய செங்கோலேந்தி விளங்கும் குக பெருமானுக்கு அபிடேகித்து, ஒளி மிக்கதோர் அழகிய கிரீடத்தையும் அவனது திருமுடிக்கணிந்து மகிழ்ந்து, "பரம்பொருளே ! இந்தத் திருமால் முதலிய தேவசேனைகளுக்கு ஏற்றபதி இனிமேல் தேவரீரேயாவீர்" என்று விண்ணப்பித்தார்கள். முடிவிலாற்றல் படைத்த முருகவேளும் அதற்கிசைந்தருளினன். திருமால் முதலிய தேவர்கள், "சேனாபதி ! மகாஜகத்குரு !" என்று கூறிக்கொண்டே பணிந்தனர். பின்னர், செவ்வேள் வெள்ளியங்கிரிக்கெழுந்தருள, மற்றையோர் தத்தம் இருக்கைக்கு ஏகினர்.

# சிவஞான சுவாமிகள்*

இவ்வுலகத்தில் நாம் பிறந்தது எதற்காக? நம் கருவிகரணங்களைக் கொண்டு நாம் செய்யவேண்டுவனவற்றைச் செய்தற்காகவேயாம். கருவிகரணங்களைத் தொழிற்படுத்தினாற்றான் நமக்கு மேன்மை உண்டு ; இல்லையேல் உலகில்

*(இது, ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலை வெள்ளீச்சரத்தில் 26-4.37-ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு. திரு. கே. த. கிருஷ்ணசாமி முதலியாரவர்களால் எழுதப்பெற்றது.)



கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றும் நாம் தாழ்வையே யடைவோம். இதுபற்றியே 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்' என்ற பழமொழியும் எழுந்தது. திருவள்ளுவரும்,

'முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்'

என்று கூறினார்.

ஒவ்வொருவரும் படுக்கையைவிட்டு எழுந்தவுடனே செய்யும் காரியங்கள் மூன்று வகைப்படும். ஒன்று, நாம் இறைவனடி யடைந்த பெரியோர்களை நினைத்தல்வேண்டும். இரண்டாவது, அன்று நமக்கு நேர உள்ள இடையூறுகளை நினைத்தல்வேண்டும். மூன்றாவது, இவ்விடையூறுகளை நினைத்தலோடு மட்டும் நிறுத்தாது அவைகளைப் போக்க ஆண்டவனை நோக்கி, அழுதல்வேண்டும். இவையே நாம் தினந்தோறும் எழுந்த உடனே செய்ய வேண்டிய கருமங்கள். முன் காலத்தில், தினந்தோறும் எழுந்தவுடனே பஞ்சாங்கம் பார்க்கும் வழக்கம் இருந்துவந்தது. இதற்குத் தினசுத்தி எனப்படும். அன்றைய தினத்தை மட்டும் கவனித்துவிட்டுப் பஞ்சாங்கத்தைக் கீழே வைத்துவிடும் வழக்கம் பெரும்பான்மையோரிடம் இல்லை ; பக்கத்து நாட்கள்மீதும் நாட்டம் செல்லும். அவ்வாறு பஞ்சாங்கத்தைப் பார்க்கும் பழக்கத்தை நாம் விட்டுவிட்டதால் பெரியோர்களைப்பற்றி மறந்துவிட்டோம்.

இன்று சித்திரைத்திங்கள் ஆயில்யநாள் ; இது, சிவஞான சுவாமிகள் திருநாள். சென்னைக்குச் சுமார் இருபது மைல் தூரத்திலுள்ள தொட்டிக்கலை கிராமத்தில் அவர்தம் திருவுருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்தம் பெயரி

லிருந்தே நமக்கு வேண்டியதைப் பெறுகிறோம். நமக்கு வேண்டுவதென்ன? சிவஞானம். அவர்கள் சிவஞான சுவாமிகள்; சிவஞானத்தைத் தமக்குச் சொத்தாக உடையவர்கள். நாம் கேட்கும்தோறும் கேட்கும்தோறும் அவர் இல்லையென்னாது அவர்தம் உடைமையைப்பகிர்ந்து நமக்குக்கொடுப்பார். அப்பாகத்தைப் பெற நாம் முந்திக்கொள்வோமாக. சிவஞானமே எல்லா மதங்களின் முடிவாகும். இதை நமது சுவாமிகள், காஞ்சிபுராணத்தில் வெகு அழகாகக் கூறியிருக்கிறார்கள். 'விலகிவீழ் அருவித்தாரை..........ஏகமாய் கூடுந் தோற்றம்' என்ற செய்யுளில் ஒவ்வொரு மதத்தின் உண்மையும் வேகவதிநதியில் வந்து சேரும் ஒவ்வோர் அருவித்தாரைக்கும் உவமையாகக் கூறப்படுகிறது. அவ்வருவித்தாரைகள் திரண்டு வேகவதி என்னும் நதியாதல்போல், இவ்வுண்மைகளெல்லாம் திரண்ட முடிபு சிவஞானமாகிறது. அத்திரண்ட முடிபையே பொருளாகக் கொண்டிருப்பவர் சிவஞான முனிவர்.

இனி சிவஞான முனிவரது பிறப்பு வளர்ப்பைப்பற்றிச் சிறிது கவனிப்பாம். தென்பாண்டிநாட்டில் பாபவிநாசத்துக்கு (பாபநாசம்) அருகில் விக்கிரமசிங்கபுரம் என்றொரு கிராமம் உண்டு. அவ்வூரில் வேளாளகுலத்திற் பிறந்த ஆநந்தக்கூத்தருக்கும் அவர்தம் அருமைப் பத்தினியாரான மயிலையம்மையார்க்கும் பிறந்தவர் நம் சிவஞான முனிவர். நமது சுவாமிகளிடம் குழந்தைப் பருவத்திலேயே சிவபெருமான் பேற்றைப் பெறுதற்குரிய குணாதிசயங்கள் காணப்பட்டன.

மக்களுக்குக் கல்வியை யூட்டுதல் பிதாவின் முதற் கடமையல்லவா? ஆநந்தக்கூத்தர் தம் கடமையை நிறைவேற்ற எண்ணியவராய்த் தமது அருமை மகனாரைப் பள்ளியில் வைத்தார். ஒருநாள், சிவஞான முனிவரான குழந்தை பள்ளிக்குச் செல்லும் வழியில் விபூதி தாரணரான இரண்டு



அடியார்கள் எதிரில் வரக்கண்டது. அவ்விருவரும் திருவாவடுதுறை ஆதீன அடிகண்மார். இருவரைக் கண்டதும் குழந்தைக்கு ஆநந்தபரவசம் மேலிட்டது; பள்ளிக்குச் செல்வதை யொழித்து அவர்கள் இருவரையும் வீட்டுக்கு அழைத்துச் சென்றது. சிவஞான முனிவர், தந்தையில்லாததால் தாயாரிடஞ் சென்று அடியார்களை உண்பிக்கச் சொன்னார். அம்மையார் அமுது படைத்த திறத்தை நான் மயிலாப்பூரில் கூறவேண்டுவதில்லை. இவ்வூரார் அமுதுபடைக்குந்திறத்தைச் சம்பந்தரே புகழ்ந்திருக்கிறார். 'உருத்திரபல் கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்' என்ற சொற்றொடரை அறியாதார் யார்?

அம்மையாரின் அன்பைக் கண்ட சுவாமிகள் ஒரு பாட்டைப் பாடினார். அஃது, "அருந்ததி என்னம்மை" என்னுந் தொடக்கத்ததாகும்.

இப்பாட்டில் கருத்து, சொல், பொருள் முதலிய எல்லாம் அமைந்திருக்கின்றன. இப்பாட்டைக் குழந்தைப் பருவத்திலுள்ள சிவஞான முனிவர் எவ்வாறு பாடினார்? இதற்கு முன் ஜென்மத்தில் அவர் எவ்வளவு புண்ணியம் செய்திருத்தல் வேண்டும்! அவர் ஜீவன் முக்தர். ஒருவன் ஒரு ஜென்மத்தில் படித்தவை எழு ஜென்மங்கள் வரை அவனைப் பின் பற்றுகின்றன வென்பது பொய்யாமோ?

மனிதர்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவையே பிராகிருதர், வைநயிகர், சாமுசித்தர் எனப்படும். படித்தும் அறியாதவர் பிராகிருதர். வைநயிகர் படித்தபின் அறிபவர். படிக்காமலே அறிகிறவர் சாமுசித்தர். நமது சிவஞான முனிவர் மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தவர். அவர் பெரிய அறிவாளி. நினைத்த உடனே பாடவல்லவர். அவர் பரிசாரகனுக்குக் கட்டளை யிடுதற் பொருட்டு பாடிய பாட்டைக்

கவனியுங்கள். அது, "சற்றே துவையலறை" என்னுந் தொடக்கத்தது.

ஒரு சமயம் சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூர்க்கு வந்தார்கள். அப்பதி திருநாவுக்கரசு சுவாமிகளைக் கடலினின்றும் கரையேறவிட்ட பெருமையுடையத். ஆங்குச் செல்வந்தன் ஒருவன் இருந்தான். திரிபு வகையில் ஒரு பாட்டுப் பாடுபவருக்கு நூறு பொன் தருவதாக அவன் நிச்சயித்திருந்தான். அவ்வூரில் ஓர் அந்தணர்; நித்திய தரித்திரர்; தம் மகனுக்கு உபநயனம் செய்ய விரும்பினார். பணத்துக்கு என் செய்வது? ஒன்றும் தோன்றவில்லை. ஒரு நாள் அவர் சுவாமிகளைச் சந்தித்தார்; தமது குறைகளைக் கூறிச் செல்வந்தன் கட்டிவைத்திருக்கிற பொற்கிழியையும், அதன் வரலாற்றையும் கூறினார். நமது சுவாமிகள் ஒருவித யோசனையும் செய்யாது உடனே ஒரு கவியை எழுதிக் கொடுத்தார். அது 'வரையேற விட்டமுதம்' எனத் தொடங்கிக் 'கரையேற விட்ட முதல்வா' என்பதோடு முடிகிறது. நினைத்த மாத்திரத்தில் பாட்டுப் பாடுவதே சிறந்த முறையாகும். சிலர் ஒரு கவிக்காகப் பல நாட்கள்வரை முயல்கின்றனர். அவர் பாட்டுப் பாடும் திறன் வரப்பெற்றவரல்லர்.

கடவுளே எல்லா சாமர்த்தியமும் கைவரப் பெற்றவர். அவர் பூரண அறிவுடையவர். மனிதர் குறைந்த அறிவுடையவர். அறிவு இருவருக்கும் பொதுவே. அதனாலேயே கடவுள் சர்வக்ஞன் என்று அழைக்கப்படுகிறார். மனிதன் கிஞ்சிக்ஞன் என்று அழைக்கப்படுகிறான்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை வேறு விதமாகவும் உவமைப்படுத்திக் கூறலாம். நம்மொழியில் க ச ட த ப ற என்ற ஆறு எழுத்துக்களும் வல்லெழுத்துக்கள் என்று கூறப்படுகின்றன. இவற்றில் க ச த ப என்ற நான்கு எழுத்துக்களே மொழிக்கு முதலில் வருவன. ட றக் கள் மொழிக்கு முதலில் வரா. கடவுள் கசதப முதலிய எழுத்துக்களைப் போன்றவர். உயிர்கள் ட றக்கள்.



அகத்திய முனிவருக்குத் தொல்காப்பியர் முதலிய பன்னிரு மாணவர் இருந்தனர். அதுபோலவே நமது சுவாமிகளுக்கும் கச்சியப்பர் முதலிய பன்னிருமாணவர் இருந்தனர். அம்மாணவருள் கச்சியப்பரே தலைசிறந்தவர்; தணிகைப் புராணம் முதலிய பல நூல்களை இயற்றியவர்.

நமது சுவாமிகள் மொழிபெயர்ப்பதில் திறமை வாய்ந்தவர்கள். சுவாமிகள் மொழிபெயர்த்த நூல்களில் சில 'அன்னம்பட்டீயம்', 'தருக்க சங்கிரகம்' 'சிவதத்துவ விவேகம்' முதலியவாம். சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பதே சுவாமிகளின் சாமர்த்தியத்தைக்காட்டுகிறது. 'நித்தியவஸ்து' என்பதற்கு 'மன்னிய மெய்ப்பொருள்' என்றலும், 'பக்தி' என்பதற்கு 'மெய்யன்பு' என்றலும் எவ்வளவு சிறந்த சொற்கள் பாருங்கள். முண்டகோபநிஷத்தில் வரும் ஒருவாக்கியத்தைச் 'சிவனெனும் மொழியைக் கொடிய சண்டாளன் செப்பிடில் அவனுடன் உறைக' என்று மொழிபெயர்த்திருக்கிறார்.

விருத்தியுரை எழுதுவதிலும் சுவாமிகள் வல்லவர். இதை வடமொழியில் பாஷியம் என்று கூறுவது. தமிழில் சிவஞான முனிவருக்கு முன், ஒருவரும் விருத்தியுரை எழுதினது இல்லை. அதனாலேயே அவர் திராவிடமாபாடிய கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார்.

சிவஞானபோதத்தின் காப்புச் செய்யுளைக் கவனிக்க. அது வருமாறு.

"கல்லா னிழல்மலை, வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர், நல்லார் புனைவரே"

இப்பாட்டை வஞ்சித்துறை என்பார்கள். இப்புத்தகம் நான்கு விஷயங்களைக் கூறுவது. அவை பிரமாணம், இலட்சணம், சாதனம், பிரயோசனம் எனப்படும். இந்நான்கு பொருளையும் குறிப்பதாகக் காப்புச் செய்யுளிலும் நான்கு அடிகள் இருக்கின்றன. செய்யுளின் கடைசியிலுள்ள ஏகாரம் இடைச்சொல். அதை நீக்க, அடி ஒன்றற்கு மூன்று சொற்களாகச் செய்யுளில் பன்னிரண்டு சொற்கள் இருக்கின்றன. இப்பன்னிரண்டு சொற்களும் பன்னிரண்டு சூத்திரங்களைக் குறிப்பன.

இவற்றில் முன் ஆறு சூத்திரம் பொது. பின் ஆறு சூத்திரம் சிறப்பு. முன்னவற்றை அருளிய என்றும், பின்னவற்றைப் புனைவர் என்றும் சுவாமிகள் கூறுகிறார்கள். 'உண்ணிய' என்ற அப்பர் தேவாரத்துக்கு 'உண்ண' என்று பொருள் கூறுமாப்போல் 'அருளிய' என்பதற்கு 'அருள்' என்று பொருள் கூறினார்.

சுவாமிகள், 'செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்' என்ற வேறொரு நூலையும் இயற்றியிருக்கிறார். அதில் சமய உண்மைகளை அறிந்து கடவுளை வழிபடுதலை விளக்கியிருக்கிறார். சுவாமிகள் நம்மை யெல்லாம் யானைகள் என்கிறார்கள். யானைக்கு மூன்று மதங்கள் உண்டு. அவை கன்னமதம், கபோலமதம், பீஜமதம் என்னப்படும். நமக்கும் மூன்று மலங்கள் இருக்கின்றன. அவை ஆணவம், கன்மம், மாயை. ஞானம் என்ற கட்டுத்தறியை அறுத்துச் செல்வது மதம் பிடித்த யானைக்கு முதல் அடையாளம். நாமும் அவ்வாறே அன்பு என்னும் சங்கிலியை உதறித்தள்ளி, அறிவு அல்லது அருள் என்னும் கூடத்தை விட்டுவந்து, புவனம் என்னும் கொடுங்காட்டில் ஓடுகிறோம்; எப்பாகர்க்கும் அடங்காது ஓடுகிறோம். அங்குச பாசத்தைக் கொண்ட விநாயகப்பெருமானாகிய பெரும்பாகனே நம்மை அடக்கவல்லவன். இக்



கருத்தைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழில் 'மும்மலம்' என்ற தொடக்கப் பதிகத்தில் வெகு அழகாகச் சுவாமிகள் கூறி யிருக்கிறார்கள்.

இவ்வாறு சுவாமிகள் தமிழுக்கும் சிவபெருமானுக்கும் செய்யவேண்டிய பல தொண்டுகளைச் செய்துவிட்டுக் கி. பி. 1785-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் நாள் ஞாயிற்றுக் கிழமை பகல் 1-40 மணிக்கு இப்பூத உடலை நீத்துப் புகழ் உடலை எய்தினார்கள்.

# ச ன் மா ர் க் க ம்

[ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை]

சன்மார்க்கம் என்பது ஒரு தொகைச்சொல். இது, சத்து என்னும் சொல்லும், மார்க்கம் என்னும் சொல்லும் சேர்ந்து ஒரு தொகைச் சொல்லாகியது. சத்து மார்க்கம், சன்மார்க்கம் என்பதாம். சித்து என்று ஒருபதமுண்டு. அதற்குப் பொருள் அறிவு என்பது. எல்லாம் அறிவுமயம் என்று கூறவிரும்புவோர், சித்து என்பதையும், மயம் என்பதையும் கூட்டிச் சின்மயம் என்று கூறுகின்றனர். இதன்கண், சித்துமயம் என்பது சின்மயம் என்று ஆகியதுபோல, சத்து மார்க்கம் என்பது சன்மார்க்கம் என்று ஆயிற்றும். சித்து முத்திரை, சின்முத்திரை என்று வருவதும் நாம் காண்கின்றோம்.

இனி, சொற்கள் பொருளை விளக்கும்போது, தாம் நின்றவண்ணமே நின்று தமக்குரிய பொருளை விளக்குவதும், பிற சொற்களோடு தொடர்பு பெற்றுப் பொருளை விளக்குவதும் என இருவகை உண்டு. "கோட்டுமண் கொண்ட வேழம்" என்ற ஒரு சொற்றொடரை எடுத்துக்

கொள்வோம். இதனைப் பிரித்து, ஒவ்வொரு சொல்லாகத் தனித்தனியே பதச் சேதம் செய்து பொருள் பண்ணிப் பார்ப்போமானால், இதற்கு, "கொம்பினால் மண்ணைக்குத்தி, அம்மண் ஒட்டிய கொம்போடு நிற்கின்ற யானை," என்ற பொருள் எய்தப் பார்க்கலாம். இவ்வாறு நிற்பதனை,

> " குளிர்மரம் பொந்தாகக் **கோட்டுமண் கொளும் வேழம்,**
> தெளிபளிக்கறை நாப்பண், திகழ்தன துருநோக்கி,
> களிறெனை எதிர்பாய்ந்து, கதிர்மருப் பிடைஇறலும்,
> ஒளிர்மணி இளமதியின் ஒழுகமிழ் தெனவுகுமால்"

எனவரும் தணிகைப்புராணச் செய்யுளால் நாம் இனிது அறியலாம். இச்சொற்கள் இவ்வாறு நில்லாமல், தொடர் நிலையாய் நின்று, ஒரு பொருள் மற்றொரு பொருளினுட் பாய்ந்து நிமிர்ந்து ஒழுகும் ஒழுக்கத்தை யுணர்த்தும் பொருளிலும் வருகின்றன. சீவக சிந்தாமணியில், சீவகன் மண் பெறநின்ற கலம்பகத்தில், அவனுடைய தோழன் சலநிதி என்பவன், தன்னை எதிர்த்த அரசரோடு போர் செய்யும் பொழுது, அவன் போர்ச்சிறப்பை விரித்துப் புனைந்துரைக்க விரும்பிய திருத்தக்கதேவர்,

> "தோட்டுவெண் டொலியல் மாலைத் துடியிடை மகளிர் ஆய்ந்த
> மோட்டுவெண் முத்தம் மின்னும் முகிழ்முலை உழுது சாந்தம்
> **கோட்டுமண் கொண்ட மார்பம்** கோதைவாள் குளித்து மூழ்கி,
> **கோட்டுமண் கொள்ள நின்றான்** குரிசில் மண்கொள்ள நின்றான்"

என்று கூறுகின்றார். இப்பாட்டில் உள்ள, "கோட்டுமண் கொண்ட மார்பம்" என்றும், "கோட்டுமண் கொள்ள நின்றான்" என்றும் வந்த சொற்றொடர்களைப் பதம் பதமாகப் பிரித்தால், அவை பொருளழகு கெட்டு இன்பம் பயவாவாகின்றன. ஆகவே, சொற்கள், தாம் நின்ற நிலையில் நின்று பொருளை விளக்குவதும், (Literal use) பிற சொற்களோடு



இயைந்து, அதற்கேற்பப் பொருளை விளக்குவதும் (Idiomatic use) உண்டு என்று அறிகிறோம். இதனால், சொற்கள் தனிநிலையில் ஒரு பொருளும், தொடர்புறும்போது பிறிதொரு பொருளும் உணர்த்தும் என்று கூறப் புகுகின்றேன் என்று எண்ணிவிடக்கூடாது. ஏனெனில், இவ்வியல்பு எல்லாச் சொற்களுக்கும் இலக்கணமாய் இருப்பது கிடையாது. சில சொற்கள்தான், தனித்தும், தொடர்ந்தும் அவ்வந்நிலைக்கேற்பப் பொருள் பயக்கும் இயல்பு உடையவாய் இருக்கின்றன. அச்சிலவற்றுள் சன்மார்க்கம் என்னும் தொடர்மொழியும் ஒன்றாக நிற்கின்றது.

இனி, சன்மார்க்கம் என்பதையும் இம்முறையே ஆராய்வேன். சன்மார்க்கம் என்பதில் உள்ள சத்து என்பதை முதலிலும், மார்க்கம் என்பதைப் பின்பும் ஆராய்கின்றேன்.

ஓரிடத்தில் பயனுள்ள பொருள்களும், பயனில்லாத பொருள்களும் கலந்திருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். ஒருவன் அவற்றைக் காண்பானாயின், அவன் அங்குள்ள பயனுள்ள பொருள்களைச் சத்தானவை என்று கூறுவான். நீரும் பாலும் கலந்திருப்பக் காணும் ஒருவன், பாலின் தனித்த பகுதியைச் சத்து என்று கூறுகின்றான். "நான் சொல்லுகின்றவற்றுள் சத்தானவை எவையோ, அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டுகின்றேன்" என்று ஒரு சொற்பொழிவாளன் சொல்லுகின்றான். இவ்வாறு வரும் வழக்க வுரைகளை நோக்கினால், நமக்குப் பயன்படத் தக்க பொருள்கள் யாவும் சத்து என்று கூறப்படும் என்று அறிகின்றோம். இச்சத்துப் பொருளின் நிலையினையும், அது நமக்குப் பயன்படும் வகையினையும் அறிதற்கு உள்ள வழி சத்து மார்க்கமாகும். ஆகவே, சன்மார்க்கம் என்பது உயிர்கள் தமக்குப் பயன்படும் பொருளையறிந்து அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் வழி என்பதாயிற்று. இந்நிலையில், நம்முடைய

வாழ்வில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் பயனுடைய பொருளை யறிந்து தேடிப் பயன்படுத்திக் கொள்வதையே குறித்து நிகழுவதால், நம் வாழ்க்கை நெறி முற்றும் சன்மார்க்கமே என்பது விளங்குகிறது. ஆனால், பயனுடைய வற்றை அறியுமிடத்தும், அறிந்து பயன்படுத்திக் கொள்ளு மிடத்தும், நம் வாழ்வில் தீய கருத்தும் தீய செயலும் நிகழ்கின்றது கண்டு, அவற்றை விலக்கி, நல்ல கருத்தும், நல்ல செயலும் நிகழும் வாழ்க்கையினையே சன்மார்க்க வாழ்க்கை என்று பெரியோர் கூறுகின்றனர். அதனால், நற்பயன் பயக்கும் நற்பொருளை நன்கு அறிந்து அதனை நல்வழியிற் பயன்படுத்தும் நன்னெறி பற்றிய வாழ்க்கையே சான்றோரால் சன்மார்க்க வாழ்க்கை எனப் புகழ்ந்து கூறப்படுவது என்பது பெறப்படும்.

"ஒருவன் எவ்வளவு சொன்ன போதிலும், அவன் சொல்லுவனவற்றுள் சத்தானவை எவையோ, அவற்றையே நாம் அறிந்து கொள்ள வேண்டும்" என்று யாவரும் கூறுவர். இக்கருத்தினையே நம் திருவள்ளுவப் பெருந்தகையார், "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றும், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றும் இரண்டு திருக்குறள் வழங்கி இருக்கின்றார். இவற்றுள் முன்னது சொல்லப்படும் பொருள் குறித்தும், பின்னது சொல்லுவோர் இயல்பு குறித்தும் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள், "சத்தானவை எவையோ அவை" என்று பேச்சு வழக்கில் கூறப்படுவனவே, "மெய்ப்பொருள்" என்று குறிக்கப்படுகின்றன. அதனால், சத்துப் பொருள் என்பதும், மெய்ப்பொருள் என்பதும் ஒன்றையேயாம் என்று அறியலாம். ஆகவே, சத்து என்பதற்கு மெய்ம்மை என்பது பொருளாம். மெய்ப்



பொருளை அறியும் நெறியையே மெய்ப்புணர்தல் என்று தமிழ் நூல்கள் கூறுதலின், சன்மார்க்கம் என்பதற்கு மெய்யுணர்தல் என்றும் பொருள் கூறலாம்.

இனி, சத்து என்னும் சொல்லுக்கு உரிய பொருள் இருப்பது என்பது. இருத்தல், நிலையாக இருத்தல். நிலையாக இருக்கும் தன்மை நித்தியம் எனப்படும். படவே, நித்தமாய் என்றும் இருத்தலையுடைய பொருள் சத்துப் பொருள் என்றும் கூறப்படும் என்று அறிகிறோம்.

இவ்வாறு, வழக்கிலும், சான்றோர் நூல் வழக்கிலும், சொற்கள் ஆளப்பட்டிருக்கும் முறையினை நோக்குங்கால், "கோட்டுமண் கொண்ட வேஷம்" என்றாற்போல, நித்தியப் பொருளை யறியும் நெறியும், கோட்டுமண்கொண்ட மார்பம் என்றாற்போல, உயிர்க்கு நலம் பயக்கும் மெய்ப்பொருளை யறியும் நெறியும் சன்மார்க்கம் என்ற தொகைச்சொல்லால் குறிக்கப்படும் என்று தெரிகின்றோம்.

இனி, இருத்தல் என்னும் புடைபெயர்ச்சித் தன்மையை யுடைய சத்துப்பொருள், சமய நூல்களுள் இரண்டாகவும், மூன்றாகவும் கூறப்படுகின்றன. இரண்டென்றது, பாரமார்த்திக சத்து, வியாவர்த்த சத்து. இவற்றையே சிவ சத்து என்றும், சடசத்து என்றும் சிறப்பித்துக் கூறுவர். மூன்றாவன: பதி, பசு, பாசம் என்பன. இவற்றுள், பதிப் பொருள் சிவமாகலின், அது சிவசத்து எனவும், பசு பாசங்கள் சடசத்து எனவும் அடங்கும்.

இனி, இவ்வாறு என்றும் இருத்தல் என்பது இன்றி, தோன்றி மறைந்து ஒடுங்கும் இயல்புடையவை அசத்துப் பொருள் எனப்படும்.

சத்து, அசத்து எனப் பொருள்களை ஆராய்ந்துவரும் நம்முடைய அறிவும் வளர்தலும் குறைதலும் உடையது. "இவனுக்கு அறிவு வளரவில்லை; இவன் அறிவினால் பெரிய

வன்" என வழங்கும் பேச்சு வழக்கு இதற்குச் சான்றாகிறது. "அஃகி யகன்ற அறிவு என்னும்", "நுண்மாண் நுழைபுலம் இல்லான்" என வருவனவற்றால், அறிவுக்குப் புடைபெயர்ச்சி உண்டென்பது தெளியப்படும். உடலறிவு, உயிரறிவு, கருவியறிவு எனப் பலதிறப்படுவதும், ஆணவம் முதலிய மலங்களோடு விரவுவதும் அறிவுக்கு இயல்பு. சத்துக்கு உரிய என்றும் இருப்பதாம் தன்மையின்றி, வளர்தல், குறைதல், விரிதல், வகைப்படுதல் முதலிய இயல்புகளை உடையதாய் விளங்குவதால், அறிவும் அசத்தேயாகின்றது. இதனை,

> "ஆவதாய் அழிவதாகி வருதலால், அறிவு தானும்,
> தாவலால், உலகுபோகம் தனுகா ணாதியாகி
> மேவலால், மலங்களாகி விரவலால், வேறுமாகி
> ஓவலால் அசத்தாம் சுட்டி உணர்பொரு ளானவெல்லாம்"

என வரும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் அறிகின்றோம்.

உலக அறிவு, நூலறிவு என வகைப்படுதலையுடைய அறிவு, அவ்வாறு ஆதற்கு உரிய தன்மையுடையதாகையால், அஃது அசத்து எனப்படுவதேயன்றி, அதனால் அறியப்படுவனவும் அசத்து என்றே ஆகும். அசத்துப் பொருளின் அசத்தாம் தன்மை அசத்துப் பொருளில் தான் விளங்கித் தோன்றும். அறிவின் ஒட்பம் அதனால் அறியப்படும் பொருளில் விளங்கித் தோன்றுதலால், அப் பொருளும் அசத்தேயாம். ஆனதாற்றான், இத்திருவிருத்தமும், "அசத்தாம் சுட்டி உணர் பொருளானவெல்லாம்" என்றும், "அறிவினால் அறிந்த யாவும் அசத்தாதல் அறிதி" என்று சிவப்பிரகாசத் திருவிருத்தமும் கூறுகின்றன.

இனி, பதி, பசு, பாசம் என்ற சத்துப் பொருள் மூன்றனுள், சுட்டறிவும், அதனால் அறியப்படுதலுமுடையவை



பசுவும் பாசமுமே யாகும். ஆகையால் அவை சடசத்து எனப்படும். ஆனால் பதிப்பொருள் ஓராற்றால் அறியப்படுதலும், படாமையும் உடையதாகையால், அஃது அசத்து எனப்படுதற்கின்றிச் சிவசத்துஎன்றே கருதப்படுவதாயிற்று. சிவசத்தினை நோக்கச் சடசத்து அசத்தாதலால், அஃது அசித்துமாயிற்று. ஆகவே, சிவசத்து, சத்தும் சித்துமாகிய பதிப்பொருளாகும். இதனைச் சிவஞானசித்தியார்,

> "அறிவுறும் பொருளோ, ஈசன், அறிவுறாதவனோ, என்னின்,
> அறிபொருள் அசித்தசத்தாம்; அறியாத தின்றாம் எங்கும்;
> செறிசிவம் இரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்;
> நெறிதரு சத்தின்முன்னர் அசத்தெலாம் நின்றிடாவே"

என்று விளங்கக் கூறுகின்றது.

சடசத்து எனப்பட்ட இருவகைப் பொருளும் பதியை நோக்க அசத்தாம் என்று முன்னே கூறினேன். ஓராற்றால் அறியப்படுவதும், படாமையும் உடைய சிவத்தை அறிதற்கும், அறியாது போதற்கும் உரியது பசுவே. பாசப்பொருள் அசித்தாகலின் (அறிவில்லாததாகையால்), சத்துப்பொருளை அறியும் மார்க்கமாகிய சன்மார்க்கம் அதற்கு இல்லையாகும். ஆகவே, சன்மார்க்கத்துக்கு உரியவை பசுக்களே. பசுக்கள் பதியையும் பாசத்தையும் ஒருவாறு அறிதலும் உடையவாகலின், பதியை ஓராற்றால் அறியுமிடத்துச் சத்தாயும், பாசமாகிய அசத்தை அறியுமிடத்து அசத்தாயும் இயையும் தன்மையால் பசுவைச் சதசத்து என்கின்றனர். எனவே, பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருளும் முறையே, சிவசத்து, சதசத்து, அசத்து என மூன்றாய் விளங்குகின்றனவாம். "சத்தசத்தறிவதான்மா; தான் சத்தும் அசத்தும் அன்று" என்று நம் அருணந்தி சிவாச்சாரியர் கூறுதல் காண்க.

இனி, சிவசத்து எனப்படும் பதிப்பொருளையே, சிறப்பித்துக் கூறுமிடத்து, சத்து என்றே கூறி யொழிவர். தாமரைப்பூ, ஏனைப்பூக்களைவிடச் சிறந்திருப்பது கொண்டு, அதனைப் பெரியோர் பூ என்றே கூறி யொழிவதுபோல, சத்துப்பொருளாகிய பசுபாசங்களைவிடச் சிவசத்து சிறந்து நிற்றல் தோன்றச் சத்து என்றே கூறுகின்றனர்.

இச்சத்துப் பொருள், முற்றுமுணரும் பேரறிவும், பேராற்றலும், உயிர்களைப் பாசக்ஷயம் பண்ணிப் பேரின்பம் எய்துவிக்கும் பேரானந்தமும் உடையது. தோற்றக் கேடுகளின்றி நித்தமாய் இருத்தலின் சத்து என்றும், தான் எல்லாவற்றையும் முற்றவும் உணரும் முழுதுணர்வுடையதாய் இருத்தலின் சித்து என்றும், தன்னை அறிந்து பரவும் அடியார்க்கு அந்தமில் இன்பம் வழங்கும் ஆனந்த மயமாய் இருத்தலின் ஆனந்த மென்றும் கொண்டு, அப்பதிப் பொருளைச் சச்சிதாநந்தம் என்று அறிந்தோர் கூறுகின்றனர்.

இப்பதிப் பொருளாகிய பரமனது சத்தாம் நிலையினை, நம் ஞானசம்பந்தப் பெருந்தகை,

"இருநிலனது புனலிடைமடிதர எரியதுபுக எரியது மிகு
பெருவளியினில் அவிதரவளி கெடவியன் இடைமுழுவதுகெட
இருவர்களுடல் பொறை யொடுதிரி எழிலுருவுடையவன், இனமலர்
மருவிய அறுபதம் இசைமுரல் மறைவனம் அமர்தரு பரமனே"

என்கின்றார். நம் தாண்டக வேந்தர், "பின்தானும் முன்தானும் ஆனான்" என்றும், நம்பியாரூரர், "பிறவாய் இறவாய் பேணாய் மூவாய், பெற்றமேறிப் பேய் சூழ்தல், துறவாய் மறவாய்" என்றும் கூறுகின்றனர். நம் மணிவாசகப் பெருந்தகை, "வான்கெட்டு மாருதமாய்ந்தழல் நீர்மண் கெடினும், தான் கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையன்" என்றும் விளக்குகின்றார்.



இனிப் பரமன், ஞானவடிவினன் என்பதற்குச் சிவன் என்ற பெயருடையனாதலே சான்றாகும். முதற் பொருட்குரியவாகிய இச்சை, ஞானம், கிரியை என்ற மூவகை நிலைகளுள் ஞானமேயாகி நிற்கும் நிலை சிவம் என்றும், சிவதத்துவம் என்றும் பெரியோர் கூறுவர். "ஞானமே யானபோது சிவன், தொழில் ஞானம் ஒக்கில் ஈனமில் சதாசிவன்" என வரும் திருவாக்கு இக்கருத்தை வலியுறுத்தும். இக்கருத்துத் தோன்றவே, நம் நாவேந்தர், "சிவனெனும் நாமம் தனக்கே யுடைய செம்மேனியம்மான்" எனப் பரமன் பெயர் விசேடம் கூறிப் பெருமகிழ் வெய்துகின்றார். அன்றியும், "நாதனை நாதமிகுத் தோசைய தானவனை ஞான விளக்கொளியாம் ஊனுயிரைப் பயிரை, மாதனை மேதகுதன் பத்தர் மனத்திறையும் பற்றுவிடாதவனை" எனச் சுந்தர மூர்த்திகளும், "கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி" என அப்பமூர்த்திகளும் "ஏனப் பூண்மார்பின்மேல் என்பு பூண்(டு), ஈறிலா, ஞானப் பேராயிரம் பேரினான்," "ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெட எண்ணில், ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே" என ஞானசம்பந்த மூர்த்திகளும் விளக்கியருளியுள்ளார்.

இனிப் பரமன் ஆனந்தமயன் என்பது தேவார திருவாசகங்களில் விளங்கக் கூறப்படுகின்றது. "எய்ப்பானார்க்கின்புறு தேனளித் தூறிய, இப்பாலாய் எனையும் ஆளவுரியானை" என்றும், "நீறார் திருமேனியர் ஊனமிலார்பால், ஊறார் சுவையாகிய உம்பர் பெருமான்", என்றும் வரும் ஞானசம்பந்தர் திருவாக்கும், "திருவே என் செல்வமே தேனே பாலே", "பொருங்கைமத கரியுரிவைப் போர்வையானை, பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தினானை, கரும்புதரு கட்டியை இன்னமிர்தைத் தேனை, காண்பரிய செழுஞ்சுடரைக் கனகக்குன்றை" என வரும்

நாவரசர் திருவாக்கும், "நானுடை மாடெனவே, நன்மை தரும் பொருளை, நற்பதமென்றுணர்வார் சொற்பதமார் சிவனை, தேனுடை யின்னமுதை மற்றதனின் தெளிவை" என வரும் சுந்தரர் திருவாக்கும்,

"ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனை, பழச்சுவை யாயினானை,
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை, நாத்தழும் பேறவாழ்த்தி
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே"

என்பது முதலிய மணிவாசகமும் மேற்கூறிய கருத்தை வலியுறுப்பனவாகும்.

ஆகவே, மேலே கூறிப்போந்தவற்றால் சிவசத்தாகிய பரமன் சச்சிதானந்தம் என்பது துணியப்படும். இனி, அதனை அறிந்தொழுகி அதனது ஆனந்தத்தைப் பெறுதற்குரிய பசுவென்னும் சதசத்தின் இயல்பினைச் சுருங்கச் சொல்லிவிட்டு மேற்செல்லுகின்றேன்.

சதசத்து என்னும் பெயரே, உயிர்கட்குச் சத்தினை அறியும் தன்மையும், அசத்தினையறியும் தன்மையுமுண்டு என்பதை நிலைநாட்டுகின்றது. உயிரிடத்து அறிதலாகிய தொழில் நிகழ்தலால் அறிவும், அறியாமையு மிருத்தலால், அவ்வறிவு சிற்றறிவே என்பதும் விளங்குகின்றது. உயிர், பதியைப்போல் அஞ்தியாகையால், சத்து என்றும், நிலையற்ற உடலோடு கூடியிருந்து நீங்குவதால் அசத்து என்றும், இவ்விரண்டியல்பும் ஒருங்கு இருப்பதுபற்றிச் சதசத்து எனப்பட்டது என்றும் சிலர் கூறுவர். இதனால், உயிர் நித்த



மாய்ச் சிற்றறிவுடையதாய் உள்ள பொருள் என்பது எய்துகின்றது. இக் கருத்துக்களையே, திருமூல நாயனார்,

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்,
பதியினைப் போற்பசு பாசம் அனாதி;
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்;
பதியணு கிற்பசு பாசம்நில் லாவே"

என்று மொழிந்தனர். திருவள்ளுவப் பெருந்தகையார், "அறிதோறறியாமை கண்டற்றால்" என்பன முதலியவற்றால் உயிர்களின் அறிவுச் சிறுமையைக் குறித்துரைத்துள்ளார்.

இனி, அசத்தென்பது அறிவின்மையும், நிலையின்மையுமுடையது; தோற்றமும் ஒடுக்கமும் உடையது. இஃது உயிர்களைப் பந்தித்து நின்று, தனக்குரிய அசித்தாந் தன்மையால் உயிர்கட்கும் அறியாமை உண்டுபண்ணி வருந்துவிப்பதாகும். இதனால் உயிர்களிடை யுண்டாகும் வினைகளும் சடமாய் அசத்தாய் நிலவுகின்றன. இஃது உயிர்களைப் பந்தித்து நிற்குமாற்றால் பாசம் எனப்படும். இவ்வசத்துப் பொருளால் பந்தமுற்று வருந்தும் உயிர்கள் அப்பந்தத்திலிருந்து நீங்கி இன்பம் எய்தும் பொருட்டே, பரமன் உயிர்கட்கு, உடல், கருவி, போகம் முதலியவற்றை அருளியுள்ளான். மலபந்தம் நீங்கும் வரையில் துணையாயிருந்து பின் கழிவனவாகலின், இவையும் அசத்தேயாகும். வினைகள் மலபந்தத்துக்கும், இக்கருவி கரணங்கட்கும் ஏதுவாய் நிற்பதால், அவைகளும் சடசத்தே யாகும். இவை யாவும் தாமே சென்று உயிர்களை அடைவதின்றி, பரமன் புணர்க்கப் புணரும் இயல்புடையவை. அதனால், இவையும் அசித்தாம். சுருங்கச் சொல்லின், பாசம் எனப்படும் மல கன்மங்களும், அவற்றின் பயனும், அவற்றை நீக்கும் கருவி

யாயும் பரமன் கூட்டக்கூடும் பொருளாயும் உள்ள தனுகரண புவன போகங்களும் அசத்து என்று கூறப்படுவனவாகும் என்பதனை, "உயிர்கட்கு அணவுதாயென இரங்கி ஆரருளினால் பருவப் புணர்வு தேர்ந்து உடல் கரணமும் புவனமும் பொருத்தும்" எனவரும் தணிகைப்புராணச் செய்யுள் வலியுறுத்தும்.

இனி, சதசத்து எனப்படும் பசுக்களாகிய நாம் நம் சதசத்தாம் தன்மையினையும், நம்மைப் பிணித்து நிற்கும் அசத்தின் தன்மையினையும் அறிந்து, உலையாப் பேரின்பத்துக்குரிய சத்துப் பொருளைத் தேர்ந்து, அதனைக் கூடி அப்பேரின்பத்தை எய்துவது குறித்துச் செய்யும் ஆராய்ச்சி நெறியும் ஒழுக்கமும் சத்துமார்க்கமாகிய சன்மார்க்கமாகும். இது பொது வகையில் ரூபம், தரிசனம், சுத்தி என மூன்று வகைப்படும்.

உயிர்கள் பாசமாகிய அசத்தால் பிணிப்புண்டு, அதனை அநுபவித்து வருவதால், முதலில் அதனையும், பின் பசுவாகிய தன்னையும், அதன் பின் சத்தாகிய பதியையும் காண வேண்டியிருத்தலால், பாசசன்மார்க்கம், பாசரூபம், பாச தரிசனம், பாசசுத்தி என்றும், பசுசன்மார்க்கம் ஆன்ம ரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி என்றும் அறுவகையாகும். இதனைத் தணிகைப்புராணம்,

"மண்முதலாகச் சிவமுடிவாக
மலிதரு தத்துவமெல்லாம்
நண்ணிய தொழிலைத் தனித்தனி காண்டல்
நவைதரும் அதனுருவாகும்;
திண்ணிய அவைதாம் சடமெனக் காண்டல்
தெரிசனம்; இடையிவை நீங்கும்
உண்மையைக் காண்டல் சுத்தியாம்; மூன்றும்
உற்றன பாசத்தின் மாட்டு"

"இன்னணம் பாசம் அகறலும், உறவும்
இகலுறு பயனும் நாடாது,
மன்னியதானே முதலென நிற்றல்
மாசுயிர்க் குரு; இதுகாறும்
அன்னியத் தழுங்கும் நினக்குயிர் அருளென்(று)
அகற்ற அவ்வருளினான் முதலென்(று)
உன்னுதல் காட்சி; உதவொடு செயல் சேர்(து)
ஒழிந்தரு ளாய்விடல் சுத்தி"

என்று கூறிச் செல்கின்றது.

இவற்றால், பாசரூபம் என்பது மண்முதலிய தத்துவங்களின் தொழிலைத் தான் வேறாய் நின்று அறிவது என்றும், பாச தரிசனம் என்பது இத் தத்துவங்களைச் சடம் என்று அறிவது என்றும், பாசசுத்தி என்பது சிவனருளால், அவை தமக்கு அன்னியம் என்று அறிவது என்றும், உயிர் மலம் நீங்கிய ஞான வடிவிற்று என்று அறிவது ஆன்ம ரூபம் என்றும், தனக்கென ஒரு தொழிலும் இல்லாமையை அறிந்து, எல்லாவற்றிற்கும் பரமனை முதல்வன் என்று தெளிதல் ஆன்ம தரிசனம் என்றும், அவன் அருள் வழி நின்று ஒழுகுதல் ஆன்மசுத்தி என்றும் தெளியப்படும்.

இனி, இவற்றிற்குமேல் சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம் என மூன்று நிலையுண்டு. இவற்றுள் சிவரூபமாவது எல்லாவற்றிற்கும் சிவமே முதலாதலை யுணர்வது என்றும், சிவதரிசனமாவது அச்சிவ பரம்பொருள் புரியும் யாவையும் யான்செய்வல் என நினைக்கும் தன்முனைப்புச் சிறிதுமின்றி நிற்பது என்றும், சிவயோகமாவது, சிவமயமாய்த் தன் அறிவை ஒடுக்குவது என்றும் சைவப் பெரியோர் கூறுவர். இக்கூறிய ஒன்பது நெறியிலும் வழுவாது சென்றொழுகினால், எய்தும் பயனை சிவானந்தப் பெரும் போகப் பேறு என்பர்.

சிவயோகப் பயனால், உயிர் சிவமாந் தன்மை யெய்திய வழி ஒன்றாயும், சிவத்துக்கு உரிய ஐந்தொழில் முதலியன இன்றி, சீவசத்து எனப்படும் தன்மை திரியாமையால் வேறாயும், முன்னே நின்ற கேவலத்திலேயே நிலையாய் நின்று, தன்னை விட்டுக் கழிந்த ஆணவம் தன்னை வந்து கூடுவதும், கூடாமையும் இன்றி, பண்டு, ஆணவத்தில் அழுந்திக் கிடந்தாற்போல, சுத்த ஆணவ நிலையாகிய அறிவு நிலையில் அழுந்தி, அறிவு மாய்ந்தும் மாயாமலும் நின்று, அவசமாய் அயரா இன்பம் நுகர்வதே சிவபோகம் எனப்படுவது. இதனை,

"ஒன்றுறும் அதனால் ஒருபொரு ளாகா(து),
இரண்டினால் வேறு மாகாது,
தொன்றுறு நிலையே நிலையதாய்ச் சேர்ந்து,
துன்னலும் துன்னாமையும் அற்(று)
அன்றும் ஆணவத்தில் அழுந்தியாங்(கு) அறிவாய்
அறிவினுள் அழுந்தி, அங்(கு) அறிவு
பொன்றியும் பொன்றாது, அவசமாய், இன்பப்
புணரிவாய் மடுப்பது போகம்."

என்று பெரியார் கூறியிருப்பதனால் அறியலாம்.

இவ்வாறு சத்தாகிய சிவத்தின் போகப் பேற்றுக்கு வகுத்துள்ள இப்பத்தினையும் ஆராய்ந்தொழுகும் திறமே சன்மார்க்கம் என்பது இனிது விளங்கும்.

இனி, இப்பத்து வகைச் சன்மார்க்கப் பொருள் நெறியினையும் நிரல்படக் கோத்து அழகிய கவியால் நம் தெய்வத் தாயுமான சுவாமிகள் கூறியருளுகின்றார்கள்.

"வேதாவை இவ்வணம் விதித்ததே தென்னின்,உன்
வினைப்பகுதி யென்பன் ; அந்த
வினைபேச அறியாது ; நிற்க, இவை மனதால்
விளைந்ததால், மனதை நாடின்,



போதமே நிற்கும் ; அப்போதத்தை நாடிலோ
போதமும் நினால் விளக்கம் ;
பொய்யன்று ; தெய்வமறை யாவுமே, நீ என்று
போக்குவர(வு) அற நிகழ்த்தும் ;
ஆதார ஆதேய முழுதும் நீ ஆதலால்,
அகிலமீ(து) என்னை ஆட்டி
ஆடல்கண் டவனும்நீ ; ஆடுகின் றவனும்நீ :
அருளும்நீ ; மௌனஞான
தாதாவும்நீ ; பெற்ற தாய்தந்தை தாமும்நீ ;
தமரும்நீ ; யாவும்நீ காண் !
சர்வபரிபூரண அகண்ட தத்துவமான
சச்சிதாநந்த சிவமே !!

என்பது அவர் அருளிய அருமைத் திருப்பாட்டாகும்.

சன்மார்க்க நினைவால் பாசக்ஷயப்பண்ணிச் சிவானந்தம் பெறப்புகுந்த சுவாமிகள், முதலில் பாசரூபம் கண்டு, அங்கே தோன்றும் புவன போகங்களில் உவர்ப்புற்று, அவை இன்பமும் துன்பமும்தரும் தன்மையவாக இருப்பதைத் தெளிந்து, இவற்றின் உண்மை நிலை யாதாகும் என்று ஆராய்ந்து, "வேதாவை இவ்வண்ணம் விதித்தது எது ? என்னின், உன் வினைப்பகுதி என்பன்" என்று கூறுகின்றார்.

பாசரூப ஆராய்ச்சியால், இன்ப துன்பங்கட்குக் காரணமாகிய வினைப்பகுதியைக் கண்டு, அக்காட்சியால் (பாச தரிசனத்தால்) பெற்ற வினைப்பகுதியை ஆராய்ந்து, அவ்வினை சடப்பொருள் என்பதைத்துணிந்தார் ஆகையால், "அவ்வினை பேச அறியாது" என்கின்றார்.

இவ்வினைகளை விலக்கி, இவற்றிற்கு ஏதுவாய்த் தொழிற் பயனுறுவதற்குரிய பொருளாய் இயக்கும் மனத்தை யடக்கிப் பாசசுத்தி செய்துகொள்கின்றார் ; அது தோன்ற, "இவை மனதால் விளைந்ததால்" என்றும், அம்மனத்தைப்

பற்றி மேலும் விசாரம் புரிகின்றமையின், "மனதை நாடின்" என்றும் மொழிகின்றார்.

இச் செயல்களால், மனத்தின் நிலையினைக் கண்டு, பாச க்ஷயம் பண்ணிவருபவர், ஆண்டு, அதனை ஒடுக்கவும் எடுக்கவும் விடுக்கவும் வல்ல அறிவினை யறிந்துகொண்டனர். அவ்வறிவு ஆன்ம ரூபம். இவ்வான்ம ரூபப் பேற்றையே நாம் அறியுமாறு, "மனதை நாடின் போதமே நிற்கும்" என்கின்றார்.

ஆன்மரூபத்தைக் கண்டு, தாம் அடைந்த சுகதுக்கங்களைப்பற்றி விசாரித்த அளவில், இதுகாறும் கண்டு கழித்த வற்றிலே படிந்துகிடந்த தமக்கு முதல் பரமன் திருவருளே என்னும் உண்மை எய்திற்று. அதனால், ஆன்மாவின் உண்மையியலும் விளக்கமாயிற்று. (அவ்வாறு ஆகும் இஃது ஆன்ம தரிசனம் எனப்படும்.) பின்பு, அத்திருவருட்குரிய ஏதுவினைப் பரிசீலனை செய்து, அதுவே எல்லாப் பொருட்கும் முதல் என்பதை யறிந்து, தம் அறிவு விளக்கத்துக்குரிய ஆன்மசுத்தி செய்துகொள்வது தோன்ற, "போதமும் நின்னால் விளக்கம்" என்றும், "பொய்யன்று தெய்வமறை யாவுமே நீயென்று போக்குவரவு அற நிகழ்த்தும்" என்றும் மொழிந்தருளுகின்றார்.

இவ்வாறு, ஆன்மசுத்தியிடத்து, ஆராய்ச்சி செய்யும் தமக்கு முதலும் பொருளும், தமது ஆராய்ச்சிக்குரிய முதலும் பொருளும் பயனும் எல்லாம் திருவருளேயாய்க் காணும் சிவதரிசனம் எய்தியது காண்கின்றார். அக்காட்சியை, "ஆதார ஆதேய முழுதும் நீ; ஆதலால், அகிலமீதென்னை ஆட்டி ஆடல் கண்டவனும் ஆடுகின்றவனும் நீ; அருளும் நீ" என்று புகலுகின்றார்.

இச்சிவதரிசன புண்ணியத்தால், தாம் திருவருள் வயப்பட்டு அதன் பெருநிலையை எண்ணி யெண்ணி அறிவு



மாய்ந்து சிவயோகம் எய்துகின்றார். அதனை, "மௌன தாதாவும் நீ" என்று குறித்தருளினார். அருணிலையை யெண்ணி யெண்ணி வருவார்க்குப் பசுபாச அறிவு மாய்ந்து மௌன நிலை யெய்துமென்பதனைத் தணிகைப்புராணமுடையாரும், "அறிவு மாயுந்தொறும் தொறும் இன்பம் தரும் வள்ளல் வார்கழல்கள்" என்றனர்.

இச்சிவயோகப் பயனாகத் தாம் சிவமாந்தன்மை யெய்தும் நிலையில் ஒன்றாகவும், ஆணவக்கலப்பால் சிவத்தின் வேறாகவும் விளங்கக் கண்டு, தமக்கும் சிவத்துக்கும் தோன்றி நிற்கும் இயைபுநெறி யறிந்து, அதனால், தமக்கும் அதற்கும் உளதாகிய தொடர்பை நமக்கு உபதேசிக்க நினைந்து, "பெற்ற தாய்தந்தை தாமும் நீ தமரும் நீ" என்று அருளுகின்றார்.

சிவபோகப் பேற்றுக்குரிய பக்குவத்தில் தம்மைப்பற்றி நிற்கும் ஆணவம் சுத்தாணவமாய்த் தம் அறிவுருவை மயக்காமையால், ஆண்டும் யாண்டும் ஒன்றாய், வேறாய், பலவாய்த், தோன்றும் யாவும் சிவமேயாய்த் தோன்றுவதை, "யாவும் நீ காண்" என்று கூறி அவசமாகின்றார்.

இவ்வாறு, அறிவு நிலையுள் அழுந்தி அவசமாய் நின்ற சுவாமிகட்கு, ஆங்கு எழுந்த சிவபோகம் சத்தாயும், சித்தாயும், ஆனந்தமாயும் குறைவின்றி நிறைந்து வரம்பின்றி விரிந்து தோன்ற அதனைச் சுகித்துணர்த்துவார், "சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான சச்சிதானந்த சிவமே" என்று திருவாய்மலர்ந்தருளுகின்றார்.

# அழகனுய பித்தன்

[இளஞ் சைவப்புலவர் மணிவாசகம்]

"பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை [றையுள்
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டு
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே"

அழகன் உலகினரால் விரும்பப்படுவான். பித்தன் வெறுக்கப்படுவான். அழகன் பித்தனுகான். பித்தன் அழகனுகான். பித்தன் அழகனுய்ப்பிறரை யாட்கொண்டான் என்று கூறின் உலகோர் வியப்பெய்துவர். எய்துவோர் எய்தட்டும். உண்மையாகவே பித்தன் அழகனுமானுன் அடிமையுங் கொண்டான். அவ்வரலாற்றினை எங்கு காணலாமெனின் தெய்வத்திருமறையில் ஏழாம் திருமுறையுள் முதற் பதிகத்தே காணலாம்.

ஆரூரரின் திருமணக்காலத்து,சிவபெருமான் அந்தணப் பெரியார் உருக்கொடுவந்து, ஆரூரரை, 'நீ எமக்கு அடிமை' என்று கூறி வழக்கிட்டு, அழைத்துக்கொண்டு அருட்டுறை என்னும் கோயிலுட் புகுந்து, மறைந்து, அம்மையோடு விடையிவர்ந்து தோன்றி, 'உன்னைத் தடுத்தாட்கொண்டேன். பித்தன் என்று தொடங்கித் தமிழ்பாடுக' என்றுர். உடனே நம்பியும், 'பித்தா' என்று தொடங்கி, இறைவனது அணி மாட்சி, உருவழகு, செயல் வன்மை, அருட்டிறம் முதலியன விளங்கவும், இயற்கைவருணனை மிளிரவும் அவன் அருட்டுணை கொண்டு பாடியருளினுர். அத்திருப்பதிகம் ஈரைந்து பாசுரங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது.

முதன் மூன்று பாசுரங்களை நோக்கின் இவர், இறைவனது 'அம்மையப்ப' கோலத்தை, வாழ்த்தி வணங்கிய



தாகத் தெரிகிறது. அவைகளின் இறுதியடி முதலில் 'அத்தா' 'ஆயா' 'அன்னே' என்று விளித்து அருளியதிலிருந்து அவைகள் புலனும். இவர் முதலில் அம்மையை வணங்காது 'அத்தா' என்று அப்பனைப் போற்றுகிறுர். எல்லாம்வல்ல பரமன் அந்தணமுதியோராம் ஆண்டகை வடிவு தாங்கிவந்து ஆட்கொண்டமையால், அப்பனை முதலொரு பாசுரத்திலும், அன்னையை இரண்டு பாசுரத்திலும் போற்றியதிலிருந்து, அன்னையின் இலக்கணங்களை, 'வேயார் பெண்ணே,' 'பொன்னே மணிதானே வயிரம்மே பொருதுந்தி மின்னுர் பெண்ணே' என்று யாற்று வருணனையிற் பொருத்திப் பாடியிருப்பதிலிருந்தும், பித்தனை அப்பனுக் கொண்டு பின்னர் அன்னையாக் கொண்டு பாடினர் என அறிகிறேம். 'கொண்டுவந்தால் தந்தை, கொண்டுவந்தாலும் வராவிட்டாலும் தாய்' என்னும் பழமொழியின் கருத்தை 'எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை வைத்தாய்....அத்தா' என்பதிலும்,'நாயேன் பலநாளு நினைப்பின்றி மனத்துன்னைப் பேயாய்த் திரிந்தெய்த்தேன் பெறலாகா அருள் பெற்றேன் ஆயா' என்பதிலும் குறிப்பாகப் பெறவைத்துள்ளார். உலக மாயையில் சிக்கியுழன்ற தன்னை, வலியவந்து ஆட்கொண்ட இறைவனது பெருங்கருணையைச் சிந்தையில் சிந்திக்கிறுர். அவனுடைய இணையிலாத் தோற்றத்தைக் கண்களில் காண்கிறுர். அகமும் புறமும் அவனேயாக அன்பு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தந்தையென அன்புடன் ஆண்டாய் என்று முதற் பாட்டில் 'அத்தா' என்கிறுர். மேலும் அன்பு வளர, தந்தையினுஞ் சிறந்த தாயாய் ஆண்டாய் என்று 'ஆயா', 'அன்னே' என விளித்துப் பண்ணுருகுகிறுர். முதலில் பித்தனெனத் தோன்றியவன் இப்பொழுது ஆரூரருக்குத் தாயாய்த் தோன்றுகிறுன். 'மனத்துன்னை வைத்தாய்' 'பெறலாகா வருள்பெற்றேன்' என

மகவுரிமையோடு கூறுதலால் இம் மூன்று பாக்களும் சத்புத்திரமார்க்கத்தினை விளக்குவன.

அடுத்த இரண்டு பாசுரங்களில் நம்பியார் இறைவனது பெருமையையும், தனது சிறுமையினையும் நோக்கி யுருகுகிறார். அன்னையனையான் என்றவுடன், அவன் எல்லாம் கடந்த அதீதனாகவும், யாவற்றிற்கு முதல்வனாகவும் இருந்தும் ஒன்றுக்கும் பற்றாத தன்னை எளிவந்து ஆட்கொண்டதை எண்ணுகிறார். இறைவன் ஆண்டான், தான் அடிமை என்பதையுணர்ந்து, தன்னைத் திருவுளம்பற்றிக் காக்குமாறும் மெய்ஞ்ஞானத்தை யருளுமாறும் வேண்டுகிறார். அவனை 'அடிகேள்' 'ஆதி' என்று விளிக்கிறார். தந்தையாய் தாயுமாய் தலைவனுமானான் இறைவன். அடிமை ஆண்டானை வேண்டுவதொப்ப கொடியேன் பல பொய்யே யுரைப்பேனைக் குறிக்கொண்ணீ' 'பாதம் பணிவார்கள் பெறுபண்டம்மது பணியாய்.......அருளாளா' என்று வேண்டுவதால் இவ்விரு பாக்களும் தாசமார்க்கத்தை விளக்குவன.

ஆரூரர் அன்பு மேலும் மேலும் பெருகுகிறது. தாம் அடிமையாக இருந்து இறைவனைப் பணிந்து பயன்பெற விரும்பாது, நண்பனாய் இருந்து அவனது புகழ்தூற்றி, விரும்பிய பயன்பெற விழைகிறார்.

'உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'

என்னும் அருளுரைக் கிணங்க, உலக மாயை வாய்ப்பட்டு அலமந்து அழிவுறாமல் உற்றுழிக் காத்தமையை உன்னுகிறார். நண்பனை யழைக்கும் சொல்லாகிய 'அண்ணா' என்பதால் அரனை யழைத்து மகிழ்கிறார். 'எண்ணார் புரமூன்றும் எரியுண்ண நகைசெய்தாய்' என்று அண்ணனது ஆற்றலைப்



புகழ்கிறார். எனவே பித்தன் நண்பனானான். ஒப்பநோக்கும் பான்மையால் இப்பாவானது சகமார்க்கத்தை விளக்கும்.

ஆரூரரது அன்பு இறைவனை நண்பனாக்கொண்டதோடு நின்றுவிடவில்லை. இன்னும் உயர்ந்தது. அன்பின் எல்லையைத் தொட்டது. அவருக்கு எங்கும் இறைவன் தோன்றுகிறான். 'பார்க்குமிட மெங்கும் நீக்கமற' நிறைந்திருக்கிறான். அவருக்குச் சிவன் ஊனும் உடலும் உயிருமாகக் காட்சியளிக்கிறான், உலகாய்த் தோன்றுகிறான், வானாய் விளங்குகிறான் நிலனாய் மிளிர்கிறான், கடலாய்ப்பொலிகிறான், மலையா யிலங்குகிறான், எல்லாமாய்த் தோன்றுகிறான். இவர் 'ஆனாய்' (௭-வது பாட்டு) என்று கூறித் தான் கண்டதை வெளிப்படுத்துகிறார். அன்பு காதலாக மாறுகிறது. சொல் தடுமாறுகிறது. இறைவனிடத்து, 'தேற்றாதன சொல்லித் திரிவேனோ' என்று முறையிடுகிறார். நீ 'ஆற்றாய்', (௮-வது பாட்டு) செந்நெறிச் செல்வன் என்று உனையடைந்தேன் ஆட்கொள்க, என்று வேண்டுகிறார்.

ஆரூரர், தான் இறைவனது அழகில் ஈடுபட்டதை 'அழகா' (௯-வது பாட்டு) என்பதில் வெளிப்படுத்துகிறார். எப்பாட்டிலும் கூறாத 'மங்கை பங்கா' என்று இப்பாட்டில்கூறித் தனது கருத்தை வெளியிடுகிறார். 'தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே' ஆதலால், உனையடைந்தேன், ஆட்கொள்க, என்று வேண்டுகிறார். இறைவன் ஆட்கொள்கிறான். பார்முழுதும் புகழ்பாவ ஆரூரனைய யான் அருட்டுறை யுள்ளானுக்கு ஆட்பட்டேன் என்று கூறுகிறார் ஆரூரர். பித்தன், அத்தனாய், அன்னையாய், அடிகளாய், அண்ணனாய், யாவுமாய், அழகனாய் ஆரூரரை ஆண்டு

கொண்டனன். அழகனும் ஆட்கொள்ளப்பட்டதனால் ஆரூரரும் அழகனானார்—சுந்தரனானார்.

மழுவாள்வல னேந்திமறை யோதிமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே [புன்
செழுவார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறை
அழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

## ஏர் என்னும் வைப்புத்தலம்

[T. V. சதாசிவ பண்டாரத்தார்]

கும்பகோணத்திற்கு வடபால் இரண்டு மைல் தூரத்தில் ஏரகரம் என்ற சிற்றூர் ஒன்று உளது. அது, சைவ சமயாசாரியார் நால்வர்களாலும் பாடப்பெற்ற திருப்புறம்பியம் என்னுந் தலத்திற்குத் தென்கிழக்கே இரண்டு மைல் தூரத்திலும், திருஞானசம்பந்த சுவாமிகளாலும் திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பதிகங்கள் பாடப்பெற்ற இன்னம்பர் என்னும் திருப்பதிக்கு வடகிழக்கில் இரண்டு மைல் தூரத்திலும் இருக்கின்றது. கல்லா மக்கள் அதனை ஏராரம் எனவும் ஏராவரம் எனவும் வழங்குகின்றனர். அவ்வூர், இதுபோது மிகவும் அழிவுற்ற நிலையில் இருக்கின்றது. ஆயினும், பண்டைக் காலத்தில் நம் சோழ மண்டலத்தில் சிறந்து விளங்கிய பேரூர்களுள், அச்சிற்றூரும் ஒன்றாக இருந்திருத்தல் வேண்டும் என்பதை, அதனை ஒருமுறை பார்த்தோரும் நன்குணர்ந்து கொள்ளலாம். அப்பழைய ஊரில் தென்மேற்கு மூலையில் வயல்களுக்கு அணித்தாக ஒரு சிவாலயம் உளது. அது பாதுகாப்பாரின்றிச் சிதைந்து அழிந்து போகும் நிலையில் இதுபோதுஇருக்கின்றது. அவ்வாலயத்தின் திருமதில்களும் திருச்சுற்று மாளிகைகளும் கோபுரமும் இடிந்து போயின;



மகாமண்டபம் மாத்திரம் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளது. அத்திருக்கோயிலுக்குச் சென்று யான் பார்த்தபோது அது பழமை வாய்ந்த ஒரு சிவாலயம் என்று துணிதற்குரியதாக இருந்தது. அதன் கர்ப்பக் கிருகத்தின் தென்புறத்தில் பெரியதோர் கல்வெட்டும் காணப்பட்டது. அக்கல்வெட்டு மிகச் சிதைந்தும் நிலத்திற் புதைந்தும் இருந்தமையின் அதனை முற்றும் படித்தற்கு இயலவில்லை. ஆயினும், அஃது எவ்வரசன் காலத்தில் வரையப் பெற்றது என்பதையும், அத்திருக்கோயில் அமைந்துள்ள ஊரின் உண்மைப்பெயர் யாது என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. ஆகவே நிலத்திற் புதைந்திருந்த பகுதியைச் சில நண்பரது உதவிகொண்டு தோண்டிப் பார்த்தபோது அது கி. பி. 1120 முதல் 1136 வரையில் சோழ மண்டலத்தில் சக்கரவர்த்தியாக வீற்றிருந்து ஆட்சி புரிந்த விக்கிரமசோழன் காலத்திய கல்வெட்டு என்பது நன்கு வெளியாயிற்று. விக்கிரமசோழனது நீண்ட மெய்க்கீர்த்தியில் 'ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கியும்' என்பது முதலாகவுள்ள பகுதியும் காணப்பட்டது. பின்னர், அக் கல்வெட்டின் எஞ்சிய பகுதியையும் இயன்றவரையில் முயன்று படித்துக் கொண்டு வருங்கால், 'இன்னம்பர் நாட்டு ஏராகிய மும்மடி சோழமங்கலம்' என்னும் தொடர் மொழிகள் அத்திருக்கோயில் அமைந்துள்ள அவ்வூரின் பெயர் யாது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்தி மகிழ்வூட்டின. பிறகு, அவ்வூர் வைப்புத்தலங்களுள் ஒன்று என்பது எனது ஆராய்ச்சியிற் புலப்பட்டமையின், அதனை ஈண்டு விளக்குவேன்.

சைவ சமய குரவர்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்திலுள்ள,

இடைமருதீங்கோய் இராமேச்சுரம் இன்னம்பர்
    ஏர் இடவை ஏமப்பேறூர்
சடைமுடி சாலைக் குடிதக்களூர்
    தலையாலங்காடு தலைச்சங்காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம்பூதூர் கோத்திட்டை
    கோட்டாறு கோட்டுக்காடு
கடைமுடி கானூர் கடம்பந்துறை
    கயிலாய நாதனையே காணலாமே.

என்னுந் திருப்பாடலில் ஏர் என்ற திருப்பதி ஒன்று கூறப்
பட்டுள்ளது. அன்றியும், அவ்வடிகள் அருளிய திருவீழி
மிழலைத் திருத்தாண்டகத்திலுள்ள,

'பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பாழியார்
    பெரும்பற்றப் புலியூர் மூலட்டானத்தார்
இரும்புதலார் இரும்பூளை யுள்ளார் ஏரார் இன்னம்பரார்
    ஈங்கோய் மலையார் இன்சொற்
கரும்பனையாள் உமையோடும் கருகாவூரார்
    கருப்பறிய லூரார் கரவீரத்தார்
விரும்பமரர் இரவுபகல் பரவியேத்த
    வீழிமிழலையே மேவி னாரே.'

என்ற திருப்பாடலினும் ஏர் என்னும் திருப்பதி குறிக்கப்
பெற்றிருத்தல் அறியத்தக்கதாகும். வாகீசப்பெருமானது
திருவாக்கிற் பயின்றுள்ள அத்திருப்பதிக்கு அவ்வடிகள்
திருவாய்மலர்ந்தருளிய தனிப்பதிகம் இதுபோது காணப்பட
வில்லை. அன்றியும், திருஞானசம்பந்த சுவாமிகளும் சுந்தர
மூர்த்தி சுவாமிகளும் அருளிய பதிகங்களும் அத்திருப்
பதிக்கு இல்லை. சமயகுரவர்களாகிய இப்பெரியோர்கள் மூவ
ரும் அருளிய தேவாரப் பதிகங்களுள் பல இறந்துபோயின
என்று சொல்லப்படுகின்றது. அங்ஙனம் இறந்துபோன பதி
கங்களுள் ஏர் என்னும் திருப்பதிக்கு உரிய பதிகங்களும்



இருத்தல்கூடும் என்பது திண்ணம். ஆயினும், திருநாவுக்
கரையதேவாரது திருவீழிமிழலைப் பதிகத்திலும், க்ஷேத்திரக்
கோவைத் திருத்தாண்டகத்திலும் அத்திருப்பதி கூறப்பட்
டிருத்தலின், அது தேவாரவைப்புத்தலங்களுள் ஒன்றாகும்
என்பது ஒருதலை. எனவே, ஏர் என்னும் அவ்வைப்புத்தலம்
யாண்டையது எனின், அஃது 'இன்னம்பர் நாட்டு ஏராகிய
மும்மடிசோழமங்கலம்' என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்
பெற்று, இதுபோது ஏரகரம், ஏராரம் என்னும் பெயர்க
ளுடன் கும்பகோணத்திற்கு வடபால் இரண்டு மைல்
தூரத்திலுள்ளதே யாதல்வேண்டும்.

இனி, ஏரகரம் திருக்கோயிலில் காணப்பெறும் அக்கல்
வெட்டு, அவ்வூர் இன்னம்பர் நாட்டில் உள்ளது என்பதை
யும், பழைய காலத்தில் ஏர் என்னும் பெயருடன் நிலவியது
என்பதையும், அதற்கு மும்மடிசோழமங்கலம் என்ற
வேறொரு பெயரும் அந்நாளில் இருந்தது என்பதையும்
நன்கு விளக்கி நிற்றல் காண்க. இவ்வின்னம்பர்நாடு பண்
டைக்காலத்தில் சோழமண்டலத்தில் காவேரிக்கு வடகரையி
லிருந்த பல நாடுகளுள் ஒன்றாகும்; இஃது இன்னம்பரைத்
தலைநகராகக் கொண்டது. கும்பகோணம் தாலூகாவிலுள்ள
கொட்டையூர், மேலக்காவேரி, கருப்பூர், அசுகூர், ஏரகரம்
முதலான ஊர்களையும் பாவநாசம் தாலூகாவிலுள்ள ஆத
னூர்; மருத்துவக்குடி முதலான ஊர்களையும் தன்னகத்துக்
கொண்டு இவ்வின்னம்பர் நாடு முற்காலத்தில் விளங்கிற்று
என்பது பல கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. எனவே
தற்காலத்தில் இந்நாடு கும்பகோணம் பாவநாசம் தாலூகாக்
களில் அடங்கியுள்ள ஒரு பகுதி எனலாம். இன்னம்பர்
நாட்டிலுள்ளதென்று கல்வெட்டுக்களால் அறியப்படும் ஏர்
என்னும் திருப்பதி, இந்நாளிலும் இன்னம்பருக்கு அணித்
தாக விருப்பது குறிப்பிடத்தக்கது. அன்றியும், அத்தலத்

தைத் தம் திருப்பதிகங்களில் கூறியுள்ள திருநாவுக்கரசு
சுவாமிகள் 'இன்னம்பர் ஏர்' எனவும், 'ஏரார் இன்னம்பரார்'
எனவும் அதனை இன்னம்பருக்கு அணித்தாகவே வைத்துக்
கூறியிருப்பது ஈண்டு அறிந்துகொள்ளற்பாலதாகும்.

இனி, முதல் இராஜராஜசோழனால் எடுப்பிக்கப்பெற்ற
தஞ்சை இராஜராஜேச்சுரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று ஏர்
என்னும் திருப்பதி இன்னம்பர் நாட்டில் உளது என்று
உணர்த்துகின்றது. அது 'இராஜேந்திரசிங்கவளநாட்டு இன்
னம்பர் நாட்டுப் பழைய வானவன் மகாதேவிச் சதுர்வேதி
மங்கலத்துச் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்
(௭௰) இந்நாட்டு அசுகூர் சபையார் இடக்கடவ திருமெய்
காப்பு ஒன்றும் (௭௧) இந்நாட்டுக் கொட்டையூர் சபையார்
இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும் (௭௨) இந்நாட்டு ஏராகிய
மும்மடிசோழமங்கலத்தார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்
றும் (௭௩) இந்நாட்டு ஸ்ரீபராந்தகச் சதுர்வேதி மங்கலத்துச்
சபையார் இடக்கடவ திருமெய்காப்பு இரண்டும்' (South
Indian Inscriptions Vol. II No. 70) என்பதாம்.
தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள இக்கல்வெட்டும் இன்னம்ப
ருக்கு அண்மையிலுள்ள ஏரகரத்தில் அமைந்துள்ள
கோயிலிற்காணப்படும் கல்வெட்டும், தம்முள் ஒற்றுமையுடை
யனவாய் ஏர் என்ற ஊர் இன்னம்பர் நாட்டில் உளது என்
றுணர்த்துதல் காண்க. ஆகவே, ஏர் என்னும் வைப்புத்தலம்
இந்நாளில் ஏரகரம் என்ற பெயருடன் கும்பகோணந்தாலு
காவில் காவேரியாற்றிற்கு வடகரையில் உளது என்பது
நன்கு உறுதி யெய்துகின்றது.

பத்து, பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில், வைப்புத்
தலமாகிய ஏர் மும்மடி சோழமங்கலம் என்ற மற்றொரு
பெயரும் உடையதாக இருந்தது என்பது ஏரகரத்திலுள்ள
கல்வெட்டாலும், தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள கல்வெட்



டாலும் புலப்படுகின்றது. சோழ மன்னர்களது ஆட்சிக்
காலங்களில் நம் தமிழகத்திலுள்ள பல நகரங்கள் அவ்வேந்
தர்களது பெயர்களை எய்தி அப்பெயர்களால் வழங்கப்
பெற்று வந்தன வென்பது பலகல்வெட்டுக்களால் தெரிகின்
றது. கொங்குநாட்டுத் தலங்களுள் ஒன்றாகவுள்ளதும்
திருவானிலை என்னுந் திருக்கோயிலைத் தன்னகத்துக்கொண்
டதுமாகிய கருவூர், அந்நாளில் முடிவழங்கு சோழபுரம்
என்ற பெயரையும் உடையதாக இருந்த தென்பது அவ்வூரி
லுள்ள கல்வெட்டுக்களால் வெளியாகின்றது. (South
Indian Inscriptions Vol. III. Nos. 23 and 24).
நம் சோழமண்டலத்தில் காவேரிக்குத் தென்பாலுள்ள
தலங்களுள் ஒன்றாகிய பழையாறு என்ற நகர் முடிகொண்ட
சோழபுரம் என்னும் பெயரையும் முற்காலத்தில் உடைய
தாக இருந்தது. (Inscription No. 271 of 1927). அவ்
வூர்கள் கருவூராகிய முடிவழங்கு சோழபுரம் எனவும், பழை
யாறாகிய முடிகொண்ட சோழபுரம் எனவும் கல்வெட்டுக்
களில் வரையப்பெற்றிருத்தல்போல ஏர் என்னும் தலமும்
ஏராகிய மும்மடிசோழமங்கலம் என்று குறிக்கப்பெற்றுளது.
மும்மடிசோழன், மும்முடிசோழன் என்ற பெயர்கள் முதல்
இராஜராஜசோழனுக்கு வழங்கி வந்தன என்று தெரிகிறது.
எனவே, முதல் இராஜராஜ சோழனது ஆட்சிக் காலத்தில்
தான் ஏர் என்னும் தலம் மும்மடிசோழமங்கலம் என்ற
பெயரை எய்தியிருத்தல் வேண்டும் என்பது திண்ணம்;
தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள முதல் இராஜராஜசோழ
னது கல்வெட்டும் இச்செய்தியை வலியுறுத்துகின்றது.
ஆகவே, சோழமன்னர்களது ஆட்சிக் காலங்களில் மும்மடி
சோழமங்கலம், ஏர் என்ற பெயர்களையுடையதா யிருந்த

ஊர் இந்நாளில் ஏரகரம் என்று வழங்கி வருகின்றது என்பதும், அஃது அப்பரடிகளால் குறிக்கப்பெற்ற வைப்புத்தலங்களுள் ஒன்று என்பதும் நன்கு வெளியாதல் காண்க.

# திருவாரூரர்

[P. தியாகராயன்]

## V

## சுந்தரரும் அவரைச் சார்ந்தாரும்

### (இ) மக்கள்

நெடிய சமணும் மறைசாக் கியரும் நிரம்பா பல் கோடிச்
செடியுந் தவத்தோர் அடையாத் தில்லைச் சிற்றம் பலந் தன்னுள்
அடிக ளவரை ஆரூர்நம்பி யவர்கள் இசைபாடக்
கொடியும் விடையும் உடைய கோலக் குழகன் ஆடுமே.

—திருவிசைப்பா - திருவாலியமுதனார்.

திருக்கூட்டத்தில் வைத்து எண்ணப்பட்டவரும், வேளாளர் மரபில் வந்தவரும் ஆகிய கோட்புலி நாயனார் என்பவர் வனப்பகை, சிங்கடி என்ற தம் இரண்டு பெண்களையும் குருக்கள் ஆகிய சுந்தரர்க்கு மணம்புரிந்து தர எண்ணங்கொண்டார். இவ்வெண்ணத்தைச் சாதிக் கட்டைத் தகர்க்கும் கோடரிபோன்ற எண்ணம் எனலாம்; அல்லது அந்நாளில் ஒரு கட்டுப்பாடு, மக்கள் வாழ்விற்கு இடையூறு விளைக்கும், நன்மை தராது என்று உணர்ந்தபோதெல்லாம் அதனை மாற்ற இடந்தரக்கூடிய பரந்த கொள்கையுடைய நிலையில் இருந்தது எனலாம். நாயனார், இவ்வெண்ணத்தைச் சுந்தரப் பெருமான் நாட்டியத்தான்குடிக்கு வந்தபொழுது அவர்க்குத் தெரிவித்தார். அப்பொழுது ஆரூரருக்கு ஆண்டு



17 இருக்கலாம். இது, நாட்டியத்தான்குடிப் பதிகத்தைப் பாடியபின் செய்தருளிய திருக்குருகாவூர் மாலையில் (29) தம்மை "இளங்கிளை யாரூரன் வனப்பகை யவளப்பன்" என்று சொல்லிக்கொள்வதினாலும், • 30ல் "மலைமலிந்த தோளூரன்" என்று சொல்வதனாலும் தெரிய வருகிறது. ஆயினும், அவர் அப்பெண்மணிகளை மணக்க நினையாதவராய் அவர்களைத் தம் மக்களாக் கொண்டார். பொது மக்கள்போல் விழைவு உணர்ச்சியுடையவராக இருந்திருந்தால் அங்ஙனம் வலியக்கிடைத்த பாவையர்களை மகண்மைபூண் டொழிவாரோ !!

2. இதனைத் திருநாட்டியத்தான்குடி (15) தேவாரத்திலேயே தெரிவிக்க எண்ணித் தம்மை "சேடார் பூங்குழற் சிங்கடியப்பன்" என்று திருக்கடைக்காப்புச் செய்தார். சேக்கிழார் அடிகளும் "பிறப்பித் தெடுத்த பிதாவாகத் தம்மை நினைந்த பெற்றியினன், மறப்பில்வகைச் சிங்கடியப்பன் என்று தம்மை வைத்தருளி....இறைஞ்சினார்" என்று ஆரூரர் மன நிலைமையை எடுத்துச் சொன்னார். இப்பெண்கள், சுந்தரர் நாட்டியத்தான் குடியை விட்டு நீங்கினதும் என்ன நிலையடைந்தார்கள் என்பதைச்சேக்கிழார் அடிகள்சொல்லவில்லை. ஆயினும், அவர்கள் சடங்கவியாருடைய மகளாரைப்போல் பின்னே மணமில்லாதவராகவே உலக வாழ்வைக் கழித்துச் சிவனடி சேர்ந்திருப்பார் என்பதை உய்த்துணர வேண்டியதாக இருக்கிறது. அப்படி இம்மையில் இன்பமடையாதவராக இருந்திருந்தாலும், 'சுந்தரரோடு சிறிது நட்புச்செய்ய நேர்ந்ததின் காரணமாக அவர்களுடைய பெயர்கள் யாவரும் மறக்கா வண்ணம் தேவாரத்தில் என்றும் நிலைத்திருக்கும் புகழைப் பெற்றன. நல்லோர் உறவு சிறிது பொழுது இருந்தாலும் சேர்ந்தார்க்குப் பெரும்பயன் தரும் என்ற உண்மையை இச்செய்தி விளக்குகின்றது.

3. சிங்கடி வனப்பகையாகிய இருவரையும் ஆளுடைய நம்பி பல பாடல்களின் ஈற்றில் குறிக்கின்றார்.

12-ம் பதிகத்தில் "நாணியூரன் வனப்பகையப்பன்" என்றும், 27ல் "சிலையார் வாணுதலாள் நல்ல சிங்கடியப்பன்" என்றும் கூறுகின்றார். சிங்கடியாருடைய அழகையும் தன்மையையும் கூறுவதிலிருந்து அப்பெண்ணே இருவரில் மூத்தவராக இருக்கலாமோ என்று நினைக்க இடந்தருகிறது. 29ல் "வனப்பகையவளப்பன்"என்றும், 30, 33, 34, 42ல் வனப்பகையப்பன்" என்றும், 37-ல் சித்தம் வைத்த புகழ்ச் சிங்கடியப்பன்" என்றும் பாடினார். 44-ல் "எட்டோடிரண்டு விரும்பிய ஆயின சீர்ப்பகை ஞானியப்பன்" என்கிறார். இப்பாடலில் வனப்பகையைப் 'பகை' என்று குறுக்கி அழைக்கின்றார். ஞானியென்று கூறுவதன் காரணம் தெரியவில்லை. இவ்வம்மையார் அழகை வெறுக்கும் அறிவிற் சிறந்த பெண்மணி போலும். சிங்கடியின் புகழ் அழகினாலும் வனப்பகையின் 'சீர்' ஞானத்தினாலும் மேம்பட்டிருந்தது போலும்.

4. மேலும் 47-ல் "மைம்மாந் தடங்கண் மதுரமன்ன மொழியாள் மடச்சிங்கடி தம்மான்" என்று சிங்கடியின் மொழியைப் புகழ்கின்றார். 68-ல் "சிங்கடி தந்தை வனப்பகை யப்பன்" என்றும், 70-ல் சிங்கடியப்பன், 87-ல் வனப்பகையவளப்பன் என்றும், 98-ல் "சேடியல் சிங்கி தந்தை" என்றும் குறித்தார். இவ்விதம் தம் பெண்களையும் சிவம்மணக்குந் திருப்பாட்டுக்களில் வைத்துப் பாடினார்.

5. குழந்தைமேல் அன்பு - சுந்தரர்க்குத் தாம் மணந்த இரு மனைவிகள்பாலும் குழந்தைகள் இருந்ததாக வரலாறு சொல்லவில்லை. பிள்ளை யில்லாததினால்தானோ அவர் பிற குழந்தைகளிடத்தில் பேரன்பு காட்ட நேர்ந்தது. இப்பண்பு, மாந்தரிடை இன்றும் காணப்படும் ஓர் இயற்கைத்தன்மை யன்றோ. ஆரூரர் வனப்பகை சிங்கடியாரை பாராட்டிப்பாடினதும், அவிநாசியில் முதலையுண்ட பிள்ளையின் தாயாருடைய அழுகையைக் கேட்டு மனமிளகி அப்பிள்ளையை முதலைவாயினின்றும் மீட்டதும் இந்த அன்பைக் காட்டும்.



வாகீச முனிவர் அருளிய

# ஞானமிர்தமூலமும் விளக்கவுரையும்

[ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, ஔவைத் தமிழக மாணவர் கழகம், திருவோத்தூர்]

நூல். ஞானபாதம்

**அகவல் 8**

(மலர் - ௪௦, இதழ் - ௫, ௨௮௮-ம் பக்கத் தொடர்ச்சி)

இயைபு காட்டுதற்கு மேலைத்தொடரின் இறுதியடி கொணர்ந்து உரைக்கப்பட்டது. மலம் தனது சக்தி கெடுதற் குரிய துணைக்கரணங்களோடு கூடினாலன்றி, கேட்டிற்குரிய பரிபாகம் எய்தல் இல்லையாதலினாலும், அதற்குரிய கால வெல்லையும் எண்ணிலடங்காமையாலும் "எல்லை செல்லாக் காலத்து" (32) என்றும், அத்துணைக்காலம் கழிந்தாலன்றி மலபரிபாகம் எய்துவிக்காத வன்மையுடைமையின், வினையை "வல்வினை" (32) என்றும், பாகப்பட்டவிடத்து இடையீடின் றிச் சமமாகும் விரைவு தோன்ற, "ஒல்லென ஒப்ப" (33) என்றும் கூறினார். மலபரிபாகமாவது, "மலம் தனது சத்தி தேய்தற்குரிய துணைக்காரணங்கள் எல்லாவற்றோடும் கூடுதலாம்". வினையொப்பு என்பது "ஒன்றில் விருப்பும் ஒன்றில்

வெறுப்புமாதலின்றிப் புண்ணிய பாவம் இரண்டினும் அவற்றின் பயன்களினும் ஒப்பவுவர்ப்பு நிகழ்ந்து, விடுவோனது அறிவின்கண் அவ்விருவினையும் ஒப்ப நிகழ்தல்". இஃது எல்லையில்லாத காலங்களிற் செய்த தவத்தால் நிகழும் பயனாகலின், "வல்வினை எல்லை செல்லாக் காலத்து ஒல்லென ஒப்ப" என்று விளக்கப்பட்டது.

ஆன்மாவைப் பந்தித்துநின்ற மலம் பக்குவப்படுவதால் அவ்வான்மாவுயர்வு எய்துதல் குறித்து அம்மலத்தை நடாத்தும் திரோதான சத்தி அருட்சத்தியாய் ஆன்மாவிற் பதிந்து அதனைத் தொடர்பறுத்து ஞானமெய்துவிக்கும் இயைபினால் ஞான வடிவினனாகிய சிவனுக்கு உடைமையாம் நிலைமை விளங்க, "உயர்பெருஞ் சிவனது சத்திநிபாதம்" (33-4) என்றார். தோன்றல், பதிதல், பயன் விளைத்தல் ஆகிய மூவகை நிலையுள், பயன் விளைத்தல் குருபரம்பரனை நாடுதலாகலின், தழைப்ப (34) என்றது ஈண்டு, பதிந்தவிடத்து என்னும் பொருளதாம். சத்திநிபாதம்:— "ஓரவைக் களத்தின் நடுவே ஒருகல் வந்து வீழ்ந்தால், அவ்வீழ்ச்சி, அவ்வவைக் களத்துள்ளாரை ஆண்டுநின்றும் அகல்விக்கும்; அதுபோல, சத்திநிபாதம் நிகழ்ந்த மாத்திரையே அஃது அவ்வான்மாவை மனைவி மக்கள் முதலிய உலகத்துழனியின் அச்சம் நிகழ்ந்து அவ்வுலக வாழ்க்கையினின்றும் வெரீஇப்போந்து உண்மைக் குரவனை நாடிச் செல்லுமாறு" செய்யும். "சத்திநிபாதம் என்னும் சொல்லியல்பு சத்தியினது வீழ்ச்சி என்றவாறு; நி என்பது ஏற்றமாக என்னும் பொருள் குறித்து நின்றதோர் இடைச்சொல்," என்பது சிவஞான மாபாடியம். இதற்குக் காரணம் மலபரிபாகமாதலின், மலபரிபாக இருவினையொப்புக்களை முற்கூறினார்.

மெய்ம்மைப் பொருளே நிறைந்து அருட்டிருமேனி கொண்டு ஞானாசிரியனாய்த் திகழும் மேன்மை நோக்கி



"மெய்த்தகு குருபரம்பரன்" (35) என்றார். சத்திநிபாதம்
எய்தியவழியும் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என
நால்வகைப் பக்குவ நிலையுண்மையின், குரவன் அருள் பெறு
தற்குரிய பக்குவம் வேண்டும் என்பார், "அருளின் செவ்வி"
(35) என்றார். செவ்வியென்றவிடத்து ஏழனுருபு தொக்கது.
அக்காலத்தில் அவன் செய்யும் தீக்கை ஞானவதியான
தீக்கை என்றற்கு, "வம்பறு சம்பிரதாயத் தஞ்சுடர்" (36)
என்று கூறினார். வம்பு, புதுமை. இஃது அனாதியாகலின்
"வம்பறு" என்றும், இந்த ஞானவதி தீக்கை செய்
தல் அக்குரவனுக்குச் சம்பிரதாயமாகலின், "சம்பிர
தாயம்" என்றும் கூறினார். ஞானவதி தீக்கையாவது
குண்டம், மண்டலம், அக்கினி, நெய், சுருக்கு, சுருவம்
முதலிய அனைத்தையும் மனத்தாற் கற்பித்துக் கொண்டு
விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணாக்
கனது பாசத்தைக் கெடுப்பது. ஒளிதோன்ற இருள்கெடு
மாறுபோல, இத்தீக்கை செய்தவழி, ஆன்மாவின் பாசம்
கெடுமாறு தோன்ற "அஞ்சும்" என விசேடித்தார்.

சிந்தைக்கெட்டாச் செம்மையிலுள்ள பரமனை மொழியாற்
கூறல் முடியாமை தோன்ற, "சொற்றொடர்பு அற்று" (37)
என்றும், எங்கும் நீக்கமற நிறைந்தவனாகலின், அந்நிறைவு
விளங்கத் "தேயாதுயாவுமாய்" (38) என்றும், அஃகியகலும்
இயல்புடைய ஆன்மவறிவு போலாது எவற்றையும் அஃகல்
முதலிய திரிபின்றி இயல்பாகவே முற்றவுணரும் முதல்வனா
கலின், "ஆயா அறிவகன்ற சிவன்" (38-9) என்றும்கூறினார்.
சொற்றொடர்பு, சொற்களால் சுட்டியுணர்த்தப்படும் இயைபு.
சொற்றொடர்பு இன்றியென இன்மைகூறாது அற்று என்ற
தனால், ஒருகால் சிவஞானத்தால் சிவானந்தப் பேரநுபூதி
பெற்ற செம்மையோர்க்கும், அச்சிவபோகம், சிந்தையள
வாய் நின்று மொழியால் உணர்த்தப்படாது, அவர் மொழித்

தொடர்பின் நீங்கி அதீதமாய் நிற்குமென்பது பெற்றாம். யாவுமாய் என்றே மொழியாது தேயாது எனவிசேடித்ததனால், எல்லாவற்றினும் பிரிப்பறக்கலந்து நிற்கினும் பரமன், அக்கலப்பால் விகாரப்படான் என்பது எய்தநின்றதாம். முதற்கண் தூலப்பொருளினும், பின்னர்ச் சூக்குமப் பொருளினும் நுழைந்து விரிதல் உயிர்களின் அறிவுப்பண்பு. இஃது இக்காலத்து அறிவுநூல் அறிஞர்க்கும் உடன்பாடாகும். "அஃகியகன்ற அறிவு என்னும்" (குறள். 175) என்பர் நம்வள்ளுவப் பெருந்தகையார். ஆய்தல், நுணுகுதல் (தொல். சொல் 330) அவனது சிவானந்தத்தில் அழுந்திய ஆன்மா, மீட்டும் மலபந்தம் அடைதல் இலன் என்பதற்கேற்ற தூய்மையுடைமை யுணர்த்துவதற்கு "நின்மலத்து" (40) என்றும், ஆணவம் இயற்கை மலமாகலின், நின்மல சிவானந்தத்தில் ஆன்மா அழுந்தியபின்னும், அஃது அவ்வான்மாவைச் சென்று அடையுமோ என்னும் ஐயம் அறுத்தற்குப் "பின்மலத்து இயையான்" (40) என்றும் கூறினார்.

இதுகாறும் கூறியவாற்றால், சகலாவத்தையில் தன்னை மறந்து தன்னையுடைய தலைவனையும் மறந்து பூர்வ கன்ம பலன்களை நுகருமுகத்தால் பல்வகைப் பிறப்பும் பிறந்து எல்லையில்லாத காலத்தைக் கழிந்துநிற்கும் ஆன்மா, சுத்தாவத்தைக்கண், மலபரிபாகமும், இருவினையொப்பும் எய்தி, சிவனது சத்திநிபாதத்தால் குரு பரம்பொருளின் அருள் பெறுதற்குரிய பக்குவமடைந்து, அவனால் ஞானவதி தீக்கை பெற்று, அதனாற் பெறும் சிவஞானத்தால் அச்சிவனது நின்மலப் பேரின்பத்து அழுந்துவன் என்பதும், அங்ஙனம் அழுந்திய பின்பு, அவனோடு சகசமாய் நின்ற ஆணவமலத் தானும் மறுவலும் அவனைக் கூடுவது இல்லையென்பதும் கூறியவாறும். இக் கருத்தினையே, நம் அருணந்தி சிவனார்,



"இருவினைச் செயல்களொப்பின் ஈசன்றன் சத்திதோயக்
குருவருள் பெற்றுஞான யோகத்தைக் குறுகிமுன்னைத்
திரிமல மறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்துஞானம்
பெருகிநா யகன்றன்பாதம் பெறுவது சுத்தமாமே"

(சிவ. சித்தி. 4: 40)

என்று கூறியருளினர்.

## ஆறந் தொடர் (41—42)

41. அந்தமில் பந்தம் மற்று இவணம்
சிந்துதல் சிந்தல் தெரியுங் காலே

இது, முடிந்தது முடித்தல் என்றதனால், "பாசச்சேதம் பண்ணும் முறை இஃதாம்," என்று கூறுகின்றது.

உரைமுடிபு:—பந்தம் சிந்துதல் தெரியுங்கால் இவணம் சிந்துதல் என்பது.

உரை:—கெடுத்தற்கரிய பந்தத்துக்கேதுவாகிய பாசத்தைக் கெடுத்தற்குரிய நெறியினை ஆராயுமிடத்து, அஃது இவ்வாறு கெடுத்தலாம்.

அந்தம், கேடு. இன்மை ஈண்டு அருமை குறித்து நின்றது. அனாதியே பந்தித்து நிற்கும் இயற்கை மலத்தோடு கன்மமும் மாயையுமாகிய செயற்கை மலமும் கூடிக் கெடுத்தற்கரியவாய் உயிரைப் பிணித்துநின்ற பிணிப்பின் வன்மை தோன்ற, "அந்தமில் பந்தம்" (41) என்றார். பந்தத்துக் கேதுவாதலின், பாசத்தைப் பந்தம் என்றார். பந்திக்கப்பட்ட ஆன்மா, அப்பந்தத்தை நீக்குவது, தன்னையும் தன்னைப் பிணித்துநிற்கும் பந்தத்தையும் வேறுபடுத்து ஆராயுங்காலத்தன்றிப் பிறுண்டு இல்லையாகலின், "தெரியுங்